T. 2444

ஸ்ரீ:

திருஞானமுத்திரைக்கோவை தொகுதி 4.

கம்பராமாயணம்

(ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி)

கிட்கிந்தா, சுந்தர காண்டங்கள்

பதிப்பாசிரியர்:

பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸையங்கார்

திருஞானமுத்திரைப் பிரசுராலயம்

ஆழ்வார்திருநகரி.

உரிமைபதிவு செய்தது

1951

விலை ரூ: 6-0-0

ஸ்ரீ:

திருஞானமுத்திரைக்கோவை எண் 17.

கம்பராமாயணம்

(ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி)

கிட்கிந்தா காண்டம்

ஸ்ரீ K. பக்ஷிராஜையங்கார், B. A., B. L.

அட்வகேட், வண்ணூர்பேட்டை

பரிசோதித்தது.

பதிப்பாசிரியர்:

பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸையங்கார்

ஆழ்வார்திருநகரி

காபிரைட்]

[விலை ரூ. 2—8—0

கிட்கிந்தா காண்டம் படலம் அட்டவணை

எண்	படலம்	பக்கம்	கவி
1.	பம்பைவாவிப் படலம்	1	43
2.	அனுமப் படலம்	6	36
3.	நட்புப் படலம்	11	81
4.	மராமரப் படலம்	21	23
5.	துந்துமிப் படலம்	24	14
6.	கலன்காண் படலம்	26	33
7.	வாலிவதைப் படலம்	30	179
8.	அரசியற் படலம்	53	33
9.	சாற்காலப் படலம்	57	121
10.	கிட்கிந்தைப் படலம்	72	141
11.	வானரத்தானைகாண் படலம்	90	39
12.	நாடவிட்ட படலம்	95	74
13.	பிலம்புக்கு நீங்கு படலம்	105	76
14.	ஆற்றுப் படலம்	114	55
15.	சம்பாதிப் படலம்	121	63
16.	மயேந்திரப் படலம்	129	29
	ஆகப் படலம் 16-க்கு திருவிருத்தம்		1040

ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி கம்பராமாயணம்
காண்டம் 4-க்கு படலம் 75, திரு விருத்தம் 4857.

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :



கம்பராமாயணம்

கிட்கிந்தா காண்டம்

க. பம்பைவாவிப் படலம்

க மூன்றுரு வெனக்குண மும்மையா முதற்
றோன்றுரு வெவையுமிம் முதல சொல்லுதற்
கேன்றுரு வமைந்தவு மிடையி னின்றவர்
ஊன்றுரு வுணர்வினுக் குணர்வ தாயினான். 3818

உ தேன்படி மலரது செங்கை வெங்கண்மாத்
தான்படி கின்றது தெளிவு சான்றது
மீன்படி மேகமும் படிந்து வீங்குநீர்
வான்படிந் துலகிடைக் கிடந்த மாண்பது. 3819

௩ ஈர்ந்தநுண் பளிங்கெனத் தெளிந்த வீர்ம்புனல்
பேர்ந்தொளிர் நவமணி படர்ந்த பித்திகை
சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால்
ஓர்ந்துணர் வில்லவ ருள்ள மொப்பது. 3820

௪ எற்பட நாகர்த மிருக்கை யீதெனக்
கிற்பதோர் காட்சிய தெனினுங் கீழுறக்
கற்பக மனையவக் கவிஞர் காட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்று கின்றது. 3821

௫ காசடை விளங்கிய காட்சித் தாயினு
மாசடை பேதைமை யிடைம யக்கலால்
ஆசடை நல்லுணர் வனைய தாமெனப்
பாசடை வயின்றொறும் பரந்த பண்பது. 3822

௬ குவான்மணற் றடந்தொறும் பவளக் கொம்பிவர்
கவானர சன்னமும் பெடையுங் காண்டலிற்
றவாநெடு வானகந் தயங்கு மீனொடும்
உவாமதி யுலப்பில வுதித்த தொப்பது. 3823

௭ ஓதநீ ருலகமு முயிர்கள் யாவையும்
வேதபா ரகரையும் விதிக்க வேட்டநாட்
சீதநீங் குவரியைச் செகுக்கு மாறொரு
காதிகா தலன்றரு கடலி னன்னது. 3824

௮ களநவி லன்னமே முதல கண்ணகன்
றளமலர் புள்ளொலி தழங்க வின்னதோர்
கிளவியென் றறிவருங் கிளர்ச்சித் தாகலின்
வளநகர்க் கூலமே போலு மாண்பது. 3825

௯ அரிமலர்ப் பங்கயத் தன்ன மெங்கணும்
புரிகுழல் புக்கிடம் புகல்கி லாதயாந்
திருமுக நோக்கில மிறந்து தீர்துமென்
றெரியினிற் புகுவபோற் புகுவ தேய்ப்பது. 3826

௰ களிப்படா மனத்தவன் காணிற் கற்பெனுங்
கிளிப்படா மொழியவள் விழியின் கேளெனத்
துளிப்படா நயனங்க டுளிப்பச் சோருமென்
றொளிப்படா வானமே யொதுங்கு மீனது. 3827

௧௧ கழைபடு முத்தமுங் கலுழிக் கார்மத
மழைபடு தரளமு மணியும் வாரிநேர்
இழைபடர்ந் தனையநீ ரருவி யெய்தலாற்
குழைபடு முகத்தியர் கோலம் போல்வது. 3828

௧௨ பொங்குவெங் கடகரி பொதுவி னூடலிற்
கங்குலி னெதிர்பொரு கலவிப் பூசலின்
அங்கநொந் தலசிய விலையி னுய்வளை
மங்கையர் வடிவென வருந்து மெய்யது. 3829

௧௩ விண்டொடு நெடுவரைத் தேனும் வேழத்தின்
வண்டுளர் நறுமத மழையு மண்டலால்
உண்டவர் பெருங்களி யுறுவ தோதியர்
தொண்டையங் கனியிதழ்த் துப்பிற் சான்றது. 3830

கச ஆரிய முதலின பதினெண் ணுயமொழ்
பூரிய ரொருவழி புகுந்த போன்றன
ஓர்கில கிள்விக ளொன்ரெரு டொப்பில
சோர்வில விளம்புபுட் டுவன்று கின்றது. 3831

கரு தானுயி ருறத்துணை தழுவு பேடையை
ஊனுயிர் பிரிந்தெனப் பிரிந்த வோதிமம்
வானவர் மகளிர்தம் வயங்கு நூபுரத்
தேனுகு மழலையைச் செவியி னோர்ப்பது. 3832

கசு ஈறிட லறியமால் வரைநின் றீர்த்திழி
ஆறிடு விரையகி லார மாதியாய்
ஊறிட வொண்ணக ருரைத்த வொண்டளச்
சேறிடு பாணியிற் றிகழ்ந்த தென்பது. 3833

கஎ *நவ்வி நோக்கிய ரிதழ்நிகர் குமுதத்தி னறுந்தேன்
வவ்வி மாந்தரிற் களிமயக் குறுவன மகரம்
எவ்வ நீங்கிய விறப்பொடு பிறப்பிவை யென்னக்
கவ்வு மீனொடு முழுகின வெழுவன காண்டம். 3834

கஅ கவள யானையன் னாற்கந்தக் கடிநறுங் கமலத்
தவளை யீய்கில மாவது செய்துமென் றருளித்
திவள வன்னங்கள் சென்னடை காட்டுவ தேனார்
குவளை காட்டுவ விழியிதழ் காட்டுவ குமுதம். 3835

கசு பெய்க லங்களி னிலங்கொளி மருங்கொடும் பிறழ
வைக லும்புனல் குடைபவர் வானர மகளிர்
செய்கை யன்னங்க ளேந்திய சேடிய ரென்னப்
பொய்கை யன்னங்க ளேந்திய பூங்கொம்பு பொலிவ. 3836

உ0 ஏலு நீர்நிழ லிடையிடை யெறித்தலிற் படிகம்
போலும் வார்புனல் புகுந்துள வாமெனப் பொங்கி
ஆலு மீன்கண மஞ்சின வலமர வஞ்சிக்
கூல மாமரத் திருஞ்சிறை புலர்த்துவ குரண்டம். 3837

உக அங்கொர் பாகத்தி னஞ்சன மணிநிழ லடையப்
பங்கு வேறதிற் பதுமரா கத்தொளி பாயக்
கங்கு லும்பக லும்மெனப் பொலிவது கமலம்
மங்கை மார்தட முலையெனப் பொலிவது வாளம். 3838

* இக்குறி செய்யுணடையின் வேறுபாட்டை யுணர்த்தும்.

உஉ வலிந டத்திய வாளென வாளைவாய் வயங்க
நிலந டத்திய திரைதொறு முகள்வன நீர்நாய்
கலிந டத்திழைக் கண்ணுள ரெனநடங் கவினப்
பொலிவு டைத்தெனத் தேரைகள் புகழ்வன போலும். 3839

உங அன்ன தாகிய யகன்புனற் பொய்கையை யணுகிக்
கன்னி யன்னமுங் கமலமு முதலிய கண்டான்
தன்னி னீங்கிய தளிரியற் குருகினன் றளர்வான்
உன்னு நல்லுணர் வொடுங்கிடப் புலம்பிட லுற்றான். 3840

உச *வரியார் மணிக்கால் வராலினமே மடவன் னங்கா ளென்னீங்கள்
தரியா நடையா ளிலளாலெற் றந்த தேதுந் தகவேயாய்
எரியா நின்ற வுயிராருக் கிரங்கி ஞல திசையன்றே
பிரியா திருந்தீ ரொருமாற்றம் பேசிற் பூசல் பெரிதாமோ. 3841

உரு வண்ண நறுந்தா மரைமலரும் வாசக் குவளை நாண்மலரும்
புண்ணி லெரியு மொருநெஞ்சம் பொதியு மருந்திற் றரும்பொய்காய்
கண்ணு முகமுங் காட்டுவாய் வடிவு மொருகாற் காட்டாயோ
உண்ணு மொருகா லஃதுதவா துலோபி ஞரு முயர்ந்தாரோ. 3842

உசா விரிந்த குவளை சேதாம்பல் விரைமென் கமலங் கொடிவள்ளை
தரங்க நெருங்கு வராலாமை யென்றித் தகைய தனைநோக்கி
மருந்தி னனையா ளவையவங்க ளவைநிற் கண்டேன் வல்லரக்கன்
அருந்தி யகல்வான் சிந்தினவோ வாவி யுரைத்தி யாமன்றே. 3843

உஎ ஓடா நின்ற களிமயிலே சாயற் கொதுங்கி யுள்ளழிந்து
கூடா தாரிற் றிரிகின்ற நீயு மாகங் குளிர்ந்தாயோ
தேடா நின்ற வென்னுயிரைத் தெரியக் கண்டாய் சிந்தையுவந்
தாடா நின்றா யாயிரங்கண் ணுடையார்க் கொளிக்கு மாறுண்டோ. 3844

உஅ அடையீ ரெனினு மொருமாற்ற மறிந்த துரையீ ரன்னத்தின்
பெடையீ ரொன்றும் பேசீரோ பிழையுண் டார்கரும் பிழைசெய்தீரோ
நடைநீ ரழியச் செய்தாரார் நடுவி லாதார் நனியவரோ
டுடையீர் பகைதா னுமைநோக்கி யுவக்கின் றேனைமுனிவீரோ. 3845

உகூ பொன்பாற் பொருவும் விரையல்லி புல்லிப் பொலிந்த நறுந்தாது
தன்பாற் றழுவுங் குழலவண்டு தமிழ்ப்பாட் டிசைக்குந் தாமரையே
என்பா லில்லை யப்பாலோ விருப்பா ரல்லர் விருப்புடைய
உன்பா லில்லை யென்றபோ தொளிப்பா ரோடு முறவுண்டோ. 3846

௩௰ ஒருவா சகத்தை வாய்திறந்திங் குதவாய் பொய்கைக் குவிந்தொடுங்குந்
திருவா யனைய சேதாம்பற் கயலே கிடந்த செங்கிடையே
வெருவா தெதிர்கின் றமிர் துயிர்க்கும் விளங் தஞ் செவ்விக் கொழுங்கனிவாய்
தருவா யவ்வாய் முகிணகையுந் தண்ணென் மொழியுந் தாராயோ. 3847

௩௧ பஞ்சுபூத்த விரற்பதுமம் பவளம் பூத்த வடியாரென்
னெஞ்சு பூத்த தாமரையி னிலைய முகந்தார் நிறம் பூத்த
மஞ்சு பூத்த மழையனைய குழலாள் கண்போன் மணிக்குவளாய்
நஞ்சு பூத்த தாமன்ன நகையா லென்னை நலிவாயோ. 3848

௩௨ அலக்க ணுற்றேற் காற்றுவதற் கடைவுண் டென்றோ கொடிவள்ளாய்
மலர்க்கொம் பனைய மடச்சீதை காதே மற்றொன் றல்லையால்
பொலக்குண் டலமுங் கொடுங்குழையும் புனைகொள் முத்தின் பொற்றோடும்
விலக்கி வந்தாய் காட்டாயோ வின்னும் பூசல் விரும்புதியோ. 3849

௩௩ *என்ற யாவுயிர்க் கின்றவ னேடவிழ்
கொன்றை வாவிப் புறத்திது கூறியான்
பொன்ற யாதும் புகல்கிலை போலுமால்
வன்ற யாவிலி யென்னவ ருந்தினான். 3850

௩௪ வார ளித்திள மாப்பிடி வாயிடைக்
கார ளிக்கலு ழிக்கருங் கைமலை
நீர ளிப்பது நோக்கின னின்றனன்
பேர ளிக்குப் பிறந்தவில் லாயினான். 3851

௩௫ ஆண்ட வள்ளலை யன்பெனு மார்பணி
பூண்ட தம்பி பொழுது கழிந்ததால்
ஈண்டி ரும்புன றோய்ந்துழி யேகிநீ
நீண்ட வன்கழ றொழ்நெடி யோயென்றான். 3852

௩௬ அரசு மவ்வழி நின்றரி தேகியத்
திரைசெய் தீர்த்தமுஞ் செய்தவ முண்மையால்
வரைசெய் மாமத வாரண நாணுற
விரைசெய் பூம்புன லாடலை மேயினான். 3853

௩௭ நீத்த நீரி னெடியவன் மூழ்கலுந்
தீய்த்த காமத் தெறுகதிர்த் தீயினாற்
காய்த்த மற்றைக் கரும்பொன்னைக் கம்மியன்
றோய்த்த தண்புன லொத்தது தோயமே. 3854

௩௮ *ஆடினா னன்னமா யருமறைகள் பாடினான்
நீடுநீர் முன்னைநூ னெறிமுறையி னேமிதாள்
சூடினான் முனிவரைத் தொழுதுபூஞ் சோலைவாய்
மாடுதான் வைகினா னெரிகதிரும் வைகினான். 3855

௩௯ அந்திதான் வந்துதா னணுகவே யவ்வயின்
சந்தவார் கொங்கையா டனிமைதா னாயகன்
சிந்தியா நொந்துதேய் பொழுதுதெறு சீதநீர்
இந்துவா னுந்துவா னெறிகதிரு மாயினான். 3856

௪௰ *பூவொடுங் கினவிரவு புள்ளொடுங் கினபொருவின்
மாவொடுங் கினமரனு மிலையொடுங் கினகிளியும்
நாவொடுங் கினமயிலு நடமொடுங் கினகுயில்கள்
கூவொடுங் கினபிளிறு குரலொடுங் கினகளிறு. 3857

௪௧ மண்டுயின் றதுநிலைய மலைதுயின் றனமறுவில்
பண்டுயின் றனவிரவு பணிதுயின் றனபகரும்
விண்டுயின் றதுகழுதும் விழிதுயின் றனபழுதில்
கண்டுயின் றிலநெடிய கடறுயின் றனகளிறு. 3858

௪௨ பொங்கிமுற் றியவுணர்வு புணர்தலும் புகையினொடு
பங்கமுற் றனையவினை பரிவுறும் படிமுடிவில்
கங்குலிற் றதுகமல முகமெடுத் தனகடலின்
வெங்கதிர்க் கடவுளெழ விமலன்வெந் துயரிலெழ. 3859

௪௩ காலையே கடிதுநெடி தேகினார் கடல்கவினு
சோலையே மலைதழுவு கானநீ ணெறிதொலைய
[1]வாலையேய் துழனியக னாடார் கலியமுது
போலவே யுரைசெய்புன மானைநா டுதல்புரினார். 3860

க. பம்பை வாவிப் படலம் முற்றும்

உ. அனுமப் படலம்

க எய்தினார் சவரிநெடி தேயமால் வரையெளிதின்
நொய்தினே றினரதனி னோண்மைகூர் கவியரசு
செய்தியோர் கிலனனையர் தெவ்வரா மெனவெருவி
உய்துநா மென்விரைவி னோடினான் மலைமுழையில். 3861

(பிரதி) [1]வாலையே,

உ தாரனோர் தகையனள னீலன்மா ருதிமுதல
வீரரோ டிரவிசுதன் மேருமால் வரைநிகர்
பாரமா மலையினொரு பாகமோ டுதல்புரிய
ஆரமார் பருமதனி னுருமா றுறல்கருதி. 3862

ங காலின்மா மதலையிவர் காண்மினோர் கறுவுடையர்
வாலியே வலின்வரவி னுர்கடாம் வரிசிலையர்
நீலமால் வரையனையர் நீதியாய் நினைதியென
மூலமோர் கிலர்மறுகி யோடினர் மலைமுழையில். 3863

ச அவ்விடத் தவர்மறுகி [1]யஞ்சிநெஞ் சழியமதி
வெவ்விடத் தினைமறுகு தேவர்தா னவர்வெருவு
தவ்விடத் தளியருளு தாழ்சடைக் கடவுளென
இவ்விடத் தினிதிருமி னஞ்சலென் றிடையுதவி. 3864

ரு அஞ்சனைக் கொருசிறுவ னஞ்சனக் கிரியனைய
மஞ்சனைக் குறுகவொரு மாணவப் படிவமொடு
வெஞ்சினத் தொழிலர்தவ மெய்யர்கைச் சிலையரென
நெஞ்சயிர்த் தயல்மறைய நின்றுகற் பனைநினையும். 3865

சு தேவரொப் பருதலைவ ராமுதற் றெரிவரிய
மூவர்மற் றிவரிருவர் மூரிவிற் காரிவரை
யாவரொப் பவருலகில் யாதிவர்க் கரியபொருள்
கேவலத் திவர்நிலைகள் தேர்வதெக் கிழமைகொடு. 3866

எ சிந்தையிற் சிறிதுதுயர் சேர்வுறத் தெருமாலின்
நொந்தயர்த் தனரனையர் நோவுறச் சிறியரலர்
அந்தரத் தமரர்சிறு மானிடப் படிவம்வர
நிந்தனைக் கரியபொரு ணேடுதற் குறுநிலையர். 3867

அ தருமமுந் தகவுமிவை தனமெனுந் தகையரிவர்
கருமமும் பிறிதொர்பொருள் கருதியன் றதுகருதில்
அருமருந் தனையதிடை யழிவுவந் துளத்தனை
இருமருங் கினுநெடிது துருவுகின் றனரிவர்கள். 3868

கூ கதமெனும் பொருண்மையிலர் கருணையின் கடலனையர்
இதமெனும் பொருளலதொ ரியல்புணர்ந் திலரிவர்கள்
சதமனஞ் சுறுநிலையர் தருமமஞ் சுறுசரிதர்
மதனனஞ் சுறுவடிவர் மறலியஞ் சுறுமறவர். 3869

(பிரதி) 1 யஞ்சிநெஞ் சழியமதி.

க0 *என்பன பலவும் பன்னி யிருவரை யெய்த நோக்கி
அன்பினோ டுருகு கின்ற வுள்ளத்த னார்வத் தோரை
முன்பிரிந் தனையர் தம்மை முன்னின னென்ன நின்றான்
தன்பெருங் குணத்தா றன்னைத் தானல தொப்பி லாதான். 3870

கக தன்கன்று கண்ட வன்ன தன்மைய தறுகட் பேழ்வாய்
மின்கன்று மெயிற்றுக் கோண்மா வேங்கையென் றினைய வேயும்
பின்சென்று காதல் கூரப் பேகணித் திரங்கு கின்ற
தென்கன்று கின்ற தெண்ணிப் பற்பல விசைய வம்மா. 3871

கஉ மயின்முதற் பறவை யெல்லா மணிநிறத் திவர்தம் மேனி
வெயிலுறற் கிரங்கி மீதாய் விரிசிறைப் பந்தர் வீசி
இயல்வகுத் திரங்கு கின்ற வினமுகிற் கணங்க ளெங்கும்
பயில்வுறத் திவலை சிந்திப் பயப்பயத் தழுவும் பாங்கர். 3872

கந காயெரி கனலுங் கற்கள் கள்ளுடை மலரே போலத்
தூயசெங் கமல பாதந் தோய்தொறுங் குழைந்து தோன்றும்
போயின திசைக டோறு மரனொடு புல்லு மெல்லாஞ்
சாய்வுறுந் தொழுவ போன்றிங் கிவர்களோ தருமமாவார். 3873

கச துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை துடைத்து நீக்கித்
தென்புலத் தன்றி மீளா நெறியுய்க்குந் தேவரோ தான்
என்புநெக் குருகு கின்ற திவர்கின்ற தளவில் காதல்
அன்பினுக் கவதி யில்லை யடைவென்கொ லறித றேற்றேன். 3874

கரு இவ்வகை யெண்ணி யாண்டவ் விருவரு மெய்த லோடுஞ்
செவ்வழி யுள்ளத் தானுந் தெரிவுற வெதிர்சென் றெய்திக்
கவ்வையின் றாகவுங்கள் வரவெனக் கருணை யோனும்
வெவ்வகை நீங்கி யோய்நீ யாரென விளம்ப லுற்றான். 3875

கசு மஞ்செனத் திரண்ட கோல மேனியீர் மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி நளிரிரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சமொத் தலர்ந்த செய்ய கண்ணினீர் காற்றின் வேந்தற்
கஞ்சனை வயிற்றின் வந்தே னாமமு மனும னென்பேன். 3876

கஎ இம்மலை யிருந்து வாழு மெரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக் கேவல் செய்வேன் றேவநும் வரவு நோக்கி
விம்மலுற் றனைய னேவ வினவிய வந்தே னென்றான்
எம்மலைக் குலமுந் தாழ விசைசுமந் தெழுந்த தோளான். 3877

௧௮ மாற்றம் துரைத்த லோடும் வரிசிலைக் குரிசின் மைந்தன்
தேற்றமுற் றிவனி னூங்குஞ் செவ்வியோ ரின்மை தேறி
ஆற்றலு நிறைவுங் கல்வி யமைதியு மறிவு மென்ப
வேற்றுமை யிவனோ டில்லை யாமென விளம்ப லுற்றான். 3878

௧௯ இல்லாத உலகத் தெங்கும் இயங்குவான் இயல்பு கூற
கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி
செல்லாலே தோன்றிற் றென்னே யாரோவிச் சொல்லின் செல்வன்
வில்லார்தோ ளிளைய மைந்த விரிஞ்சனோ விடைவல் லானோ. 3879

௨௦ மாணியாம் வடிவு மன்று மற்றிவன் வடிவு மைந்த
ஆணியிவ் வுலகுக் கெல்லா மென்னலா மாற்றற் கேற்ற
சேணுயர் பெருமை தன்னைச் சிக்கறத் தெளிந்தேன் பின்னுங்
காணுதி மெய்ம்மை யென்று தம்பிக்குக் கழறிக் கண்ணன். 3880

௨௧ எவ்வழி யிருந்தான் சொன்ன கவிக்குலத் தரசன் யாங்கள்
அவ்வழி யவனைக் காணு மருத்தியா லணுக வந்தோம்
இவ்வழி நின்னை யுற்ற வெமக்குநீ யின்சொ லன்ன
செவ்வழியுள்ளத் தானைக் காட்டுதி தெரிய வென்றான். 3881

௨௨ மாதிரப் பொருப்போ டோங்கு வரம்பிலா வுலகின் மற்றிப்
பூதரப் புயத்து வீரர் நும்மொக்கும் புனிதர் யாரே
ஆதரித் தவனைக் காண்டற் கணுகினி ரென்னி லன்னான்
தீதவித் தரிதிற் செய்த செய்தவச் செல்வ னன்றே. 3882

௨௩ இரவிதன் சிறுவன் றன்னை யிந்திரன் புதல்வ னென்னும்
பரிவிலன் சீறப் போந்து பருவரற் கொருவ னாகி
அருவியங் குன்றி லென்னோ டிருந்தன னவன்பாற் செல்வம்
வருவதோ ரமைவின் வந்தீர் வரையினும் வளர்ந்த தோளீர். 3883

௨௪ ஒடுங்கலி னுலகம் யாவு முவந்தன வுதவி வேள்வி
தொடங்கின மற்று முற்றத் தொல்லறந் துறந்த சான்றோர்
கொடுங்குலப் பகைஞ ராகிக் கொல்லிய வந்த கூற்றை
நடுங்கினார்க் கபய நல்கு மதனினு நல்ல துண்டோ. 3884

௨௫ எம்மையே காத்தி ரென்றற் கெளிதரோ விமைப்பி லாதோர்
தம்மையே முதலிட் டான்ற சராசரஞ் [1]சமைத்த வாற்றல்
மும்மையே யுலகுங் காக்கு முதல்வர்நீர் முருகச் செவ்வி
உம்மையே புகல்புக் கேமுக் கிதில்வரு முறுதி யுண்டோ. 3885

(பிரதி) [1] சமைந்த.

உசு யாரென வியம்பு கேனு னெங்குலத் திறைவற் கும்மை
வீரர்நீர் பணித்தி ரென்றான் மெய்ம்மையின் வேலி போல்வான்
வார்கழ லிளைய மைந்தன் மரபுளி வாய்மை யாதும்
சோர்வில னிலைமை யெல்லாந் தெரிவுறச் சொல்ல லுற்றான். 3886

உஎ சூரியன் மரபிற் றோன்றல் சுடர்நெடு நேமி யாண்ட
ஆரிய னமரர்க் காகி யசுரரை யாவி யுண்ட
வீரியன் வேள்வி செய்து விண்ணுல கோடு மாண்ட
காரியல் கருணை யன்ன கண்ணனக் கவிகை மன்னன். 3887

உஅ புயறரு மதத்திண் கோட்டுப் புகர்மலைக் கிறையை யூர்ந்து
மயறரு மவுணர் யாரு மடிதர வரிவிற் கொண்ட
இயறரு புலமைச் செங்கோன் மனுமுத லெவரு மொவ்வாத்
தயரதன் கனக மாடத் தடமதி லயோத்தி வேந்தன். 3888

உகூ அன்னவன் சிறுவ னிவ் வாண்டகை யனைய னேவத்
தன்னுடை யுரிமைச் செல்வந் தம்பிக்குத் தகவி னல்கி
நன்னெடுங் கானஞ் சேர்ந்தா னுமமு மிராம னென்பான்
தன்னொடும் பிறந்திங் கேவல் செய்திடு மடியன் றானும். 3889

௩0 என்றவன் றோற்ற மாதி யிராவண னிழைத்த மாயப்
புன்றொழி லிறுதி யாகப் புகுந்துள பொருள்க ளெல்லாம்
ஒன்றுமாண் டொழிவு றாம லுணர்த்தின னுணர்த்தக் கேட்டு
நின்றவக் காலின் மைந்த னெடிதுவர் தடியில் வீழ்ந்தான். 3890

௩க தாழ்தலுந் தகாத செய்த தென்னைநீ தரும மன்றால்
கேள்விநூன் மறைவல் லாள வென்றன ரென்னக் கேட்ட
பாழியந் தடந்தோள் வென்றி மாருதி பதுமச் செங்கண்
ஆழியா யடிய னேனு மரிக்குலத் தொருவ னென்றான். 3891

௩உ மின்னுருக் கொண்ட வில்லோர் வியப்புற வேத நன்னூல்
பின்னுருக் கொண்ட தென்னும் பெருமையாம் பொருளுந் தாழப்
பொன்னுருக் கொண்ட மேரு புயத்துக்கு முவமை போதாத்
தன்னுருக் கொண்டு நின்றான் றருமத்தின் றனிமை தீர்ப்பான். 3892

௩௩ கண்டில னுலக மூன்றுங் காலினாற் கடந்து கொண்ட
புண்டரீ கக்க ணாழிப் புரவலன் பொலங்கொள் சோதிக்
குண்டல வதன மென்றாற் கூறலாந் தகைமைத் தன்றோ
புண்டை நூல் கதிரோன் சொல்லப் படித்தவன் படிவ மன்னோ. 3893

௩௪ தாட்படாக் கமல மன்ன தடங்கணான் றம்பிக் கம்மா
கீட்படா நின்ற நீத்தங் கிளர்படா தாகி யென்றும்
நாட்படா மறைக ளாலு நவைபடா ஞானத் தாலும்
கோட்படாப் பதமே யைய குரக்குருக் கொண்ட தென்றான். 3894

௩௫ நல்லன நிமித்தம் பெற்றே நம்பியைப் பெற்றே நம்பால்
இல்லையே துன்ப மான தின்பமு மெய்திற் றின்னும்
வில்லினாய் நின்னைப் போலாங் கவிக்குலக் குரிசில் வீரன்
சொல்லினா லேவல் செய்வா னவனிலை சொல்லற் பாற்றே. 3895

௩௬ என்றகம் முவந்து கோல முகமலர்ந் திமையா நின்ற
குன்றியல் தோளி னானை நோக்கிய குரக்குச் சீயம்
சென்றவன் றன்னை யின்னே கொணர்கின்றேன் சிறிது போழ்தில்
வென்றியீ ரிருத்தி ரென்னா விடைபெற்று விரைவிற் போனான் 3896

௨. அனுமப் படலம் முற்றும்.

௩. நட்புப் படலம்

௧ போனமந் தரமணிப் புயநெடும் புகழினான்
ஆனதன் பொருசினத் தரசன்மா டணுகினான்
யானுமென் குலமுமிவ் வுலகுமுய்ந் தனமெனா
மானவன் குணமெலா நினையுமா மதியினான். 3897

௨ மேலவன் றிருமகற் குரைசெய்தான் விரைசெய்தார்
வாலியென் றளவிலா வலியினா னுயிர்தெறக்
காலன்வந் தனனிடர்க் கடல்கடந் தனமெனா
ஆலமுண் டவனினின் றருநடம் புரிகுவான். 3898

௩ மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார்
எண்ணுளா ரவரவர்க் கியலுளா ரிசையுளார்
கண்ணுளா ராயினார் பகையுளார் கழிநெடும்
புண்ணுளா ராருயிர்க் கமுதமே போலுளார். 3899

௪ சூழிமால் யானையார் தொழுகழற் றயரதன்
பாழியா ருலகெலா மொருவழிப் படரவாழ்
ஆழியான் மைந்தர்பே ரழகினா ரறிவினார்
ஊழியா ரினிதுனக் கரசுதந் துதவினார். 3900

௫ நீதியார் கருணையி னெறியினுர் நெறிவயிற்
பேதியா நிலைமையா ரெவரினும் பெருமையார்
போதியா தளவிலா வுணர்வினுர் புகழினுர்
காதிசேய் தருகடற் கடவுடம் படையினுர் 3901

௬ காண்முதற் கருணையற் றவர்கடற் படையொடும்
சிரமுகச் சிலைகுனித் துதவினுர் புவியுளார்
பாமுகப் பகைதுமித் தருளுவார் பாமராம்
அரன்முதற் றலைவருக் கதிசெயத் திறலினுர். 3902

௭ உளைவயப் புரவியா னுதவவுற் றொருசொலால்
அளவில்கற் புடையசிற் றவைபணித் தருளலால்
வளையுடைப் புணரிசூழ் மகிதலத் திருவெலாம்
இளையவற் குதவியித் தலையெழுந் தருளினுன். 3903

௮ நல்லுறுப் பமையுநம் பியரின்முன் னவன்முனம்
எல்லுறுப் பரியபே ரெழுசுடர்க் கடவுடன்
பல்லிறுத் தவன்வலிக் கமைதிரியம் பகமெனும்
வில்லிறுத் தருளினுன் மிதிலைபுக் கிணையநாள். 3904

௯ வேலிகற் சினவுதா டகைவிளிந் துருளவிற்
கோலியக் கொடுமையாள் புதல்வரைக் கொன்றுதன்
காலியற் பொடியினு னெடியகற் படிவமாம்
ஆலிகைக் கரியபே ருருவளித் தருளினுன். 3905

௧0 தெவ்விரா வகைநெடுஞ் சிகைவிரா மழுவினுல்
அவ்விரா மனையுமா வலிதொலைத் தருளினுன்
இவ்விரா கவன்வெகுண் டெழுமிரா வணையனும்
அவ்விரா தனையிரா வகைதுடைத் தருளினுன். 3906

௧௧ ஆயமா நாகர்தா மூழியா னேயலால்
காயமா ளுயினுன் யாவனே காவலா
நீயமா னேர்தியா னேரின்மா ரீசனுர்
மாயமா னுயினுர் மாயமா னுயினுன். 3907

௧௨ உக்கவந் தவவுடற் பொறைதுறந் துயர்பதம்
புக்கவந் தமுநமக் குரைசெயும் புரையதோ
திக்குமந் தரநெடுந் திரள்கரஞ் செலவதோள்
அக்கவந் தனுநினைந் தமார்தாழ் சவரிபோல். 3908

கங முனைவரும் பிறருமேல் முடிவரும் பகலெலாம்
இனையர்வந் துறுவரென் றியறவ முயல்குவார்
வினையெனுஞ் சிறைதுறந் துயர்பதம் விரைவினார்
எனையரென் றுரைசெய்கே னிரவிதன் சிறுவனே. 3909

கச மாயையான் மதியிலா னிருதர்கோன் மனைவியைத்
தீயதன் னகரினுய்த் தன்னவட் டேடுவான்
நீயையா தவம்விளைத் துடைமையா னெடுமனம்
தூய்மையா வுடைமையா லுறவினைத் துணிகுவார். 3910

கரு தந்திருந் தனரருட் டனிமையைப் பகைஞனும்
இந்திரன் சிறுவனுக் கிறுதியின் றிசைதரும்
புந்தியின் பெருமையாய் போதியென் றுரைசெய்தான்
மந்திரங் கெழுமுநூன் மரபுணர்ந் துதவுவான். 3911

கசா அன்னவா முரையெலா மறிவினா லுணர்குவான்
உன்னையே யுடையவெற் கரியதெப் பொருளரோ
பொன்னையே பொருவுவாய் போதுவா யென்றனன்
தன்னையே யனையவன் சரணம்வந் தணுகினான். 3912

கஎ *கண்டன னென்ப மன்னோ கதிரவன் சிறுவன் காமர்
குண்டலந் துறந்த கோல வதனமுங் குளிர்க்குங் கண்ணும்
புண்டரீ கங்கள் பூத்துப் புயறழீஇப் பொலிந்த திங்கள்
மண்டல முதையஞ் செய்த மரகதக் கிரியன் னானை. 3913

கஅ நோக்கினா னெடிது நின்றா னொடிவருங் கமலத் தண்ணல்
ஆக்கிய வுலக மெல்லா மன்றுதொட் டின்று காறும்
பாக்கியம் புரிந்த வெல்லாங் குவிந்திரு படிவ மாகி
மேக்குயர் தடந்தோள் பெற்ற வீரராய் விளைந்த தென்பான். 3914

ககூ தேறின னமரர்க் கெல்லாந் தேவர்தந் தேவரென்றே
மாறியிப் பிறப்பின் வந்த மானுயர் யாக்கை மன்னோ
ஆறுயர் சடிலத் தானு மயனுமென் றிவர்க ளாதி
வேறுள குழுவை யெல்லா மானிடம் வென்ற தன்றே. 3915

உ0 எனநினைந் தினைய வெண்ணி யிவர்கின்ற காத லோதக்
கனைகட றனைநின் றேறக் கண்ணிணை களிப்ப நோக்கி
அனகனைக் குறுகி னானவ் வண்ண லு மருத்தி கூரப்
புனைமலர்த் தடக்கை நீட்டிப் போந்தினி திருத்தி யென்றான். 3916

உக தவாவலி யரக்க ரென்னுந் தவாவிருட் பகையைத் தள்ளிக்
குவாலற நிறுத்தற் கேற்ற காலத்தின் கூட்ட மொத்தார்
அவாமுத லறுத்த சிந்தை யனகனு மரியின் வேந்தும்
உவாவுற வந்து கூடு முடுபதி யிரவி யொத்தார். 3917

உஉ கூட்டமுற் றிருந்த வீரர் குறித்ததோர் பொருட்கு முன்னர்
ஈட்டிய தவமு மன்ன முயற்சியு மிசைந்த தொத்தார்
மீட்டும்வா ளரக்க ரென்னுந் தீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வி யோடு ஞானமுங் கிடைத்த தொத்தார். 3918

உங ஆயதோ ரமைதி யின்க ணருக்கன்சே யரசை நோக்கித்
தீவினை தீய நோற்று ரென்னில்யார் செல்வ நின்னை
நாயக னுலகுக் கெல்லா மென்னுநன் னலத்தா யுன்னை
மேயினன் விதியே நல்கின் மேவலா காதென் னென்றான். 3919

உச மையறு தவத்தி ேனை சவரியிம் மலையி னீவந்
தெய்தினை யிருந்த தன்மை யியம்பினள் யாங்க ளுற்ற
கையறு துயர நின்னாற் கடப்பது கருதி வந்தேம்
ஐயநிற் றீரு மிந்த வவலமென் றரியுஞ் சொன்னான். 3920

உரு முரண்வலித் தடக்கை யோச்சி முன்னவன் பின்வந் தேனை
இருணிலைப் புறத்தின் காறு முலகெங்குந் தொடர விக்குன்
றரணுடைத் தாகி யுய்ந்தே னுருயிர் துறக்க வஞ்சிச்
சரணுனைப் புகுந்தே னென்னைத் தாங்குத றருமமென்றான். 3921

உசா என்றவக் குரக்கு வேந்தை யிராமனு மிரங்கி நோக்கி
உன்றனுக் குரிய வின்ப துன்பங்க ளுள்ள முன்னாட்
சென்றன போக்கி மேல்வந் துறுவன தீர்த்த லன்றி
நின்றன வெனக்கு நிற்கு நேரென மொழியு நேரா. 3922

உஎ மற்றினி யுரைப்ப தென்னே வானிடை மண்ணி னுன்னைச்
செற்றவ ரென்னைச் செற்றார் தீயரே யெனினு நின்னோ
டுற்றவ ரெனக்கு முற்றா ருன்கிளை யெனதென் காதற்
சுற்றமுன் சுற்ற நீயே யென்னுயிர்த் துணைவ னென்றான். 3923

உஅ ஆர்த்தது குரக்குச் சேனை யஞ்சனை சிறுவன் மேனி
போர்த்தது பொடித்த ரோமப் புளகங்கள் பூவின் மாரி
தூர்த்தனர் விண்ணோர் மேகஞ் சொரிந்தன கனக மண்ணல்
வார்த்தையெக் குலத்து ளோர்க்கு மறையினு மெய்யென் றன்ன 3924

௨௯ ஆண்டெழுந் தடியிற் றாழ்ந்த வஞ்சனை சிறுவன் வாழி
தூண்டிர டடந்தோண் மைந்த தோழனு நீயும் வாழி
ஈண்டுநுங் கோயி லெய்தி யினிதினீ யிருக்கை காண
வேண்டுது மருளு கென்றான் வீரனும் விழுமி தென்றான். 3925

௩0 ஏகினா ரிரவி சேயு மிருவரு மரிக ளேறும்
ஊகவெஞ் சேனை சூழ்வந் தடியிணை யுவந்து வாழ்த்த
நாகமு நரந்தக் காவு நளினவா விகளு நல்கிப்
போகபூ மியையு மேயும் புதுமலர்ச் சோலை புக்கார். 3926

௩௧ ஆரமு மகிலுந் துன்னி யவிர்பளிக் கறைக ளாவி
நாரநின் றனபோற் றோன்றி நவமணித் தடங்க ணீடும்
பாரமு மருங்குந் தெய்வத் தருவுநீர்ப் பண்ணை யாடும்
சூரர மகளி ரூச றுவன்றிய சும்மைத் தன்றே. 3927

௩௨ *அயர்வில் கேள்விசா லறிஞர் வேலைமுன்
பயில்வில் கல்வியார் பொலிவில் பான்மைபோற்
குயிலு மாமணிக் குழுமு சோதியால்
வெயிலும் வெள்ளிவெண் மதியு மேம்படா. 3928

௩௩ ஏய வன்னதா மினிய சோலைவாய்
மேய மைந்தனுங் கவியின் வேந்தனும்
தூய பூவணை பொலிந்து தோன்றினார்
ஆய வன்பினா ரளவ ளாவுவார். 3929

௩௪ கனியுங் கந்தமுங் காயுந் தூயன
இனிய யாவையுங் கொணர யாரினும்
புனிதன் மஞ்சனத் தொழில்பு ரிந்தபின்
இனிதி ருந்துநல் விருந்து மாயினான். 3930

௩௫ விருந்து மாகியம் மெய்ம்மை யன்பினோ
டிருந்து நோக்கிநொந் திறைவன் சிந்தியாப்
பொருந்து நன்மனைக் குரிய பூவையைப்
பிரிந்து ளாய்கொலா நீயும் பின்னெனா. 3931

௩௬ என்ற வேலையி னெழுந்து மாருதி
குன்று போலநின் றிருகை கூப்பினான்
நின்ற நீதியாய் நெடிது கேட்டியால்
ஒன்று நானுனக் குரைப்ப துண்டெனா. 3932

௩எ நானு வேதமா நவையி லார்கலி
வேலி யன்னதோர் மலையின் மேலுளான்
சூலி யின்னருட் டுறையு முற்றினன்
வாலி யென்றுளான் வரம்பி லாற்றலான். 3933

௩அ கழறு தேவரோ டவுணர் கண்ணினின்
றுழலு மந்தரத் துருவு தேயமுன்
அழலுங் கோளரா வகடு தீவிடச்
சுழலும் வேலையைக் கடையுந் தோளினன் 3934

௩௯ நிலனு நீருமாய் நெருப்புங் காற்றுமென்
றுலைவில் பூதநான் குடைய வாற்றலான்
அலையும் வேலைசூழ் கிடந்த வாழிமா
மலையி னின்றுமிம் மலையின் வாவுவான். 3935

௪0 கிட்டி னார்பொரக் கிடைக்கி லன்னவர்
பட்ட நல்வலம் பாக மெய்துவான்
எட்டு மாதிரத் திறுதி நாளுமுற்
றட்ட மூர்த்திதாள் பணியு மாணையான். 3936

௪௧ கால்செ லாதவன் முன்னர்க் கந்தவேள்
வேல்செ லாதவன் மார்பம் வென்றியான்
வால்செ லாதவா யலதி ராவணன்
கோல்செ லாதவன் குடைசெ லாதரோ. 3937

௪௨ மேரு வேமுதற் கிரிகள் வேரொடும்
பேரு மேயவன் பெயரு மேனெடும்
காரும் வானமுங் கதிரு நாகமும்
தூரு மேயவன் பெரிய தோள்களால். 3938

௪௩ பாரி டந்தவெம் பன்றி பண்டைநாள்
நீர்கி டந்தபே ராமை நேருளான்
மார்பி டந்தமா லெனினு மற்றவன்
தார்கி டந்ததோட் டகைய வல்லரோ. 3939

௪௪ படர்ந்த நீணெடுந் தலைப ரப்பிமீ
தடர்ந்த பாரம்வந் துறவ னந்தனும்
கிடந்து தாங்குமிக் கிரியை மேவினன்
நடந்து தாங்குமிப் புவன நாளெலாம். 3940

சரு கடலொ லிப்பதுங் கால்ச லிப்பதும்
மிடல ருக்கர்தேர் மீது செல்வதும்
தொடரின் மற்றவன் சுழியு மென்றலால்
அடலின் வெற்றியா யயலி னுவதோ. 3941

சசு வெள்ள மேழுபத் துள்ள மேருவைத்
தள்ள லானதோ ளரியின் றுணையான்
உள்ள மின்றியெவ் வுயிரு மெஞ்சலால்
வள்ள லேயவன் வாழ வாழுமால். 3942

சஎ மழை யிடிப்புரு வயவெஞ் சீயமா
முழை யிடிப்புரு முதிரும் வெவ்வரா
உழை துடிப்புரு தவனு ரற்றுமா
விழை விடத்தின்மேல் விழியை யஞ்சலால். 3943

சஅ மெய்க்கொள் வாலினல் மிடலி ராவணன்
தொக்க தோளுறத் தொடர்ப டுத்தநாள்
புக்கி லாதவெம் பொழிய ரத்தநீர்
உககி லாதவெவ் வுலகி யாவையோ. 3944

சகூ இந்தி ரன்றனிப் புதல்வ னின்னளிர்ச்
சந்தி ரன்றழைத் தனைய தன்மையான்
அந்த கன்றனக் கரிய வாணையான்
முந்தி வந்தன னிவனின் முன்பினன். 3945

ருo அன்ன வன்னெமக் கரச னுகவென்
றின்ன வன்னிளம் பதமி யற்றுநாள்
முன்ன வன்குலப் பகைஞன் முட்டினன்
மின்னெ யிற்றுவா ளவுணன் மேன்மையான். 3946

ருக முட்டி நின்றவன் முரணு ரத்தினல்
ஒட்ட வஞ்சிநெஞ் சுலைய வோடினன்
வட்ட மண்டலத் தரிது வாழ்வெனு
எட்ட ரும்பில மதனி லெய்தினன். 3947

ருஉ எய்து காலையிற் பிலனு ளெய்தியான்
நொய்தி னிங்கவற் கொணர்வ னேன்மையாய்
செய்தி காவனீ சிறிது போதெனு
வெய்தி னெய்தினன் வெகுளி மேவினன். 3948

௫௩ ஏகி வாலியு மிருது வேழொடேழ்
வேக வெம்பிலந் தடவி வெம்மைசால்
மோக வென்றிமேன் முயல்வின் வைகிடச்
சோக மெய்திநின் றுணைது ளங்கினன். 3949

௫௪ அழுத மூங்குறு மவனை யன்பினில்
தொழுதி ரந்துநின் றொழிலி தாதலால்
எழுது வென்றியா யரசு கொள்கெனப்
பழுதி தென்றனன் பரியு நெஞ்சினன். 3950

௫௫ அன்று தானுமவ் வழிய ரும்பிலம்
சென்றென் முன்னவற் றேடி னனவற்
கொன்று ளார்தமைக் கொல்வெ னதெனிற்
பொன்று வேனெனப் புகுதன் மேயினன். 3951

௫௬ தடுத்து வல்லவர் தணிவு செய்துநோய்
கெடுத்து மேலையோர் கிளத்து நீதியால்
அடுத்த காவலு மரிக ளாணையால்
கொடுத்த துண்டிவன் கொண்டிலான் கொலாம். 3952

௫௭ அன்ன நாளின்மா யாவி யப்பிலத்
தின்ன வாயினூ டேறு மென்னயாம்
பொன்னின் மால்வரைப் பொருப்பொ ழித்துவே
றுன்னு குன்றெலா முடன் டுக்கினேம். 3953

௫௮ சேம மவ்வழிச் செய்து செங்கதிர்க்
கோம கன்றனைக் கொண்டு வந்தியாம்
மேவு குன்றின்மேல் வைகும் வேலைவாய்
ஆவி யுண்டன னவனை யன்னவன். 3954

௫௯ ஒளித்த வன்னுயிர்க் கள்ளை யுண்டுளம்
களித்த வாலியுங் கடிதி னெய்தினன்
விளித்து நின்றுவே றுரைபெ றான்விரைந்
தளித்த வாறுநன் றிளவ லாரென. 3955

௬0 வால்வி சைத்துவான் வழிநி மிர்ந்தெனக்
கால்பெ யர்த்தவன் கடிது தைத்தலும்
நீல்நி றத்தவா னெடுமு கட்டவும்
வேலை புக்கவும் பெரிய வெற்பெலாம். 3956

௬௧ ஏறி னானவ னெவரு மஞ்சுறச்
சீறி னானெடுஞ் சிகர மெய்தினான்
வேறி லாதவன் புகவு மெய்மையால்
ஆறி னானும்வந் தடியி றைஞ்சினான். 3957

௬௨ வணங்கி யண்ணனின் வரவி லாமையான்
உணங்கி யான்வழிப் படர வுன்னுவேற்
கிணங்க ரில்லையா லிறைவ வுன்னுடைக்
கணங்கள் காவலுன் கடமை யென்றனன். 3958

௬௩ ஆணை யஞ்சியிவ் வரசை யெய்திவாழ்
நாணி லாதவென் னவையை நல்கினாய்
பூணு லாவுதோ ளிணைபொ ருயெனக்
கோணி னானெடுங் கொடுமை கூறினான். 3959

௬௪ அடல்க டந்ததோ ளவனை யஞ்சிவெங்
குடல்க லங்கியெங் குலமொ டுங்கமுன்
கடல்க டைந்தவக் கரத லங்களால்
உடல்க டைந்தன னிவனு லைந்தனன். 3960

௬௫ இவனு லைந்தலைந் தெழுக டற்புறத்
தவனி யுங்கடந் தயல்க டந்தனன்
கவன மொன்றிலான் கால்க டாயென
அவனி வேலையே ழரியின் வாவினான். 3961

௬௬ நக்க ரக்கடற் புறத்து நண்ணுநாட்
செக்கர் மெய்த்தனிச் சோதி சேர்தலாற்
சக்க ரப்பொருப் பிற்ற லைக்குமப்
பக்க முற்றவன் கடிது பற்றினான். 3962

௬௭ பற்றி யஞ்சிலன் பழியை வெஞ்சினம்
முற்றி நின்றதன் முரண்வ லிக்கையால்
எற்று வானெடுத் தெழுத லும்பிழைத்
தற்ற மொன்றுபெற் றிவன கன்றனன். 3963

௬௮ எந்தை மற்றவ னெயிற துக்குமேல்
அந்த கற்குமோ ரரண மின்மையால்
இந்த வெற்பில்வந் திவனி ருந்தனன்
முந்த வுற்றதோர் சாப உண்மையால். 3964

௬௯ உரிமை யென்றிவற் குரிய தாரமாம்
அரும ருந்தையு மவன் விரும்பினான்
இருமை யுந்துறந் திவனி ருந்தனன்
கரும மிங்கிதெங் கடவு ளென்றனன். 3965

௭௦ *பொய்யி லாதவன் வரன்முறை யம்மொழி புகல
ஐயனா யிரம் பெரும்பெய ரமரர்க்கு மமரன்
வைய நுங்கிய வாயிதழ் துடித்தது மலர்க்கட்
செய்ய தாமரை யாம்பலம் போதெனத் திகழ்ந்த. 3966

௭௧ ஈர நீங்கிய சிற்றவை சொற்றன னென்ன
வார நீங்குதோ ளிளவற்கு மன்னர சுரிமைப்
பார மீய்ந்தவன் பரிவினன் றொருவன்மு னிளையோன்
தாரம் வவ்வின னென்றசொற் றரிக்குமா றுளதோ. 3967

௭௨ உலக மேழினோ டேழும்வந் தவனுயிர்க் குதவி
விலகு மென்னினும் வில்லிடை வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் தாரமு முனக்கின்று தருவன்
புலமை யோயவ னுறைவிடங் காட்டென்று புகன்றான். 3968

௭௩ எழுந்து பேருவ கைக்கடற் பெருந்திரை யெடுப்ப
அழுந்து துன்பத்துக் கக்கரை கண்டவ னனையான்
விழுந்த தேயினி வாலிதன் வலியென விரும்பா
மொழிந்த வீரற்கியா மெண்ணுவ துண்டென மொழிந்தான். 3969

௭௪ அனைய வாண்டுரைத் தனையவ னெழுதலு மமைச்சர்
நினைவுங் கல்வியு நீதியுஞ் சூழ்ச்சியு நிறைந்தார்
எனைய வானர ரோடும்வே றிருந்தன னிரவி
தனைய னவ்வழிச் சமீரணன் மகனுரை தருவான். 3970

௭௫ உன்னி னேனுன்ற னுள்ளத்தி னுள்ளவை யுரவோய்
அன்ன வாலியை காலனுக் களிப்பதோ ராற்றல்
இன்ன வீரர்பா லில்லையென் றயிர்த்தனை யினியான்
சொன்ன கேட்டவை கடைப்பிடிப் பாயெனச் சொன்னான். 3971

௭௬ சங்கு சக்கரக் குறியுள தடக்கையிற் றாளில்
எங்கு மித்துணை யிலக்கணம் யாவர்க்கு மில்லை
செங்கண் விற்கரத் திராமனத் திருநெடு மாலே
இங்கு தித்தன னீண்டற நிறுத்துதற் கின்னும். 3972

எஎ செறுக்கும் வன்றிறற் றிரிபுரந் தீயெழச் சினவிக்
கறுக்கும் வெஞ்சினக் காலன்றன் காலமுங் காலால்
அறுக்கும் புங்கவ னுண்டபோ ராடகத் தனிவில்
இறுக்குந் தன்மையிம் மாயவற் கன்றியு மெளிதோ. 3973

எஅ என்னை யீன்றவ னிவ்வுல கியாவையு மீன்றான்
தன்னை யீன்றவற் கடிமைசெய் தவமுனக் கஃதே
உன்னை யீன்றவெற் குறுபத முளதென வுரைத்தான்
இன்ன தோன்றலே யினியதற் கேதுவுண் டிறையோய். 3974

எகூ துன்பு தோன்றிய போதுடன் றோன்றுவோ னெவர்க்கும்
முன்பு தோன்றலை யறிதற்கு முடிவென்னென் றியம்ப
அன்பு சான்றென வுரைத்தன னையவென் னுக்கை
என்பு தோன்றல வுருகின வினிப்பிறி தெவனோ. 3975

அ0 பிறிது மன்னவன் பெருவலி யாற்றலைப் பெரியோய்
அறிது மென்னினுண் டுபாயம் தரும்பெரும் மரங்கள்
நெறியி னின்றன ஏழிலொன் றுவவிந் நெடியோன்
பொறிகொள் வெஞ்சரம் போவது காணெனப் புகன்றான். 3976

அக நன்று நன்றென நன்னெடுங் குன்றமு நாணத்
தன்று ணைத்தனி மாருதி தோளிணைத் தழுவிச்
சென்று செம்மலைக் குறுகியான் செப்புவ துளதால்
ஒன்று கேளென இராமனு முரைத்திய தென்றான். 3977

ங. நட்புப் படலம் முற்றும்.

ச. மராமரப் படலம்

க ஏக வேண்டுமின் னெறியென வினிதுகொண் டேகி
மாக நீண்டென குறுகிட நிமிர்ந்தன மரங்கள்
ஆக அஞ்சினே டிரண்டிலொன் றுருவநின் னம்பு
போக வேயென்றன் மனத்திடர் போமெனப் புகன்றான். 3978

உ மறுவி லாதவன் கூறலும் வானவர்க் கிறைவன்
முறுவல் செய்தவன் முன்னிய முயற்சியை யுன்னி
எறுழ்வ லித்தடந் தோளினிற் சிலையைநா ணேற்றி
அறிவி னுலளப் பரியவற் றருகுசென் றணைந்தான். 3979

௩ ஊழி பேரினும் பேர்வில வுலகங்க ளுலைந்து
தாழுங் காலத்துந் தாழ்வில தயங்குபே ரருளால்
ஆழி மாநிலந் தாங்கிய அருங்குலக் கிரிகள்
ஏழு மாண்டுநின் றொருவழி நின்றென இயைந்த. 3980

௪ கலைகொண் டோங்கிய மதியமுங் கதிரவன் றானும்
தலைகண் டோடுதற் கருந்தவர் துடங்குறுஞ் சாயன்
மலைகண் டோமென்ப தல்லது மலர்மிசை யயற்கும்
இலைகண் டல்லது தெரிப்பருந் தரத்தன ஏழும். 3981

௫ ஒக்க நாளெலா முழல்வன வுலைவில வாக
மிக்க தோர்பொரு ளுளதென வேறுகண் டிலமால்
திக்கும் வானமுஞ் செறிந்தவத் திருநிழற் சீதம்
புக்கு நீங்கலிற் றளர்வில விரவிதேர்ப் புரவி. 3982

௬ நீடு நாட்களுங் கோட்களு மென்னமே னிவந்து
மாடு தோற்றுவ மலரெனப் பொலிகின்ற வளத்த
ஓடு மாச்சுடர் வெண்மதிக் குட்கறுப் புயர்ந்த
கோடு தேய்த்தலிற் களங்கமுற் றுமன்ன குறிய. 3983

௭ தீத ரும்பெருஞ் சாகைக டழைத்ததோர் செயலால்
வேத மென்னவுந் தகுவன விசும்பினு முயர்ந்த
ஆதி யண்டமுன் பளித்தவ னுலகிலங் கவனூர்
ஓதி மந்துணைப் பெடையொடும் புடையிருந் துறைவ. 3984

௮ நாற்ற மல்குபூ வடைகனி நனைமுதல் யாவும்
வீற்று மண்டலத் தியாவையும் வீழ்கில யாண்டும்
காற்ற லம்பினுங் கலிநெடு வானிடைக் கலந்த
ஆற்றின் வீழ்ந்துபோ யலைகடற் பாய்தரு மியல்ப. 3985

௯ அடியி னுல களந்தவ னண்டத்துக் கப்பால்
முடியின் மேற்சென்ற முடியன வாதலின் முடியா
நெடிய மாலன்ன நிலையன்ன நீரிடைக் கிடந்த
படியின் மேனின்ற மேருமால் வரையினும் பழைய. 3986

௧௦ வள்ள லிந்திரன் மைந்தற்குந் தம்பிக்கும் வலித்த
உள்ள மேயென வொன்றினொன் றுள்வயிர்ப் புடைய
தெள்ளு நீரிடைக் கிடந்துபார் சுமந்தவச் சேடன்
வெள்ளி வெண்படங் குடைந்துகீழ்ப் போகிய வேர்கள். 3987

கக சென்று திக்கினை யளந்தன பணைகளிற் றேவர்
என்று நிற்குமென் றிசைப்பன விருசுடர் திரியும்
குன்றி னுக்குயர்ந் தகன்றன வொன்றினுங் குறுகா
தொன்றி னுக்கொன்றி னிடைநெடிது யோசனை யுடைய. 3988

கஉ ஆய மாமர மனைத்தையு நோக்கினின் றமலன்
தூய வார்கணை துரப்பதோ ராதரந் தோன்றச்
சேய வானமுந் திசைகளுஞ் செவிடுறத் தேவர்க்
கேயி லாததோர் பயம்வரச் சிலையைநா ணெறிந்தான். 3989

கங ஒக்க நின்றதெவ் வுலகமு மங்கங்கே யோசை
பக்க நின்றவற் குற்றது பகர்வதெப் படியோ
திக்க யங்களு மயங்கின திசைகளுந் திகைத்த
புக்க யன்பதி சலிப்புற வொலித்ததப் போர்வில். 3990

கச அரிந்த மன்சிலை நாணெறிந் தார்த்தலு மமரர்
இரிந்து நீங்கினர் கற்பத்தி னிறுதியென் றயிர்த்தார்
பரிந்த தம்பியே பாங்குநின் றான்மற்றைப் பல்லோர்
புரிந்த தன்மையை யுரைசெயிற் பழியவாய்ப் புணரும். 3991

கரு எய்தல் காண்டுங்கொ லின்னமென் றரிதின்வந் தெய்திப்
பொய்யின் மாருதி முதலினர் புகலுறும் பொழுதில்
மொய்கொள் வார்சிலை நாணினை முறையுற வாங்கி
வெய்ய வாளியை யாளுடை வில்லியும் விட்டான். 3992

கசு ஏழு மாமர முருவிக்கீ ழுலகமென் றிசைக்கும்
ஏழு மூடுபுக் குருவிப்பின் னுடனடுத் தியன்ற
ஏழி லாமையான் மீண்டதவ் விராகவன் பகழி
ஏழு கண்டபி னுருவுமா லொழிவதன் றின்னும். 3993

கஎ ஏழு வேலையு முலகுமே லுயர்ந்தன வேழும்
ஏழு குன்றமு மிருடிக ளெழுவரும் புரவி
ஏழு மங்கைய ரெழுவரு நடுங்கின வென்னை
ஏழு பெற்றதோ விக்கணைக் கிலக்கமென் றெண்ணி. 3994

கஅ அன்ன தாயினு மறத்தினுக் காருயிர்த் துணைவன்
என்னுந் தன்மையை நோக்கின யாவரு மெவையும்
பொன்னின் வார்கழற் புதுநறுந் தாமரை பூண்டு
சென்னி மேற்கொண்ட அருக்கன்சே யிவையிவை செப்பும். 3995

௧௯ *வையநீ வானுநீ மற்றுநீ மலரின்மேல்
ஐயநீ யாழிநீ யாழிமா மானுநீ
செய்யதீ யனையவத் தேவுநீ நாயினேன்
உய்யவந் துதவினை யுலகமுந் துதவினாய். 3996

௨0 என்னெனக் கரியதெப் பொருளெனக் கெளியதால்
உன்னையித் தலைவிடுத் துதவினார் விதியினார்
அன்னையொப் புடையவுன் னடியருக் கடியன்யான்
மன்னவர்க் கரசவென் றுரைசெய்தான் வசையிலான். 3997

௨௧ ஆடினார் பாடினா ரங்குமிங் குங்களித்
தோடினா ருவகையா னறவையுண் டுணர்கிலார்
நேடினும் வாலிகா லனையெனா நெடிதுநாள்
வாடினார் தோளெலாம் வளரமற் றவரெலாம். 3998

௨௨ அண்டமும் மகிலமும் முடையவன் னனலிடைப்
பண்டுவந் ததுநெடும் பசைவறந் திடினும்வான்
மண்டலந் தொடுவதம் மலையின்மேன் மலையெனக்
கண்டனன் துந்துமிக் கடலனா னுடலரோ. 3999

௨௩ தென்புலக் கிழவனூர் மயிடமோ திசையின்வாழ்
வன்புலக் கரிமடிந் ததுகொலோ மகரநீர்
என்புலப் புறவுலர்ந் த்துகொலா மிதுவெனா
உன்புலக் குரியநீ யுரைசெய்வா யெனவவன். 4000

௪. மராமரப் படலம் முற்றும்

---

௫. துந்துமிப் படலம்

க. துந்துமிப் பெயருடைச் சுடுசினத் தவுணன்மீ
திந்துவைத் தொடநிமிர்ந் தெழுமருப் பிணையினான்
மந்தரக் கிரியெனப் பெரியவன் மகரநீர்
சிந்திடக் கருநிறத் தரியினைத் தேடுவான். 4001

உ. அங்குவந் தரியெதிர்ந் தமைதியென் னென்றலும்
பொங்குவெஞ் செருவினிற் பொருதியென் றுரைசெயக்
கங்கையின் கணவனக் கறைமிடற் றமலனே
உங்கள்வெங் கதவலிக் கொருவனென் றுரைசெய்தான். 4002

௩ கடிதுசென் றவனுமக் கடவுடன் கபிலையைக்
கொடியகொம் பினின்மடுத் தெழுதலுங் குறுகிமுன்
நொடிதிநின் குறையையென் றலுநுவன் றனனரோ
முடிவில்வெஞ் செருவெனக் கருள்செய்வான் முயலெனா. 4003

௪ மூலமே வீரமே மூடினா யோடுபோர்
ஏலுமே தேவர்பா லேகெனா வேயினான்
சாலநாள் போர்செய்வா யாதியே சாரல்போய்
வாலிபா லேயெனா வானுளோர் வானுளான். 4004

௫ அன்னவன் விடவுவந் தவனும்வந் தரிகடம்
மன்னவன் வருகபோர் செயவெனா மலையினைச்
சின்னபின் னம்படுத் திடுதலுஞ் சினவியென்
முன்னவன் முன்னர்வந் தனையவன் முனைதலும். 4005

௬ இருவருந் திரிவுறும் பொழுதிலின் னவர்களென்
றொருவருஞ் சிறிதுணர்ந் திலர்களெவ் வுலகினும்
வெருவருந் தகையிலார் விழுவர்நின் றெழுவரால்
மருவருந் தகையர்தா னவர்கள்வா னவர்கடாம். 4006

௭ தீயெழுந் ததுவிசும் புறநெடுந் திசைமிசைப்
போயெழுந் ததுமுழக் குடனெழுந் ததுபுயற்
றேயமும் புணரியுந் தொடர்தடங் கிரிகளும்
சாயழிந் தனவடித் தலமெடுத் திடுதலால். 4007

௮ அற்றதா கியசெருப் புரியுயமவ் வளவினில்
கொற்றவா லியுமவன் குவவுதோள் வலியொடும்
பற்றியா சையினவன் படர்நெடும் பணைபரித்
தெற்றினா னவனும்வா னிடியினின் றரறினான். 4008

௯ தலையின்மே லடிபடக் கடிதுசாய் நெடிதுதாள்
உலையவாய் முழைதிறந் துதிரவா றொழுகுமான்
மலையின்மே லுருமிடித் தென்னவான் மண்ணொடும்
குலையமா திசைகளுஞ் செவிடுறத் குத்தினான். 4009

௧௦ கவரியிங் கிதுவெனக் காதலங் கொடுதிரித்
திவர்தலுங் குருதிபட் டிசைநெடுந் திசைதொறுந்
துவராணிந் தனவெனப் பொசிதுதைந் தனதுணைப்
பவர்நெடும் பணைமதம் பயிலுவன் கரிகளே. 4010

கக புயல்கடந் திரவிதன் புவிகடந் தயலுளோர்
இயலுமண் டலமிகந் தெணையவுந் தவிரமேல்
வயிரவன் கரதலத் தவன்வலிந் தெறியவன்
றுயிரும்விண் படரவிவ் வுடலமிம் பரினரோ. 4011

கஉ முட்டிவான் முகடுசென் றணவியம் முடையுடற்
கட்டிமால் வரையைவந் துறுதலிற் கருணையான்
இட்டசா பமுமெனக் குதவவு மியல்பினில்
பட்டவா முழுவதும் பரிவினு லுரைசெய்தான். 4012

கங *கேட்டன னமலனுங் கிளத்த வாறெலாம்
வாட்டொழி லிளவலை யிதனை மைந்தநீ
ஓட்டென வவன்கழல் விரலி னுந்தினன்
மீட்டது விரிஞ்சனு டுற்று மீண்டதே. 4013

கச ஆயிடை யரிக்குல மசனியஞ்சிட
வாய்திறந் தார்த்தது வள்ள லோங்கிய
தூயவச் சோலையி லிருந்த சூழல்வாய்
நாயக வுணர்த்துவ துண்டு நானெனு. 4014

ரு துந்துமிப் படலம் முற்றும்

சூ. கலன்காண் படலம்

க இவ்வழி யாமியைந் திருந்த தோரிடை
வெவ்வழி யிராவணன் கொணர மேலைநாள்
செவ்வழி நோக்கிநின் றேவி யேகொலாம்
கவ்வையி னரற்றினள் கழிந்த சேணுளாள். 4015

உ உழையரி னுணர்த்துவ தென்ப துன்னியோ
குழைபொரு தோளினுள் குறித்த தோர்கிலம்
மழைபொரு கண்ணிணை வாரி யோடுந்தன்
இழைபொதிந் திட்டனள் யாங்க ளேற்றனம். 4016

ங வைத்தன மிவ்வழி வள்ள னின்வயின்
உய்த்தன தந்தபோ துணர்தி யாமெனுக்
கைத்தலத் தன்னவை கொணர்ந்து காட்டினன்
நெய்த்தலைப் பால்கலந் தனைய நேயத்தான். 4017

௪ தெரிவுற நோக்கினன் றெரிவை மெய்யணி
எரிகன லெய்திய மெழுகி னுக்கைபோல்
உருகின னென்கில முயிருக் கூற்றமாய்ப்
பருகின னென்கிலம் பகர்வ தென்கொல்யாம். 4018

௫ நல்குவ தென்னினி நங்கை கொங்கையைப்
புல்கிய பூணுமக் கொங்கை போன்றன
அல்குலி னணிகளு மல்கு லாயின
பல்கலன் பிறவுமப் படிக ளாயவே. 4019

௬ விட்டபே ருணர்வினை விளித்த வென்கெனோ
அட்டன வுயிரையவ் வணிக ளென்கெனோ
கொட்டின சாந்தெனக் குளிர்ந்த [1]வென்கெனோ
சுட்டன வென்கெனோ யாது சொல்லுகேன். 4020

௭ மோந்திட நறுமல ரான மொய்ம்பினில்
ஏந்திட வுத்தரீ கத்தை யேய்ந்தன
சாந்தமு மாயொளி தழுவப் போர்த்தலால்
பூந்துகி லாயவப் பூவை பூண்களே. 4021

௮ [2]ஈர்த்தன செங்கணீர் வெள்ளம் யாவையும்
போர்த்தன மயிர்ப்பெரும் புளகம் பொங்குதோள்
வேர்த்தன னென்கெனோ வெதும்பி னானென்கோ
தீர்த்தனை யவ்வழி யாது செப்புகேன். 4022

௯ விடங்கரந் தனையதோர் வெம்மை மீக்கொள
நெடும்பொழு துணர்வினோ டுயிர்ப்பு நீங்கிய
தடம்பெருங் கண்ணனைத் தாங்கி னான்றன
துடம்பினிற் செறிமயிர் சுறுக்கொண் டேறவே. 4023

௧௦ தாங்கின னிருத்தியத் துயரந் தாங்கலா
தேங்கிய நெஞ்சின னிரங்கி விம்முவான்
வீங்கிய தோளினாய் வினையி னேனுயிர்
வாங்கின னிவ்வணி வருவித் தேயெனா. 4024

௧௧ அயனுடை யண்டத்தி னப்பு றத்தையு
மயர்வற நாடியென் வலியுங் காட்டியுன்
உயர்புகழ்த் தேவியை யுதவற் பாலனாற்
றுயருழந் தயர்தியோ சுருதி நூல்வலாய் 4025

(பிரதி) [1] தென்கெனோ. [2] ஈர்த்தது.

கஉ திருமக ளனையவத் தெய்வக் கற்பினள்
வெருவரச் செய்துள வெய்ய வன்புயம்
இருபது மீரைந்து தலையு மேவிலுன்
ஒருகணைக் காற்றுமோ உலகம் போதுமோ. 4026

கங ஈண்டுநீ யிருந்தரு ளேழொ டேழெனப்
பூண்டபே ருலகங்கள் வலியிற் புக்கிடை
தேண்டிய வரக்கனைச் செயித்துத் தேவியைக்
காண்டிநா னிவ்வழி கொணருங் கைப்பணி. 4027

கச ஏவல்செய் துணைவரேம் யாங்க ளீங்கிவன்
தாவரும் பெருவலித் தம்பி நம்பிநின்
சேவக மிதுவெனிற் சிறிது நோக்கியென்
மூவகை யுலகுநின் மொழியின் முந்துமே. 4028

கரு பெருமையோ ராயினர் பெருமை பேசுவார்
கருமமே யல்லது பிறிதென் கண்டது
தருமநீ யல்லது தனித்து வேறுண்டோ
அருமையே துனக்குநின் றவலங் கூர்தியோ. 4029

கசு முளரிமேல் வைகுவான் முருகற் றந்தவத்
தளிரியல் பாகத்தான் றடக்கை யாழியான்
அளவியொன் றுவதே யன்றி யையமில்
கிளவிவாய் தனித்தனிக் கிடைப்ப ரோதுணை. 4030

கஎ என்னுடைச் சிறுகுறை முடித்த லீண்டொரீஇப்
பின்னுடைத் தாயினு மாக பேதுறு
மின்னிடைச் சனகியை மீட்டு மீட்டுமால்
பொன்னுடைச் சிலையினைய் விரைந்து போயென்றான். 4031

கஅ எரிகதிர்க் காதல னினைய கூறலும்
அருவியங் கண்டிறந் தன்பி னேக்கினன்
திருவுடை மார்பனுந் தெளிவு தோன்றிட
ஒருவகை யுணர்வுவந் துரைப்ப தாயினன். 4032

கசு விலங்கெழிற் றோளினய் வினையி னேதுமிவ்
விலங்குவிற் காத்தினி லிருக்க வேயவள்
கலன்கழித் தனளிது கற்பு மேவிய
பொலன்குழைத் தெரிவையர் புரிந்து ளார்கள்யார். 4033

௨௦ வாணெடுங் கண்ணியென் வரவு நோக்கயான்
தாணெடுங் கிரியொடுந் தருக்க டம்மொடும்
பூணொடும் புலம்பினன் பொழுது போக்கியிந்
நாணெடுஞ் சிலைசுமந் துழல்வ னாணிலேன். 4034

௨௧ ஆறுடன் செல்ப ரரிவை மாதரை
வேறுளோர் வலிசெயில் விலக்கி வெஞ்சமத்
தூறுறத் தம்முயி ருகுப்ப ரென்னையே
தேறினள் புன்கணோய் தீர்க்க கிற்றிலேன். 4035

௨௨ இந்திரற் குரியதோ ரிடுக்கண் தீர்த்திகல்
அந்தகற் கரியபோ ரவுணற் றேய்த்தனன்
எந்தைமற் றவனின்வந் துதித்த யானுளேன்
வெந்துயர்க் கொடும்பழி வில்லிற் றாங்கினேன். 4036

௨௩ கருங்கட றொட்டனர் கங்கை தந்தனர்
பொரும்புலி மானொடு புனலு மூட்டினர்
பெருந்தகை யென்குலத் தரசர் பின்னொரு
திருந்திழை துயரநான் றீர்க்க கிற்றிலேன். 4037

௨௪ விரும்பெழி லெந்தையார் மெய்ம்மை வீயுமேல்
வரும்பழி யென்றியான் மகுடஞ் சூடலேன்
கரும்பழி சொல்லியைப் பகைஞன் கைக்கொளப்
பெரும்பழி சூடினன் பிழைத்த தென்னரோ. 4038

௨௫ இன்னன நொந்தெணிப் பன்னி யேங்கியே
துன்னருந் துயரத்துச் சோர்கின் றானைப்
பன்னருங் கதிரவன் புதல்வன் பையுள் பார்த்
தன்னவெந் துயரெனு மளக்கர் நீக்கினான். 4039

௨௬ ஐயநீ யாற்றலி னாறி னேனல
துய்வனோ வெனக்கிதி னுதவி வேறுண்டோ
எய்திய பழியினி யின்ன வானபின்
செய்வனின் குறைமுடித் தன்றிச் செய்கிலேன். 4040

௨௭ என்றன னிராகவ னினைய காலையில்
வன்றிறல் மாருதி வணங்கி நோக்கினான்
குன்றிவர் தோளினாய் கூற வேண்டுவ
தொன்றுள ததனைநீ யுவந்து கேளெனா. 4041

உஅ கொடுந்தொழில் வாலியைக் கொன்று கோமகன்
கடுங்கதி ரோன்மக னாக்கிக் கைவளர்
நெடும்படை கூட்டின லன்றி நேடரி
தடுந்திற லரக்கன திருக்கை யாணையால். 4042

உகூ வானதோ மண்ணதோ மற்றும் வெற்பதோ
ஏனைமா நாகர்த மிருக்கைப் பாலதோ
தேனுலாந் தெரியலாய் தெளிவ தன்றுநாம்
ஊனுடை மானிட மான துண்மையால். 4043

௩0 எவ்வுல கத்தினு மிமைப்பி லெய்துவர்
வவ்வுவ ரவ்வழி மகிழ்ந்த யாவையும்
வெவ்வினை வந்தென வருவர் மீள்வரால்
அவ்வவ ருறைவிட மறியற் பாலதோ. 4044

௩க ஒருமுறை யேபரந் துலகம் யாவையும்
திருவுறை வேறிடந் தேர வேண்டுமால்
வருமுறை நாடிட வரம்பின் றுலுல
கருமையுண் டளப்பரு மாண்டு வேண்டுமால் 4045

௩உ எழுபத் தாகிய வெள்ளத் தெம்படை
ஊழியின் கடலென உலகம் போர்க்குமால்
ஆழியைக் குடிப்பினு மயன்செ யண்டத்தைக்
கீழ்மடுத் தெடுப்பினுங் கிடைத்தல் செய்புமால். 4046

௩௩ ஆதலா லன்னதே யமைவ தாமென
நீதியாய் நினைத்தன னெனநி கழ்த்தினன்
சாதுவா மென்றவத் தனுவின் செல்வனும்
போதுநாம் வாலிபா லென்னப் போயினர். 4047

சு. கலன்காண் படலம் முற்றும்

எ. வாலிவதைப் படலம்

க வெங்கணாளி யேறுமீளி மாவும்வேக நாகமும்
சிங்கவேறி ரண்டொடுந்தி ரண்டவன்ன செய்கையார்
தங்குசால மூலமார்த மாலமேல மாலைபோல்
பொங்குநாக முந்துவன்ற சாரலூடு போயினர். 4048

௨ உழையுலாநெ டுங்கண்மாத ரூசலூ லூச லல்லவே
தழையுலாவு சந்தலர்ந்த சாரல்சார லல்லவே
மழையுலாவு முன்றிலல்ல மன்ருனுறு சண்பகக்
குழையுலாவு சோலைசோலை யல்லபொன்செய் குன்றமே. 4049

௩ அறங்கணுறு மேனியார ரிக்கணங்க ளோடுமங்
கிறங்குபோது மேறுபோது மீறிலாத வோதையாய்க்
கறங்குவார்க ழற்கலன்க லிப்பமுந்து கண்முகிழ்த்
துறங்குமேக முழுதுணர்ந்து ணர்ந்துமீது லாவுமே. 4050

௪ நீடுநாக மூடுமேக மோடநீரு மோடவே
ஆடுநாக மோடுமான யானையோடு மாளிபோன்
மாடுநாக மூடுசாரல் வாளையோடும் வாவியோ
டோடுநாக மோடவேக மாடுமூக மோடவே. 4051

௫ மருண்டமாம லைத்தடங்கள் செல்லலாவ தல்லமால்
தெருண்டிலாத மத்தயானை சீறிநின்றி டித்தலால்
இருண்டகார கிற்றடத்தொ டிற்றுலர்ந்த சந்துவந்
துருண்டபோத ழிந்ததேனொ ழுக்குபேரி ழுக்கவே. 4052

௬ மினல்மணிக்கு லந்துவன்றி விண்கலந்து கங்குலாம்
அனல்பரப்ப வொப்பமீத லைப்பவந்தி மைப்பபோல்
புனல்பரப்ப வொப்பிருந்த பொன்பரப்பு மென்பரால்
இனையவிற்ற டக்கைவீர ரேறுகின்ற குன்றமே. 4053

௭ தேனிழுக்கு சாரல்வாரி செல்லமீது செல்லுநாண்
மீனிழுக்கு மன்றிவான வில்லிழுக்கும் வெண்மதி
கூனிழுக்கு மாறுலாவு கோளிழுக்கு மென்பரால்
வானிழுக்கு மேலவாச மன்றனுறு குன்றமே. 4054

௮ மருவியாடும் வாவிதோறும் வானயாறு பாயவந்
திருவிபாய்த டங்கண்மீனி னேறுபாயு மாறுபோல்
அருவிபாயு மொன்றிலொன்றி லானைபாயு மேனவில்
குருவிபாயு மோடிமந்தி கோடுபாயு மாடெலாம். 4055

௯ அன்னதாய குன்றினுறு சென்றவீர ரைந்தொடைந்
தென்னலாய வோசனைக்கு மும்பரேறி யிம்பரில்
பொன்னினூடி ழிந்தவன்ன வாலிவாழ்பொ ருப்பிடம்
துன்னினர்கள் செய்வதென்னை யென்றுநின்று சொல்லுவார். 4056

கo அவ்விடத்தி ராமணீய மைத்துவாலி யானபேர்
வெவ்விடத்தை வந்துபோர்வி ளைக்குமேல்லை வேறுநின்
றெவ்விடத்து ணிந்தமைந்த தென்கருத்தி தென்றனன்
தெவ்வடக்கும் வென்றியானு நன்றிதென்று சிந்தியா. 4057

கக வார்த்தையன்ன தாகவானி யங்குதேரி னுன்மகன்
நீர்த்தரங்க வேலையஞ்ச நீலமேக நாணநேர்
வேர்த்துமண்ணு ளோரிரிந்து விண்ணுளோர்கள் விம்மநேர்
ஆர்த்தவோசை யீசனுண்ட வண்டமுற்று முண்டதே. 4058

கஉ இடித்துரப்பி வந்துபோரெ திர்த்தியேல டர்ப்பெனென்
றடித்தலங்கள் கொட்டிவாய்ம டித்தடித்த லங்குதோள்
புடைத்துநின்று மைத்தபூசல் புக்கதென்ப மிக்கிடந்
துடிப்பவங்கு றங்குவாலி தன்செவித்து ளைக்கணே. 4059

கந *மாற்பெருங் கடகரி முழக்கம் வாளரி
யோர்ப்பது செவித்தலத் தென்ன வோங்கிய
ஆர்ப்பொலி கேட்டன னமளி மேலொரு
பாற்கடல் கிடந்ததே யனைய பண்பினுன். 4060

கச உருத்தனன் பொரவெதிர்ந் திளவ லுற்றமை
வரைத்தடந் தோளினுன் மனத்தி னெண்ணினுன்
சிரித்தன னவ்வொலி திசையி னப்புறத்
திரித்ததிவ் வுலகமொ ரேழொ டேழையும். 4061

கரு எழுந்தனன் வல்விரைந் திறுதி யூழியிற்
கொழுந்திரைக் கடல்பெயர்ந் தனைய கொள்கையான்
அழுந்திய தக்கிரி யருகின் மால்வரை
விழுந்தன தோட்புடை விசையக் காற்றினே. 4062

கசு போய்ப்பொடித் தனமயிர்ப் புறத்த வெம்பொறி
காய்ப்பொடுற் றெழுவட கனலுங் கண்கெடத்
தீப்பொடித் தனவிழி தேவர் நாட்டினும்
மீப்பொடித் தனபுகை யுயிர்ப்பு வீங்கவே. 4063

கஎ கைத்தலங் கையொடு புடைப்பக் காவலிற்
றிக்கயங் களுமதச் செருக்குச் சிந்தின
உக்கன வுருமின மூலந்த தும்பரும்
நெக்கது நெரிந்தது நேமிக் குன்றமே. 4064

கஅ வந்தனன் வந்தன னென்ற வாசகம்
இந்திரன் முதற்றிசை யெட்டுங் கேட்டன
சந்திரன் முதலிய தார கைக்குழாம்
சிந்தின மணிமுடிச் சிகரந் தீண்டவே. 4065

ககூ வீசின காற்றின்வேர் பறிந்து வெற்பினம்
ஆசையை யுற்றன வண்டப் பித்திகை
பூசின வெண்மயிர்ப் புறத்து வெம்பொறி
கூசின னந்தகன் குலைந்த தும்பரே. 4066

உ0 கடித்தவா யெயிற்றுகு கனல்கள் கார்விசும்
பிடித்தவா வுருமுகு மினத்திற் சிந்தின
தடித்துவீழ் வனவெனத் தகர்ந்து சிந்தின
அடித்ததோள் வலயத்தி னலங்கு காசரோ. 4067

உக ஞாலமு நாற்றிசைப் புனலு நாகரும்
மூலமு முற்றிட முடிவிற் றீக்குறுங்
காலமு மொத்தனன் கடலிற் றுன்கடை
ஆலமு மொத்தன னெவரு மஞ்சவே. 4068

உஉ ஆயிடைத் தாரையென் றமுதிற் றோன்றிய
வேயுடைத் தோளினாள் விரைவிற் பற்றினாள்
வாயிடைப் புகைவர வாலி கண்வரும்
தீயிடைத் தன்னெடுங் கூந்த றீகின்றாள். 4069

உங விலக்கலை விடுவிடு விளித்து ளானுரம்
கலக்கியக் கடல்கடைந் தமுது கண்டென
உலக்குவித் துயிர்குடித் தொல்லை மீள்குவன்
மலைக்குல மயிலென மடந்தை கூறுவாள். 4070

உச கொற்றவ வுன்பெருங் குவவுத் தோள்வலிக்
கிற்றனன் முன்னைநா ளீடுண் டேகினான்
பெற்றிலன் பெருந்திறல் பெயர்த்தும் போர்செயற்
குற்றது நெடுந்துணை யுடைமை யாலென்றாள். 4071

உரு மூன்றென முற்றிய முடிவில் பேருல
கேன்றுட னுற்றன வெனக்கு நேரெனத்
தோன்றினுந் தோற்றவை தொலையு மென்பது
சான்றுள வன்னது தையல் கேட்டியால். 4072

௨௬ மந்தர நெடுவரை மத்து வாசுகி
அந்தமில் கடைகயி றடைக லாழியான்
சந்திரன் றூணெதிர் தருக்கின் வாங்குவார்
இந்திரன் முதலிய வமர ரேனையோர். 4073

௨௭ போர்வுற வலிக்கவு மிடுக்கில் பெற்றியர்
நோவுற வுலந்தன ரதனை நோக்கியான்
ஆர்கலி தனைக்கடைந் தமுது கொண்டனன்
போர்வலி யழிந்துபோய்ப் புறந்தந் தோடலேன். 4074

௨௮ ஆற்றலி லமரரு மவுணர் யாவரும்
தோற்றன ரேனையர் சொல்ல லாவதோ
கூற்றமென் பேர்சொலக் குலையுமாரினி
மாற்றலர்க் காகிவந் தெதிரு மாண்பினார். 4075

௨௯ பேதைய ரெதிர்க்குன ரெரினும் பெற்றுடை
ஊதிய வரங்களு முரனு முள்ளமும்
பாதியு மென்னதாற் பதைப்ப தெங்ஙனம்
நீதுய ரொழிகென நின்று கூறினான். 4076

௩0 அன்னவன் கூறலி னரச கேளவற்
கின்னுயிர் நட்பமைந் திராம னென்பவன்
உன்னுயிர் கோடலுக் குடன்வந் தானெனத்
துன்னிய வன்பினர் சொல்லினா ரென்றாள். 4077

௩௧ குழைத்தவல் விருவினைக் கூறு காண்கிலா
தழைத்துய ருல்கினுக் கறத்தி னாறெலாம்
இழைத்தவற் கியல்பல வியம்பி யென்செய்தாய்
பிழைத்தனை பாவியுன் பெண்மையா லென்னே. 4078

௩௨ இருமையு நோக்குறு மியல்பி னார்க்கிது
பெருமையன் றிங்கிதிற் பெறுவ தென்கொலோ
அருமையி னின்றால களிக்கு மாறுடைத்
தருமமே தப்புமோ தன்னைத் தானெனா. 4079

௩௩ எற்றபே ருலகெலா மெய்தி யீன்றவண்
மாற்றவ ளேமற் றவடன் மைந்தனுக்
காற்றரு முவகையா லளித்த வையனைப்
போற்றலை யின்னன புகல லாகுமோ. 4080

௩௪ நின்றபே ருலகெலா நெருங்கி நேரினும்
வென்றிவெஞ் சிலையலாற் பிறிது வேண்டுமோ
தன்றுணை யொருவருந் தன்னில் வேறிலான்
புன்றொழிற் குரங்கொடும் புணரு நட்பெனா. 4081

௩௫ தம்பிய ரல்லது தனக்கு வேறுயிர்
இம்பரி னில்லென வெண்ணி யேய்ந்தவன்
எம்பியும் யானுமுற் றெதிர்ந்த போரினில்
அம்பிடை தொடுக்குமோ வருளி னாழியான். 4082

௩௬ இருத்திநீ யிறையிவ ணிமைப்பில் காலையில்
உருத்துயிர் குடித்தவ னுடன்வந் தாரையும்
கருத்தழித் தெய்துவன் கலங்க லென்றனன்
விரைக்குழல் பின்னுரை விளம்ப வஞ்சினள். 4083

௩௭ *ஒல்லைச் செருவேட் டுயர்வான்புய வோங்க லும்பர்
எல்லைக் குமப்பா லிவர்கின்ற விரண்டி னோடு
மல்லற் கிரியின் றலைவந்தனன் வாலி கீழ்பால்
தொல்லைக் கிரியின் றலைதோற்றிய ஞாயி றென்ன. 4084

௩௮ நின்றா னிறையா வருநெஞ்ச நடுங்கி யஞ்சத்
தன்றோள் வலியாற் றடமால்வரை சாலும் வாலி
குன்றூடு வந்துற் றனன்கோளவு ணன்கு றித்த
வன்றா ணிடைத்தோன் றியமாநர சிங்க மென்ன. 4085

௩௯ ஆர்க்கின்ற பின்றோன் றனைநோக்கினன் றானு மார்த்தான்
வேர்க்கின்ற வானத் துருமேறு வெறித்து வீழப்
போர்க்கின்ற வெல்லா வுலகும்பொதிர் வுற்ற பூசல்
கார்க்குன்ற மன்னா னிலந்தாவிய காலி தென்ன. 4086

௪௦ அவ்வே லையிரா மனுமன்பமர் தம்பிக் கைய
செவ்வே செலநோக் குதிதானவர் தேவர் நிற்க
எவ்வேலை யெம்மேரு வெக்காலொடெக் கால வெந்தீ
வெவ்வே றுலகத் திவன்மேனியை மானு மென்றான். 4087

௪௧ வள்ளற் கிளையான் பகர்வானிவன் றம்முன் வாழ்நாள்
கொள்ளக் கொடுங்கூற் றுவனைக்கொணர்ந் தான்கு ரங்கின்
எள்ளற் கரும்போர் [1]செயவெண்ணின னென்னு மின்னல்
உள்ளத் திடையூன் றவுணர்ந்தில னென்று மென்றான். 4088

(பிரதி) [1]செயவெண்ணி னின்னு.

சஉ ஆற்றாது பின்னும் பகர்வானறத் தாற மூங்கத்
தேற்றாது செய்வார் களைத்தேறுதல் செவ்வி தன்றால்
மாற்றா னெனத்தம் முனைக்கொல்லிய வந்து நின்றான்
வேற்றோர் கடிறத் திவன்றஞ்சமென் வீர வென்றான். 4089

சஙு அத்தா விதுகே ளெனவாரியன் கூறு வானிப்
பித்தா யவிலங் கினொழுக்கினைப் பேச லாமோ
எத்தா யர்வயிற் றினும்பிறந் தோர்க ளெல்லாம்
ஒத்தாற் பரதன் பெரிதுத்தம னாத லுண்டோ. 4090

சச விற்றாங்கு வெற்பன் னவிலங்கெழிற் றோள மேன்மை
உற்றார் சிலரல் லவரேபல ரென்ப துண்மை
பெற்றா ருழைப்பெற் றபயன்பெறும் பெற்றி யல்லால்
அற்றார் நவையென் றலுக்காகுனர் யார்கொ லென்றான். 4091

சரு வீரத் திறலோ ரிவரின்ன விளம்பும் வேலை
தேரிற் றிரிவான் மகனிந்திரன் செம்ம லென்றிப்
பாரிற் றிரியும் பனிமால்வரை யன்ன பண்பர்
மூரித் திசையானை யிரண்டென முட்டி னாரே. 4092

சசூ குன்றோடு குன்றொத் தனர்கோளரிக் கொற்ற வல்லே
றென்றோடு சென்றான் றெதிருற்றன வேயு மொத்தார்
நின்றார் திரிந்தார் நெடுஞ்சாரி நிலந்தி ரிந்தார்
வன்றோட் குயவன் றனிமட்கலத் தாழி யென்ன. 4093

சஎ தோளோடு தோடேய்த் தலிற்றொன்னிலந் தாங்க லாற்றா
தாளோடு தாடேய்த் தலிற்றந்த தழற்பி றங்கல்
வாளோடு மின்னோ டுவபோனெடு வானி னோடைக்
கோளோடு கோளுற் றெனவேற்றடர்த் தார்கொ தித்தார். 4094

சஅ தந்தோள் வலிமிக் கினர்தாமொரு தாய்வ யிற்றில்
வந்தோர் மடமங் கைபொருட்டு மலைக்க லுற்றார்
சிந்தோ டரியுண்கட் டிலோத்தமை காதற் செற்ற
சுந்தோப சுந்தப் பெயர்த்தொல்லையி னோரு மொத்தார். 4095

சகூ கடலொன் றினொடொன் றுமலைக்கவுங் காவன் மேருத்
திடலொன் றினொடென் றமர்செய்யவுஞ் சீற்ற மென்ப
துடல்கொண் டிரண்டா கியுடற்றவுங் கண்டி லாதோம்
மிடலிங் கிவர்வெந் தொழிற்கொப்பமை வேறு காணோம். 4096

௫0 ஊகங் களினா யகர்வெங்க ணுமிழ்ந்த தீயால்
மேகங் கள்க ரிந்தனவெற்பு மெரிந்த திக்கின்
நாகங் கணடுங் கினநானில முங்கு லைந்த
மாகங் களைநண் ணியவிண் ணவர் போய்ம றைந்தார். 4097

௫௧ விண்மே லினரோ நெடுவெற்பின் முகட்டி னாரோ
மண்மே லினரோ புறமாதிர வீதி யாரோ
கண்மே லினரோ வெனயாவருங் காண நின்றார்
புண்மே லிரத்தம் பொடிப்பக்கடிப் பார்பு டைப்பார். 4098

௫௨ ஏழொத் துடனுந் திசையெட்டொ டிரண்டு முட்டி
ஆழிக் கிளரார் கலிக்கைம்மடங் கார்ப்பி னோசை
பாழித் தடந்தோ ளினுமார்பினுங் கைகள் பாய
ஊழிக் கிளர்கா ரிடியொத்தது குத்தி னோசை. 4099

௫௩ வெவ்வா யெயிற்றால் மிடல்வீரர் கடிப்ப மீச்சென்
றவ்வாய் தொறுந்தா ரைகளாசைக டோறும் வீச
எவ்வாயு மெழுந்த கொழுஞ்சுடர் மீன்க ளெல்லாம்
செவ்வாயை நிகர்த் தனசெக்கரை யொத்த மேகம். 4100

௫௪ *வெந்த வல்லிரும் பிடைநெடுங் கூடங்கள் வீழச்
சிந்தி யெங்கணுஞ் சிதறுவ போற்பொறி தெறிப்ப
இந்தி ரன்மகன் புயங்களு மிரவிசே யுரனும்
சந்த வன்னெடுந் தடக்கைக டாக்கலிற் றகர்வ. 4101

௫௫ உரத்தி னாலெடுத் துந்துவர் பாதமிட் டுதைப்பர்
கரத்தி னால்விசைத் தெற்றுவர் கடிப்பர்நின் றிடிப்பர்
மரத்தி னாலடித் துரப்புவர் பொருப்பினம் வாங்கிச்
சிரத்தின் மேலெறிந் துறுக்குவர் தெழிப்பர்தீ விழிப்பர். 4102

௫௬ எடுப்பர் பற்றிமற் றொருவரை யொருவர்விட் டெறிவர்
கொடுப்பர் வந்துரங் குத்துவர் கைத்தலங் குளிப்பக்
கடுப்பி னிற்பெருஞ் சாரிகை கறங்கெனப் பிறங்கத்
தடுப்பர் பின்றுவ ரொன்றுவர் தழுவுவர் விழுவர். 4103

௫௭ வாலி னாலுரம் வரிந்தனர் நெரிந்துக வலிப்பர்
காலி னானெடுங் கால்பிடித் துடற்றுவர் கழல்வர்
வேலி னாலற வெறிந்தென விரல்வலி யுகிரால்
தோலி னாலுட னெடுவரை முழையெனத் துளைப்பர். 4104

௫௮ மண்ண கத்தன மலைகளு மரங்களு மற்றும்
கண்ண கத்தினிற் றோன்றிய யாவையுங் கையால்
எண்ண கப்பறித் தெறிதலி னெற்றலி னிற்ற
விண்ண கத்தினை மறைத்தன மறிகடல் வீழ்ந்த. 4105

௫௯ வெருவிச் சாய்ந்தனர் விண்ணவர் வேறென்னை விளம்பில்
ஒருவர்க் காண்டம ரொருவருந் தோற்றில ருடலம்
செருவிற் றேய்த்தலிற் செங்கனல் மென்மயிர் செல்ல
முரிபுற் காய்வரை யெரிபரந் தனவென முனைவார். 4106

௬௦ அன்ன தன்மையி னாற்றலி னமர்புரி பொழுதின்
வன்னெ டுந்தடத் திரள்புயத் தடுதிறல் வாலி
சொன்ன தம்பியைத் தும்பியை யரிதொலைத் தென்னக்
கொன்ன கங்களிற் கரங்களிற் குலைந்துக மலைந்தான். 4107

௬௧ மலைந்த போதினைத் திரவிசே யையன்மா டணுகி
உலைந்த சிந்தையை யுரைத்தனன் வணங்கிட வுள்ளம்
குலைந்தி டேனுமை வேற்றுமை தெரிந்தில கொடிப்பூ
மிலைந்து செல்கென மிலைச்சியே விடுத்தனன் மீண்டான். 4108

௬௨ கக்கி னானுயி ருயிர்ப்பொடுஞ் செவிகளிற் கண்ணில்
உக்க தாங்கெரிப் படலையோ டுதிரத்தி னோதம்
திக்கு நோக்கினன் செங்கதி ரோன்மகன் செருக்கிப்
புக்கு மீக்கொடு நெருக்கின னிந்திரன் புதல்வன். 4109

௬௩ எடுத்துப் பாரிடை யெற்றுவன் பற்றியென் றிளவல்
கடித்த டத்தினுங் கழுத்தினுந் தன்னிரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேற் கோலொன்று வாங்கித்
தொடுத்து நாணெடுந் தோளுறத் திராகவன் றுரந்தான். 4110

௬௪ காருண் வார்சுவைக் கதலியின் கனியினைக் கழியச்
சேரு மூசியிற் சென்றது நின்றதன் செவ்வி
நீரு நீர்தரு நெருப்பும்வெங் காற்றுங்கீழ் நிவந்த
பாருஞ் சார்வலி படைத்தவ னுரத்திலப் பகழி. 4111

௬௫ அலங்கு தோள்வலி யழிந்தவத் தம்பியை யருளான்
வலங்கொள் பாரிடை யெற்றுவா னுற்றபோர் வாலி
கலங்க நன்னெடுங் கால்கிளர்ந் தெறிவுறுங் கடைக்கால்
விலங்கன் மேருவும் வேர்பறிந் தாலென வீழ்ந்தான். 4112

௬௬ சையம் வேரொடு முருமுறச் சாய்ந்தெனச் சாய்ந்து
வைய மீதினிற் கிடந்தபோ தடுதிறல் வாலி
வெய்ய வன்றரு மதலையை மிடல்கொடு கவரும்
கைநெ கிழ்த்தன னெகிழ்ந்திலன் கடுங்கணை பற்ற. 4113

௬௭ எழுந்து வான்முக டிடித்தகப் படுப்பனென் றிவரும்
உழுந்து பேர்வழித் திசைதிரிந் தொறுப்பனென் றுதைக்கும்
விழுந்து பாரினை வேரொடும் பறிப்பனென் றுறுக்கும்
அழுந்து மிச்சர மெய்தவ னார்கொலென் றயிர்க்கும். 4114

௬௮ எற்றுங் கைகளை நிலத்தொடு மெரிப்பொறி பிறக்கச்
சுற்று நோக்குறுஞ் சுடுசரத் தினைத்துணைக் கரத்தால்
பற்றி வாலினும் பல்லினுங் காலினும் பறிப்பான்
உற்றொ னாமையி னுலைவுறு மலையென வுருளும். 4115

௬௯ தேவ ரோவென வயிர்க்குமத் தேவரிச் செயலுக்
காவ ரோவவர்க் காற்றலுண் டோவெனு மயலோர்
ஏவ ரோவென நகைசெயு மொருவனே யிறைவர்
மூவ ரோடுமொப் பான்செய லாமென முனியும். 4116

௭௦ வில்லி னாற்றுரப் பரிதுவெஞ் சரமென வியக்கும்
சொல்லி னானெடு முனிவரோ தூண்டின ரென்னும்
பல்லி னாற்பறிப் புறும்பல காலுந்தன் னுரத்தைக்
கல்லி னாற்பினும் பறிப்பரும் பகழியைக் கண்டான். 4117

௭௧ நேமி தான்கொலோ நீலகண் டன்னெடுஞ் சூலம்
ஆமி தாங்கொலோ வன்றெனிற் குன்றுரு வயிலும்
நாம விந்திரன் வச்சிரப் படையுமென் னடுவட்
போமெ னுந்துணைப் போதுமோ யாதெனப் புகலும். 4118

௭௨ சரமெ னும்படி தெரிந்தது பலபடச் சலித்தான்
உரமெ னும்பத முயிரொடு முருவிய வொன்றைக்
கரமி ரண்டினுங் காலினும் வாலினுங் கழற்றிப்
பரம னன்னவன் பேரறி வேனெனப் பறிப்பான். 4119

௭௩ ஓங்க ரும்பெருந் திறலினுங் காலினு முரத்தும்
வாங்கி னான்மற்றை வாளியை யாளிபோல் வாலி
ஆங்கு நோக்கின ரமரரு மவுணரும் பிறரும்
வீங்கி னார்கடோள் வீரனை யார்விய வாதார். 4120

௭௪ மோடு தெண்டிரை முரிதரு கடலெனை முழங்கி
ஈடு பேருல கிழிந்துள தாமென்ற லெளிதோ
காடு மாநெடு விலங்கலுங் கடந்தவக் கடலின்
ஊடு போதலுற் றதனையொத் துயர்ந்துள துதிரம். 4121

௭௫ வாசத் தாரவன் மார்பெனு மலைவழுங் கருவி
ஓசைச் சோரியை நோக்கின னுடன்பிறப் பென்னும்
பாசத் தாற்பிணிப் புண்டவத் தம்பியும் பசுங்கண்
நேசத் தாரைகள் சொரிதர நெடுநிலஞ் சேர்ந்தான். 4122

௭௬ பறித்தவ் வாளியைப் பருவலித் தடக்கையிற் பற்றி
இறுப்ப னென்றுகொண் டெழுந்தவன் மேருவை யிரண்டாய்
முறிப்ப னென்னினு முறிவதன் றுமென மொழியாப்
பொறித்த நாமத்தை யறிகுவா னோக்கினன் புகழோன். 4123

௭௭ மும்மைசா லுலகுக் கெல்லா மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமக்கு நல்குந் தனிப்பெரும் பதத்தைத் தானே
[1]இம்மையே மறுமை நோய்க்கு மருந்தினை யிராம னென்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக்கண் களாற்றெரியக்கண்டான். 4124

௭௮ இல்லறந் துறந்த நம்பி யெங்களுக் காகத் தங்கள்
வில்லறந் துறந்த வீரன் றோன்றலால் வேத நூலின்
சொல்லறந் துறக்கி லாத சூரியன் மரபுந் தொல்லை
நல்லறந் துறந்த தென்னு நகைவர நாணுக் கொண்டான். 4125

௭௯ வெள்கிடு மகுடஞ் சாய்க்கும் வெடிபடச் சிரிக்கு மீட்டும்
உள்கிடு மிதுவுந் தானெவ் வோங்கற மோவென் றுன்னும்
முள்கிடுங் குழியிற் புக்கு மூரிவெங் களிநல் யானை
தொள்கொடுங் கிடந்த தென்னத் தொழிலிழந் தழிந்து சோர்வான். 4126

௮0 இறைதிறம் பினனு லென்னே யிழிந்துளோ ரியற்கை யெண்ணின்
முறைதிறம் பியதா லென்று நோகின்ற முகத்தான் முன்னர்
மறைதிறம் பாத வாய்மை மன்னர்க்கு மனுவிற் சொல்லுந்
துறைதிறம் பாமற் காக்கத் தோன்றினன் வந்து தோன்ற. 4127

௮௧ கண்ணுற்றான் வாலி நீலக் கார்முகில் கமலம் பூத்து
மண்ணுற்று வரிவி லேந்தி வருவதே போலு மாலைப்
புண்ணுற்ற தனைய சோரி பொறியொடும் பொடிப்ப நோக்கி
எண்ணுற்றாயென்செய்தாயென்றேசுவானியம்பலுற்றான். 4128

(பிரதி) [1] இம்மையோ.

அஉ வாய்மையு மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னேநீ பரதன்முன் றோன்றி னுயே
தீய்மைதான் பிறரைக் காத்துத் தான்செய்தாற் றீதன் றாமோ
தாய்மையு மறையு நட்புந் தருமமுந் தழுவி நின்றோய். 4129

அங குலமிது கல்வி யீது கொற்றமீ துற்று நின்ற
நலமிது புவன மூன்றி னுயக மீது நின்றோள்
வலமிதிவ் வுலகந் தாங்கும் வண்மையீ தென்றாற் றிண்மை
அலமரல் செய்ய லாமோ வறிந்திருந் தயர்த்து ளார்போல். 4130

அச கோவியற் றரும முங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியர்க் கெழுத வொண்ணு வுருவத்தா யுடைமை யன்றே
ஆவியைச் சனகன் பெற்ற வன்னத்தை யமுதின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலுஞ் செய்யோய். 4131

அரு அரக்கரே அழிவு செய்து கழிவரே லவர்க்கு மாறோர்
குரக்கர சதனைக் கொல்ல மனுவினிற் கூறிற் றுண்டோ
இரக்கமெங் குகுத்தா யென்பா லெப்பிழை கண்டா யப்பா
பரக்கழி யிதுநீ பூண்டாற் புகழையார் பரிக்கற் பாலார். 4132

அசூ ஒலிகட லுலகந் தன்னி லுறைதரு குரங்கின் மாட்டே
கலியது காலம் வந்து கலந்ததோ கருணை வள்ளல்
மெலியவர் பால தேயோ வொழுக்கமும் விழுப்பந் தானும்
வலியவர் பிழையே செய்தாற் புகழன்றி வசையுமுண்டோ. 4133

அஎ கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவ பெற்ற தாதை
பூட்டிய செல்வ மாங்கோர் தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமஞ் செய்தா யெம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமஞ் செய்தாய் கருமந்தா னிதன்மே லுண்டோ. 4134

அஅ அறைகழ லலங்கல் வீரர்க் கடுத்ததே புரிவ தாண்மைத்
துறையென லாயிற் றன்றே தொன்மைநூன் மறைகட் கெல்லாம்
இறைவநீ யென்னைச் செய்த தீதெனி லிலங்கை வேந்தை
முறையல செய்தா யென்று முனிதியோ முனிவி லாதாய். 4135

அகூ இருவர்போ ரெதிருங் காலை யிருவரு நல்லுற் றாரே
ஒருவர்மேற் கருணை தூண்டி யொருவர்மே லொளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி வாயம்பு மருமத் தெய்தல்
தருமமோ பிறிதொன் றாமோ தக்கில தென்னும் பக்கம். 4136

௯௦ வீர மன்று விதியன்று மெய்ம்மைமேல்
வார மன்றுநின் மண்ணினுக் கென்னுடல்
பார மன்று பகையன்று பண்பழிந்
தீர மன்றியி தென்செய்த வாறரோ. 4137

௯௧ இருமை நோக்கினின் றியாவர்க்கு மொக்கின்ற
அருமை யாற்றலன் றேயறங் காக்கின்ற
பெருமை யென்பது பின்பிழை பேணல்விட்
டொருமை நோக்கி யொருவற் குதவலோ. 4138

௯௨ செயலைச் செற்றுப் பகைதெறு வான்றெரிந்
தயலைப் பற்றித் துணையமைந் தாயெனிற்
புயலைப் பற்றும் பொங்கெரி போக்கியோர்
முயலைப் பற்றுவ தென்ன முயற்சியோ. 4139

௯௩ காரி யன்ற நிறத்த களங்கமொன்
றாரி யன்ற மதிக்குள தாமெனச்
சூரி யன்மர புக்குமோர் தொன்மறு
ஆரி யன்பிறந் தாக்கினை யாமரோ. 4140

௯௪ மற்றொ ருத்தன் வலிந்தறை கூவவந்
துற்ற வென்னை யொளித்துயி ருண்டநீ
இற்ற திற்பி னிகலரி யேறென
நிற்றி போலுங் கிடந்த நிலத்தரோ. 4141

௯௫ நூலி யற்கையு நுங்குலத் தந்தையோர்
போலி யற்கையின் சீலமும் போற்றலை
வாலி யைப்படுத் தாயல மன்னற
வேலி யைப்பிரித் தாய்விறல் வீரனே. 4142

௯௬ தார மற்றொரு வன்கொளத் தன்கையிற்
பார வெஞ்சிலை வல்லோய் பழியன்றோ
நேரு மென்று மறைந்து நிராயுதர்
மார்பி னெய்யவோ வில்லிகள் வல்லரே. 4143

௯௭ என்று தானு மெயிறு பொடிபடத்
தின்று காந்தி விழிவழித் தீயுக
அன்றவ் வாலி யனையன சொல்லினான்
நின்ற வீர னினைய நிகழ்த்தினான். 4144

௯௮ பிலம்புக் காய்பெரு நாட்பெய ராயெனப்
புலம்புற் றும்பியும் போகலுற் றான்றனைக்
குலம்புக் கான்ற முதியர் குறிக்கொணீ
அலம்பொற் றாரவ னேயர சென்றலும். 4145

௯௯ வான மாளவென் றம்முனை வைத்தவன்
தானு மாளக் களையின் றகைதடிந்
தியானு மாள்வ னிருந்தர சாள்கிலன்
ஊன மான வுரைபுரிந் தீரெனா. 4146

௧௦௦ பற்றி யந்தப் படைத்தலை வீரரும்
முற்று ணர்ந்த முதியரு முன்பரும்
எற்று நும்மர செய்தலை யேலெனக்
கொற்ற நன்முடி கொண்டிலன் கோதிலான். 4147

௧௦௧ வந்த நின்னை வணங்கி மகிழ்ந்தனன்
எந்தை யென்க ணினத்தவ ராற்றலின்
தந்த துன்னர சென்று தரிக்கிலான்
முந்தை யுற்றது சொல்ல முனிந்துநீ. 4148

௧௦௨ கொல்ல லுற்றனை யும்பியைக் கோதவற்
கில்லை யென்ப துணர்ந்து மிரங்கலை
அல்லல் செய்ய லுனக்கப யம்பிழை
புல்ல லென்னவும் புல்லலை பொங்கினாய். 4149

௧௦௩ ஊற்ற முமுடை யானுனக் காரமர்
தோற்று மென்று தொழுதுயர் கையனைக்
கூற்ற முண்ணக் கொடுப்பனென் றெண்ணினாய்
நாற்றி சைக்கும் புறத்தையு நண்ணினான். 4150

௧௦௪ அன்ன தன்மை யறிந்து மருளலை
பின்ன வன்னெனப் பேர்ந்தொன்று நோக்கலை
மன்ன மாமுனி சாப வரம்புடைப்
பொன்ம லைக்கவ னேறலிற் பொன்றலன் 4151

௧௦௫ ஈர மாவது மிற்பிறப் பாவதும்
வீர மாவதுங் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவது மற்றொரு வன்புணர்
தார மாவதைத் தாங்குந் கருக்கரோ. 4152

க0சு மறந்தி றம்பல் வலியமெ ஞமனம்
புறந்தி றம்ப வெளியவர்ப் பொங்குதல்
அறந்தி றம்ப லருங்கடி மங்கையர்
திறந்தி றம்ப றெளிவுடை யோர்க்கெலாம். 4153

கOஎ தரும மின்ன தெனுந்தகைத் தன்மையும்
இருமை யுந்தெளிந் தெண்ணலை யெண்ணிலா
அருமை யும்பிதன் ஞயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினை யெய்தப் பெறுதியோ. 4154

கOஅ ஆத லாலு மவனெனக் காருயிர்க்
காத லானெ லாலுமி தென்கடன்
ஏதி லாரு மெளியரென் றுரையுந்
தீது தீர்ப்பதென் சிந்தைக் கருத்தரோ. 4155

கOகூ பிழைத்த தன்மை யிதுவெனப் பேரெழில்
தழைத்த வீர னுரைசெயத் தக்கிலா
இழைத்த வாலி யியல்பெனக் கித்துணை
விழைத்தி றத்தகொ லென்ன விளம்பினன். 4156

ககO ஐய நுங்க ளருங்குலக் கற்பினப்
பொய்யின் மங்கையர்க் கேய்ந்த புணர்ச்சிபோல்
செய்தி லனெமைத் தேமலர் மன்னவன்
எய்தி னெய்தின தாக வியற்றினன். 4157

ககக மணமு மில்லை மறைநெறி வந்தன
குணமு மில்லை குணமுதற் கொத்தன
உணர்வு சென்றுழிச் செல்லு மொழுக்கலால்
நிணமு நெய்யு மிலங்கிய நேமியாய். 4158

ககஉ பெற்றி மற்றிது பெற்றதோர் பெற்றியாற்
குற்ற முற்றில னிற்றது கோடியால்
வெற்றி யுற்றதோர் வெற்றியி ஞயெனச்
சொற்ற சொற்றுறைக் குற்றது சொல்லுவான். 4159

ககங நலங்கொ டேவரிற் றேன்றி நவையறக்
கலங்க லாவற நன்னெறி காண்டலில்
விலங்க லாமை விளங்கிய தாதலால்
அலங்க லார்க்கி தடுப்பதன் றுமரோ. 4160

ககச பொறியி லாக்கைய தோபுல னாகிய
அறிவின் மேலதன் றேவறத் தாறுதான்
நெறியு நீர்மையு நேரிது ணர்ந்தநீ
பெறுதி யோபிழை யுற்றுறு பெற்றிதான். 4161

கக௫ மாடு பற்றி யிடங்கர் வலித்திடக்
கோடு பற்றிய கொற்றவற் கூயதோர்
பாடு பெற்ற வுணர்வின் பயத்தினல்
வீடு பெற்ற விலங்கும் விலங்கதோ. 4162

கக௬ சிந்தை நல்லறத் தின்வழி சேறலால்
பைந்தொ டித்திரு வின்பரி வாற்றுவான்
வெந்தொ ழிற்றுறை வீடுபெற் றெய்திய
எந்தை யும்மெரு வைக்கா சல்லனே. 4163

கக௭ நன்று தீதென் றியறெறி நல்லறி
வின்றி வாழ்வதன் றேவிலங் கின்னிடை
நின்ற நன்னெறி நீயறி யாநெறி
ஒன்று மின்மைநின் வாய்மை யுணர்த்துமால். 4164

கக௮ தக்க வின்ன தகாதன வின்னதென்
றொக்க வுன்னல ராகி யுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்க வேலவ் விலங்கும்புத் தேளிரே. 4165

கக௯ கால னாற்றல் கடந்த கணிச்சியான்
பாலி னாற்றிய பத்தி பயத்தலான்
மாலி னாற்றரு வன்பெரும் பூதங்கள்
நாலி னாற்றனு மாற்றுழி நண்ணினய். 4166

க௨0 மேவ ருந்தரு மத்துறை மேவினர்
ஏவ ரும்பல ராலிழிந் தோர்களும்
தாவ ருந்தவ ருமதன் றன்மைசால்
தேவ ருமுளர் தீய்மை திருத்தினர். 4167

க௨க இனைய தாதலி னெக்குலத் தியாவர்க்கும்
வினையி னல்வரு மேன்மையுங் கீழ்மையும்
அனைய தன்மை யறிந்து மழித்தனை
மனையி னீதியென் றன்மனு நீதியான். 4168

கஉ௨ *அவ்வுரை யமையக் கேட்ட வரிகுலத் தரசு மான்ற
செவ்வியோ யனைய தாகச் செருக்களத் துருச்செய் யாதே
வெவ்விய புளின னென்ன விலங்கினை மறைந்து வில்லால்
எவ்விய தென்னை யென்று னிலக்குவ னியம்ப லுற்றான். 4169

கஉ௩ முன்புநின் றம்பி வந்து சரண்புக முறையி லோயைத்
தென்புலத் துய்ப்ப னென்று செப்பினன் செருவி னீயும்
அன்பினை யுயிருக் காகி யடைக்கல மென்று கூறும்
என்பது கருதி யண்ணல் மறைந்துநின் றெய்த தென்றான். 4170

கஉ௪ கவிக்குலத் தரசு மன்ன கட்டுரை கருத்திற் கொண்டான்
அவியுறு மனத்த னாகி யறத்திற மழியச் செய்யான்
புவியுடை யண்ண லென்ன வெண்ணினிற் பொருந்த முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியி னிறைஞ்சிச் சொன்னான். 4171

கஉ௫ தாயென வுயிர்க்கு நல்கித் தருமமுந் தகவுஞ் சால்பும்
நீயென நின்ற நம்ப நெடிதுநீ நோக்கு நோன்மை
நாயென நின்ற வெம்பா னவையற வுணர லாமோ
தீயன பொறுத்தி யென்றான் சிறியன சிந்தி யாதான். 4172

கஉ௬ இரந்தனன் பின்னு மெந்தை யாவது மெண்ண றேற்றாக்
குரங்கெனக் கருதி நாயேன் கூறிய மனத்துக் கொள்ளேல்
அரந்தைவெம் பிறவி யென்னோய்க் கருமருந் தனைய வையா
வரந்தரும் வள்ள லொன்று கேளென மறுத்துஞ் சொன்னான். 4173

கஉ௭ *ஏவுகூர் வாளியா லெய்துநா யடியனேன்
ஆவிபோம் வேலைவா யறிவுதந் தருளினாய்
மூவர்நீ முதல்வனீ முற்றுநீ மற்றுநீ
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ. 4174

கஉ௮ புரமெலா மெரிசெய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெலா முருவியென் வகையினார் வலிமைசால்
உரமெலா முருவிவந் துயிரெலா நுகருநின்
சரமலாற் பிறிதுவே றுளதரோ தருமமே. 4175

கஉ௯ யாவரு மெவையுமா யிருதுவும் பயனுமென்
பூவுநல் வெறியுமொத் தொருவரும் பொதுமையாய்
ஆவநீ யாவதென் றறிவினா ரருளினார்
தாவரும் பதமெனக் கருமையோ தனிமையோய். 4176

கங0 உண்டெனுந் தருமமே யுருவமாய் நின்றநிற்
கண்டனன் மற்றினிக் காணவென் கடவனோ
பண்டொடின் றென்றெனக் கருமையென் பழமையாய்
தண்டமே யடியனேற் குறுபதந் தருமதே. 4177

கஙக மற்றினி யுதவி யுண்டோ வானினு முயர்ந்த மானக்
கொற்றவ வுன்னைக் கண்டு கொல்லிய கொணர்ந்து தொல்லைச்
சிற்றினக் குரங்கி னோடுந் திரிவுறச் செய்த செய்கை
வெற்றர செய்தி யெம்பி வீட்டர செனக்கு விட்டான். 4178

கஙஉ ஓவிய வுருவி னையா னுளதொன்று பெறுவ துன்பால்
பூவிய னறவ மாந்திப் புந்திவே றுற்ற போழ்தில்
தீவினை யியற்று மேனு மெம்பியைச் சீறி யென்மேல்
ஏவிய பகழி யென்னுங் கூற்றினை யேவ லென்றான். 4179

கஙங இன்னுமொன் றிசைப்ப துண்டா லெம்பியை யும்பி மார்கள்
தன்முனைக் கொல்வித் தானென் றிகழ்தலைத் தடுத்தி தக்கோய்
முன்னமே மொழிந்தா யன்றே யிவன்குறை முடிப்ப தையா
பின்னிவன் வினையின் செய்கை யதனையும் பிழைக்க லாமோ. 4180

கஙச மற்றில னேனு மாய வரக்கனை வாலிற் பற்றிக்
கொற்றவ நின்கட் டந்து குரங்கியற் றொழிலுங் காட்டப்
பெற்றிலன் கிடக்க சொல்லிப் பயனிலை பிழைப்ப தின்னும்
உற்றது செய்கென் றானு முரியனிவ் வனும னென்றான். 4181

கஙரு அனுமனென் பவனை யாழி யையநின் செய்ய செங்கைத்
தனுவென நினைதி மற்றென் றம்பியுன் றம்பி யாக
நினையொரு துணைவ ரன்னார் நினையல ரில்லை யீண்டவ்
வனிதையை நாடிக் கோடி வானினு முயர்ந்த தோளாய். 4182

கஙசு என்றவற் கியம்பிப் பின்ன ரிருந்தன னிளவ றன்னை
வன்றுணைத் தடக்கை நீட்டி வாங்கினன் றழுவி மைந்த
ஒன்றுனக் குரைப்ப துண்டா லுறுதிய துணர்ந்து கோடி
குன்றினு முயர்ந்த தோளாய் வருந்தலை யென்று கூறும். 4183

கஙஎ மறைகளு முனிவர் யாரு மலர்மிசை யயனு மற்றைத்
துறைகளின் முடிவுஞ் சொல்லுந் துணிபொரு டுணிவிற் றாக்கி
அறைகழ லிராம னாகி யறநெறி நிறுத்த வந்த
இறையொருசங்கையின் றியெண் ணுதியெண்ணமிக்கோய். 4184

கஙஅ நிற்கின்ற செல்வம் வேறு நெறிநின்ற பொருள்க ளெல்லாம்
கற்கின்ற திவன்ற னாமங் கருதுவ திவனைக் கண்டாய்
பொற்குன்ற மனைய தோளாய் பொதுநின்ற நிலைமை நோக்கின்
எற்கொன்றவலியேசாலுமிதற்கொன்றுமேதுவேண்டாம். 4185

கஙகூ கைதவ மியற்றி யாண்டுங் கழிப்பருங் கணக்கி றீமை
வைகலும் புரிந்து ளாரும் வானுயர் நிலையின் வள்ளல்
எய்தவர் பெறுவ ரென்றா லிணையடி யெய்தி யேவல்
செய்தவர் பெறுவ தையா செப்பலாஞ் சீர்மைத் தாமோ. 4186

கச0 அருமையின் விதியி னாரே யுதவுவா னமைந்தா ரையா
இருமையு மெய்தி னாய்மற் றினிச்செயற் பால தெண்ணில்
திருமறு மார்ப னேவல் சென்னியிற் சேர்த்திச் சிந்தை
ஒருமையி னிறுவி மும்மை யுலகினு முயர்தி யன்றே. 4187

கசக மதவியற் குரக்குச் செய்கை மயர்வொடு மாற்றி வள்ளல்
உதவியை யுள்ளி யாவி யுற்றிடத் துதவு கிற்றி
பதவியை யெவர்க்கு நல்கும் பண்ணவன் பணித்த யாவும்
சிதைவில செய்தி நொய்திற் றீர்வரும் பிறவி தீர்தி. 4188

கசஉ அரசியற் பாரம் பூரித் தயர்த்தனை யிகழா தையன்
மரைமலர்ப் பாத நீங்கா வாழுதி மன்ன ரென்பார்
எரியனற் குரிய ரென்றே யெண்ணுதி யெண்ணம் யாவும்
புரிதிசிற் றடிமை குற்றம் பொறுப்பரென் றெண்ண வேண்டாம். 4189

கசங என்னவித் தகைய வாய வுறுதிகள் யாவு மேங்கும்
பின்னவற் கியம்பி நின்ற பேரெழி லானை நோக்கி
மன்னவர்க் கரசன் மைந்தா மற்றிவன் சுற்றத் தோடும்
உன்னடைக் கலமென் றுய்த்தே யுயர்கர முச்சி வைத்தான். 4190

கசச வைத்தபி னுரிமைத் தம்பி மாமுக நோக்கி வல்லை
உய்த்தனை கொணர்தி யுன்ற னோங்கரு மகனை யென்ன
அத்தலை யவனை யேவி யழைத்தலி னணைந்தா னென்ப
கைத்தலத் துவரி நீரைக் கலக்கினான் பயந்த காளை. 4191

கசரு சுடருடை மதிய மென்னத் தோன்றினன் றோன்றி யாண்டும்
இடருடை யுள்ளத் தோரை யெண்ணினு முணர்கி லாதான்
மடலுடை நறுமென் சேக்கை மலரின்றி யுதிர வாரிக்
கடலிடைக்கிடந்தகாதற்றாதையைக்கண்ணிற்கண்டான். 4192

கசசு கண்டனன் கண்ணி னீருங் குருதியுங் கால மாலைக்
குண்டல மலம்பு கின்ற குவவுத்தோட் குரிசி றிங்கள்
மண்டல முலகின் வந்த வதனத்தான் றாதை தன்பால்
விண்டல மதனின் றோர்மீன் விழுந்தன வென்ன வீழ்ந்தான்.

கசஎ எந்தையே யெந்தை யேயிவ் வெழுதிரை வளாகத் தியார்க்குஞ்
சிந்தையாற் செய்கை யாலோர் தீவினை செய்தி லாதாய்
நொந்தனை யதுதா னிற்க நுன்முக நோக்கிக் கூற்றம்
வந்ததே யன்றோ வஞ்சா தாரதன் வலியைத் தீர்ப்பார். 4194

கசஅ தறையடித் தகைபோற் றீராத் தகைவிதி திசைக டாங்கும்
கறையடிக் கிழிவுகண்ட கண்டக னெஞ்ச முற்ற
நிறையடிக் கோல வாலி னிலைமையை நினையுந் தோறும்
பறையடிக் கின்ற வந்தப் பயமறப் பறந்த தன்றே. 4195

கசகூ குலவரை நேமிக் குன்ற மென்றுவா னுயர்ந்த கோட்டிற்
றலைகளு நின்பொற் றாளிற் றழும்பினித் தவிர்ந்த தன்றே
மலையுட னரவு மற்றும் பலவுள மத்துந் தாம்பும்
அலைகடல் கடைய வேண்டி லாரினிக் கடைவ ரையா. 4196

கரு0 பஞ்சின்மெல் லடியாள் பங்கன் பதயுக மலதி யாதும்
அஞ்சலித் [1]தறியாச் செங்கை யாணையா லமரர் யாரும்
எஞ்சல ரிருந்தா ருன்னா லின்னமு தீய்ந்த நீயோ
துஞ்சினை வள்ளி யோர்க ளின்னில்யார் சொல்லற் பாலார்.

கருக ஆயன பலவும் பன்னி யழுங்கினன் புழுங்க நோக்கித்
தீயுறு மெழுகிற் சிந்தை யுருகினன் செங்கண் வாலி
நீயினி யயர்வா யல்லை யென்றுதன் னெஞ்சிற் புல்லி
நாயக னிராமன் செய்த நல்வினைப் பயனி தென்றான். 4198

கருஉ தோன்றலு மிறத்த றானுந் துகளறத் துணிந்து நோக்கின்
மூன்றுல கத்தி னோர்க்கு மூலத்தே முடிந்த தன்றே
யான்றவ முடைமை யாலிங் கிறுதிவந் தியைந்த தார்க்கும்
சான்றென நின்ற வீரன் றான்வந்து வீடு தந்தான். 4199

கருங பாலமை தவிர்நீ யென்சொற் பற்றுதி யாயிற் றன்னின்
மேலொரு பொருளு மில்லா மெய்ப்பொருள் வில்லுந் தாங்கிக்
கால்தரை தோய நின்று கண்ணுக்கு மெளிய னானான்
மால்தரு பிறவி தீர்க்கு மருந்திவன் வணங்கு மைந்தா. 4200

(பிரதி) [1] தறியாய்.

கருச என்னிதி லுறுதி யப்பா லுண்டென விறையுங் கொள்ளேல்
உன்னுயிர்க் குறுதி செய்தி யுரைத்தன வுவந்து நோக்கிப்
பொன்னுயிர்த் தொளிரும் பூணாய் பொதுநின்று தருமம் போற்று
மன்னுயிர்க் குறுதி செய்வான் மலரடி தொழுது வாழ்தி. 4201

கருரு என்றன னினைய யாவு முறுவுதிகள் பலவு மெண்ணித்
தன்றுணை தடக்கை யாரத் தனையனைத் தழுவிச் சாலக்
குன்றினு முயர்ந்த திண்டோட் குரக்கினத் தரசன் கொற்றப்
பொன்றிணி வயிரப் பைப்பூண் புரவலன் றன்னை நோக்கி. 4202

கருசு நெய்யுடை நெடுவேற் றானை நீணிற நிருத ரென்னும்
துய்யிடைக் கனலி யன்ன தோளினைத் தொழிலுந் தூய
பொய்யுடை யுள்ளத் தார்க்குப் புலப்படாப் புனித வுன்றன்
கையடை யாகு மென்ன விராமற்குக் காட்டிப் பின்னை. 4203

கருஎ தன்னடி தாழ்த லோடுந் தாமரைத் தடங்க ணானும்
பொன்னுடை வாளை நீட்டி நீயிது பொறுத்தி யென்றான்
என்னலு முலக மேழு மேத்தின கிடந்த வாலி
அந்நிலை திரிந்து வானி னப்புறத் துலக னானான். 4204

கருஅ கையவ னெகிழ்த்த லோடுங் கணையெனுங் காலன் வாலி
வெய்யமார் பகத்துட் டங்கா தகன்றுமேக் குயர மீப்போய்த்
துய்யநீர்க் கடலுட் டோய்ந்து தூய்மலர் மாரி தூவ
ஐயன்பின் றூங்கும் கொற்றத் தாவம்வந் தடைந்த தன்றே.

கருகூ வாலியு மேக யார்க்கும் வரம்பிலா வுலகி லின்பம்
பாலியா முன்ன நின்ற பரிதிசேய் செங்கை பற்றி
ஆலிலைப் பள்ளி யானு மங்கத னோடும் நிற்ப
வேல்விழித் தாரை கேட்டு வந்தவன் மேலே வீழ்ந்தாள். 4206

கசு0 குங்குமங் கொட்டி யன்ன குவிமுலைக் குவட்டிற் கொத்த
பொங்குவெங் குருதி போர்ப்பப் புரிகுழல் சிவப்பப் பொற்றோள்
அங்கவ னலங்கன் மார்பிற் புரண்டன ளகன்ற செக்கர்
செங்கதிர் விசும்பிற் றோன்று மின்னெனத் திகழு மெய்யாள்.

சுசுக வேய்ங்குழல் விளரி நல்யாழ் வீணையென் றிவைக ளொண
ஏங்கின ளிரங்கி விம்மி யுருகின ளிருகை கூப்பி
தாங்கிய தலையள் சோர்ந்து சரிந்துதாழ் குழல்க டள்ளி
ஓங்கிய குரலாற் பன்னி யின்னன வுரைக்க லுற்றாள். 4208

கசுஉ *வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்
கரைசே ராவிட ரெல்லை கண்டிலேன்
உரைசே ராருயி ரேயென் னுள்ளமே
அரைசே நானிது காண வஞ்சினேன். 4209

கசுங துயரா லேதொலை யாத வென்னையு
மயரா யேபகை யாடு மன்பினோய்
செயிர்தீ ராவிதி யான தெய்வமே
உயிர்போ னுடல் யாரு முய்வரோ. 4210

கசுச நறிதாய் நல்லமிர் துண்ண நல்கலிற்
பிறியா வின்னுயிர் பெற்ற பெற்றிதான்
அறியா ரோமநமரா தன்றெனிற்
சிறியா ரோவுப காரஞ் சிந்தியார். 4211

கசுரு அணங்கார் பாகனை யாசை தோறுமுற்
றுணங்கா நாண்மலர் தூயு னன்பினல்
[1]இணங்கா கால மிரண்டொ டொன்றினும்
வணங்கா தித்துணை வைக வல்லையோ. 4212

கசுசு அரைசே பூவணை யாடை வைகுவாய்
தரைமே லாயுறு தன்மை யீதெனக்
கரையா தேனிடு பூசல் கண்டுமோன்
றுரையா யோவயா வூன மென்னதோ. 4213

கசுஎ நையா நின்றன னுனி ருந்திங்ஙன்
மெய்வான் மங்கையர் கொங்கை [2]மேவினை
ஐயா நீயென தாவி யென்பதும்
பொய்யோ பொய்யுரை யாத புண்ணியா. 4214

கசுஅ செருவார் தோளநின் சிந்தை யாளெனின்
மருவார் வெஞ்சர மெனையும் வவ்வுமால்
ஒருவே னுள்ளிருந் தாயி லுய்தியால்
இருவே முமிரு வேமுளி ருந்துளோம். 4215

கசுக எந்தாய் நீயமிர் தீய யாமெலாம்
உய்ந்தா மென்றுப கார முன்னுவார்
நந்தா நாண்மல ரேந்தி நண்பொடும்
வந்தா ரோவெதிர் வானு ளோரெலாம். 4216

(பிரதி) [1] இணங்காக். [2] மேவினர்.

கஎ0 ஓயா வாளியொ ளித்து நின்றெய்வான்
ஏயா வந்த விராம னென்றுளான்
வாயா லேவின னன்றி வாளியால்
வீயா யேயமு தீயு மீளியாய். 4217

கஎக சொற்றேன் முந்துற வன்ன சொற்கொளாய்
அற்றா னன்னது செய்க லானென
உற்றா யும்பியை யூழி காணுநீ
இற்றா யானுனை யென்று காண்கென. 4218

கஎஉ நீறா மேருவு நீநெ ருங்கினால்
மாறோர் வாளியுன் மார்பி றந்ததே
தேறேன் யானிது தேவர் மாயையோ
வேறோர் வாலிகொ லாம்வி ளிந்தநீ. 4219

கஎ௩ தகைநேர் வண்புகழ் தின்று தம்பியார்
பகைநேர் வாருள ரான பண்பினால்
உகநேர் சிந்தி யுலந்த ழிந்தனன்
மகனே கண்டனை யோநம் வாழ்வென. 4220

கஎச அருமந் தற்ற மகற்றும் வில்லியார்
ஒருமைந் தற்கு மடாத துன்னினார்
தருமம் பற்றிய தக்க வர்க்கெலாங்
கருமங் கட்டளை யென்கை விட்டதோ. 4221

கஎரு என்றா ளின்னன பன்னி யின்னலோ
டொன்றா வுள்ளுணர் வேது முற்றிலாள்
நின்றா ளங்கிலை நோக்கி நீதியான்
வன்றாள் மால்வரை யன்ன மாருதி. 4222

கஎசா மடவார் சூழ மடந்தை தன்னைவாழ்
இடமே வும்படி யேவி வாலிபால்
கடன்யா வுங்கடை கண்டு கண்ணனோ
டுடனா யுற்றதெ லாமு ரைத்தனும். 4223

கஎஎ அகமே ரற்றுக மீத ருக்கனார்
புகமே லைக்கிரி புக்க போதினன்
நகமே யொத்தகு ரக்கு நாயகன்
முகமே யொத்தது மூரி மண்டலம். 4224

கஎஅ மறைந்தான் மாலை யருக்கன் வள்ளியோன்
உறைந்தான் மங்கை திறத்தை யுன்னுவான்
குறைந்தா னெஞ்சு குழைந்த ழுங்குவான்
நிறைந்தார் கங்குலின் வேலை நீங்கினான். 4225

கஎகூ புதல்வன் பொன்மகு டம்பொ றுத்தலான்
முதல்வன் பேருவ கைக்கு முந்துவான்
உதவும் பூமகள் சேர வொண்மலர்க்
கதவஞ் செய்யக ரத்தி னீக்கினான். 4226

எ. வாலிவதைப் படலம் முற்றும்.

அ. அரசியற் படலம்

க அதிகா லத்த வருட்கு நாயகன்
மதிசா றம்பியை வல்லை யேவினான்
கதிரோன் மைந்தனை யைய கைகளால்
விதியான் மௌலிமி லைச்சு வாயெனா. 4227

உ அப்போ தேயரு ணின்ற வண்ணலும்
மெய்ப்போர் மாருதி தன்னை வீரநீ
இப்போ தேகொண ரின்ன செய்வினைக்
கொப்பாம் யாவையு மென்று ணர்த்தலும். 4228

ங மண்ணு நீர்முதன் மங்க லகங்ளும்
எண்ணும் பொன்முடி யாதி யாவையு
நண்ணும் வேலையி னம்பி தம்பியும்
திண்ணன் செய்வினை செய்து செம்மலை. 4229

ச மறையோ ராசிவ ழங்க வானுளோர்
நறைதோய் நாண்மலர் தூவ நன்னெறிக்
கிறையோர் முன்வினை செய்ய வேந்தலைத்
துறையோர் நான்முறை மௌலி சூட்டினான். 4230

ரு பொன்மா மவுலிபு னைந்து பொய்யிலான்
தன்மா னக்கழ ருழும் வேலையின்
நன்மார் பிற்றழு வுற்ற நாயகன்
சொன்னான் முற்றிய சொல்லி னெல்லையான். 4231

௬ *ஈண்டுநின் றேகி நீநின் னின்னிய விருக்கை யெய்தி
வேண்டுவ மரபி னெண்ணி விதிமுறை யியற்றி வீர
பூண்டபே ரரசுக் கேற்ற யாவையும் புரிந்து போரின்
மாண்டவன் மைந்த னோடும் வாழ்திநற் றிருவின் வைகி. 4232

௭ வாய்மைசா லறிவின் வாய்ந்த மந்திர மாந்த ரோடும்
தீய்மைதீ ரொழுக்கின் வந்த திறத்தொழின் மறவ ரோடும்
தூய்மைசால் புணர்ச்சி யெண்ணித் துகளறு தொழில யாகிச்
சேய்மையோ டணிமை யின்றித் தேவரிற் றெரிய நிற்றி. 4233

௮ புகையுடைத் தென்னி னுண்டு பொங்கழ லங்கென் றுன்னும்
மிகையுடைத் துலக நூலோர் வினயமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பிற் றீரா
நகையுடை முகத்தை யாகி யின்னுரை நவிறி நாவில். 4234

௯ தேவரும் வெஃகற் கொத்த செயலது செல்வ மஃது
காவல தருமைத் தென்று லன்னது கருதிக் கேட்டி
ஏவரு மினிய நண்ப ரிரவலர் விரவோ ரென்றிம்
மூவகை யியல்பி னோர்க்கு முனைவர்க்கு முலக முன்னே. 4235

௧௦ செய்வன செய்தல் யாண்டுந் தீயன சிந்தி யாமல்
வைவன வந்த போழ்தும் வசையில வினிய கூறல்
மெய்யென வழங்கல் யாவு மேவின வெஃக லின்மை
உய்வன வாகித் தம்மோ டுயர்வன வுவந்து செய்வாய். 4236

௧௧ சிறியரென் றிகழ்ந்து நோவு செய்வன செய்யன் மற்றிந்
நெறியிகந் தியானோர் தீய்மை யிழைத்தலா லுணர்ச்சி நீண்டு
குறியதா மேனி மானக் கூனியாற் குவவுத் தோளாய்
வெறியன வெய்தி நொய்தின் வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன். 4237

௧௨ மங்கையர் பொருட்டா லெய்து மாந்தர்க்கு மரண மென்றல்
சங்கையின் றுணர்தி வாலி செய்கையாற் சாலு மின்னும்
அங்கவர் திறத்தி னாலே யல்லலு மழிவு மாதல்
எங்களிற் காண்டி யன்றே யிதற்குவே றுவமை யுண்டோ. 4238

௧௩ நாயக னல்ல னம்மை நணிபயந் தெடுத்து நல்குந்
தாயென வினிது பேணித் தாங்குதி தாங்கு வாரை
ஆயது தன்மை யென்னு மறத்திற மகலா வண்ணந்
தீயன வந்த போது சுடுதியாற் றீய்மை யோரை. 4239

கச இறத்தலும் பிறத்த ஞானு மென்பன விரண்டும் யாண்டுந்
திறத்துளி நோக்கிச் செய்த வினைதரத் தெரிந்த தன்றே
புறத்தினி யுரைப்ப தென்னோ பூவின்மேற் புனிதற் கேனும்
அறத்தின திறுதி வாழ்நாட் கிறுதிய தறிதி யன்றே. 4240

கரு ஆக்கமுங் கேடுந் தாஞ்செய் யறத்தொடும் பாவ மாய
போக்கிவே றுண்மை தேறார் பொருவரும் புலமை மேலோர்
தாக்கின வொன்றோ டொன்று தருக்குறுஞ் செருவிற் றக்கோர்
பாக்கிய மன்றி யென்றும் பாவத்தைப் பற்ற லாமோ. 4241

கசு இன்னது தன்மை யென்ப தியல்புளி மரபி னெண்ணி
மன்னர சியற்றி யென்கண் மருவுழி மாரிக் காலம்
பின்னுறு முறையி லுன்றன் பெருங்கடற் சேனை யோடும்
துன்னுதி போதி யென்றான் சுந்தர னவனுஞ் சொல்வான். 4242

கஎ குரங்குறை யிருக்கை யென்னுங் குற்றமே குற்ற மல்லால்
அரங்கெழு துரக்க நாட்டுக் கரசென லாகு மன்றே
மரங்கிள ரருவிக் குன்றின் வள்ளனீ மனத்தி னெம்மை
இரங்கிய பணியாஞ் செய்ய விருத்தியாற் சிலநா ளெம்பால்.

கஅ அரிந்தம நின்னை யண்மி யருளுறு முரியா ராகிப்
பிரிந்துவே றெய்துஞ் செல்வம் வெறுமையிற் பிறிதொன் றாமே
கருந்தடங் கண்ணி னானை நாடலாங் காலங் காறும்
இருந்தரு டருதி யெம்மோ டென்றடி யிணையின் வீழ்ந்தான்.

கசு வந்தலு மதனைக் கேளா வின்னிள முறுவ லோடு
வேந்தரி லிருக்கை யெம்போல் விரதியர் விழைதற் கொவ்வா
போந்தவ ணிருப்பி னெம்மைப் போற்றவே போது போமால்
தேர்ந்தினி தியற்று மன்ற னரசியற் றருமந் தீர்தி. 4245

உ0 ஏழிரண் [1]டாண்டு யான்போந் தெரிவனத் திருக்க வேன்றேன்
வாழியா [2]பரசன் வைகும் வளநகர் வைக மாட்டேன்
பாழியம் புயத்து வீர பார்த்திலை போலு மன்றே
யாழிசை மொழியோ டன்றி யானுறு மின்ப மென்னே. 4246

உக தேவிவே றரக்கன் வைத்த சிறையினு ளிருப்பத் தான்றன்
ஆவியந் துணைவ னோடு மளவிடற் கரிய வின்பம்
மேவினு னிராம னென்று லய்யவிவ் வெய்ய மாற்றம்
மூவகை யுலகு முற்றுங் காலத்து முற்ற வற்றோ. 4247

(பிரதி) [1] டாண்டில் யான்போந் தெரிவனத் திருக்க வென்றன். [2] யரசின்.

உஉ இல்லறந் துறத்தி லாதோ ரியற்கையை யிழந்து போரில்
வில்லறந் துறந்தும் வாழ வெள்கினன் மேன்மை யில்லாச்
சில்லறம் புரிந்து நின்ற தீய்மைக டீரு மாறு
நல்லறந் தொடர்ந்த நோன்பி னவையற நோற்ப னாளும். 4248

உங அரசியற் குரிய யாவு மாற்றுழி யாற்றி யான்ற
கரைசெயற் கரிய சேனைக் கடலொடுந் திங்க ளொன்றில்
விரசுவ தென்பா னின்னை வேண்டினென் வீர வென்றான்
உரைசெயற் கெளிது மாகி யரிதுமா மொழுக்கி னின்றான். 4249

உச மறித்தொரு மாற்றங் கூறான் வானுயர் தோற்றத் தன்னான்
குறிப்பறிந் தொழுகன் மாதோ கோதில ராத லென்னா
நெறிப்படக் கண்கள் பொங்கி நீர்வர நெடிது தாழ்ந்து
பொறுப்பருந் துன்ப முன்பாய்க் கவிக்குலத் தரசன் போனான்.

உரு வாலிகா தலனு மாண்டு மலரடி வணங்கி னானை
நீலமா மேக மன்ன நெடியவ னருளி னோக்கிச்
சீலநீ யுடைமை யாத விவன்சிறு தாதை யென்னா
மூலமே தந்த வுந்தை யாமென முறையி னிற்றி. 4251

உசு என்னமற் றினைய கூறி யேகவற் றொடர்க வென்றான்
பொன்னடி வணங்கி மற்றப் புகழுடைக் குரிசில் போனான்
பின்னர்மா ருதியை நோக்கிப் பேரெழில் வீர நீயும்
அன்னவ னரசுக் கேற்ற தாற்றுதி யறிவி னென்றான். 4252

உஎ பொய்த்தலி லுள்ளத் தன்பு பொழிகின்ற புணர்ச்சி யாலும்
இத்தலை யிருந்து நாயே னேயின வெனக்குத் தக்க
கைத்தொழில் செய்வ னென்று கழலிணை வணங்குங் காலை
மெய்த்தலை நின்ற வீர னிவ்வுரை விளம்பு கின்றான். 4253

உஅ நிரம்பினு னொருவன் காத்த நிறையர சிறுதி நின்ற
வரம்பிலாத் தன்மை மற்றோர் தலைமகன் வலிதிற் கொண்டால்
அரும்புல னவனு நீங்கு மாதலா லைய நின்போற்
பெரும்பொறை யறிவி னூரா ரிறையினிப் பெறுவ தம்மா. 4254

உகூ ஆன்றவற் கரிய தான வரசினை நிறுவி யப்பால்
என்றெனக் குரிய தாய கருமமு மியற்றற் கொத்த
சான்றவர் நின்னி னில்லை யாதலாற் றருமந் தானே
போன்றநீ யானே வேண்ட வத்தலை போதி யென்றான். 4255

௩0 ஆழியா னனைய கூற வாணையீ தாகி லஃதே
வாழியாய் பிறிவ னென்று வணங்கிமா ருதியும் போனான்
சூழிமால் யானை யன்ன தம்பியுந் துணையாய்த் தொல்லை
ஊழிநா யகனும் வேறோ ருயர்தடக் குன்ற முற்றான். 4256

௩௧ ஆரிய னருளி னாற்போ யகன்மலை யகத்த னான
சூரியன் மகனு மானத் துணைவருங் கிளையுஞ் சுற்றத்
தாரையை வணங்கி யன்னா டாயெனத் தந்த சொற்கள்
சீரியர் சொல்லே யாகச் செய்தவ னரசு செய்தான். 4257

௩௨ வளவர செய்தி மற்ற வானர வீரர் யாரும்
கிளைஞரி னுதவ வாணை கிளர்திசை யளப்பக் கேளோ
டளவிலா வாற்ற லாண்மை யங்கதன் றங்கள் செல்வத்
திளவர சியற்ற வேலி யினிதினி னிருந்தா னிப்பால். 4258

௩௩ வள்ளலு மவனின் றேகி மதங்கன திருக்கை யான
வெள்ளவான் குடுமிக் குன்றத் தொருசிறை மேவி மெய்ம்மை
யுள்ளுறு காதற் றம்பி யுவகையா லமைக்கப் பட்ட
எள்ளவில் சாலை யெய்தி யிருந்தன னிமையோ ரேத்த. 4259

௮ அரசியற் படலம் முற்றும்

௯ சரற்காலப் படலம்

௧ மாவியல் வடதிசை நின்றும் வானவன்
ஓவிய மிதுவென வுரைக்க வொண்கிலாத்
தேவியை நாடியே முந்தித் தென்றிசை
யேவிய தூதென யிரவி யெய்தினான். 4260

௨ நண்ணுத லருங்கட னஞ்ச நுங்கிய
கண்ணுதல் கண்டத்தின் காள மாமென
விண்ணக மிருண்டது வெயிலின் வெங்கதிர்
தண்ணிய மெலிந்தன தழைத்த மேகமே. 4261

௩ நஞ்சினி னளிர்நெடுங் கடலி னங்கையர்
அஞ்சன நயனத்தி னவிழ்ந்த கூந்தலில்
வஞ்சனை யரக்கர்தம் வடிவிற் செய்கையி
னெஞ்சினி லிருண்டது நீல வானமே. 4262

ச நாட்களி னளிர்கட ளுர நாவுற
வேட்கையிற் கருகிய மேக மின்னுவ
வாட்கைகண் மயங்கின செருவில் வார்மதப்
பூட்கைக ணிறத்தபுண் டிறப்ப போன்றவே. 4263

ரு பையினிற் பஃறலைப் பாந்த ளேந்திய
மொய்ந்நிலத் தகளியின் முழங்கு நீர்நெய்யில்
வெய்யவன் விளக்கமா மேருப் பொற்றிரி
மையக லொத்தது மழைத்த வானமே. 4264

சு நீனிறப் பெருங்கிரி நிரைத்த நீர்த்தனச்
சூனிற முகிற்குலந் துவன்றிச் சூழ்ந்தன
மானிற நெடுங்கடல் வாரி யூரிவான்
மேனிறைந் துளதென முழக்க மிக்கதே. 4265

எ அரிப்பெரும் பெயரவன் முதலி னோரணி
விரிப்பவு மொத்தன வெற்பு மீதுதீ
எரிப்பவு மொத்தன வேசி லாசைகள்
சிரிப்பவு மொத்தன தெரிந்த மின்னெலாம். 4266

அ மாதிரக் கருமகன் மாரிக் கார்மழை
யாதினு மிருண்டன விருந்தைக் குப்பையிற்
கூதிர்வெங் கானெடுந் துருத்தி கோளமைத்
தூதுவெங் கனலுமி ழுலையு மொத்ததே. 4267

கூ சூடின மணிமுடித் துகளில் விஞ்சையர்
கூடுறை நீக்கிய குருதி வாட்களும்
ஆடவர் பெயர்தொறு மாசை யானையின்
ஓடைக ளெரிபிறழ் வனவு மொத்ததே. 4268

க0 பிரிந்துறை மகளிரும் பிலத்த பாந்தளும்
எரிந்துயிர் நடுங்கிட விரவி யின்கதிர்
அரிந்தன வாமென வசனி நாவென
விரிந்தன திசைதொறும் வசையின் மின்னெலாம். 4269

கக எண்வகை நாகங்க டிசைக ளெட்டையும்
நண்ணின நாவனைத் தனைய மின்னுவ
கண்ணுதன் மிடறெனக் கருகிக் கார்விசும்
புண்ணிறை யுயிர்ப்பென வூதை யாடின. 4270

கஉ தலைமையுங் கீழ்மையுந் தவிர்த லன்றியே
மலையினு மரத்தினு மற்று முற்றினும்
விலைநினைந் துளவழி விலங்கும் வேசையர்
உலைவுறு மனமென வுலாய தூதையே. 4271

கங அழுங்குறு மகளிர்த மன்பிற் றீர்ந்தவர்
புழுங்குறு புணர்முலை கொதிப்பப் புக்குலாய்க்
கொழுங்குறைத் தசையினை யரிந்து கொண்டது
விழுங்குறு பேயென வாடை வீங்கிற்றே. 4272

கச ஆர்த்தெழு துகள்விசும் படைத்த லானுமின்
கூர்த்தெழு வாளெனப் பிறழுங் கோட்பினும்
தார்ப்பெரும் பணையில்வின் டழங்கு காரினும்
போர்ப்பெருங் களமெனப் பொலிந்த தும்பரே. 4273

கரு இன்னகைச் சனகியைப் பிரிந்த விராமன்மேல்
மன்மதன் மலர்க்கணை வழங்கி னானெனப்
பொன்னெடுங் குன்றின்மேற் பொழிந்த தாரைகள்
மின்னெடுந் துவன்றின மேக ராசியே. 4274

கசு கல்விடைப் படுதுளித் திவலைக் காரிடும்
வில்விடு விடுகணை விசையின் மேவின
செல்விடைப் பிறந்தவெங் கனல்கள் சிந்தின
அல்விடை மணிசிறந் தழலி யற்றல்போல. 4275

கஎ மள்ளர்கள் மறுபடை மான யானைமேல்
வெள்ளிவே லெறிவன போன்ற மேகங்கள்
தள்ளருந் துளிபடத் தகர்ந்து சாய்கிரி
புள்ளிவெங் கடகரி புரள்வ போன்றவே. 4276

கஅ வானிடு தனுவொடுந் தழைத்த வான்மழை
மீனெடுங் கொடியவன் பகழி வீழ்துளி
தானெடுஞ் சார்துணை பிரிந்த தன்மையர்
ஊனுடை யுடம்பெலா முருக்க லொத்ததே. 4277

ககூ தீர்த்தனுங் கவிகளுஞ் செறிந்து நம்பகை
பேர்த்தன ரினியெனப் பேசி வானவர்
ஆர்த்தென வார்த்தன மேக மாய்மலர்
தூர்த்தன வொத்தன துள்ளி வெள்ளமே. 4278

௨0 வண்ணவிற் கரதலத் தரக்கன் வானினில்
எண்ணிடைக் கடிதுகொண் டேகு மெல்லையிற்
பெண்ணினுக் கருங்கல மனைய பெய்வளை
கண்ணெனப் பொழிந்தன கால மாரியே. 4279

௨௧ பரஞ்சுடர்ப் பண்ணவன் பண்டு விண்டொடர்
புரஞ்சுட விடுசரம் புரைபு மின்னினம்
அரஞ்சுடப் பொறிநிமி ரயிலி னுடைவர்
உரஞ்சுட வுளைந்தனர் பிரிந்து ளோரெலாம். 4280

௨௨ பொருடரப் போயினர் பிரிந்த பொய்யுடற்
குருடரு தேர்மிசை யுயிர்கொண் டுய்த்தலால்
மருடரும் பிரிவெனு மாசு ணங்கெடக்
கருடனைப் பொருவின காரின் மாரியே. 4281

௨௩ முழங்கின முறைமுறை மூரி மேகநீர்
வழங்கின மிடைவன மான யானைகள்
தழங்கின பொழிமதத் துவலை தாழ்தரப்
புழுங்கின வெதிரெதிர் பொருவ போன்றவே. 4282

௨௪ விசைநெடு மாருதம் வெறித்து வீசலால்
அசைவுறு சிறுதுளி யப்பு மாரியின்
இசையுறழ்ந் தெடுப்பன விசைய வாயிருந்
திசையொடு திசைசெருச் செய்த போன்றவே. 4283

௨௫ விழைவுறு பொருடரப் பிரிந்த வேந்தர்வந்
துழையுற வுயிருற வுயிர்க்கு மாதரின்
மழையுற மணமுற மலர்ந்து தோன்றின
குழையுறப் பொலிவுறு முல்லைக் கொம்பெலாம். 4284

௨௬ *பாடலம் வறுமை கூர்ந்த பகலவன் பசுமை கூர்ந்த
கோடல்கள் பெருமை கூர்ந்த குவலையஞ் சிறுமை கூர்ந்த
ஆடின மயில்கள் பேசா தடங்கின குயில்க ளன்பர்
கேடுறத் தளர்ந்தார் போலுந் திருவுறக் கிளர்ந்தார் போலும்.

௨௭ வாளெயிற் றரவம் போன்ற வான்றலை தோன்ற வார்ந்த
தாளுடைக் கோட றம்மிற் றழுவின காத றங்க
மீளுமெல் லணையின் மன்னன் விழவினு ளுணர்வு வீய்ந்த
தோளெனப் பின்னி யாங்கே யவற்றொடுந் துலங்கிச் சாய்ந்த.

சரற்காலப் படலம்

௨௮ நானிறச் சுரும்பும் வண்டு நவமணி யணியிற் சாரத்
தேனுக மலர்ந்த சந்தச் சேயிழைக் காந்தட் செம்பூ
வேனிலை வென்ற தம்மா காமென வியந்து நோக்கி
மாநிலக் கிழத்தி கைகண் மறித்தன போன்ற மன்னோ. 4287

௨௯ எள்ளிட விடமொன் றின்றி யெழுந்தன விலங்கு கோபந்
தள்ளுறத் தலைவர் தம்மைப் பிரிந்தவர் தழுவத் தூய
கள்ளுடை யோதி யார்தங் கலவியிற் பலகாற் கான்ற
வெள்ளடைத் தம்பற் குப்பை சிதர்ந்தென விரிந்த மாதோ.

௩0 தீங்கனி நாவ லோங்குஞ் சேணுயர் குன்றிற் செம்பொன்
வாங்கின கொண்டு பாரின் மண்டுமால் யாறு மான
வேங்கையின் மலருங் கொன்றை விரிந்தன வீயு மீதாய்த்
தாங்கின நதிகள் சென்று தலைமயக் குறுவ தம்மா. 4289

௩௧ நன்னெடுங் காந்தட் போதி னறைவிரி கடுக்கை நன்பூத்
துன்னிய கோபத் தோடுந் தோன்றிய தோற்றந் தும்பி
இன்னிசை முரல்வ நோக்கி யிருநில மலர்க்கை யேந்திப்
பொன்னொடு காசை நீட்டிக் கொடுப்பதே போன்ற வன்றே.

௩௨ கிளைத்துணை மழலை வண்டு கின்னர நிகர்த்த மாலைத்
துளிக்குரல் மேகம் வள்வாய்த் தூரியந் துவைப்ப போன்ற
வளைக்கையர் போன்ற மஞ்ஞை தோன்றிதா னரங்கு மாட்டு
விளக்கின மாகக் காண்போர் விழிகரு விளையின் மென்பூ. 4291

௩௩ பேடையு மிஞிறும் பாயப் போர்வுறப் பிறக்கு மோசை
ஊடுறத் தாக்குந் தோறு மொல்லொலி பிறப்ப நல்லார்
ஆடியற் பாணிக் கொக்கு மாரிய வமுதப் பாடல்
கோடிய தாளங் கொட்ட மலர்ந்தகூ தாள மன்னே. 4292

௩௪ வழைதுறு கான யாறு மாநிலக் கிழத்தி மக்கட்
குழைவுற மலைமாக் கொங்கை சுரந்தபா லொழுக்கை யொத்த
விழைவுறும் வேட்கை யோடும் வேண்டினர்க் குதவ வேண்டிக்
குழைதொறுங் கனகந் தூங்குங் கற்பக நிகர்த்த கொன்றை.

௩௫ பூவியற் புறவ மோங்கும் பொறிவரி வண்டு போலத்
தேவிய களிப்ப தாகிச் செருக்கின காமர் செவ்வி
ஓவிய மரங்க டோறு முரைத்தவற் றுரிஞ்ச வொண்கண்
நாவியின் மணங்க ளுறைக் கலையொடும் புலந்த நவ்வி. 4294

௩௬ *தேரி னன்னெடுந் திசைசெலச் செருக்கழிந் தொடுங்குங்
கூர யிற்றருங் கண்ணெனக் குவிந்தன குவளை
மார னன்னவர் வரவுகண் டுவக்கின்ற மகளிர்
மூரன் மென்குறு முறுவலொத் தரும்பின முல்லை. 4295

௩௭ சரத நாண்மலர் யாவையுங் குடைந்தன தடவிச்
சூரத நூனெறி விடரெனத் தேன்கொண்டு தொகுப்ப
பரத நூன்முறை நாடகம் பயனுறப் பகுப்பான்
இரத மீட்டுறுங் கவிஞரைப் பொருவின தேனீ. 4296

௩௮ களிக்கு மஞ்ஞையைக் கண்ணுள ரினமெனக் கண்ணுற்
றளிக்கு மன்னரிற் பொன்வழங் கினமலை யருவி
வெளிக்கண் வந்தனர் விருந்தென விருந்துகண் டுள்ளங்
களிக்கு மங்கையர் முகமெனப் பொலிந்தன கமலம். 4297

௩௯ நோக்கி னுண்மை நோக்கழி செய்திடு மருங்குற்
றாக்கணங் கருஞ் சீதைக்குத் தாங்கருந் துன்ப
மாக்கி னோமுரு வாலெனு மரும்பெற லுவமை
வாக்கி னானுரை யாவெனக் களித்தன மான்கள். 4298

௪0 நீடு நெஞ்சுறு நேயத்தர் பிரிந்துழி நினைந்து
வாடு கின்றன மருளுறு காதலின் மயங்கிக்
கூடு நன்னதித் தடந்தொறும் படிந்தன குடைவுற்
றோடு கின்றன கொழுநரைப் பொருவின வன்னம். 4299

௪௧ காரெ னுந்நிறக் கரியவன் மார்பினிற் கவின்முத்
தார மென்னவும் பொலிந்தன வளப்பரு மளக்கர்
நீர்நு கர்ந்தமா மேகத்தின் மருங்குற நிரைத்த
கூரும் வெண்ணிறத் திரையெனப் பறப்பன குரண்டம். 4300

௪௨ மருவி நீங்கல்செல் லாநெடு மாலைய வானிற்
பருவ மேகத்தி னருகுறக் குருகினம் பறப்ப
திருவி னாயக னிவனெனத் தேமறை தெரிக்கும்
ஒருவன் மார்பினி னுத்தரீ கத்தினை யொத்த. 4301

௪௩ உறவெ துப்புறுங் கொடுந்தொழில் வேனிலா னொழியத்
திறநி னைப்புறுங் காரெனுஞ் செவ்வியோன் சேர
நிறம னத்துறுங் குளிர்ப்பினி னெடுநில மடந்தை
புறம யிர்த்தலம் பொடித்தன போன்றன பசும்புல். 4302

சச தேன வாமலர்த் திசைமுகன் முதலினர் தெளிந்தோர்
ஞான நாயக னவையற நோக்கெலா நல்கக்
கானம் யாவையும் பரப்பிய கண்ணெனச் சனகன்
மானை நாடிநின் றழைப்பன போன்றன மஞ்ஞை. 4303

சரு செஞ்செ வேலவர் செறிசிலைக் குரிசில ரிருண்ட
குஞ்சி சேயொளி கதுவுறப் புதுநிறங் கொடுக்கும்
பஞ்சி போர்த்தமெல் லடியெனப் பொலிந்தன பதுமம்
வஞ்சி போலியர் மருங்கென நுடங்கின வல்லி. 4304

சசா நீயி ரன்னவன் குதலைய ராதலி னேடிப்
போய தையலைத் தருதிரென் றிராகவன் புகலத்
தேய மெங்கணுந் திரிந்தன போந்திடை தேடிக்
கூய வாய்க்குரல் குறைந்தபோற் குறைந்தன குயில்கள். 4305

சஎ பொழிந்த வானிலம் புற்றரக் குமட்டிய புனிற்றா
எழுந்த வாம்பிக ளிடறின செறிதயி ரேய்த்த
மொழிந்த தேனுடை முகிழ்முலை யாய்ச்சியர் முழாவிற்
பிழிந்த பால்வழி நுரையெனப் பொருவின பிடவம். 4306

சஅ வேங்கை நாறின கொடிச்சியர் வடிக்குழல் விழைவண்
டேங்க நாறின நரந்தமவ் வெயிற்றிய ரைம்பால்
ஓங்கு நாண்முல்லை நாறின வாய்ச்சிய ரோதி
ஞாங்க ரும்பல முழத்தியர் பித்திகை நாற. 4307

சகூ தேரைக் கொண்டபே ரல்குறன் றிருமுகங் காணான்
ஆரைக் கண்டுயி ராற்றுவா னல்லுணர் வழிந்தான்
மாரற் கெண்ணில்பல் லாயிர மலர்க்கணை வகுத்த
காரைக் கண்டனன் வெந்துயர்க் கொருகரை காணான். 4308

ருO அளவில் காரெனு மப்பெரும் பருவம்வந் தணைந்தால்
தளர்வ ரென்பது தவம்புரி வோர்கட்குந் தகுமால்
கிளவி தேனினு மமிர்தினுங் குழைத்தவள் கிளைத்தோள்
வளவி யுண்டவன் வருந்துமென் றுவது வருந்தோ. 4309

ருக காவி யுங்கருங் குவளையு நெய்தலுங் காயாம்
பூவை யும்பொரு வானவன் புலம்பினன் றளர்வான்
ஆவி யுஞ்சிறி துண்டுகொ லாமென வயர்ந்தான்
தூவி யன்னமன் னுடிறத் திவைபிவை சொல்லும். 4310

௫௨. வாரேய் முலையா ளைமறைக் குனர்வாழ்
ஊரே யறியே னுயிரோ டுழல்வேன்
நீரே யுடையா யருளின் னிலையோ
காரே யெனதா விகலக் குதியோ. 4311

௫௩ வெப்பார் நெடுமின் னினெயிற் றின்வெகுண்
டெப்பா லும்விசும் பிலிருண் டெழுவாய்
அப்பா தகவஞ் சவரக் கரையே
ஒப்பா யுயிர்கோ டலதொக் குதியோ. 4312

௫௪ அயிலேர் விழியார் விளியா ரமிழ்தின்
குயிலே மொழியாய் கொணராய் கொடியாய்
துயிலே னுருவே னுரைசோர் வுணராய்
மயிலே யெனைநீ வலியா டுதியோ. 4313

௫௫ மழைவா டையொடா டிவலிந் துயிர்மேல்
நுழைவாய் மலர்வாய் நொடியாய் கொடியே
இழைவா ணுதலா ரிடைபோ லிடையே
குழைவா யெனதா விகுழைக் குவையோ. 4314

௫௬ விழையேன் விளைவா னருண்மெய் மையினின்
றிழையே னுணர்வே னவையின் மையிறைற்
பிழையே னுயிரோ டுபிரிந் தனரால்
உழையே யவரெவ் வுழையா ருரையாய். 4315

௫௭ பயில்பா டகமெல் லடிபஞ் சனையார்
செயிரே துமிலா ரொடுநீ ருதியோ
அயிரா துடனே யகல்வா யலையோ
உயிரே கெடுவா யுறவோர் கிலையோ. 4316

௫௮ ஒன்றைப் பகராய் குழலுக் குடைவாய்
வன்றைப் புறுநீள் வயிரத் தினையே
கொன்றைக் கொடியாய் கொணர்கின் றிலையோ
என்றைக் குறவா கவிருந் தனையோ. 4317

௫௯ 'குராவரும் பனைய கூர்வா ளெயிற்றுவெங் குருளை நாகம்
விராவுவெங் கடுவிற் கொல்லு மெல்லிணர் முல்லை யென்றும்
உராவருந் துயர மூட்டி யோய்வுற வுலைப்ப தொன்றோ
இராவணன் கோப நிற்க விந்திர கோப மன்றோ. 4318

௬0 ஓடைவா ணுதலி னாளை யொளிக்கலா முபாய மெண்ணி
நாடிமா ரீச னாரே நாடக நவ்வி யானார்
வாடையாய்க் கூற்றி னாரு முருவினை மாற்றி வந்தார்
கேடுசூழ் வார்க்கு வேண்டு முருக்கொளக் கிடந்த வன்றே. 4319

௬௧ அருவினை யரக்க ரென்ன வந்தர மதனில் யாவும்
வெருவர முழங்கு கின்ற மேகமே மின்னு கின்றாய்
தருவனென் றிரங்கி னாயோ தாமரை மறந்த தையல்
உருவினைக் காட்டிக் காட்டி யொளிக்கின்றா யொக்கின் றாயால்.

௬௨ உண்ணிறைந் துயிர்க்கும் வெம்மை யுயிர்சுட வுலைவு முள்ளம்
புண்ணுற வாளி தூர்த்தாற் பழுதினிப் போதி மாரா
எண்ணுறு கல்வி யுள்ளத் திளையவ னின்னே யுன்னைக்
கண்ணுறு மாகிற் பின்னை யாரவன் சீற்றங் காப்பார். 4321

௬௩ வில்லும்வெங் கணையும் வீரர் வெஞ்சமத் தஞ்சினார் மேற்
புல்லுவ வல்ல வாற்றல் போற்றலர்க் குரித்துப் போலாம்
அல்லுநன் பகலு நீங்கா யனங்கநீ யருளிற் றீர்ந்தாய்
செல்லுமென் றெளிவந் தோர்மேற் செலுத்தலுஞ் சீர்மைத் தாமோ.

௬௪ என்னவித் தகைய பன்னி யிடருழந் திரங்கு கின்ற
தன்னையொப் பானை நோக்கித் தகையழிந் தயர்ந்த தம்பி
நின்னையெத் தகைய வாக நினைந்தனை நெடியோ யென்னச்
சென்னியிற் சுமந்த கையன் றேற்றுவான் செப்ப லுற்றான்.

௬௫ காலநீளிது காருமாரியும் வந்ததென்றக வற்சியோ
நீலமேனி யரக்கர்வீர நினைந்தழுங்கிய நீர்மையோ
வாலிசேனை மடந்தைபுக்கிட நாடவாரலி லாமையோ
சாலநல்லுரை கேள்விவீரத ளர்ந்ததென்னைத வத்தினாய். 4324

௬௬ மறைதுளங்கினு மதிதுளங்கினும் வானுமாழ்கடல் வையமு
நிறைதுளங்கினு நிலைதுளங்குறு நிலைமைநின்வயி னிற்குமோ
பிறைதுளங்குறு மனையபேரெயி றுடையபேதையர் பெருமையின்
இறைது ளங்குறு புருவ வெஞ்சிலை யிறைது ளங்குற வியலுமோ. 4325

௬௭ அனுமனென்பவ னறிவறிந்தனை யறிஞவங்கத னமைதியோர்
எனையரென்பதோ ரிறுதிகண்டுமே லெழுமதென்மறனு முவமையோய்
வினையின் வெந்துயர் விரவுந்தங்களும் விரைவுசென்றன வெளிதுநின்
தனுவெனுந்திரு நுதலிவந்தனள் சரதம்வன்றுயர் தவிரயா. 4326

௬௮ மறையறிந்தவர் வரவுகண்டுமை வலியும்வஞ்சகர் வழியொடும்
குறையவென்றிடர் களைவனென்றவர் குறைமுடிந்தது விதியினால்
இறைவவங்கவ ரிறுதிகண்டினி திசைபுனைந்தனை யவர்களால்
உறையுமும்பரும் வெளியினின்றன ருணர்வொழிந்திட லொழிதியால். 4327

௬௯ காதுகொற்றமு னக்கலாதுபி றர்க்கெவ்வாறுக லக்குமோ
வேதனைக்கிட மானவீரம தன்றுதீர்வது நன்றரோ
போதுபிற்பட லுண்டிதோர்பொரு ளன்றியின்றுது ணிந்திடில்
யாதுனக்கிய லாததெந்தைவ ருந்தலென்னவி யம்பினான். 4328

௭௦ சொற்றதம்பியு ரைக்குணர்ந்துயிர் சோர்வொடுங்கிய தொல்லையான்
இற்றவின்னலி யக்கமெய்திட வைகல்பல்பல வேகமேல்
உற்றவின்றவி னைக்கடும்பிணி யொன்றின்மேலுட னொன்றுராய்
மற்றும்வெம்பிணி பற்றினாலென வந்தெதிர்ந்தது மாரியே. 4329

௭௧ நிறைந்தன நெடுங்குள நெருங்கின தரங்கம்
குறைந்தன கருங்குயில் குளிர்ந்தவுயர் குன்றம்
மறைந்தன தடந்திசை வருந்தினர் புரிந்தார்
உறைந்தன மகன்றிலுட னன்றிலுயி ரொன்றி. 4330

௭௨ பாசிழை யரம்பையர் பழிப்பிலக லல்குற்
றாசுதொட ரூசனனி வெம்மைதொடர் வுற்றே
வீசியது வாடையெரி வெந்தவிரி புண்வீழ்
ஆசிலயில் வாளியென வாசைபுரி வார்மேல். 4331

௭௩ வேலைநிறை வுற்றன வெயிற்கதிர் வெதும்புஞ்
சீலமழி வுற்றபுன லுற்றுருவு செப்பிற்
காலமறி வுற்றுணர்தல் கன்னலள வல்லான்
மாலைபக லுற்றதென வோர்வரிது மாதோ. 4332

௭௪ நெற்கிழிய நெற்பொதி நிரம்பின நிரம்பாச்
சொற்கிழிய நற்கிளிய தோகையவர் தூமென்
பற்கிழி மணிப்படர் திரைப்பரவர் முன்றில்
பொற்கிழி விரித்தன சினைப்பொருவில் புன்னை. 4333

௭௫ நிறங்கருகு கங்குல்பக னின்றநிலை நீங்கா
அறங்கருது சிந்தைமுனி யந்தணரி னாலிப்
பிறங்கலி னெடுந்துளி படப்பெறுவ முன்றில்
உறங்கல பிறங்கலய னின்றவுயர் வேழம். 4334

எசு சந்தினிடை யிற்படலை வேய்ந்திசை நடந்தோ
றுந்தியிட கிற்புகை நுழைந்துகுளி ருள்ள
மந்திதுயில் வுற்றமுழை வன்கடுவ னங்கந்
திந்தியம வித்தநனி போகியி னிருந்த. 4335

எஎ ஆசில்சுனை வாலருவி யாயிழைய ரைம்பால்
வாசமண நாறவில வானமணி வன்கால்
ஊசல்வறி தானவித ஞெண்மணிகள் விண்மேல்
வீசலில வானநெடு மாரிதுளி வீச. 4336

எஅ கருந்தகைய தன்றகைய கைதைமடல் காதல்
தருந்தகைய போதுகிளை யிற்புடை தயங்கப்
பெருந்தகைய பொற்சிறை யொடுக்கியிடை பேரா
திருந்தகுரு கின்றுணை பிரிந்தவர்க ளென்ன. 4337

எகூ பதங்கண்முகி லொத்தவிசை பைஞ்ஞிமிறு டன்ன
விதங்களின டித்திடுவி கற்பநனி மேவு
மதங்கியரை யொத்தமயில் [1]வாசமலர் மூலத்
தொதுங்கின வுழைக்குல மழைக்குல முலைக்க. 4338

அ0 விளக்கொளி யகிற்புகை விழுங்கமளி மென்கொம்
பிளைக்குமிடை மங்கையரு மைந்தர்களு மேவத்
தளைத்தவின மணித்தவிசு வந்துசுகிர் சந்தின்
துளைத்தருவின் வந்துதுயில் வுற்றகுளிர் தும்பி. 4339

அக தாமரை மலர்த்தவி சிகந்துதகை யன்னம்
மாமர நிறைத்தொகு பொதும்பின்முழை வைகத்
தேமர [2]மடுக்கித னிடைச்செறி குரம்பைத்
தூமரு வெயிற்றியரொ டன்பர்துயில் வுற்றார். 4340

அஉ வள்ளிபுடை சுற்றியுயர் சிற்றிலை மரந்தோ
றெள்ளரு மறிக்குருளொ டண்டர்க ளிருந்தார்
கள்ளரி ஞெளித்துறை நெடுங்கழு தொடுங்கி
முள்ளெயிறு இன்றுபசி மூழ்கிட விருந்த. 4341

அங சாம்பயி னெடுந்துளி நிரந்துபுயல் சாரக்
குரம்பையினில் வன்கரி குலைந்துற வொடுங்கா
வரும்பக னறும்பிரசம் வைகல்பல வைகு
முரம்பினி னிரம்பல முழைஞ்சிடை நுழைந்த. 4342

(பிரதி) [1] வாசமா [2] மடிக்கித.

அச இத்தகைய மாரியிடை துன்னியிரு ளெய்த
மைத்தகும ணிக்குழல் மலர்ச்சனகன் மான்மேல்
உய்த்தவுணர் வித்தின னெருப்பிடை யுயிர்ப்பான்
வித்தகனி லக்குவனை முன்னினன் விளம்பும். 4343

அரு மழைக்கரு மின்னெயிற் றரக்கன் வஞ்சனை
இழைப்பருங் கொங்கையு மெதிர்வுற் றின்னலின்
உழைத்தன ளூலைந்துயி ருலக்கு மொன்றினும்
பிழைப்பரி தெனக்குமி தென்ன பெற்றியோய். 4344

அசா தூநிறச் சுடுசரத் தூணி தூக்குற
வானுறப் பிறங்கிய வயிரத் தோளோடும்
யானுறக் கடவதே யிதுவு மின்னிலை
வேனிறத் துற்றதொத் துழியும் வீகிலேன். 4345

அஎ தெரிகணை மலர்களாற் றிறந்த நெஞ்சொடும்
அரியவன் றுயரொடும் யானும் வைகுவேன்
எரியுமின் மினிமணி விளக்கி னின்றுணைக்
[1]குரியினம் பெடையொடுந் துயில்வ கூட்டினுள். 4346

அஅ வானக மின்னினு மழை முழக்கினும்
[2]யானகம் விம்முவ னெயிற்ற ராவெனக்
கானகம் புகுந்துநான் முடித்த காரிய
மேனருங் கீழ்நகு மினியென் வேண்டுமோ. 4347

அகூ மறந்திருந் துய்கிலேன் மாரி யீதெனில்
இறந்துவிண் சேர்வது சாலு மிப்பழி
பிறந்துபின் றீர்வனோ பின்ன ரன்னது
துறந்துசென் றுறுவனோ துயரின் வைகுவேன். 4348

கூ0 ஈண்டுநின் றரக்கர்த மிருக்கை யாமினிக்
காண்டலிற் பற்பல காலங் காண்டுமால்
வேண்டுவ தன்றது வீர நோய்தெற
மாண்டன னென்பது மாட்சிப் பாலதால். 4349

கூக செப்புருக் கனையவிம் மாரிச் சீகரம்
வெப்புருப் புறஞ்சுட வெந்து வீவதோ
ஒப்புருக் கொண்டுமார் பொடுங்க வாய்வளை
துப்புருத் தமிர்தவாய் நுகர்ந்து துய்த்தயான். 4350

(பிரதி) [1]குரியிளம். [2]யானக மின்னுவே.

கூஉ நெய்யடை தீயெதிர் நிறுவி நிற்கிவள்
கையடை யென்றவச் சனகன் கட்டுரை
பொய்யடை யாக்கிய பொறியி லேனென்று
மெய்யடை யாதினி விளித னன்றரோ. 4351

கூங தேற்றுவாய் நீயுளை யாகத் தெறிநின்
றூற்றுவேன் யானுள னாக வாய்வளை
தோற்றுவா னல்லளித் துன்ப மாரினி
மாற்றுவார் துயர்க்கொரு வரம்புண் டாகுமோ. 4352

கூச விட்டதோர் வடிக்கணை விரித்த விண்ணையுஞ்
சுட்டபோ திமையவர் முதல தொல்லையோர்
பட்டபோ துலகமுங் யாரும் பற்றறக்
கட்டபோ தல்லது மயிலைக் காணுமோ. 4353

கூரு தருமமென் [1]றெருபொரு டன்னை யஞ்சியான்
தெருமரு கின்றது செறுனர் தேவரோ
டொருமையின் வந்தன ரேனு முய்கலார்
உருமென வொலிபடு முரவி லோயென்றான். 4354

கூசு இளவலு முரைசெய்வா னெண்ணு நாளினில்
உளபகற் கூதிரு மிறுதி யுற்றதால்
களவுசெய் தவனுறை காணுங் காலம
தளவிறந் தயர்வதெ னண்ணை யாழியாய். 4355

கூஎ திரைசெயத் திண்கட லமிர்தஞ் செங்கணன்
உரைசெயத் [2]தரினுமத் தொழிலு முற்றபின்
வரைமுதற் கலப்பைகண் மாடு நாட்டித்தன்
குரைமலர்த் தடக்கையிற் கடைந்து கொண்டனன். 4356

கூஅ மனத்தினி னுலகெலாம் வகுத்து வாய்ப்புறு
நினைப்பின னுயினு நேமி நேமியோ
டெனைப்பல படைக்கல மேந்தி யாரையும்
வினைப்பெருஞ் சூட்சியிற் பொருது வெல்லுமால். 4357

கூகூ கண்ணுடை நுதனெடுங் கணிச்சி வானவன்
விண்ணிடைப் புரஞ்சுட வெகுண்ட மேலைநாள்
எண்ணிய சூட்சியு மீட்டிக் கொண்டவும்
அண்ணலே யொருவரா லறியற் பாலதோ. 4358

(பிரதி) [1] றெருபொருட் டன்னை. [2] தரினுமெத்.

கOO ஆகுனர் யாரையுந் துணைவ ராக்கிப்பின்
ஏகின ளிடை யெய்தி யெண்ணுவ
சேகறப் பன்முறை தெரிந்து செய்தபின்
வாகையென் றொருபொருள் வழுவற் பாலதோ. 4359

கOக அறத்துறை திறம்பின ரரக்க ராற்றலர்
மறத்துறை நமக்கென வலிக்கும் வன்மையோர்
திறத்துறு நன்னெறி திறம்ப லுண்டெனில்
புறத்தினில் [1] யாரதாம் புகழும் வாழ்க்கையும். 4360

கOஉ பைந்தொடிக் கிடர்களை பருவம் பையவே
வந்தெதிர்த் துளதினி வருத்த நீங்குவாய்
அந்தணர்க் காகுமோ வரக்கர்க் காகுமோ
சுந்தரத் தனுவலாய் சொல்லுநீ யென்றான். 4361

கOங உறுதிய தேயென வுணர்ந்த வாழியான்
இறுதியுண் டோகொலிம் மாரிக் கென்பதோர்
தெறுதுய ருழந்தனன் றேயத் தேய்வுசென்
றறுதியை யடைந்ததப் பருவ மாண்டுபோய். 4362

கOச மள்கலில் பெருங்கொடை மருவி மண்ணுளோர்
உள்கிய பொருளெலா முதவி யற்றபோ
தெள்கலி லிரவலர்க் கிசைவ தின்மையால்
வெள்கிய மாந்தரின் வெளுத்த மேகமே. 4363

கOரு தீவினை நல்வினை யென்னத் தேறிய
பேய்வினைப் பொருடனை யறிந்து பெற்றதோர்
ஆய்வினை மெய்யுணர் வணுக வாசுறும்
மாயையின் மாய்ந்தது மாரிப் பேரிருள். 4364

கOசா மூளமர் முற்றுற முரச விந்தபோல்
கோளமை கணமுகில் குளிற லோவின
நீளிடு கணையெனத் துளியு நீங்கின
வாளுறை யுற்றென மறைந்த மின்னெலாம். 4365

கOஎ தடுத்ததா ணெடுந்தடங் கிரிக டம்மிட
மடுத்தநீ ரொழிந்தன வருவி தூங்குவ
வெடுத்தமா லுத்தரீ கத்தொ டெய்திநின்
றடுத்தவா னிறத்துகி லொழிந்த போன்றவே. 4366

(பிரதி) [1] யார்சரம்.

கoஅ மேகமால் வரைகளைப் புறத்து மேவலான்
மாகவா றெவைகளும் வாரி யற்றன
ஆகையாற் றகவிழுந் தளவி னன்பொருள்
போகவா றொழிந்தவன் செல்வம் போன்றதே. 4367

கoகூ கடந்திறந் தெழுகளி றனைய கார்முகில்
இடந்துறந் தேகவிற் பொலிந்த திந்துவும்
நடந்தின நவில்வுறு நங்கை மார்முகம்
படர்துறந் தொருவவிற் பொலியும் பான்மைபோல். 4368

கக0 பாசிழை மடந்தையர் பகட்டு வெம்முலை
பூசின சந்தனம் [1]புழுகு குங்கும
மூசின முழுகுசே றுலர மொண்டற
வீசின நறுமலர் விண்டு வாடையே. 4369

ககக மன்னவன் றலைமகன் வருத்த மாற்றுவான்
நன்னெறிப் பருவமு நணுகிற் றுதலால்
பொன்னினை நாடியே போது மென்பபோல்
அன்னமுந் திசைதிசை யகன்ற விண்ணின்வாய். 4370

ககஉ தஞ்சிறை யொடுக்கின தழுவு மின்னலின்
நெஞ்சுறு மம்மலு நினைப்பு நீடின
மஞ்சுறு நெடுமழை பிரித லால்மயில்
அஞ்சின மிதிலைநாட் டன்ன மென்னவே. 4371

ககங வஞ்சனைத் தீவினை மறந்த மாதவர்
நெஞ்செனத் தெளிந்தநீர் [2]நிறந்து தோன்றுவ
பஞ்செனச் சிவக்குமென் பாதப் பேதையர்
அஞ்சனக் கண்ணெனப் பிறழ்ந்த வாடன்மீன். 4372

ககச ஊடிய மடந்தையர் வதன மொத்தன
தாடொறு முதிர்ந்துகான் முதிர்ந்த தாமரை
கூடினர் துவரிதழ்க் கோலங் கொண்டன
சேடுற நறுமுகை விரிந்த செங்கிடை 4373

ககரு கல்வியிற் றிகழ்கரைத் தாய கம்பலை
பல்விதச் சிறுரெனப் பகரும் வல்லரி
செல்விதத் தல்லதொன் றுரைத்தல் செய்கலா
நல்லுணர் வாளரின் விரிந்த நாவெலாம். 4374

(பிரதி) [1] புழுக்குங் குங்கும. [2] நி(ண)றந்து

ககசா செறிபுனற் பூந்துகிற் றிரைக்கை யாற்றிரைத்
துறுதகக் கால்மடுத் தோடி யோதநீர்
எறுழ்வலிக் கணவனை யெய்தி யாறெலாம்
முறுவலிக் கின்றன போன்ற முத்தெலாம். 4375

ககஎ சொன்னிறை கேள்வியிற் றொடர்ந்த மாந்தரால்
இன்னிறம் பசலையுற் றிருந்த மாதரிற்
றன்னிறம் பயப்பய நீங்கித் தள்ளரும்
பொன்னிறம் பொலிந்தன பூகந் தாறெலாம். 4376

ககஅ பயின்றுடல் குளிர்ப்பவும் பழன நீத்தவன்
இயன்றன விளவெயி லேய்ந்த மெய்யின
வயின்றொறும் வாயின்றொறு மடித்த வாயின
துயின்றன விடங்கர்மாத் தடங்க டோறுமே. 4377

கககூ கொஞ்சுறு கிளிநெடுங் குதலை கூட்டின
அஞ்சிறை யறுபதத் தளக [1]வோதிய
எஞ்சலில் குழையன விடை நுடங்கிய
வஞ்சிகள் பொலிந்தன மகளிர் மானவே. 4378

கஉ0 மழைபடப் பொதுளிய மருதத் தாமரை
தழைபடப் பேரிலைப் புரையுட் டங்கிய
விழைவுடைப் பெடையோடு வெளன நள்ளிகள்
புழையிடத் தொதுங்கின வச்சை மாக்கள்போல். 4379

கஉக அளித்தன முத்தினந் தோற்ற மானனார்
இளிக்கெதிர் விழிக்கல மென்று வெள்கியே
ஒளித்தன வாமென வோங்கு நீரிடைக்
குளித்தன வானிறக் கூன னந்தெலாம். 4380

கூ. சாற்காலப் படலம் முற்றும்.

க0. கிட்கிந்தைப் படலம்

க இன்ன கால மகன்றன வின்புறும்
முன்னை வீர னிளவலை முன்பினோய்
சொன்ன வெல்லையி னூங்குமற் றூங்கின
மன்னன் வந்தில னென்செய்த வாறரோ. 4381

(பிரதி) [1] வோதியர்.

உ பெறலருந் திருப் பெற்றுத விப்பெருந்
திறநி னைந்திலன் சீர்மையிற் றீர்ந்தனன்
அறம றந்தன னன்பு கிடக்கநம்
மறம றிந்திலன் வாழ்வின் மயங்கினான். 4382

ங நன்றி கொன்றரு நட்பினை நாரறுத்
தொன்று மெய்ம்மை சிதைத்துரை பொய்த்துளோர்க்
கொன்று நீக்குதல் குற்றத்திற் றங்குமோ
சென்று மற்றவன் சிந்தையைத் தேர்குவாய். 4383

ச ஊரு மாளு மரசுமுன் சுற்றமு
நீரு மாளுதி ரேயெனி னேர்ந்தநாள்
வாரும் வாரலி ரேயெனில் வானரப்
பேரு மாளு மெனும்பொருள் பேசுவாய். 4384

ரு வெம்பு கண்டகர் விண்புக வேரறுத்
திம்பர் நல்லறஞ் செய்ய வெடுத்தவிற்
கொம்பு முண்டருங் கூற்றமு முண்டுங்கள்
அம்பு முண்டென்று சொல்லுநம் மாணையே. 4385

சு நஞ்ச மன்னவ னைநலிந் தாலது
வஞ்ச மல்ல மனுவழக் காதலால்
அஞ்சி லன்பதி லொன்றறி யாரவர்
நெஞ்சி னின்ற நினைவை நிறுத்துவாய். 4386

எ இன்ன நாடுது மிங்கிவர்க் கும்வலி
துன்னி னுரை யெனத்துணிந் தாரெனில்
உன்னை வெல்ல வுலகொரு மூன்றினும்
நின்ன லாற்பிற ரின்மை நிகழ்த்துவாய். 4387

அ நீதி யாக நிகழ்த்துதி நின்றது
வேதி யாத பொழுது வெகுண்டிடல்
சாதி யாதவர் சொற்றரத் தக்கனை
போதி யாகவென் றன்புகழ்ப் பூணினான். 4388

கூ ஆணை சூடி யடிதொழு தாண்டிறை
பாணி யாது படர்வோன் பழிபடாத்
தூணி தூக்கித் தொடுசிலை தொட்டருஞ்
சேணி னீங்கினன் சிந்தையி னீங்கலான். 4389

௧௦ மாறு சென்ற மராமு மலைகளு
நீறு சென்று நெடுநெறி யோங்கிட
வேறு சென்றனன் மெய்ம்மையி னோங்கிடும்
ஆறு சென்றவ னாணையி னேகுவான். 4390

௧௧ விண்ணு றத்தொடர் மேருவின் சீர்வரை
மண்ணு றப்புக் கழுந்தின மாதிரம்
கண்ணு றத்தெரி வுற்றது கட்செவி
உண்ணி றக்கழற் சேவடி யூன்றலால். 4391

௧௨ வெம்பு கானிடைப் போகின்ற வேகத்தால்
உம்பர் தோயு மராமரத் தூடுசெல்
அம்பு போன்றன னாலடல் வாலிதன்
தம்பி மேற்செலு மன்னவன் றம்பியே. 4392

௧௩ மாடு வென்றியோர் மாதிர யானையின்
சேடு துன்று செடிலொரு திக்கின்மா
நாடு கின்றது நண்ணிய கால்பிடித்
தோடு கின்றது மொத்துள னாயினான். 4393

௧௪ உருக்கொ ளொண்கிரி யொன்றினின் றொன்றினைப்
பொருக்க வெய்தினன் பொன்னொளிர் மேனியான்
அருக்கன் மாவுத யத்தினின் றத்தமாம்
பருப்ப தத்தினை யெய்திய பண்புபோல். 4394

௧௫ தன்று ணைத்தலைமை யன்றனி வாளியிற்
சென்று சேணுயர் கிட்கிந்தை சேர்ந்தவன்
குன்றி னின்றொரு குன்றினிற் குப்புறும்
பொன்று ளங்குளைச் சீயமும் போன்றனன். 4395

௧௬ கண்ட வானரங் காலனைக் கண்டபோல்
மண்டி யோடின வாலி மகற்கமர்
கொண்ட சீற்றத் திளையோன் குறுகினான்
சண்ட வேகத்தி னானென்று சாற்றலும். 4396

௧௭ அன்ன தோன்றலு மாண்டொழி லான்வர
வின்ன தென்றறி வான்மருங் கெய்திலான்
மன்னன் மைந்தன் மனக்கருத் துட்கொளாப்
பொன்னின் வார்கழற் றாதையிற் போயினான். 4397

கஅ நளனி யற்றிய நாயகக் கோயிலுட்
டளம லர்த்தகைப் பள்ளியுட் டாழ்குழல்
இளமு லைச்சிய ரேந்தடி தைவர
விளைது யிற்கு விருந்து விரும்புவான். 4398

கசு தெள்ளி யோர்த் தவன்பெருஞ் செல்வமாம்
கள்ளி னாலதி கங்களித் தான்கதிர்ப்
புள்ளி மாநெடும் பொன்வரை புக்கதோர்
வெள்ளி மால்வரை யென்ன விளங்குவான். 4399

உ0 சிந்து வாரத் திருநறை தேக்கினன்
சந்த மாமயிற் சாயலர் தாழ்குழற்
கந்த மாமலர்க் காடுக டாவிடு
மந்த மாருதம் வந்துற வைகுவான். 4400

உக தித்தி யாநின்ற செங்கிடை வாய்ச்சியர்
முத்த வாணகை முள்ளெயிற் றூறுதேன்
பித்து மாலு மதமும் பெருக்கலான்
மத்த வாரண மென்ன மயங்கினான். 4401

உஉ மகர குண்டல மேமுக மண்டலத்
துகுநெ டுஞ்சுடர்க் கற்றை யுலாவலாற்
பகல வன்சுடர்ப் பாய்பனி மால்வரை
தகும லர்ந்து பொலிந்து தயங்குவான். 4402

உங கிடந்த னன்கிடந் தானைக் கிடைத்திரு
தடங்கை கூப்பினன் தாரைமுன் னாட்டந்த
மடங்கல் வீரனன் மாற்றம் விளம்புவான்
துடங்கி னானவ னைத்துயி னீக்குவான். 4403

உச எந்தை கேளவ் விராமற் கிளையவன்
சிந்தை யுண்ணெடுஞ் சீற்றத் திருமுகந்
தந்த ளிக்கத் தடுக்கரும் வேகத்தின்
வந்த னன்னுன் மனக்கருத் தியாதென்றான். 4404

உரு இனைய மாற்ற மிசைத்தன ளென்பதோர்
நினைவி லாநெடுஞ் செல்வ நெருக்கவும்
நனைந றுந்துளி நஞ்சு மயக்கவுந்
தனையு ணர்ந்திலன் மெல்லணைத் தங்கினான். 4405

உசு ஆத லாலவ் வரசிளங் கோளரி
யாது முன்னி யியற்றுவ தின்மையால்
கோதில் சிந்தை யனுமனைக் கூவவே
போதன் மேயினுன் போதக மேயினுன். 4406

உஎ சென்று மாருதி தன்னிடஞ் சேர்ந்தவண்
நின்ற தன்மைகள் யாவு நிகழ்த்தலும்
வென்றி வீரன் வியப்பொடு மேல்வினை
யொன்று வானவன் றன்னை யுசாவினுன். 4407

உஅ மந்தி ரத்தனி மாருதி தன்னெடும்
வெந்தி றற்படை வீரர் விராயவன்
அந்த ரத்தின்வந் தானன்னை கோயிலை
இந்தி ரற்கு மகன்மக னெய்தினுன். 4408

உகூ எய்தி யென்செயத் தக்கதிங் கென்றலும்
செய்திர் செய்தற் கருநெடுந் தீயன
நொய்தி னின்னலை நீக்கவு நோக்கலீர்
உய்திர் போலு முதவிகொன் றீரெனு. 4409

௩0 மீட்டு மொன்று விளம்புகின் றுள்படை
கூட்டு மென்றுமைக் கொற்றவன் கூறிய
நாட்டி றம்பினு நாட்டிறம் பும்மெனக்
கேட்டி லீரினிக் காண்டிர் கிடைத்திரால். 4410

௩க வாலி யாருயிர் காலனும் வாங்கவிற்
கோலி வாலிய செல்வங் கொடுத்தவர்
போலு மாலுப் புறத்திருப் பாரிது
சாலு மாலுந் தகைமையி னோர்க்கெலாம். 4411

௩உ தேவி நீங்கவத் தேவரிற் சிரியோன்
ஆவி நீத்தனன் போலயர் வானது
பாவி யாது பருகுதிர் போலுநுங்
காவி நாண்மலர்க் கண்ணியர் காதனீர். 4412

௩௩ திறம்பி நீதி சிதைத்தீ ருதவியை
நிறம்பொலீ ருங்க டிவினை நேர்ந்ததால்
மறஞ்செய் வானுறின் மாளுதிர் மற்றினிப்
புறஞ்செய் தாவதெ னென்கின்ற போதின்வாய். 4413

௩௪ கோளு றுத்தற் குரிய குரக்கினம்
நீளெ ழூத்தொட ருந்நெடு வாயிலைத்
தாளு றுத்தித் தடவரை தந்தன
மூளு றுத்தி யடுக்கிய மொய்ம்பினால். 4414

௩௫ சிக்கு றக்கடை சேமித்த செய்கைய
தொக்கு றுத்தத் துவன்றின வன்றியும்
புக்கு றுத்துப் புடைத்து மெனப்புறம்
மிக்கு றுத்தன வெற்பு நிறுத்தின. 4415

௩௬ காக்க வோகருத் தென்று கதத்தினாற்
பூக்கு மூரற் புரவலர் புங்கவன்
தாக்க ணங்குறை தாமரைத் தாளினால்
நூக்கி னானக் கதவினை நொய்தினில். 4416

௩௭ காவன் மாமதி லுங்கத வுங்கடி
மேவும் வாயி லடுக்கிய வெற்பொடுந்
தேவு சேவடி தீண்டலுந் தீண்டரும்
பாவ மாமெனப் பற்றழிந் திற்றதால். 4417

௩௮ நொய்தி னானெங்கத வுந்நொடி வாயிலும்
செய்த கன்மதி லுந்திசை யோசனை
ஐயி ரண்டி னளவடி யற்றுக
வெய்தி னின்ற குரங்கு வெருக்கொளா. 4418

௩௯ பரிய மாமதி லும்படர் வாயிலும்
சரிய வீழ்ந்த தடித்தின் முடித்தலை
நெரிய நெஞ்சு பிளக்க நெடுந்திசை
இரிய லுற்றன விற்றன வின்னுயிர். 4419

௪0 பகர வேபு மரிது பரிந்தெழும்
புகரில் வானர மஞ்சிய பூசலாற்
சிகர மால்வரை சென்று திரிந்துழி
மகர வேலையை யொத்தது மாநகர். 4420

௪௧ வான ரங்கள் வெருவி மலையொரீஇக்
கான மெங்கும் படர்வவக் கார்வரை
மீனெ ருங்கிய வானக மீனெலாம்
போன பின்பொலி வற்றது போன்றதே. 4421

௪௨ அன்ன காலையி லாண்டகை யாளியும்
பொன்னி னன்னகர் வீதியிற் புக்கனன்
சொன்ன தாரையைச் சுற்றினர் நின்றவர்
என்ன செய்குவ தெய்தின னென்றனர். 4422

௪௩ நீரெ லாமய னீங்குமி னேர்ந்தியான்
வீர னுள்ளம் வினவுவ னென்றலும்
பேர நின்றனர் யாவரும் பேர்கிலாத்
தாரை சென்றன [1]டார்குழ லாரொடும். 4423

௪௪ அனைய னுள்ளமு மாய்வளை யாதலான்
மனையின் வாயின் வழியினை மாற்றினான்
நினையும் வீரனின் னீணெறி நோக்கலன்
வினைய மீதென் றனுமன் விளம்பினான். 4424

௪௫ உரைசெய் வானர வீர ருவந்துறை
அரைச வீதி கடந்தகன் கோயிலை
புரைசை யானையன் னான்புக லோடுமவ்
விரைசெய் வார்குழற் றாரை விலக்கினான். 4425

௪௬ விலங்க மெல்லியல் வெண்ணகை வெள்வளை
இலங்கு நுண்ணிடை யேந்து மிளமுலைக்
குலங்கொ டோகை மகளிர் குழாத்தொடும்
வலங்கொள் வீதி நெடுவழி மாற்றினாள். 4426

௪௭ வில்லும் வாளு மணியொடு மின்னிட
மெல்ல ரிக்குரல் மேகலை யார்த்திடப்
பல்வ கைப்புரு வக்கொடி பம்பிட
வல்லி யாயம் வலத்தொடு வந்ததே. 4427

௪௮ *ஆர்க்குறா புரங்கள் பேரி யல்குலந் தடந்தேர் சுற்ற
வேர்க்கண்விற் புருவம் போர்ப்ப மடந்தையர் மிடைந்த போது
பேர்க்கருஞ் சீற்றம் போக்கி முகம்பெயர்த் தொதுங்கிற் றல்லால்
பார்க்கவு மஞ்சி னானப் பணையினும் பெரிய தோளான். 4428

௪௯ தாமரை வதனஞ் சாய்த்துத் தனுநெடுந் தரையி லூன்றி
மாமியர் குழுவின் வந்தா னாமென மைந்த னிற்பப்
பூமியி லணங்க னார்தம் பொலிவிடைப் புகுந்த பொற்றோட்
டேய்மன நெடுங்கட் டாரை நடுங்குவா ளினைய சொன்னாள். 4429

(பிரதி) [1] டாழ்குழ.

௫0 அந்தமில் கால நோற்ற வாற்றலுண் டாயி லன்றி
இந்திரன் முதலி னோர்க்கு மெய்தலா மியல்பிற் றன்றால்
மைந்தநின் பாதங் கொண்டெம் மனைவரப் பெற்று வாழ்ந்தேம்.
உய்ந்தனம் வினையுந் தீர்ந்தே முறுதிவே றிதனி லுண்டோ.

௫க வெய்தினீ வருத னோக்கி வெருவுநுஞ் சேனை வீர
செய்திதா னுணர்கி லாது திருவுளந் தெரித்தி யென்ன
ஐயநீ யாழி வேந்த னடியிணை பிரிகி லாதாய்
எய்திய தென்னை யென்றா னிசையினு மினிய சொல்லான். 4431

௫உ ஆர்கொலோ வுரைசெய் தாரென் றருள்வரச் சீற்ற மஃகப்
பார்குலா முழுவெண் டிங்கள் பகல்வந்த படிவம் போன்றும்
ஏர்குலா முகத்தி னானை யிறைமுக மெடுத்து நோக்கித்
தார்குலா மலங்கன் மார்பன் றயரை நினைந்து நைந்தான். 4432

௫௩ மங்கல மரபு நீங்கி மணியணி துறந்து வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக் குங்குமஞ் சாந்தங் கொட்டாப்
பொங்குவெம் முலைகள் பூகக் கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ள னயனங்கள் பனிப்ப நைந்தான். 4433

௫௪ இனையரா மென்னை யீன்ற விருவரு மென்ன வந்த
நினைவினு னயர்வு சென்ற நெஞ்சின னெடிது நின்றான்
வினவினர்க் கெதிரோர் மாற்றம் விளம்பவும் வேண்டு மென்னப்
புனைகுழ லாட்கு வந்த காரியம் புகல்வ தானான். 4434

௫௫ சேனையும் யானுந் தேடித் தேவியைத் தருவ னென்று
மானவற் குரைத்த மாற்ற மறந்தன னருக்கன் மைந்தன்
ஆனவ னமைதி யெல்லை யறியென வருளின் வந்தேன்
மேனிலை யனையான் செய்கை விளைந்தவா விளையு மென்றான்.

௫௬ சிறுவா யல்லை யைய சிறியவர் தீமை செய்தால்
ஆறுவாய் நீய லான்மற் றருள ரயர்த்தா னல்லன்
வேறுவே றுலக மெங்குந் தூதரை விடுத்தவ் வேலை
ஊறுமா நோக்கித் தாழ்ந்தா னுதவுமா றுதவி யுண்டோ. 4436

௫௭ ஆயிர கோடி தூத ரரிக்கணா மழைக்க வாணை
போயினர் [1]புகுது நாளும் புகுந்தது புகல்புக் கோர்க்குத்
தாயினு நல்ல நீரே தணிதிராற் றவமு மஃதால்
தீயன செய்யா ராயின் யாவரே சிறிய ராவார். 4437

(பிரதி) [1] புகுந்து.

ருஅ அடைந்தவர்க் கபய நீங்க ளருளிய வளவிற் செல்வந்
தொடர்ந்துநும் பணியிற் றீர்ந்தாற் சொல்லினும் பெருமை யன்றே
மடந்தைதன் பொருட்டால் வந்த வாளமர்க் களத்து மாண்டு
கிடந்ில ரென்னிற் பின்னை நிற்குமோ கேண்மை யம்மா. 4438

ருகூ செம்மைசே ருள்ளத் தீர்கள் செய்தபே ருதவி தீர
வெம்மைசேர் பகையு மாற்றி யரசுவீற் றிருத்தி விட்ட
உம்மையே யிகழ்வ ரென்னி லெளிமையா யொழிவ தொன்றே
இம்மையே வறுமை யெய்தி யெழுமையு மிழப்ப ரன்றே. 4439

கூ0 ஆண்டபோர் வாலி யாற்றன் மாற்றிய வம்பொன் றல்லால்
வேண்டுமோ துணையு நும்பால் வில்லினு மிக்க துண்டோ
தேண்டுவார்த் தேடு கின்றார் தேவியை யதனைச் செவ்வே
பூண்டுநின் றுய்த்தல் போலா நுங்கழல் புகுந்து [1]ளோர்க்கு.

கூக என்றவ னுரைத்த மாற்றம் யாவையு மினிது கேட்டு
நன்றுணர் கேள்வி யாரென் றருள்வர நாணுக் கொண்டான்
நின்றன னிற்ற லோடு நீங்கினன் முனிவென் றுன்னி
வன்றுணை வயிரத் திண்டோண் மாருதி மருங்கின் வந்தான்.

கூஉ வந்தடி வணங்கி நின்ற மாருதி வதன நோக்கி
அந்தமில் கேள்வி நீயு மயர்த்தனை யாகு மன்றே
முந்திய செய்கை யென்றான் முனிவினு முளைக்கு மன்பான்
எந்தைகேட் டருளு கென்னு வியம்பின னியம்ப வல்லான்.

கூ௩ சிதைவிலாக் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குனர்க்கு முண்டா மாற்றலா மாற்றன் மாயா
உதவிகொன் றார்க்கொன் றானு மொழிக்கலா முபாய முண்டோ.

கூச ஐயநும் மோடு மெங்க ளரிக்குலத் தரச னோடும்
மெய்யுறு கேண்மை யாக்கி மேலைநாள் விளைவ தான
செய்கையென் செய்கை யன்றோ வன்னது சிதையு மாகில்
உய்வகை யெனக்கு முண்டோ வுணர்வுமா சுண்ட தன்றோ.

கூரு தேவருந் தவமுஞ் செய்யு நல்லறத் திறமு மற்றும்
யாவையு நீரே யென்ப தென்வயிற் கிடந்த தெந்தாய்
ஆவது நிற்கச் சேரு மாணுண்டோ வருளுண் டன்றோ
மூவகை யுலகுங் காக்கு மொய்ம்பினீர் முனிவுண் டானல். 4445

(பிரதி) [1] புகுந்துளோர்க்கும்.

௬௬ மறந்திலன் கவியின் வேந்தன் வயப்படை வருவிப் போரைத்
திறந்திற மேவி யன்னார் சேர்வது பார்த்தே தாழ்ந்தான்
அறந்துணை நுமக்குற் றன்ற வாய்மையின் றழியு மாகிற்
பிறந்தில னன்றே யொன்றோ நரகமும் பிழைப்ப தன்றால். 4446

௬௭ உதவாம லொருவன் செய்த வுதவிக்குக் கைம்மா றின்மை
மதவானை யனைய மைந்த மற்று முண் டாக வற்றோ
சிதையாத செருவி னுன்முன் சென்று சென் றுன்னிமார்பத்
துதையானே லுதைப்புண் டாவி யுலவானே னுலகின் மன்னே.

௬௮ ஈண்டுநீ நிற்ற லென்ப தினியதோ ரியல்பிற் றன்றால்
வேண்டல ரறிவ ரேனுங் கேண்மைதீர் வினையிற் றாமால்
ஆண்டகை யாளி மொய்ம்பி னையநீ யளித்த செல்வங்
காண்டியா லுன்முன் வந்த கவிக்குலக் கோனொ டென்றான்.

௬௯ மாருதி மாற்றங் கேட்ட மலைபுரை வயிரத் தோளான்
தீர்வினை சென்று நின்ற சீற்றத்தான் சிந்தை செய்தான்
ஆரிய னருளிற் றீர்ந்தா னல்லவந் தடுத்த செல்வம்.
பேர்வகை யாகச் செய்த சிறுமையா னென்னும் பெற்றி. 4449

௭௦ அனையவை கருதிப் பின்ன ரரிக்குலத் தவனை நோக்கி
நினையொரு மாற்ற மின்ன நிகழ்த்துவ துளது நின்பால்
எனையன வுணர்தற் கேற்ற வெண்ணுதி யிதனை யென்ன
வனைகழல் வயிரத் திண்டோண் மன்னிளங் குமரன் சொன்னான்.

௭௧ தேவியைக் குறித்துச் சென்ற சீற்றமு மானத் தீயும்
ஆவியைக் குறித்து நின்ற தையனை யதனைக் கண்டே
கோவியற் றரும நீங்காக் கொடுமையோ டுறவு கூடிப்
பாவியர்க் கேற்ற செய்கை கருதுவன் பழியும் பாரேன். 4451

௭௨ ஆயினு மென்னை யானே யாற்றிநின் றாவி யுய்ந்து
நாயகன் றனையுந் தேற்றி நாள்பல [1]கழிந்து நின்றேன்
தீயுமிவ் வுலக மூன்றுந் தேவரும் விளிவ ரன்றோ
வீயுநல் லறமும் போகா விதியது விலக்கற் பாலோ. 4452

௭௩ உன்னைக்கண் டுங்கோன் றன்னை யுற்றிடத் துதவும் பெற்றிக்
கென்னைக்கண் டனன்போற் கண்டிங் கெத்துணை நெடிது வைகித்
தன்னைக்கொண் டிருந்தே தாழ்த்தா னன்றெனிற் றனுவொன் றாலே
மின்னைக்கண் டனையா டன்னை நாடுதல் விலக்கற் பாற்றோ. 4453

(பிரதி) [1] கழிந்த.

எச ஒன்றுமோ வான மன்றி யுலகமும் பதினு லுள்ள
வென்றிமா கடலு மேழு மலையுமே ழென்ன வேயாப்
நின்றதோ ரண்டத் துள்ளே யெனிலது நெடிய தொன்றோ
அன்றுநீர் சொன்ன மாற்றந் தாழ்வித்த தரும மன்றால். 4454

எரு தாழ்வித்தி ரல்லீர் பன்னாட் டருக்கிய வரக்கர் தம்மை
வாழ்வித்தி ரிமையோர்க் கின்னல் வருவித்தீர் மரபிற் றீராக்
கேள்வித்தீ யாளர் துன்பங் கிளர்வித்தீர் பாவந் தன்னை
மூள்வித்தீர் முனியா தானை முனிவித்தீர் முடிவி னென்றான்.

எசு தோன்றல துரைத்த லோடு மாருதி தொழுது தொல்லை
ஆன்றநூ லறிஞ போன பொருண்மனத் தடைப்பா யல்லை
என்றது முடியோ மென்னி விறத்துமித் திறத்துக் கெல்லாம்
சான்றினி யானே போந்துன் றமையனைச் சார்தி யென்றான். 4456

எஎ முன்னுநீ சொல்லிற் றன்றோ முயன்றது முற்றுங் காறும்
இன்னுநீ யிசைத்த செய்வா னிசைந்தன மென்று கூறி
அன்னதோ ரமைதி யான்ற னருள்சிறி தறிய நோக்கிப்
பொன்னின்வார் சிலையி னானு மாருதி யோடும் போனான். 4457

எஅ அயில்விழிக் குமுதச் செவ்வாய்ச் சிலைநுத லன்னப் போக்கின்
மயிலியற் கொடித்தே ரல்குன் மணிநகைத் திணிவேய் மென்றோட்
குயின்மொழிக் கலசக் கொங்கை மின்னிடைக் குமிழோர் மூக்கின்
புயலியற் கூந்தன் மாதர் குழாத்தொடுந் தாரை போனாள். 4458

எகூ வல்லமந் திரிய ரோடும் வாலிகா தலனு மைந்தன்
அல்லியங் கமல மன்ன வடிபணிந் தச்சந் தீர்ந்தான்
வில்லியு மவனை நோக்கி விரைவினென் வரவு வீர
சொல்லுதி நுந்தைக் கென்றா னன்றெனத் தொழுது போனான.

அ0 போனபின் றுதை கோயில் புக்கவன் பொலன்கொள் பாதம்
தானுறப் பற்றி முற்றுந் தைவந்து தடக்கை வீர
மானவற் கிளையான் வந்துன் வாசலின் புறத்தோன் சீற்றம்
மீனுயர் வேலை மேலும் பெரிதிது விளைந்த தென்றான். 4460

அக அறிவுற்ற மகளிர் வெள்ள மனைவரு மவனை நோக்கிப்
பிறிவுற்றார் மயக்கத் தான்மு னுற்றதோர் பெற்றி யோரான்
செறிபொற்றா ரலங்கல் வீர செய்திலங் குற்ற நம்மைக்
கறுவுற்ற பொருளுக் கென்னே காரணங் கண்ட தென்றான்.

அஉ இயைந்தநா ளெந்தை நீசென் றெய்திலை செல்வ மெய்தி
வியந்தனை யுதவி கொன்றாய் மெய்யிலை யென்ன வீங்கி
உயர்ந்தவச் சீற்ற மற்றி துற்றது செய்கை முற்றும்
நயந்தெரி யனுமன் வேண்ட நல்கின னம்மை யின்னும். 4462

அங வருகின்ற சீற்ற நோக்கி வானர வீரர் வானைப்
பொருகின்ற நகர்வாய் தன்னிற் பொற்கத வடைத்துக் கற்குன்
றருகொன்று மில்லா வண்ணம் வாங்கின ரடுக்கி மற்றும்
தெரிகின்ற சினத்தீப் பொங்கச் செருச்செய்வான் செருக்கி நின்றார்.

அச ஆண்டகை யதனை நோக்கி யம்மலர்க் கமலத் தாளாற்
றீண்டினன் றீண்டா முன்னந் தெக்கொடு வடக்குச் செல்ல
நீண்டகன் மதிலுங் கொற்ற வாயிலு நிறைத்த குன்றும்
கிண்டன தகர்ந்த பின்னைப் பொடியொடுங் கேழி இய தன்றே.

அரு அந்நிலை கண்ட திண்டோ ளரிகுலத் தனிக மம்மா
எந்நிலை நின்ற தென்கேன் யாண்டுபுக் கிருந்த தென்கேன்
அன்னிலை கண்ட வன்னை யாயிழை யாயத் தோடும்
மின்னிலை வில்லி ஞானை வழியெதிர் விலக்கி நின்றாள். 4465

அசு மங்கையர் மேனி நோக்கான் மைந்தனு மனத்து [1]வந்த
பொங்கிய சீற்றம் பற்றிப் புகல்கிலன் பொருமி நின்றான்
நங்கையு மினிது கூறி நாயக நடந்த தென்னே
எங்கள்பா லென்னச்சொன்னா ளண்ணலு மிதையஞ்சொன்னான்.

அஎ அதுபெரி தறிந்த வன்னை மன்னவன் சீற்ற மாற்றி
விதிமுறை யறிந்தாண் மன்னன் வெஞ்சினச் சேனை வெள்ளங்
கதுமெனக் கொணரத் தூது கல்லதர் செல்ல வேவி
எதிர்முறை யிருந்தா னென்றா ளிதுவிங்குப் புகுந்த தென்றான்.

அஅ சொற்றலு மருக்கன் றோன்றல் சொல்லுவான் விண்ணில் மண்ணில்
நிற்குரி யார்கள்யாவ ரனையவர் சினத்தா னேர்ந்தால்
விற்குரி யாரித் தன்மை வெகுளியின் விரைவி னெய்த
எற்குரை யாதுநீரி தியற்றிய தென்கொல் லென்றான். 4468

அகூ உணர்த்தினேன் முன்ன நீய துணர்ந்திலை யுணர்விற் றீர்ந்தாய்
புணர்ப்பதொன் றின்மை நோக்கி மாருதிக் குரைக்கப் போனேன்
இணர்த்தகை யின்ற பொற்றா ரெறும்வலித் தடந்தோ ளெந்தாய்
கணத்திடை யவனை நீயுங் காணுதல் கருமமென்றான். 4469

(பிரதி) [1] வந்து.

கூ0 உறவுண்ட சிந்தை யானு முரைசெய்வா னரசுக் கின்னம்
பெறவுண்டோ வவரா லீண்டு பெற்றபே ருதவி யுற்ற
திறவுண்டோ வென்னிற் றீர்வா னிருந்தவவ் விடரை யெல்லாம்
நறவுண்டு மறந்தேன் காண நாணுவன் மைந்த வென்றான். 4470

கூக ஏயின நறவல் லான்மற் றேழமைப் பால தென்னே
தாயிவண் மனைவி யென்னுந் தெளிவின்றேற் றரும மென்னும்
தீவினை வேறு மொன்றி தன்றியுந் தெரிக்க லாமோ
மாயையின் மயங்கு கின்றார் மயக்கின்மேல் மயக்கு வைப்பார்.

கூஉ தெளிந்துதீ வினையைச் செற்றார் பிறவியிற் றீர்வ ரன்றே
விளிந்தில ருணர்வி னோரும் வேதமும் விளம்ப வேயும்
நெளிந்துறை புழுவை நோக்கி நறவுண்டு நிற்கின் றாரும்
அளிந்தகத் தெரியுந் தீயை நெய்யினி லவிக்கின் றாமால். 4472

கூங தன்னைத்தா னுணர்வ னாகிற் றகையறும் பிறவி தீரும்
என்னத்தான் மறையு மற்றைத் துறைகளு மிசைத்த தெல்லாம்
முன்னைத்தான் றன்னை யோரான் முழுப்பிணி யழுக்கின் மேலே
பின்னைத்தான் பெறுவ தம்மா நறவுண்டு திகைக்கும் பித்தே.

கூச அளித்தவ ரஞ்சு நெஞ்சி லடைத்தவ ரறிவு மூழ்கிக்
குளித்தவர் ரின்ப துன்பங் குறைத்தவ ரன்றி வேரி
ஒளித்தவ ருண்டு மீண்டிவ் வுலகெலா முணர வோடிக்
களித்தவ ரெய்தி நின்ற கதியொன்று கண்ட துண்டோ. 4474

கூரு செற்றவர் பகைஞர் நட்டார் செய்தபே ருதவி தானும்
கற்றதுங் கண்கூ டாகக் கண்டதுங் கலைவல் லாளர்
சொற்றது மானம் வந்து தொலைந்ததும் படர்ந்த துன்பம்
உற்றது முணரா தாகி லுறுதிவே றிதனி லுண்டோ. 4475

கூசா வஞ்சமுங் களவும் பொய்யு மயக்கமு மரபில் கொட்புந்
தஞ்சமென் றாரை நீக்குந் தன்மையுங் களிப்புந் தாக்கும்
கஞ்சமுங் கறுவுந் [1]திட்புங் கள்ளினால் மயங்கு மந்த
நஞ்சமுங் கொல்வ தன்றி நரகமுந் தப்பா தன்றே. 4476

கூஎ கேட்டன னறவாற் கேடு வருமெனக் கிடைத்த வச்சொற்
காட்டின னனும னீதிக் கல்வியாற் கலந்த தல்லால்
மீட்டினி யுரைப்ப தென்னே விரைவின்வந் தடைந்த வீரன்
மூட்டிய வெகுளி யானுன் முடிவதற் கைய முண்டோ. 4477

(பிரதி) [1] தீப்புங்.

கூஅ அய்யநா னஞ்சி னேனிந் நறவினு லரிய கேடு
கய்பினு லன்றி யேயுங் கழறவுங் கரும மன்ருல்
வெய்யதா மதுவை யின்னும் விரும்பினே னென்னில் வீரன்
செய்யதா மரைக ளன்ன சேவடி சிதைத்த லன்றே. 4478

கூகூ என்றுகொண் டியம்பி யண்ணற் கெதிர்கொளற் கிசைந்த வெல்லாம்
நன்றுகொண் டளவி லாத நணுகெனச் சேனை யேவித்
தன்றுணைத் தேவி மாருந் தமரொடுந் தழுவத் தானும்
நின்றன னெடிய கோயிற் கடைத்தலை நிவந்த நீரான். 4479

க00 உரைத்தசெஞ் சாந்தும் பூவுஞ் சுண்ணமும் புகையு மூழின்
நிரைத்தபொற் குடமுந் தீப மாலையு நிகரின் முத்தும்
குரைத்தெழு விதானத் தோடு தொங்கலுங் கொடியுஞ் சங்கும்
இரைத்துமிழ் முரசு முற்று மியங்கின வீதி யெல்லாம். 4480

க0க தூயதிண் பளிங்கிற் செய்த சுவர்களிற் றலத்திற் சுற்றி
ஞயக மணியிற் செய்த நன்னெடுந் தூணி னுப்பண்
சாயைபுக் குறலாற் கண்டோர் தகைவுறக் கைவி லோடும்
ஆயிர மைந்தர் வந்தா ருளரெனப் பொலிந்த தவ்வூர். 4481

க0உ அங்கதன் பெயர்த்தும் வந்தாங் கடியிணை தொழுதா னையன்
எங்கிருந் தானுங் கோமா னென்றலு மெதிர்கோ ளெண்ணி
மங்குறோய் வாயிற் கொற்றக் கடைத்தலை மருங்கு நின்றான்
சிங்கவே றனைய வீரன் செய்தவச் செல்வ [1]வென்றான். 4482

க0௩ சுண்ணமுந் தூசும் வீசிச் சூடகந் தொடிக்கை மாதர்
கண்ணகன் கவரிக் கற்றைக் காலுறக் கலைவெண் டிங்கள்
விண்ணுற வளர்ந்த தென்ன வெண்குடை விளங்க வீர
வண்ணவிற் கரத்தான் முன்னர்க் கவிக்குலத் தரசன் வந்தான்.

க0ச அருக்கிய முதல வான வருச்சனைக் கமைந்த யாவும்
முருக்கிதழ் மகளி ரேந்த முரசின முகிலி னார்ப்ப
இருக்கின முனிவ ரோத விசைதிசை யளப்ப யாணர்த்
திருக்கிளர் செல்வ நோக்கித் தேவரு மருளச் சென்றான். 4484

க0ரு வெம்முலை மகளிர் வெள்ள மீனென விளங்க விண்ணிற்
சும்மைவான் மதியங் குன்றிற் றோன்றிய தெனவுந் தோன்றிச்
செம்மலை யெதிர்கோ ளெண்ணித் திருவொடு மலர்ந்த செல்வன்
அம்மலை யுதயஞ் செய்த தாதையு மனைய னானன். 4485

(பிரதி) [1] னென்றான்.

க0௬ *தோற்றின வரிகுலத் தரசைத் தோன்றலும்
ஏற்றெதிர் நோக்கின னெழுந்த தவ்வழி
சீற்றமங் கதுதனைத் தெளிந்த சிந்தையால்
ஆற்றினன் கருமத்தி னமைதி யெண்ணுவான். 4486

க0எ எழுவினு மலையினு மெழுந்த தோள்களால்
தழுவின ரிருவருந் தழுவித் தையலார்
குழுவொடும் வீரர்தங் குழாத்தி னோடும்புக்
கொழிவிலாப் பொற்குழாத் துறையு ளெய்தினார். 4487

க0அ அரியணை யமைந்தன காட்டி யையவீண்
டிருவெனக் கவிக்குலத் தரச னேவலும்
திருமக டலைமகன் புல்லிற் சேரவெற்
குரியவோ விதுவென வுரைத்துப் பின்னரும். 4488

க0௯ கல்லணை மனத்தினை யுடைக்கை கேசியால்
எல்லணை மணிமுடி துறந்த வெம்முனார்
புல்லணை வைகநான் பொன்செய் பூத்தொடர்
மெல்லணை வைகவும் வேண்டு மோவென்றான். 4489

கக0 என்றவ னுரைத்தலு மிரவி காதலன்
நின்றனன் விம்மினன் மலர்க்க ணீருகக்
குன்றெனப் பொலிந்தவக் கோயி னின்றனன்
மன்றலந் தாரினான் மனுவின் கோமகன். 4490

ககக மைந்தரு முதியரு மகளிர் வெள்ளமும்
அந்தமி னோக்கின ரழுத கண்ணினர்
இந்திய மவித்தன ரென்ன நின்றனர்
நொந்தனர் தளர்ந்தனர் நுவல்வ தோர்கிலார். 4491

ககஉ மஞ்சன விதிமுறை மரபி னாடியே
எஞ்சலி னின்னமு தருந்தில் யாமெலாம்
உஞ்சன மினியென வரசு ணர்த்தலு
மஞ்சன வண்ணனுக் கனுசன் சொல்லுவான். 4492

கக௩ வருத்தமும் பழியுமே வயிறு மீக்கொள
இருத்துமென் றாலெமக் கினிய தாகுமோ
அருத்தியுண் டாயினு மவலந் தந்தழி
கருத்துவே றுற்றபோ தமிர்துங் கைக்குமால். 4493

கககச முட்டிய பழியெனு முருங்கு நீயவித்
தாட்டினை கங்கைநீ ரரசன் றேவியைக்
காட்டினை யேலெமைக் கடலி னின்னயிர்
தூட்டினை யெனிற்பிறி துயிரு முள்ளத்தால். 4494

ககரு பச்சிலை கிழங்குகாய் பரம னுங்கிய
மிச்சிலை நுகர்வது வன்றி வேறொன்று
நச்சில னச்சினே னுயி னுயுண்ட
எச்சிலை நுகர்வதே யைய மில்லையால். 4495

ககசு அன்றியு மொன்றுள வைய யானினிச்
சென்றுபின் கொணர்ந்தடை திருத்தி னுலது
நுன்றுணைக் கோமக னுகர்வ தாதலால்
இன்றிறை தாழ்த்தலு மினிதன் றுமென்றான். 4496

ககஎ வானர வேந்தனு மினிது வைகுதல்
மானவ டலைமக னிடரின் வைகவே
ஆனது குரக்கினத் தெமர்கட் காமெனு
மேனிலை யழிந்துயிர் விம்மி னனரோ. 4497

ககஅ எழுந்தனன் பொருக்கென விரவி கான்முளை
விழுந்தகண் ணீரினன் வெறுத்த வாழ்வினன்
அழிந்தயர் சிந்தைய னனுமற் காண்டொன்று
மொழிந்தனன் வானுழைப் போதன் முன்னுவான். 4498

ககசு போயின தூதரிற் புகுதுஞ் சேனையை
நீயுடன் கொணருதி நெறிவ லோயென
ஏயின னனுமனை யிருத்தி யீண்டென
நாயக னிருந்துழிக் கடிது நண்ணுவான். 4499

கஉ0 அங்கத னுடன்செல வரிகண் முன்செல
மங்கைய ருள்ளமும் வழியும் பின்செலக்
சங்கையி லிலக்குவற் றழுவித் தம்முனிற்
செங்கதி ரோன்மகன் கடிதிற் சென்றனன். 4500

கஉக ஒன்பதி னுயிர கோடி யூகந்தன்
முன்செலப் பின்செல மருங்கு மொய்ப்புற
மன்பெருங் கிளைஞரு மருங்கு சுற்றுற
மின்பொரு பூணினன் செல்லும் வேலையில். 4501

கஉஉ கொடிவன மிடைந்தன குமிறு பேரியின்
இடிவன மிடைந்தன பணில மேங்கின
தடிவன மிடைந்தெனத் தயங்கு பூணொளி
பொடிவன மெழுத்துகள் வானம் போர்த்ததே. 4502

கஉங பொன்னினின் முத்தினிற் புனைமென் றூசினின்
மின்னினின் மணியினிற் பளிங்கில் வெள்ளியிற்
பின்னின விசும்பினும் பெரிய பெட்புறத்
துன்னின சிவிகைக டொடர்ந்து சுற்றவே. 3503

கஉச வீரனுக் கிளையவன் விரும்பு சேவடி
பாரினிற் சேறலிற் பரிதி மைந்தனுந்
தாரினிற் பொலன்கழ றயங்கத் தாரணித்
தேரினிற் சென்றனன் சிவிகை பின்செல. 4504

கஉரு எய்தினன் மானவ னிருந்த மால்வரை
நொய்தினிற் சேனைபின் பொழிய நோன்கழல்
அய்யன்விற் குமரனுந் தானு மங்கதன்
கைதொடர்ந் தயல்செலக் காதன் முன்செல. 4505

கஉசா கண்ணிய பெருஞ்செல்வங் காதல் விட்டவவ்
வண்ணலை யடிதொழ வணையு மன்பினால்
நண்ணிய கவிக்குலத் தரசு நாந்தொழும்
புண்ணியர் தொழுகழற் பரதன் போன்றனன். 4506

கஉஎ பிறிவருந் தம்பியும் பிரியப் பேருல
கிறுதியிற் றுனென விருந்த வேந்தலைத்
துறுமணித் தாரினோ டாரம் பார்தொடச்
செறிமலர்ச் சேவடி முடியிற் றீண்டினான். 4507

கஉஅ தீண்டிய வன்பனைத் திருவு நோவுற
நீண்டபொற் றடக்கையா னெடிது புல்லினான்
மூண்டெழு வெகுளிபோ யொளிப்ப முன்புபோல்
ஈண்டிய கருணைதந் திருக்கை யேவியே. 4508

கஉகூ அயலினி திருத்திநின் னரசு மானையும்
இயல்பினி லிசைந்தவே யினிது வைகுமே
புயல்பொரு தடக்கைநீ புரக்கும் பல்லுயிர்
வெயிலில வேகுடை யெனவி னவினான். 4509

கநO பொருளுடை யவ்வுரை கேட்ட போதினில்
உருளுடைத் தேரினான் புதல்வ னாழியின்
இருளுடை யுலகினுக் கிரவி யன்னநின்
அருளுடை யெற்கவை யரிய வோவெனா. 4510

கநக பின்னரும் விளம்புவான் பெருமை யோய்நின
தின்னரு ளுதவிய செல்வ மெய்தியே
மன்னவ நின்பணி மறுத்து வைகியென்
புன்னிலைக் குரக்கியல் புதுக்கி னேனெனா. 4511

கநஉ பெருந்திசை யனைத்தையும் பிசைந்து தேடிநிற்
றருந்தகை யமையுமத் தன்மை செய்திலேன்
திருந்திழை திறத்தினாற் றெளிந்த சிந்தைநீ
வருந்தினை யிருக்கயான் வாழ்வின் வைகினேன். 4512

கநந இனையன யானுடை யியல்பு மெண்ணமும்
நினைவுமென் றாலினி நின்று யான்செயும்
வினையுநல் லாண்மையும் விளம்ப வேண்டுமோ
வனைகழல் வார்சிலை வள்ளி யோயென்றான். 4513

கநச திருவுறை மார்பனுந் தீர்ந்த தோவந்த
தொருவரு காலமுன் னுரிய போரது
தருவினைத் தாகையுந் தழுவிற் றாதியோய்
[1] பரதநீ யினையன பகர்தி யோவென்றான். 4514

கநரு ஆரியன் பின்னரு மமைந்து நன்குணர்
மாருதி யெவ்வழி மருவி னானெனச்
சூரியன் கான்முளை தோன்று மால்வரை
நேர்வரும் பரவையி னெடிய சேனையான். 4515

கநசு கோடிநூ றாயிரங் குறித்துத் தூதுவர்
ஓடினர் நெடும்படை கொணர வுற்றதால்
நாடரக் குறித்தது மின்று நாளையவ்
வாடலந் தானையோ டவனு மெய்துமால். 4516

கநஎ ஒன்பதி னாயிர கோடி யுற்றது
நின்பெருஞ் சேனையே நெடிய சேனைக்கு
நன்பெய ரறுதிநா ணாளை நண்ணிய
பின்செயத் தக்கது பேசற் பாற்றென்றான். 4517

(பிரதி) [1] பரதனீ.

கரு.அ விரும்பிய விராமனு வீர நிற்கதோர்
அரும்பொரு ளாகுமோ வமைதி நன்றெனுப்
பெரும்பக லிறந்தது பெயர்தி நின்படை
பொருந்துழி வாவெனத் தொழுது போயினன். 4518

கருகூ அங்கதற் கினியன வருளி யையநீ
தங்குதி யுந்தையோ டென்று தாமரைச்
செங்கணன் றம்பியுந் தானுஞ் சிந்தையின்
மங்கையு மவ்வழி யன்று வைகினன். 4519

கச0 சேயுயர் கீர்த்தியான் கதிரின் செம்மல்பாற்
போயது மவ்வயிற் புகுந்த யாவையும்
ஓய்வுறு துணர்த்தென வுணர்த்தி னனரோ
வாய்மையா லுணர்வுறும் வலிய மொய்ம்பினன். 4520

கசக அன்றவ ணிறுத்தபி னலரி கீழ்த்திசை
பொன்றிணி நெடுவரை பொலிவு றுதமுன்
வன்றிறற் றூதுவர் கொணர வானரக்
குன்றுழந் நெடும்படை யடைதல் கூறுவாம். 4521

கo. கிட்கிந்தைப் படலம் முற்றும்.

கக. வானரத் தானைகாண் படலம்

க ஆனை யாயிர மாயிரத் தெறுழ்வலி யமைந்த
வான ராதிய ராயிர ருடன்வர வகுத்த
கூனன் மாக்குரங் கையிரண் டாயிர கோடி
தானை யோடுமச் சதவலி யென்பவன் சார்ந்தான். 4522

உ ஊன்றி மேருவை யெடுக்குறு மிடுக்கினுக் குரிய
தேன்றெ ரிந்துண்டு தெளிவுறும் வானரச் சேனை
ஆன்ற பத்நூ றுயிர கோடியோ டமையத்
தோன்றி னன்வந்து சுசேடண னெனும்பெயர்த் தோன்றல்.

௩ ஈறில் வேலையை யிமைப்புறு மெல்லையிற் கலக்கிச்
சேறு காண்குறுந் திறல்கெழு வானரச் சேனை
ஆறெ ணுயிர கோடிய துடன்வர வமுத
மாற லாமொழி யுருமையைப் பயந்தவன் வந்தான். 4524

௪ ஐம்ப தாயநூ ருயிர கோடியெண் ணமைந்த
மொய்ம்பு மால்வரை நேர்நெடு வானர மொய்ம்பர்
இம்பர் ஞாலத்தும் வானத்து மெழுதிய சீர்த்தி
நம்பனைத் தந்த கேசரி கடலென நடந்தான். 4525

௫ முனியு மாமெனி லருக்கனை முடிவுற முனியும்
தனிமை தாங்கின வுலகையுஞ் சலம்வரிற் குமைக்கும்
இனைய மாக்குரங் கீரிரண் டாயிர கோடி
அனிக முன்வர வான்பெயர்க் கண்ணன்வந் தடைந்தான். 4526

௬ மண்கொள் வாளெயிற் றேனத்தின் வலியின வயிரத்
திண்கொண் மால்வரை மயிர்ப்புறத் தனவெனத் திரண்ட
கண்கொ ளாயிர கோடியி னிரட்டியிற் கணித்த
எண்கி னீட்டங்கொண் டெறுழ்வலித் தூமிர னிறுத்தான்.

௭ தனிவ ருந்தடங் கிரியெனப் பெரியவன் சலத்தா
னினையு நஞ்சென வருமென நடுக்குறு நிலையன்
பனச னென்பவன் பன்னிரண் டாயிர கோடி
புனித வெஞ்சின வானரப் படைகொண்டு புகுந்தான். 4528

௮ இடியு மாகடல் முழக்கமும் வெருக்கொள விசைக்கும்
முடிவில் போர்முழக் குடையவன் விசையன முரணக்
கொடிய கூற்றையு மொப்பன பதிற்றஞ்சு கோடி
நெடிய வானரப் படைகொண்டு புகுந்தன னீலன். 4529

௯ மாக ரத்தன வுரத்தன மலையென நிலைய
வேக ரத்தவெங் கனலுமிழ் வெயிலின மலைபி
ஞக ரத்தினும் பெரியன வாறைந்து கோடி
சாக ரத்தொடு தரீமுக னென்பவன் சார்ந்தான். 4530

௧௦ இளைத்த வேறொரு மேருவும் வேண்டுமோ வென்ன
முளைத்த முப்பதி னாயிர கோடியின் முற்றும்
விளைத்த வெஞ்சினத் தரியினம் வெருவர விழிக்கும்
அளக்க ரோடுமவ் வானெனும் பெயரன்வந் தடைந்தான். 4531

௧௧ ஆயி ரத்தறு நூற்றிரு கோடியிற் கமைந்த
பாயி ரப்பெரும் படைகொண்டு பரவையிற் றிரியுந்
தாயு ருத்துட னேவரத் தடவரை நீடு
மாய வற்புரை [illegible]. 4532

கஉ வகுத்த தாமரை மலரய னிசிசரர் வாணாள்
உகுத்த தீவினைப் பொருவதோர் பெருவலி யுடையான்
பகுத்த பத்துநூ றாயிரப் பத்தினி னிரட்டி
தொகுத்த கோடிவெம் படைகொண்டு துன்முகன் றொடர்ந்தான்.

கங கையஞ் சாயுத முடையவக் கடவுளைக் கண்டு
மெய்யஞ் சாதவன் மாதிரஞ் சிறிதென விரிந்த
வையஞ் சாய்வரத் திரிதரும் வயநெடுஞ் சேனை
ஐயஞ் சாயிர கோடிகொண் டனுமன்வந் தடைந்தான். 4534

கச நொய்திற் கூடிய சேனைநூ றாயிர கோடி
எய்யத் தேவரு மென்கொலோ முடிவென்ப தெண்ண
மையற் சிந்தையா லந்தகன் மறுக்குற மயங்கத்
தெய்வத் தச்சன்மெய்த் திருநெடுங் காதலன் சேர்ந்தான். 4535

கரு கோடி கோடிநூ றாயிர மெண்ணெனக் குவிந்த
நீடு வெஞ்சினத் தரியின மிருபுடை நெருக்கின்
மூடு மும்பரு மிம்பரு மூழியின் மூழ்கத்
தோட லர்ந்ததார்க் கிரிபுரை துமிந்தனுந் தொடர்ந்தான். 4536

கசு இயைந்த பத்துநூ றாயிரப் பத்தினி னிரட்டி
உயர்ந்த கோடிவெவ் வானரப் படையொடு மொருங்கே
சயந்த னக்கொரு சார்வெனத் தகுதியாற் சமைந்த
மயிந்தன் மற்கெச கோமுகன் றன்னொடும் வந்தான். 4537

கஎ கறங்கு போல்வன காற்றினுங் கூற்றினுங் கடிய
பிறங்கு தெண்டிரைக் கடல்புடை பெயர்ந்தெனப் பெயர்வ
மறங் கொள்வானர மொன்பது கோடியெண் வகுத்த
திறங்கொள் வெஞ்சினப் படைகொடு குமுதனுஞ் சேர்ந்தான்.

கஅ ஏழு மேழுநூ றாயிர கோடியென் றிசைந்த
பாழி நன்னெடுந் தோள்கிளர் படைகொண்டு பரவை
ஊழி பேரினு முலைவில வுலகினி லுயர்ந்த
பூழி விண்புகப் பதுமுக னென்பவன் புகுந்தான். 4539

கசு தீர்க்க பாதனும் ரம்பனும் வினதனுந் திறங்கொள்
மாற்கருங்கடல் வந்தென மைம்முகத் தனிகம்
ஆர்க்கு மெண்ணருங் கோடிகொண் டண்டமும் புறமும்
போர்க்கும் பூழியின் மறைதர முறையினிற் புகுந்தார். 4540

உ0 ஏழு மேழுமென் றிசைக்கின்ற வுலங்க ளெவையுந்
தாழுங் காலத்துந் தாழ்விலாத் தடவரைக் குலங்கள்
சூழுந் தோற்றத்த வலியதோ ளாயிர கோடிப்
பாழி வெம்பெலத் தரியொடு மிரங்கனும் படர்ந்தான். 4541

உக கும்ப னுங்குலச் சாம்பனும் வன்னியுங் குரங்கின்
தம்பெ ரும்படைத் தலைவர்க ளாய்வந்த தானை
இம்பர் நின்றவர்க் கெண்ணரி திராகவ னுவத்
தம்பெ னுந்துணைக் குரியர்மற் றுரைப்பரி தளவே. 4542

உஉ தோயி லாழியோ ரேழுநீர் சுவரிவெண் டுகளாம்
சாயி லண்டமு மேருவு மொருங்குடன் சரியும்
ஏயின் மண்டல மெள்ளிட விடமின்றி விரியும்
காயும் வெங்கனற் கடவுளு மிரவியுங் கரியும். 4543

உங எண்ணி னுன்முக னெழுபதி னுயிரர்க் கிசையும்
உண்ணி லண்டங்க ளோர்பிடி யுண்ணவு முதவா
கண்ணி னேக்கிடிற் கண்ணுத லானையுங் கடக்கும்
மண்ணின் மேல்வந்த வானரச் சேனையின் வரவே. 4544

உச ஒடிக்கு மேல்வட மேருவை வேரொடு மொடிக்கும்
இடிக்கு மேனெடு வானக முகட்டையு மிடிக்கும்
பிடிக்கு மேற்பெருங் காற்றையுங் கூற்றையும் பிடிக்கும்
குடிக்கு மேற்கட லேழையும் வறள்படக் குடிக்கும். 4545

உரு ஆறு பத்தெழு கோடியர் வானரர்க் கதிபர்
கூறு திக்கினுக் கப்புறங் குப்புறற் குரியார்
மாறில் கொற்றவ னினைத்தன முடிக்குறும் வலியார்
ஊறு மிப்பெருஞ் சேனைகொண் டெளிதினி லுற்றார். 4546

உசா ஏழு மாகடற் பரப்பினும் பரப்பென விசைக்குஞ்
சூழும் வானரப் படையொடுந் தலைவருந் துவன்றி
ஆழி மாப்பெருந் தேரவன் காதல னடியில்
வாழி வாழியென் றுரைத்தனர் தூதினர் வணங்கி. 4547

உஎ அனைய தாகிய சேனைவந் திறுத்தலு மருக்கன்
தனைய னெய்தினிற் றசரதன் றனையனைச் சார்ந்தான்
நினைவின் முன்னம்வந் தடைந்தது நின்பெருஞ் சேனை
வினையின் கூற்றுவ கண்டரு ளியென விளம்ப. 4548

உஅ அய்ய னும்முவந் தாமென முகமலர்ந் தருளித்
தைய லாள்வரக் கண்டன னாமெனத் தளிர்ப்பான்
எய்தி னானங்கோர் நெடுவரைச் சிகரத்தி னிருக்கை
வெய்ய வன்மகன் பெயர்த்துமத் தானையின் மீண்டான். 4549

உகூ அஞ்சொ டையிரண் டோசனை யகலம தாகச்
செஞ்ச வேவட திசைநின்றுந் தென்றிசைச் செல்ல
எஞ்ச லில்பெருஞ் சேனையை யெழுகென வேவி
வெஞ்சி னப்படை வீரரை யுடன்கொண்டு மீண்டான். 4550

௩0 மீண்டி ராமனை யடைந்திகல் வென்றிவேல் வீர
காண்டி நீயென வரன்முறை தெரிவுறக் காட்டி
ஆண்டி ருந்தன னாதரத் துவகையி னாடி
ஈண்டு சேனைபா லெறிகட லெறிபடர்ந் தென்ன. 4551

௩க எட்டுத் திக்கையு மிருநிலப் பரப்பையு மிமையோர்
வட்ட விண்ணையு மறிகட லனைத்தையு மறித்த
ஒட்ட மேலெழுந் தோங்கிய தூளியாற் பூழி
இட்டுச் செம்பிய நிறைகுட மொத்ததிவ் வண்டம். 4552

௩உ அத்தி யொப்பெனி லன்னதை யளந்தறி வோதும்
வித்த கற்குமீ தறைந்திடு மளவுவே றியாதோ
பத்தி ரட்டிநோன் பகவிர வொருவலன் பார்த்தான்
எத்தி றத்தினு நடுவுகண் டிலன்முடி வென்றே. 4553

௩௩ விண்ணிற் றீம்புன லுலகத்தி னாகரின் வேறோர்
எண்ணிற் றன்னல தொப்பில னெனநின்ற ராமன்
கண்ணிற் சிந்தையிற் கல்வியின் ஞானத்திற் கருதி
அண்ணற் றம்பியை நோக்கினின் றுரைசெய்வா னானான். 4554

௩ச அடல்கொண் டோங்கிய சேனைக்கு நாமுன மறிவால்
இடைகண் டோமினி முடிவுறக் காணுமா றுளதோ
மடல்கொண் டோங்கிய லலங்கலாய் மண்ணிடை மாக்கள்
கடல்கண் டோமென்பர் யாவரே [1]முழுதுறக் காண்பார். 4555

௩ரு ஈசன் மேனியை யீரைந்து திசைகளை யீண்டிவ்
வாசில் சேனையை யைம்பெரும் பூதத்தை யறிவைப்
பேசும் பேச்சினைச் சமயங்கள் பிணக்குறும் பிணக்கை
வாச மாலையா யாவரே முடிவெண்ண வல்லார். 4556

(பிரதி) [1] முடிவுறக் காணலார்.

௫௬ இன்ன சேனையை முடிவுற விருந்திவ ணோக்கிப்
பின்னர்க் காரியம் பார்த்துமே னுள்பல பெயரும்
உன்னைச் செய்கைமே லொருப்பட முன்னுவ துறுதி
என்ன வீரனைக் கைதொழு திளையவ னியம்பும். 4557

௫௭ ஆவ தெவ்வுல கத்தவ ரணைகுவ ரன்றே
யாவ தாகுவ [1]தரியதொன் றுளதென லாமோ
தேவ தேவியைத் தேடுவ மென்பது சிறிதாற்
பாவந் தோற்றன தருமமே வென்றதிப் படையால். 4558

௫௮ தரங்க நீரெழு தாமரை நான்முகன் றந்த
வரங்கொள் பேருல கத்தினின் மன்னுயி ரெல்லாம்
உரங்கொண் மால்வரை யுயிர்படைத் தெழுந்தன வொக்குங்
குரங்கின் மாப்படைக் குறையிடப் படைத்தனன் கொல்லாம்.

௫௯ ஈண்டு தாழ்க்கின்ற தென்னினி யெண்டிசை மருங்குந்
தேண்டு வார்களை வல்லையிற் செலுத்துவ தல்லால்
நீண்ட நூல்வலா யென்றன னிளையவ னெடியோன்
பூண்ட தேரவன் காதலற் கொருமொழி புகல்வான். 4560

௧௧. வானரத் தானைகாண் படலம் முற்றும்

---

௧௨. நாடவிட்ட படலம்

௧ வகையு மானமு மாறெதிர்ந் தாற்றுறு
பகையு மின்றி நிரந்து பரந்தெழுந்
தகைவில் சேனைக் கலகு சமைந்ததோர்
தொகையு முண்டுகொ லோவெனச் சொல்லினான். 4561

௨ ஏற்ற வெள்ள மெழுபதென் றேமறை
ஆற்ற லாள னறிவி னறைந்தோர்
மாற்ற முண்டது வல்லது மற்றுமோர்
தோற்ற மென்றிதற் கெண்ணுமுன் சொல்லுமோ. 4562

௩ ஆறு பத்தெழு கோடி யனீகமொத்
தேறு கொற்றத் தலைவ ரிவர்க்குமுன்
கூறு சேனைப் பதிகொடுங் கூற்றையும்
நீறு செய்தடு நீலனென் றோதினான். 4563

(பிரதி) [1] வரியதொன்.

ச என்று ரைத்த வெரிகதிர் மைந்தனை
வென்றி விற்கை யிராமன் விருப்பினன்
நின்றி னிப்பல பேசியென் னேநெறி
சென்றி னைப்பன சிந்தனை செய்கென்றான். 4564

ரு அவனு மண்ண லனுமனை யையநீ
புவன மூன்றுமுன் றுதையிற் புக்குழல்
தவன வேகத்தை யோர்கிலை தாழ்த்தனை
கவன மாக்குரங் கின்செயல் காட்டியோ. 4565

சு ஏகி யேந்திழை தன்னை யிருந்துழி
நாக மாடுள நானில மாடுள
போக பூமி புகுந்திட வல்லநின்
வேக மீண்டு வெளிப்பட வேண்டுமால். 4666

எ தென்றி சைக்க ணிராவணன் சேணகர்
என்றி சைக்கின்ற வென்னறி வின்னலம்
வன்றி சைக்கினி மாருதி நீயலால்
வென்றி சைக்குரி யார்பிறர் வேண்டுமோ. 4567

அ வள்ள றேவியை வஞ்சித்து வவ்விய
கள்ள வாளரக் கன்செலக் கண்டது
தெள்ளி யோயன்று தென்றிசை யென்பதோர்
உள்ள மும்மெனக் குண்டென வுன்னுமால். 4568

சு தாரை மைந்தனுஞ் சாம்பனுந் தாமுதல்
வீரர் யாவரு மேம்படு மேன்மையார்
சேர்க நின்னொடுந் திண்டிறற் சேனையும்
பேர்க வெள்ள மிரண்டொடும் பெற்றியால். 4569

க0 குடதி சைக்க ணிடபன் குபேரன்வாழ்
வடதி சைக்கட் சதவலி வாசவன்
மிடறி சைக்கு வினதன் [1]விறறரும்
படையொ டுற்றுப் படரு நெறியென. 4570

கக வெற்றி வானர வெள்ள மிரண்டொடுஞ்
சுற்றி யோடித் துருவி யொருமதி
முற்று றுதமுன் மீளுதிர் முந்தியே
கொற்ற வாகையி னீரெனக் கூறினன். 4571

(பிரதி) [1]விறற்றரும்.

கஉ ஈண்டு நின்றெழுந் தீரைந்து நூறுழி
தூண்டு சோதிக் கொடுமுடி தோன்றலால்
நீண்ட நேமிகொ லாமென நேர்தொழ
வேண்டும் விந்த மலையினை மேவுவீர். 4572

கங தேடி யம்மலை தீர்ந்தபின் றேவரும்
ஆடு கின்ற தறுபத மைந்தினை
பாடு கின்றது பன்மணி யாவிருள்
ஓடு கின்ற நருமதை யுன்னுவீர். 4573

கச வாம மேகலை வானவர் மங்கையர்
காம பூசற் களியிசைக் கள்ளினுற்
றாம மேனி யசுணந் துயில்வுறும்
ஏம கூட மெனுமலை யெய்துவீர். 4574

கரு நொய்தி னம்மலை நீங்கி நுகர்வெனும்
பொய்கை யின்கரை பிற்படப் போதிரால்
செய்ய பெண்ணைக் கரியபெண் ணைச்சில
வைக றேடிக் கடிது வழிக்கொள்வீர். 4575

கசா தாங்கு மாதளை சந்தகில் சண்பகம்
வீங்கும் வேலி விதர்ப்பமு மெல்லென
நீங்கி நாடு நெடியன பிற்படத்
தேங்கு வார்புனற் றண்டகஞ் சேர்திரால். 4576

கஎ பண்ட கத்தியன் வைகிய தாம்பகர்
தண்ட கத்துயர் தாபதர் தம்மையுட்
கண்ட கத்துயர் தீர்வது காண்டிரால்
முண்ட கத்துறை யென்றொரு மொய்ம்பொழில். 4577

கஅ ஞால நுங்குறு நல்லறத் தோர்பொருள்
போல நின்று பொலிவன பூம்பொழில்
சீல மங்கையர் வாயெனத் தீங்கனி
கால மன்றிக் கனிவன காண்டிரால். 4578

ககூ நயன நன்கிசை நல்லம ளித்துயில்
அயன மில்லை யருக்கனுக் கவ்வழி
சயன மாதர் கலவித் தலைத்தரும்
பயனு மின்பமு நீரும் பயக்குமால். 4579

உ0 ஆண்டி றந்தபின் னந்தரத் திந்துவைத்
தீண்டு கின்றது செங்கதிர்ச் செல்வனும்
ஈண்டு றைந்தல தேகல னெண்ணரும்
பாண்டு வின்மலை யென்னும் பருப்பதம். 4580

*முத்தீர்த்துப் பொன்னீர்த்து மணியீர்த்து முதுநீர்த்த முன்றி லாயர்
மத்தீர்த்து மரமீர்த்து மலையீர்த்து மலரீர்த்து வருந்தி யார்க்கும்
புத்தீர்த்துக் கதிகொடுத்துப் புதுத்தேனோ டுதவுவது புனிதமான
அத்தீர்த்த மகன்கோதா விரியென்ப ரம்மலையி னருகிற் றம்மா. 4581

உஉ] அவ்வாறு கடந்தப்பா லறத்தாறே யதுதெரிந்த வருளி னானும்
வெவ்வேறுமெனக்குளிர்ந்துவெயிலியங்காவகையிலங்கும்விரிபூஞ்சோலை
எவ்வாறுமுறத்துவன்றியிருளோடமணியிமைப்ப திமையோர்வேண்டத்
தெவ்வாறுமுகத்தோன்றன்றுணைகிடந்தசுவணத்தைச்சேர்திர்மாதோ.

உங] சுவணநதி கடந்தப்பாற் சூரியகாந் தம்மெனவே தோன்றி மாதர்
கவனுமிழ்கல் லதுவிலங்குங் கனவரையுஞ் சந்திரகாந் தமுமுன் காண்டீர்
அவணவைநீத் தேகியபி னகனாடு பலகடந்தா லனந்த னென்பான் [4583
உவணபதிக்கொளித்துறையுங்கொங்கணமுங்குலிங்கமுஞ்சென்றுறுதிர்மாதோ.

உச] அரனதிக னுலகளந்த வரியதிக னென்றுரைக்கு மறிவி லோர்க்குப்
பரகதிசென் றறிவரிய பரிசேபோற் புகலரிய பண்பிற் றாமால் [4584
சுரநதியி னயலதுவான் றோங்குடுமிச் சுடர்த்தொகையை தொழுதார்க்கெல்லாம்
வரனதிகந் தருந்தகைய வருந்துதிசேர் நெடுவரையை வணங்கி யப்பால்.

உரு] அஞ்சுவரும் வெஞ்சுரனு மாறுமகன் பெருஞ்சுனையு மகிலோங் கார
மஞ்சுவரு நெடுங்கிரியு வளநாடும் பிற்படப்போய்ப் வழிமேற் சென்றால்
நஞ்சிவரு மிடற்றரவுக் கபிர்துநனி கொடுத்தறிவு கலுழ னல்கும் [4585
எஞ்சின்மர கதப்பொருப்பு மிறைஞ்சியதன் புறஞ்சார லெய்தி மாதோ.

வடசொற்குந்தென்சொற்கும்நான்மறைக்கும்வரம்பாகிமற்றைநூலின்
இடைசொற்றபொருட்கெல்லாமறிவினுக்குமீறாயவெறும்பொற்குன்றம்
புடைசுற்றுந்துணையின்றிப் புகழ்பொதிந்த மெய்யேபோற் [1]பூத்து நின்ற
அடல்சுற்றுநெடுஞ்சாரலோங்கியவேங்கடத்திற்சென்றடைதிர்மாதோ.

இருவினையு மிடைவிடா தெவ்வினையு மியற்றாதே யிமையோ ரெய்துந்
திருவினையுமிடுபதந்தேர்சிறுமையையுமுறையொக்கத்தெரிந்து நோக்கிக்
கருவினைய திப்பிறவிக் கென்றுணர்ந்து தங்களையுங் கடையின் ஞானத்
தருவினையின்பெரும்பகைஞாண்டுளரீண்டிருந்துமடிவணங்கற்பாலார்.

(பிரதி) [1] பூத்த.

சூதகத்தின் றிருமறையோர் துறையாடுநிறையாறுஞ்சுருதித் தொன்னூல்
உஅ] மாதவத்தோருறைவிடமுமழையுறங்குமணித்தடமும்வானமாதர்
கீதமொத்த கின்னரங்க ளின்னரம்பு வருடுதொறுங் கிளக்கு மோதை
போதகத்தின்மழக்கன்றும்புலிப்பறழுமுறக்கிடமும்பொருந்திற்றம்மா.

கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரே லெனிநெடிய கொடுமை நீங்கி
உகூ]வீடுறுவீ ராதலினு லப்புறமு மிப்புறமு மேவித் தொண்டை [4589
நாடுறுதி ருற்றக்கா னகருறுதி ருற்றதற்பி னளிநீர்ப் பொன்னிச்
சேடுறுதண் புனற்றெய்வத் திருநதியி னிருகரையுந் தெரிதிர் மாதோ.

துறக்கமுற்றூர்மனமென்னத் துறைகெழுநீர்சோணாடுகடந்தாற்றொல்லை
௩0] அறக்கணூற்று ரதனயலே மறைந்துறைவ ரவ்வழியே யல்லல் போக
உறக்கமுற்று தின்பமுற்று ரென்றிவர்கள் பெறுமுணர்வி னோடுமோங்கல்
பிறக்கமுற்று மலைநாடு நாடியகன் றமிழ்நாடும் பெயர்திர் மாதோ. [4590

தென்றமிழ்நாடதின்பொதியிற்றிருமுனிவன்றமிழ்ச்சங்கஞ்சேருகிற்பீர்
என்றுமவ னுறைவிடமா மாதலா லம்மலையை வலத்திட் டேகிப் [4591
பொன்றிணிந்த புனலரவப் பொருநையெனுந் திருநதிபின் பொழியநாகக்
கன்றுவளர் தடஞ்சாரன் மயேந்திரமா நெடுவரையுங் கடலுங் காண்டிர்.

௩௨] ஆண்டுகடந் தப்புறத்து மிப்புறத்து மொருதிங்க ளவதி யாகத்
தேண்டியிவண் வந்தடைதிர் விடைகொண்டீர் கடிதென்னச் செப்பு மெல்லை
நீண்டவனு மாருதியை நிறையருளா லுறநோக்கி நீதி வல்லோய் [4592
காண்டியெனக் குறிகேட்டி யெனவேறு கொண்டிருந்து கழற லுற்றான்.

௩௩ *பாற்கடற் பிறந்த தெய்வப் பவளத்தைப் பஞ்சி யூட்டி
மேற்பட மதியஞ் சூட்டி விரகுற நிரைத்த செய்ய
காற்றகை விரல்க ளய்ய கமலமும் பிறவு மெல்லாம்
ஏற்பில வென்ப தன்றி யிணையடிக் குவமை யுண்டோ. 4593

௩௪ நீர்மையா லுணர்தி யைய நிரைவளை மகளிர்க் கெல்லாம்
வாய்மையா லுவமை யாக மதியறி புலவர் வைத்த
தூய்மையா மென்ற போழ்து மல்லன சொல்லி னூனு
மாமையா மழலை யாடன் புறவடிக் கொக்கு மன்றே. 4594

௩௫ வினைவரா லரிய கோதை பேதைமென் கணைக்கால் வெய்ய
நினைவரா லரிய நன்னீர் நேர்படப் புலவர் போற்றுஞ்
சினைவரால் பகழி யாவ நெற்சினை யென்னுஞ் செப்பம்
எனைவராற் பகரு மீட்ட மியானுரைக் கின்ப மென்னே. 4595

௩௬ அரம்பையென் றளக மாதர் குறங்கினுக் கமைத்த வொப்பின்
வரம்பையுங் கடந்த போது மற்றுரை வகுக்க லாமோ
நரம்பையு மமிர்த நாறு நறவையு நளிர்நீர்ப் பண்ணைக்
கரும்பையுங் கடிந்த சொல்லாள் கவாற்கிது கருது கண்டாய்.

௩௭ வாராழிக் கலசக் கொங்கை வஞ்சிபோன் மருங்கு லாடன்
தாராழிக் கலைசே ரல்குற் றடங்கடற் குவமை தக்கோய்
பாராழி பிடரிற் றாங்கும் பாந்தளும் [1]பனிவென் றோங்கும்
ஓராழித் தேருங் கண்ட வுனக்குநா னுரைப்ப தென்னே. 4597

௩௮ [2]ஆலிலைப் படிவந் தீட்டு மய்யநுண் பலகை நொய்ய
[3]பானிறத் தட்டம் வட்டக் கண்ணடி பலவு மின்ன
போலுமென் றுரைத்த யாவும் புனைந்துரை பொதுமை பார்ப்பின்
ஏலுமென் றுரைக்க வேலா விதுவயிற் றியற்கை யின்னும். 4598

௩௯ சிங்கலில் சிறுகட் டாளி நந்தியின் றிரள்பூச் சேர்ந்த
பொங்குபொற் றுளையென் றாலும் புல்லிய வுவமைத் தாமால்
அங்கவ ளுந்தி யொக்குஞ் சுழியெனக் கணித்த துண்டால்
கங்கையை நோக்கிச் சேறி கடலினு நெடிய கண்ணுள். 4599

௪௦ மயிரொழுக் கெனவொன் றுண்டால் வல்லிசேர் வயிற்றின் மற்றென்
உயிரொழுக்குதற்குவேண்டுமுவமையொன்றுரைக்கவேண்டிற்
செயிரில்சிற் றிடையென் றுற்ற சிறுகொடி நடக்கந் தீரக்
குயில்வுறுத்தமையவேய்ந்தகொழுகொம்பென்றுணர்ந்துகோடி.

௪௧ அல்லியூன் றிடுமென் றஞ்சி யரவிந்தந் துறந்தார்க் கம்பொன்
வல்லிமூன் றுளவாற் கோல வயிற்றுமற் றவையு மாரா
வில்லிமூன் றுலகின் வாழு மாதருந் தோற்ற மெய்ம்மை [4601
சொல்லியூன் றியவாம் வெற்றி வரையெனத் தோற்று மன்றே.

௪௨ சட்டகந் தன்னை நோக்கி யாரையுஞ் சமைக்கத் தக்காள்
இட்டிடை யிருக்குந் தன்மை யியம்பக்கேட் டுணர்தி யென்னிற்
கட்டுரைத் துவமை காட்டக் கட்பொறி கதுவா கையிற் [4602
றெட்டவெற் குணர லாகா வுண்டெனுஞ் சொல்லு மில்லை.

௪௩ செப்பென்பன் கலச மென்பன் செவ்விள நீருந் தேர்வன்
துப்பொன்றுந்திரள்சூதென்பன்சொல்லுவன்றும்பிக்கொம்புந்
தப்பின்றிப் பகலின் வந்த சக்கர வாள மென்பன் [4603
ஒப்பொன்று முலைக்குக் காணேன் பலநினைந் [4]துலைவ னின்னும்.

(பிரதி) [1]பணியென் றோங்கும். [2]ஆலிலை படிவந். [3]பால்நிறத். [4]தழல்வ.

சச கரும்புகண் டாலு மாலைக் காம்புகண் டாலு மாலி
அரும்புகண் டாரை சோரு மதுவன்றி யறிவ துண்டோ [4604
சுரும்புகண் டாலுங் கோதை தோளிணைக் குவமை சொல்ல
இரும்புகண் டனைய நெஞ்ச மெனக்கில்லை யிசைப்ப தென்னே.

சரு முன்கையே யொப்ப தொன்று முண்டிம்மூ வுலகத் துள்ளும்
என்கையே யிழுக்க மன்றே யியம்பினுங் காந்த ளென்றன் [4605
மங்கையாண் மணிக்கையென்றன் மற்றொன்றையுணர்த்தலன்றி
நன்கைய தடக்கம் யாதோ நலத்தின்மே னலமுண் டாமோ.

சசு ஏலக்கோ டன்ற பிண்டி யிளந்தளிர் கிடக்க யாணர்க்
கோலக்கற் பகத்திற் காமர் குழைபடு கமல மென்பூ
நூலொக்கு மருங்கு லாட னூபுரம் புலம்பு கோலக் [4606
காலுக்குந் தொலையு மென்றாற் கையொப்பின் வைக்க லாமோ.

சஎ வெள்ளியமுறுவற்செவ்வாய்விளங்கிழையிளம்பொற்கொம்பின்
வள்ளுகிர்க் குவமை நம்மான் மயலற வகுக்க லாமோ [4607
எள்ளுதிர் நீரே மூக்கை யென்றுகொண் டிவறி யென்றுங்
கிள்ளைகண் முருக்கின் பூவைக் கிழிக்குமே யுரைக்க லாமோ.

சஅ அங்கையு மடியுங் கண்டா லரவிந்த நினைதி யம்பொற்
செங்கதிர் சிதறி நீலஞ் செருக்கிய தெய்வ வாட்கண்
மங்கைதன் கழுத்தை நோக்கின் வளரிளங் கமுகும் வாரிச்
சங்கமு நினைய லாகி லதுவென்று துணிதி தக்கோய். 4608

சகூ பவளமுங் கிடையுங் கொவ்வைப் பழமும்பைங் குமுதப் பூவும்
துவள்வில விலவங் கோப முருக்கெனச் சொல்லி னுஞ்சால்
தவளமென் றுரைக்கும் வண்ணஞ் சிவந்துதேன் ததும்பு மாகிற்
குவளையங் கண்ணி வாய தெனவறி குறியு மஃதே. 4609

நிO சிவந்ததோ ரமிர்த மில்லை தேனில்லை யுளதென் றாலுங்
கவர்ந்தபோ தன்றி யுள்ள நினைப்பவோர் களிப்பு நல்காப்
பவந்தவா னுதலி னுடன் பவளவாய்க் குவமை பாவித் [4610
துவந்தபோ துவந்த வண்ண முரைத்தபோ துரைக்கு மாதோ.

நிக முல்லையு முருந்து முத்து முருவலென் றுரைத்த போது
சொல்லையு மமுதம் பாலுந் தேனுமென் றுரைத்த தொன்றாம்
அல்லதொன் றுவதில்லை யமுதினுக் குவமை யுண்டோ
வல்லையா லறிந்து கோடி மாறிலா வாறு சான்றோய். 4611

௫௨ ஓதியு மெள்ளுந் தொள்ளைக் குமிழுமூக் கென்றாற் பின்னுஞ்
சோதிசெம்பொன்னுமின்னுமணியும்போற்றுலங்கித்தோன்றும்
ஏதுவு மில்லை வல்லோ ரெழுதுவார்க் கெழுத வொண்ணா
நீதியே நோக்கி நீயே நினைதியா னெடிது கண்டாய். 4612

௫௩ வள்ளைகத் திரிகை வாம மயிர்வினைக் கருவி யென்ப
பிள்ளைக ளுரைக்கு மொப்பைப் பெரியவ ருரைக்கிற் பித்தாம்
வெள்ளிவெண் டோடு செய்த விழுத்தவம் விளைந்த வென்றே
உள்ளுதி யுலகுக் கெல்லா முவமைக்கு முவமை யுண்டோ. 4613

௫௪ பெரியவாய்ப் பரவை யொவ்வா பிறிதொன்று நினைந்து பேச
உரியவா யொருவ ருள்ளத் தொடுங்குவ வல்ல வுண்மை
தெரியவா யிரக்கா ணோக்கிற் றேவர்க்குந் தேவ னென்னக்
கரியவாய் வெளிய வாகு மவடடங் சண்க ளம்மா. 4614

௫௫ கேளொக்கு மன்றி யொன்று கிளத்தினாற் கீழ்மைத் தாமாற்
கோளொக்கு மென்னி னல்லாற் குறியொக்கக் கூற லாமோ
வாளொக்கும் வடிக்கண் ணாடன் புருவத்துக் குவமை வைக்கிற்
தாளொக்க வளைந்து நிற்ப திரண்டில்லை யனங்க சாபம். 4615

௫௬ நன்னாளி னளின நாணு நளிரடி நுதலை நாடிப்
பன்னாளும் பன்னி யாற்றா மதியென்னும் பண்பிற் றாகி
முன்னாளை முழுவெண் டிங்கள் முழுநாளுங் குறையே யாகி
என்னாளும் வளரா தென்னி னிறையொக்கு யியல்பிற் றாமே.

௫௭ வனைபவ ரில்லை யன்றே வனத்துநாம் வந்த பின்னை
அனையன வெனினுந் தாழ்ந்த வழகுக்கோ ரழகுண் டாகா
வினைசெயக் குழன்ற வல்ல விதிசெய விளைந்த சீதப்
புனைமணி யளக மென்றும் புன்மையா முவமை பூணா. 4617

௫௮ கொண்டலின் குழவி யாம்பல் குனிசிலை வள்ளை கொற்றக்
கெண்டையோ ரிரண்டு மொன்றிக் கேண்மையிற் கிடந்த திங்கள்
மண்டல வதன மென்று வைத்தனன் விதியோ னீயப்
புண்டரீகத்தையொத்தபொழுததுபொருந்தியோர்வாய். 4618

௫௯ காரினைக் கழித்துக் காட்டிக் கள்ளினோ டாவி காட்டிப்
பேரிருட் பிழம்பு தோய்த்து நெறியுறீஇப் பிறங்கு கற்றைச்
சோர்குழற் றொகுதி யென்று சும்மைசெய் தனைய தம்மா
நேர்மையைப் பருமை செய்த நிறைநறுங் கூந்த னீத்தம். 4619

கூ0 புல்லிதழ் கமலத் தெய்வப் பூவிற்கு முண்டு பொற்பின்
எல்லியின் மதிக்கு முண்டாற் களங்கமென் றிசைக்கு மேது
அல்லவுஞ் சிறிது குற்ற மகன்றில வன்ன மன்ன
நல்லிய லாளுக் கெல்லா நலனன்றிப் பிறிதுண் டாமோ. 4620

கூக மங்கையர்க் கோதி வைத்த விலக்கண மன்ன வாசப்
பங்கயத் தாட்கு மையா நிறம்பல பற்றி நோக்கிற்
செங்கயற் கருங்கட் செவ்வாய்த் தேவரும் வணங்குந் தெய்வக்
கொங்கையைக் குயிலுக் கொன்றுங் குறைவில குறியு மஃதே.

கூஉ குழலைவைத் தியாழைச் செய்து குயிலொடு கிளியுங் கூட்டி
மழலைய பிறவுந் தந்து வடித்ததை மலரின் மேலான்
இழைபொரு முலையி னாடன் சொற்களி னிசையச் செய்தான்
பிழையில துவமை நாட்டப் பெற்றிலன் பெறுங்கொ லின்னும்.

கூங வானின்ற வுலக மூன்றும் வரம்பின்றி வளர்ந்த தேவனும்
நாநின்ற சுவைமற் றொன்றே யமிர்தின்றி நல்ல தில்லை
மீனின்ற கண்ணி னாடன் மென்மொழிக் குவமை வேண்டிற்
றேனொன்றே யமிர்த மொன்றே யவைசெவிக் கின்பஞ் செய்யா.

கூச பூவரு மழலை யன்னம் புனைமடப் பிடியோ டின்ன
தேவரு மருளத் தக்க செலவின வெனினுந் தேறேன்
பாவருங் கிழமைத் தொன்மை பருணிதர் தொடுத்த பத்தி
நாவருங் கிளவிச் செவ்வி நடைவரு நடையா ணல்லாய். 4624

கூரு என்னிற முரைக்கேன் மாவி னிளந்தளிர் முதிரு மற்றைப்
பொன்னிறங் கருகு மென்றான் மணிநிற முவமை போதா
மின்னிற நாணிப் பொங்கி வெளிப்படா வொளிக்கும் வேண்டிற்
றன்னிறந் தானே யொக்கு மலர்நிறஞ் சமட்கு மன்றே. 4625

கூகூ மங்கைய ரிவளை யொப்பார் மற்றுள ரில்லை யென்னுஞ்
சங்கையி லுள்ளந் தானே சான்றெனக் கொண்டு சான்றோய்
அங்கவ ணிலைமை யெல்லா மளந்தறிந் தருகு சார்ந்து
திங்கள்வாண் முகத்தி னாட்குச் செப்பெனப் பின்னுஞ் செப்பும்.

கூஎ *முன்னைநாண் முனியொடு முதியநீர் மதிலைவாய்ச்
சென்னிநீண் மாலையான் வேள்விகா ணியசெல்வான்
அன்னமா டும்பொழிற் கருகுநின் றானைக்
கன்னிமா டத்திடைக் கண்டதுங் கழறுவாய். 4627

௬௮ வரைசெய்தாள் வில்லிறுத் தவனமா முனியொடும்
விரசினு னல்லனேல் விடுவனு ருயிரெனக்
கரைசெய்வான் வேலையிற் பெரியகற் பினடெரிந்
துரைசெய்தா ளஃதெலா முணரநீ யுரைசெய்வாய். 4628

௬௯ சூழிமால் யானையின் றுணைமருப் பிணையெனக்
கேழிலா வனமுலைக் கிரிசுமந் திடைவதோர்
வாழியா மின்னிளங் கொடியின்வந் தாடனை
ஆழியா னரசவைக் கண்டது மறைகுவாய். 4629

௭0 முன்புநா னறிகிலா முளிநெடுங் கானிலே
என்பினே போதுவா னினைதியோ வேழைநீ
இன்பமா யாருயிர்க் கினியையா யினையினித்
துன்பமாய் முடிதியோ வென்றதுஞ் சொல்லுவாய். 4630

௭௧ ஆனபே ரரசிழந் தடவிசேர் வாயுனக்
கியானலா தனவெலா மினியவோ வினியெனு
மீனுலா நெடுமலர்க் கண்ணினீர் விழவிழுந்
தூனிலா வுயிரின்வெந் தயர்வது முரைசெய்வாய். 4631

௭௨ மல்லன்மா நகர்துறந் தேகுநாண் மதிதொடுங்
கல்லின்மா மதின்மணிக் கடைகடந் திடுதன்முன்
எல்லைதீர் வரியவெங் கானம்யா தோவெனச்
சொல்லினு ளீதெலா முணரநீ சொல்லுவாய். 4632

௭௩ இனையவா றுரைசெய்வா யினியனே குதியெனு
வனையன்மா மணியின்மோ திரமளித் தருளிநின்
வினையெலா முடிகெனு விடைகொடுத் துதவலும்
புனையும்வார் கழலினு னருளொடும் போயினுன். 4633

௭௪ அங்கதக் குரிசிலோ டடுசினத் துழவராம்
வெங்கதத் தலைவரும் மிகுகடற் படையொடும்
பொங்குவிற் றலைவரைத் தொழுதுமுன் போயினர்
செங்கதிர்ச் செல்வனைப் பணிகுறுஞ் சென்னியார். 4634

௧௨. நாடவிட்ட படலம் முற்றும்.

௧௫ பிலம்புக்கு நீங்கு படலம்

௧ போயினார் போனபின் புறநெடுந் திசைகடோ
றேயினா னிரவிகா தலனுமே யினபொருட்
காயினா ரவரையங் கன்னநா ளவதியில்
தாயினா ருலகினிற் றகைநெடுந் தானையார். 4635

௨ குன்றிசைத் தனவெனக் குலவுதோள் வலியினார்
மின்றிகைத் திடுமிடைக் கொடியைநா டினர்விராய்
வன்றிசைப் படருமா றொழியவண் டமிழுடைத்
தென்றிசைச் சென்றதோர் திறனெடுத் துரைசெய்வாம். 4636

௩ சிந்துரா கத்தொடுந் திரண்மணிச் சுடர்செறிந்
தந்திவா னத்தினின் றவிர்தலா னரவினோ
டிந்துவா னோடலா விறைவனோ டொத்திடும்
விந்தநா கத்தின்மா டெய்தினார் வெய்தினால். 4637

௪ அந்நெடுங் குன்றினோ டவிர்மணிச் சிகரமும்
பொன்னெடுங் கொடுமுடிப் புரைகளும் புக்குற
நன்னெடுந் தாழ்வரை நாடினார் நவையிலார்
பன்னெடுங் காலமா மென்னவோர் பகலிடை. 4638

௫ விண்டுபோ யிழிவர்மே னிமிர்வர்விண் படரவே
றுண்டமா மணியினம் மலையின்வா யுதவுநீர்
மண்டுபா ரதனின்வா ழுயிர்களம் மதியினோர்
கண்டிலா தனவயன் கண்டிலா தனகொலாம். 4639

௬ மல்லன்மா ஞாலமோர் மறுவுறா வகையினச்
சில்லலோ தியையிருந் துறைவிடந் தேடுவார்
புல்லினா ருலகிடைப் பொதுவிலா வகையினால்
எல்லைமா கடல்களே யாகுமா றேகினார். 4640

௭ ஏகினா ரோசனை யேழோ டேழுபார்
சேகறத் தென்றிசை கடிதிற் செல்கின்றார்
மேகமா லையினெடும் விரவித் தேனிழி
நாகுசேர் நருமதை யாறு நண்ணினார். 4641

௮ அன்னமா டிடங்களு மமரர் நாடியர்
துன்னியா டிடங்களுந் துறக்க மேயவர்
முன்னியா டிடங்களுஞ் சுரும்பு மூசுதேன்
றுன்னியா டிடங்களும் பார்த்து சுற்றினார். 4642

௯ பெறலருந் தெரிவையை நாடும் பெற்றியாற்
றறனறுங் கூந்தலு மளக வண்டுசூழ்
நிறநறுந் தாமரை முகமு நித்தில
முறுவலுங் காண்பரால் முற்றுங் காண்கிலார். 4643

௧0 செருமத யாக்கையர் செருக்கில் சிந்தையர்
தருமத யாவிவை தழுவுந் தன்மையர்
பொருமத யானையும் பிடியும் புக்குழல்
நருமதை யாறெனு நதியை நீங்கினர். 4644

௧௧ தாமகூ டத்தினைத் தீர்த்த சங்கமாம்
நாமகூ டப்பெருந் திசையை நல்கிய
வாமகூ டச்சுடர் மணிவ யங்குறும்
ஏமகூ டத்தடங் கிரியை யெய்தினர். 4645

௧௨ மாடுறு கிரிகளு மரமு மற்றவுஞ்
சூடுறு பொன்னெனப் பொலிந்து தோன்றுறப்
பாடுறு சுடரொளி பரப்பு கின்றது
வீடுறு முலகினும் விளங்கு மெய்யது. 4646

௧௩ இங்நெடுங் கிரிகோலோ வதுகோ லோவென
வன்னெடு மேருவோ டயிர்க்க லாவது
தோன்னெடு நிலமெனு மங்கை சூடிய
பொன்னெடு முடியெனப் பொலிந்த பொற்பது. 4647

௧௪ பறவையும் பல்வகை விலங்கும் பாடமைந்
துறைவன கனகநுண் டூளி போர்த்தலான்
நிறைநெடு மேருவைச் சேர்ந்த நீரவாய்ப்
பொறைநெடும் பொன்னொளி மிளிரும் பொற்பது. 4648

௧௫ பரவிய பராகநுண் கனகம் பாடுற
எரிசுடர்ச் செம்மணி யீட்டத் தோடும்வீழ்
அருவியந் திரள்களு மலங்கு தீயிடை
உருகுபொன் பாய்வபோன் றொழுகு கின்றது. 4649

௧௬ விஞ்சையர் பாடலும் விசும்பின் வெள்வளைப்
பஞ்சின்மெல் லடியவர் பாடற் பாணியுங்
குஞ்சர முழக்கமுங் குமிறு பேரியின்
மஞ்சின முரற்றலு மயங்கி மாய்வன. 4650

கஎ அனையது நோக்கினா ரமிர்தின் மாமயில்
வினையன விராவண னிருக்கும் வெற்பெனும்
நினைவினின் வந்துயர்ந் தோங்கு நெஞ்சினர்
சினமிகக் கனற்பொறி சிந்துஞ் செங்கணார். 4651

கஅ இம்மலை காணுது மேழை மானையச்
செம்மலை நீக்குதுஞ் சிந்தை யாமென
விம்மலு முவகையும் விளங்கு முள்ளத்தார்
அம்மலை யேறினா ரச்ச நீங்கினார். 4652

க௯ இரிந்தன கரிகளும் யாளி யீட்டமும்
விரிந்தகோ ளரிகளும் வெருவி நீங்கின
திரிந்தன ரெங்கணுந் திருவைக் காண்கிலார்
பிரிந்தனர் பிறிதென பெயரும் பெற்றியார். 4653

௨0 ஐம்பதிற் றிரட்டிகா வதத்தி னாலகன்
றம்பரைத் தொடுவதொத் துயர்வி னோங்கிய
செம்பொனின் கிரியையோர் பகலிற் றேடினார்
கொம்பினைக் கண்டிலர் குப்புற் றேகினார். 4654

௨க வெள்ளமோ ரிரண்டென விரிந்த சேனையைத்
தெள்ளுநீ ருலகெலாந் திரிந்து தேடிநீர்
எள்ளரு மயேந்திரத் தெம்மிற் கூடுமென்
றுள்ளினா ருயர்நெடு மோங்க னீங்கினார். 655

௨௨ மாருதி முதலிய வயிரத் தோள்வயப்
போர்வலி வீரரே குழுமிப் போகின்றார்
நீரெனும் பெயருமொன் றின்றி நீணெடுஞ்
சூரியன் வெருவுமோர் சுரத்தைத் துன்னினார். 656

௨௩ புள்ளடை யாவிலங் கரிது பூவொடுங்
கள்ளடை யாநிலங் கல்லுந் தீய்ந்துகும்
உள்ளிடை [1]யரவுநுண் பொடியி னோடிடும்
வெள்ளிடை யல்லதொன் றில்லை வெஞ்சுரம். 657

௨௪ நன்புல நடுக்குற வுணர்வு நைந்தறப்
பொன்பொலி யாக்கைகள் புழுங்கிப் பொங்குவார்
தென்புலத் தினிலெரி நரகிற் சிந்திய
என்பில்பல் லுயிரென வெம்மை யெய்தினார். 4658

(பிரதி) [1] யாவுநுண்.

உரு நீட்டிய நாவினர் நிலத்திற் றீண்டுதோ
றாட்டிய வெம்மைய ருலையுங் காவினர்
காட்டிலுங் காய்ந்தவக் காயங் காய்தலாற்
சூட்டகல் மேலெழும் பொரியிற் றுள்ளுவார். 4659

உசு ஒதுங்கலா நிழலிறை காண்கி லாதுயிர்
பிதுங்கிடு முடலினர் முடிவில் பீடையர்
பதங்கடீ யுருகிடப் பதைக்கின் றூர்பல
விதங்களா னெடும்பில வாயின் மேவினர். 4660

உஎ மீச்செல வரிதினி விளிவி னல்லது
தீச்செல வரியவு மடுக்குந் திண்பில
வாய்ச்செல னன்றென மனத்தி னெண்ணினர்
போய்ச்செல வறிதுமென் றதனிற் புக்கனர். 4661

உஅ அக்கணத் தப்பிலத் ததனி லெய்தினர்
திக்கினோ டுலகினிற் செறிந்த தீங்கிருள்
எக்கிய கதிரவற் கஞ்சி யேமுற
புக்கதே யனையதோர் புரைபுக் கெய்தினர். 4662

உகூ எழுகிலர் காலெடுத் தேகு மெண்ணிலர்
இழுகிய தென்னிதி விழிந்து வீழ்ந்துழி
ஒழுகிய தெனவுழந் திருளி னுள்ளத்தில்
முழுகிய மெய்யின ருரப்பி முட்டினர். 4663

௩0 நின்றனர் செய்வதோர் நிலைமை யோர்கிலர்
பொன்றின ராமெனப் பொருமும் புந்தியார்
வன்றிறன் மாருதி வல்லையோ வெமை
இன்றிது காக்கலென் றிரந்து கூறினர். 4664

௩க உய்வுறுத் துவன்மன முலைய லூழிலென்
மெய்யுறப் பற்றுமின் விடுகி லீரென
ஐயனக் கணத்தினி னகலு நீணெறி
கையுறத் தடவிவெங் காலி னேகினன். 4665

௩உ பன்னிரண் டோசனை பரந்த மேனியன்
மின்னிரண் டனையகுண் டலங்கள் வில்லிடத்
துன்னிரு டொலைந்திடத் துரிதத் தேகினன்
பொன்னெடுங் கிரிகள்போற் பொலிந்த தோளினன். 4666

௩௩ கண்டனன் கடிநகர் கானத் தொண்கதிர்
மண்டல மறைந்துறைந் தனைய மாண்பது
விண்டல நாணுற விளங்கு கின்றது
புண்டரீ கத்தினள் வதனம் போன்றது. 4667

௩௪ கற்பகக் கானது கமலக் காடது
பொற்பெருங் கோபுரப் புரிசை புக்கது
அற்புதத் தமரரு மெய்த லாவது
சிற்பமு மயன்மனம் வருந்திச் செய்தது. 4668

௩௫ இந்திர னகரினு மெதிரி லாதது
மந்திர மணியினிற் பொன்னின் மண்ணினில்
அந்தரத் தெழுஞ்சுட ரவையின் றாயினும்
உந்தரு மிருடுரந் தொளிரு கின்றது. 4669

௩௬ புவிபுகழ் சென்னியோ னமலன் றொல்புகழ்க்
கவிகடம் மனையெனக் கனக ராசியுஞ்
சவியுடைத் தூசுமென் சாந்துஞ் சுண்ணமும்
அவிர்மணிக் குப்பையு மளவி லாதது. 4670

௩௭ பயில்குரற் கிண்கிணிப் பாடற் பாவையர்
இயல்புடை மைந்தரென் றிவரி லாமையாற்
றுயில்வுறு நாட்டமுந் துடிப்ப தொன்றிலா
உயிரிலா வோவிய மென்ன வொப்பது. 4671

௩௮ அமிழ்துலை வாயின வடுத்த வுண்டியும்
தமிழ்நிகர் நறவமுந் தனித்தண் டேறலும்
இமிழ்கனிப் பிறக்கமும் பிறவு மின்னன
கமழ்வுறுத் தேங்கிய கணக்கில் கொட்பது. 4672

௩௯ *கன்னிநெடு மாநகர மன்னதெதிர் கண்டார்
இந்நகர மீதிக விராவணன தூரென்
றுன்னியுரை யாடின ருவந்தனர் வியந்தார்
பொன்னினெடு வாசலத னூடினிது புக்கார். 4673

௪0 புக்கநக ரத்தினிது நாடுதல் புரிந்தார்
மக்கள்கடை தேவர்தலை வானுலகில் வாழ்வர்
ஒக்கவுறை வோருருவ மோவிய மலான்மற்
றெக்குறியி னுள்ளவு மெதிர்ந்திலர் திரிந்தார். 4674

௪௧ வாவியுள பொய்கையுள வாசமண நாறுங்
காவுமுள காவிவிழி யார்கண்மொழி யென்னக்
கூவுமிள மென்குயில்கள் பூவைகிளி கோலத்
தூவிமட வன்னமுள தோகையர்க ளில்லை. 4675

௪௨ ஆயநக ரத்தினியல் புள்ளுற வறிந்தார்
மாயைகொ லெனக்கருதி மற்றுநினை வுற்றார்
தீயபில னுட்பிறவி சென்றவது வன்றோ
தூயன துறக்கமென நெஞ்சுதுணி வுற்றார். 4676

௪௩ இறந்தில மிதற்குரிய தெண்ணியில மேதும்
மறந்தில மயிர்ப்பினொ டிமைப்புள துறக்கம்
பிறந்தவர் செயற்குரிய செய்தல்பிழை யன்றோ
திறந்தெரிவ தென்னென விசைத்தனர் திகைத்தார். 4677

௪௪ சாம்பனவ னொன்றுரைசெய் வானெழு தவத்தாற்
காம்பனைய தோளியை யொளித்தபடு கள்வன்
நாம்புக வமைத்தபொறி நன்றுமுடி வின்றால்
ஏம்பலினி மேலைவிதி யான்முடியு மென்றான். 4678

௪௫ இன்றுபில னீதினிடை யேறவரி தென்பார்
தின்றுசக ராதிபர்க ளாகிநனி செய்தும்
அன்றதெனில் வஞ்சனை யாக்கரை யடங்கக்
கொன்றெழுது மஞ்சலென மாருதி கொதித்தான். 4679

௪௬ மற்றவரு மற்றது மனக்கொள வலித்தார்
உற்றனர் புரத்தினிடை யொண்சுடரி னுள்ளோர்
நற்றவ மனைத்துமுரு நண்ணியொளி பெற்ற
கற்றைவிரி பொற்சடையி னாளையெதிர் கண்டார். 4680

௪௭ மருங்கலச வற்கலை வரிந்துமணி மானப்
பொருங்கலச மொக்குமுலை மாசுபுடை பூசிப்
பெருங்கலை மதித்திரு முகத்தள்பிறழ் செங்கேழ்க்
கருங்கயல்க ளிற்பிறழ்கண் மூக்கினுதி காண. 4681

௪௮ தோரணைய வல்குல்செறி திண்கதலி செப்பும்
ஊருவி னொடுங்குற வொடுக்கியுற வொல்கி
நேரிடை சலிப்புற நிறுத்திநிமிர் கொங்கைப்
பாரமு ளொடுக்கிய வுயிர்ப்பிடை பரிப்ப. 4682

சகூ தாமரை மலர்க்குவமை சால்வுறு தளிர்க்கைப்
பூமருவு பொற்செறி குறங்கொடு பொருந்தக்
காமமுத லுற்றபகை காறளர வாசை
நாமமழி யப்புலனி னல்லறிவு புல்ல. 4683

ரு0 நெறிந்துநிமிர் கற்றைநிறை யோதிநெடு நீலஞ்
செறிந்துசடை யுற்றன தவத்திநெறி செல்லப்
பறிந்துவினை பற்றற மனப்பெரிய பாவம்
பிறிந்துபெய ரக்கருணை கண்வழி பிறக்க. 4684

ருக இருந்தன ளிருந்தவளை யெய்தின ரிறைஞ்சா
அருந்ததி யெனத்தகைய சீதையிவ ளாகப்
பரிந்தனர் புகழ்ந்தனர் பணித்தகுறி பண்பிற்
றெரிந்துணர்தி மற்றிவள்கொ றேவியென லோடும். 4685

ருஉ எக்குறியொ டெக்குண மெடுத்திவ னுரைக்கேன்
இக்குறி யுடைக்கொடி யிராமன்மனை யாளோ
அக்குவட முத்தமணி யாரவட நேர்வந்
தொக்குமெனி லொக்குமென மாருதி யுரைத்தான். 4686

ருங அன்னபொழு தின்கண வணங்குமறி வுற்றாள்
முன்னையர்க ளல்லநெறி முந்தினர்க ளென்ன
இன்னகரி னிவ்விடமு னெய்தினர்க ளல்லீர்
என்னவர வியாவருரை செய்கென விசைத்தாள். 4687

ருச வேதனை யரக்கரொரு மாயைவினை வித்தார்
சீதையை யொளித்தனர் மறைத்தவுழை தேர்வுற்
றேதமி லறத்துறை நிறுத்திய விராமன்
தூதருல கிற்றிரிது மென்னுமுறை சொன்னார். 4688

ருரு என்றலு மிருந்தவ ளெழுந்தன ளிரங்கிக்
குன்றனைய தாயதொரு பேருவகை கொண்டாள்
நன்றுவர வாகநட னம்புரிவ னென்னா
நின்றன ணெடுங்கணிணை நீர்கலுழி கொண்டாள் 4689

ருசு எவ்வுழை யிருந்தன னிராமனென யாணர்ச்
செவ்வுழை நெடுங்கணவள் செப்பிடுத லோடும்
அவ்வுழை நிகழ்ந்ததனை யாதியினொ டந்தம்
வெவ்விழைவில் சிந்தைநெடு மாருதி விரித்தான் 4690

ருஎ கேட்டவளு மென்னுடைய கேடிறவ மின்னே
காட்டியது வீடென விரும்பிநனி கானீர்
ஆட்டியமு தன்னசுவை யின்னடிசி லன்போ
டூட்டிமன னுள்குளிர வின்னுரை யுரைத்தாள். 4691

ருஅ மாருதியு மற்றவண் மலர்ச்சரண் வணங்கி
யாரின்னக ருக்கிறைவர் யாதுநின் னியற்பேர்
பார்புகழ் தவத்தினை பணித்தருளு கென்றான்
சோர்குழலு மற்றவனோ டுற்றபடி சொன்னாள். 4692

ருகூ நான்முக நுனித்தநெறி நூறுமறை நொய்தா
மேன்முக நிமிர்ந்துவெயில் காலொடு விழுங்கா
மான்முக நலத்தவன் மயன்செயத் தவத்தால்
நான்முக னளித்துளதி மாநகர நல்லோய் 4693

கூ0 அன்னகிளர் தானவ னரம்பையரு ளங்கோர்
நன்னுதலி னுண்முலை புணர்ந்தனனவ் வள்ளல்
என்னுயிரன் னாளவளை யானிவண் விடுப்பப்
பொன்னுலகி னின்றியல் பிலத்திடை புணர்ந்தான். 4694

கூக புணர்ந்தவனு மன்னவளு மன்றில்விழை போகத்
துணர்ந்திலர் நெடும்பகலிம் மாநக ருறைந்தார்
கணங்குழையி னோடுமுயர் காதலொரு வாதுற்
றிணங்கிவரு மாசையினி னோடுட னிருந்தேன். 4695

கூஉ இருந்துபல நாள்கழியு மெல்லையினி னல்லோய்
திருந்திழையை நாடிவரு தேவரிறை சீறிப்
பெருந்திறலி னாளையுயிர் கொண்டுபிழை யென்ன
முருந்துநிகர் மூரனகை யாளையு முனிந்தான். 4696

கூ௩ மாதவ ளுயிர்த்தமக வோரிருவர் வாசப்
போதுறை நறைக்குழ லொருத்திபுகழ் மேலோய்
ஏதமவள் மைந்தாதவ மெய்தியயல் போனார்
சீதள முலைச்சிறுவி தாதையொடு சென்றாள். 4697

கூ௪ மத்தநெடு மாகளிறு கைக்குலிச வன்றாள்
சித்தமொடு மான்முகன் வணங்கியயல் சென்றான்
வித்தகனு மாயிர விலோசனனு மேன்மேன்
முத்தநகை யாளைநனி நோக்கினன் முனிந்தான். 4698

௬௫ முனிந்தவளை யுற்றசெயல் முற்றுமுரை யென்ன
கனிந்ததுவர் வாயவளு மென்னையிவள் கண்ணாய்
வனைந்துமுடி வுற்றதென மன்னனுமி தெல்லாம்
நினைந்திவ ணிருத்திநகர் காவலின தென்றான். 4699

௬௬ என்றலும் வணங்கியிரு ளேகுநெறி யெந்நாள்
ஒன்றுரை யெனக்குமுடி வென்றுரை செயாமுன்
வன்றிறலின் வானர மிராமனருள் வந்தால்
அன்றுமுடி வாகுமிட ரென்றவ னகன்றான். 4700

௬௭ உண்ணவுள பூசவுள சூடவுள வொன்றோ
வண்ணமணி யாடையுள மற்றுமுள பெற்றேன்
அண்ணலவை விட்டுமை யடைந்திடுதல் வேண்டி
எண்ணரிய பல்பக லிருந்தவ மிழைத்தேன். 4701

௬௮ ஐயிருப தோசனை யமைந்தநில மையா
மெய்யுளது மேலுலக மேறுநெறி காணேன்
உய்யுநெறி யுண்டுதவி னீரெனி லுபாயம்
செய்யும்வகை சிந்தையி னினைத்திர்சிறி தென்றாள். 4702

௬௯ அன்னது சுயம்பிரவை கூறவனு மானும்
மன்னுபுலம் வென்றுவரு மாதவள் மலர்த்தாள்
சென்னியின் வணங்கிநனி வானவர்கள் சேரும்
பொன்னுலக மீய்குவ னினக்கெனல் புகன்றான். 4703

௭0 முழைத்தலை யிருட்கடலின் மூழ்கிமுடி வோமைப்
பிழைத்துயி ருயிர்ப்பவருள் செய்தபெரி யோனே
இழைத்திசெய லானதென வென்றன ரிரந்தார்
வழுத்தரிய மாருதியு மன்னது வலிப்பான். 4704

௭௧ நடுங்கன்மி னெனுஞ்சொலை நவின்றுநகை நாற
மடங்கலி னெழுந்துமழை பேறரிய வானத்
தொடுங்கலில் பெருந்தவ னுயர்ந்தவ ருகப்ப
நெடுங்கைகள் பெயர்த்துநெடு வானுற நிமிர்ந்தான். 4705

௭௨ எருத்துயர் சுடர்ப்புய மிரண்டு மெயிறென்ன
மருத்தின்மக னிப்படி யிடந்துற வளர்ந்தான்
கருத்தினிமி ரக்கதிகள் கண்டவர் கலங்க
உருத்துல கெடுத்ததிரு மாலினையு மொத்தான். 4706

௭௩ மாவடி வுடைக்கமல நான்முகன் வகுக்கும்
தூவடி வுடைச்சுடர்கொள் விண்டலை துளைக்கும்
மூவடி குறித்தமுறை யீரடி முடித்தான்
பூவடி வுடைப்பொருவில் சேவடி புனைந்தான். 4707

௭௪ வழிருப தோசனை யிடந்துபடி யின்மேல்
ஊழுற வெழுந்ததனை யும்பரு முவப்பப்
பாழிநெடு வன்பிலனி னின்றுவட மேல்பால்
ஆழியி னெறிந்தனும னாழியென வார்த்தான். 4708

௭௫ இன்றுமுள மேல்கட லியக்கில்பில தீவாய்
நின்றுநிலை பெற்றுளது நீணுதலி யோடுங்
குன்றுபுரை தோளவ ரெழுந்துநெறி கொண்டார்
பொன்றிணி விசும்பினிடை நன்னுதலி போனாள். 4709

௭௬ மாருதி வலித்தகைமை பேசிமற வோரும்
பாரிடை நடந்துபக லெல்லைபட ரப்போய்
நீருடைய பொய்கையினி னீள்கரை யடைந்தார்
தேருடை நெடுந்தகையு மேலைமலை சென்றான். 4710

௧௩. பிலம்புக்கு நீங்கு படலம் முற்றும்

---

௧௪. ஆற்றுப் படலம்

௧ கண்டார் பொய்கைக் கண்ணக னன்னீர் கையார
உண்டார் தேனு மொண்கனி காயு மொருசூழல்
கொண்டா ரன்றே வின்றுயில் கொண்ட குறியுன்னித்
தண்டா வென்றித் தானவன் வந்தான் தகவில்லான். 4711

௨ மலையே போல்வான் மாகடல் போல்வான் மறமுற்றக்
கொலையே போல்வான் கூற்றை நிகர்ப்பான் கொடுமைக்கோர்
நிலையே போல்வா னீர்மை யிலாதா னிறைதிங்கட்
கலையே போலுங் கால வெயிற்றான் கனல்கண்ணான். 4712

௩ *கருவி மாமழை கைக டாவிமீ
துருவி மீதுசென் றுலவி யொற்றலிற்
பொருவில் வாரிமே லொழுகு பொற்பினால்
அருவி தோய்தருங் குன்ற மேயனான். 4713

௪ வான வர்க்குமற் றவர்வ லிக்குநேர்
தான வர்க்குமே யரிய தன்மையான்
ஆன புட்கலன் மகனொ டாடவே
ஏனை யர்க்குமொன் றென்ன வொண்ணுமோ. 4714

௫ பிறங்கு பங்கியான் பெயரும் வேகத்தால்
கறங்கு போன்றுளான் பிசையுங் கையினன்
அறங்கொள் சிந்தையார் நெறிசெ லாய்வினால்
உறங்கு வாரைவந் தொல்லை யெய்தினன். 4715

௬ பொய்கை யென்னதென் றுணர்ந்து புல்லியோர்
எய்தி னர்களா ரிதுவெ னாவென
ஐய னங்கத னலங்கன் மார்பினிற்
கையின் மோதினன் கால னேயனான். 4716

௭ மற்ற மைந்தனு முறக்க மாறினன்
இற்றிவன் கொலா மிலங்கை வேந்தனா
எற்றி னானைநே ரெற்றி னனவன்
முற்றி னனிகற் காதி மூர்த்தியான். 4717

௮ ஓடியுண் டாங்கனை ரோங்கல் வீழ்வதொத்
தடியுண் டான்றளர்ந் தலறி வீழ்தலும்
தொடியின் றோள்விசைத் தெழுந்து சுற்றினார்
பிடியுண் டாரெனத் துயிலும் பெற்றியார். 4718

௯ யார்கொ லாமிவன் மிழைத்த தென்னெனாத்
தாரை சேயினைத் தனிவி னவினன்
மாரு தேயன்மற் றவனும் வாய்மைசால்
ஆரி யாதெரிந் தறிகி லேனென்றான். 4719

௧௦ யானி வன்றனைத் தெரிய வெண்ணினேன்
தூநி வந்தவேற் றுமிர னென்னும்பே
ரான வன்புனற் பொய்கை யாளுமோர்
தான வன்னெனச் சாம்பன் சாற்றினன். 4720

௧௧ வேறு மெய்துவா ருளர்கொல் மேலெனத்
தேறி யின்றுயில் செய்த தீர்ந்துளார்
மானநல் லடிக்கெத் தமிழ்ப்பிர பந்தம் வையகத் திருப்பினு மதனை
ஆனநல் அன்போ டச்சினிற் பதிக்கும் ஆர்வமீக் கொளப்பல நூலை
வானமா மழையென் றேதரும் பெரிய வள்ளலே மற்றிது காண்க. உ

ஞாயிறன் றிரவு பலபல பேசி நன்குநான் விடைபெற்ற பின்னர்
ஆயநற் றிங்கட் கிழமையி லுன்றன் அகத்தினை அடைகிலேன் துயிலில்
மேயினை யென்று கேட்டனன் அதனால் விருப்புறும் உறவின ரோடும்
தூயவர் வாழும் வைகுந்தப் பதிக்குத் துரிதமாச் சென்றனன் ஆங்கே. ங

கள்ளவிழ் துழாய்மா மாலையான் கள்ளப் பிரானையே கண்குளிர்ந் திடக்கண்
டுள்ளவிழ்ந் தின்பம் ஆர்ந்தனன் விருந்தை உண்டனன் நெல்லையூர் சென்றேன்
தள்ளரு மிரண்டாம் வகுப்பினிற் சார்ந்தே பொருபுகை வண்டி யதனிற்
நள்ளுசென் னைக்கே படர்ந்தனனேற்று நயத்தொடு நினன்பி னினைவால். ச

செந்தமிழ் நூல்கள் செவ்விதி லச்சிற் றிகழ்தர வேண்டுமென் றெண்ணி
இந்தமா நிலத்தில் யாரிதை ஆற்ற வற்றவ ரென்பதும் நினைந்து
சொந்தவாற் றலினாற் பொருளினாற் றொண்டினாற் றிறம்பட வவற்றைச்
சந்தமார் தரவே விளக்குநின் னியல்பு தரணியி லெவர்செய விழைவார். ரு

பலபல நூல்கள் பயின்றனை புலவர் பலரொடும் நண்பினைப் பூண்டாய்
அலகிலாத் தமிழ்நூல் வளமெலாம் ஆர்ந்த அடைவினிற் பெருமிதங் கொண்டாய்
சிலசில பிதற்றித் திரியுமென் றனையுஞ் செந்தமிழ் வல்லுன னாக
மலைவுற மதித்தாய் மற்றிது நின்றன் வளவிய உளத்திறம் அன்றோ. சு

அன்புட னளித்த கம்பன்றன் நூல்கள் அமுதெனக்கொண்டனன் சிறுநூல்
இன்புடன் பயில்வேன் எனக்குநீ அளிக்க இசைந்தமற் றவைகளும் நாடி
என்பெரு விருப்பம் அறிந்துநீ விடுத்தல் ஏற்றதென் றிசைத்திடுகின்றேன்
மன்பெரு மாறன் இயலுநா வீறன் மலரடி கனவிலும் மறவாய். எ

இனியுநின் தன்னோ டன்பினிற் பலநாள் எய்தியே உரைசெய விழைவேன்
கனியுமா ஞான முத்திரைக் கரத்தோன் கருணையை நோக்கிநிற்கின்றேன்
தனிநலஞ் சாரும் திருப்பதி ஒன்பான் தலமுஞ்சார்ந் தின்புறல் வேண்டும்
துனியிலா நின்றன் அன்பினால் அருளால் சூழுமிவ் வெலாநிறை வுறுக. அ

ஸ்ரீ K. சுப்பா ராவ், ஆசிரியர், கும்பகோணம்

கம்பராமாயண ஆராய்ச்சியாளர்

தமிழ்ப் பெரியாராகிய தங்கள் தொடர்பு கிடைத்தது எனது பாக்கியமே. தங்கள் புத்தகங்களில் உள்ள பாடங்களை நான் குறித்து வைத்துள்ள பாட பேதங்களுடன் ஒப்பிட்டு நோக்கினேன். ஆழ்வார்திருநகரிப் பிரதியில் அனேக சிறந்த பாடங்கள் கிடைத்தன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக ஆரண்ய காண்டப் பாடங்கள் ஒரு பெரும் நிதிபோல் அமைந்துள்ளன. என்போன்ற கம்பன் கலைப்பித்தருக்கு இவை ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. தாங்கள் மேற்கொண்ட இவ்வுத்தம கைங்கர்யத்தின் பெருமை வருங்காலத்தில் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. ஆழ்வார் அருளால் கிஷ்கிந்தா காண்டமும் ஏனைய காண்டங்களும் விரைவில் அச்சில் ஏறும் என நம்புகிறேன்.

ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் சர்வதாரிஹு ஆனிமீ

கற்றோர் விரும்பும் காவியம் ஆக்குவதில் காளிதாசனும் மேலை நாட்டு மில்டனும் கை தேர்ந்தவராவர். நாட்டார் நயக்கும் நாடக நன்னூல் இயற்றுவதில் செகப்பிரியர் (Shakespeare) சிறந்தவராவர். இம் மூவரும் ஒருவராய் உருவெடுத்த இயல்புடையார் கல்வியிற் பெரிய கம்பராவர். பாலினும் தேனினும் இனிய தமது பாடல்களால் அழியாப் புகழை அடைந்த அவரது காவியமாகிய இராமகாதை கம்பராமாயணம் என்று வழங்கப்படுகின்றது. இந்நூல் காலத்தால் பல்வகை வேறுபாடுகளைப் பெற்றுள்ளது. அவற்றைக் கம்பராமாயணப் பதிப்புக்களில் காணலாம். கலைஞனின் கருத்தினை அவன் நிலையில் நின்று உண்மைக் கவிதையின் உருவை அறிய அந்நூலைப் பதிப்பிக்கும் அறிஞராவார் பலர் முயன்று வருகின்றனர். அத்தகைய பதிப்புக்களில் இதுவும் ஒன்றாகும். ஏனைய பதிப்புக்கள் பலவற்றினும் இதன்பால் சிறந்த இயல்புகள் சில காணப்படுகின்றன. பொருத்தமான பாடங்கள் அமைந்து பொலிகின்றன. எடுத்துக் காட்டாகச் சில காண்போம்.

அருந்தவ முனிவனாகிய விசுவாமித்ரனோடு " கருமலை, செம்மலையனைய காட்சியரா"கிய இளங்குமார் வீற்றிருப்பதனை மிதிலை வேந்தனைய

ஜனகன் கண்டான். "ஆடவர் பெண்மையை அவாவும் தோளினரா"ய மைந்தரது பரந்த மார்பும், மலர்ந்த முகமும், விரிந்த கண்களும் மன்னன் மனத்தைக் கவர்ந்தன. அவரது அளத்தற்கரிய அழகினை அள்ளிப்பருகும் நிலையினை மிதிலை வேந்தன் அடைந்தான். இதனைக் கம்பர் 'இருந்த குலச்குமரர் தமை இரு கண்ணின் முகந்து அழகு பருக நோக்கி' எனக் கூறுகின்றார். அழகில் ஆழ்ந்து அதனை அள்ளி அள்ளி உள்ளம் குளிர உண்டலை 'முகந்தழகு பருக' என அரசிளங்குமரர் அழகின் பெருமையையும், அரசன் ஆர்வமும் தோன்றக்கம்பர் அமைத்தார். 'முகந்து' என இந்நூலில் அமைந்துள்ள பாடம் முன்னைய பதிப்புக்களில் 'முகத்து' என உள்ளது. அடி முதல் முடி காறும் அழகனாய் விளங்கிய மன்னர் மக்களின் முகத்தழகு மாத்திரமே கம்பர் சிறப்பித்தார் எனக் கருதுதலினும், கண்டார் கருத்தைக் கவரும் அவரது மேனி யழகு முழுமையிலும் ஈடுபட்டுப் பருகுவன் அன்ன பண்புடையவனாய் அரசன் நின்றான் எனப் பொருள்படும் பாடம் பொருத்த முடைய தன்றோ? சோலையில் நின்ற சுதமதியை நோக்கி மன்னவன் மைந்தனாய உதய குமரன் 'எத்திறத்தாள் நின் இளங்கொடி' என மணிமேகலை யைக் குறித்து வினவுகின்றான். அந்நிலையில் உதய குமரன் அழகினை வியந்த சுதமதி அன்னவனை நோக்கி

'குருகு பெயர்க் குன்றம் கொன்றோன் அன்னநின்
முருகச் செவ்வி முகந்து தன் கண்ணால்
பருகாளாயின் பைந்தொடி நங்கை'

(மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை 13—14) எனக் கூறு மிடத்தில் 'முகந்து தன் கண்ணால்' என அமைந்திருப்பதும் ஒப்புநோக்கி மகிழ்தற்குரியதாம். இன்னும் பல முன்னைய பதிப்புகள் பலவற்றிற் காணப்படும் பாடங்களினும் இந்நூலிற் சில சிறந்து விளங்குகின்றன. "மதுப்பொழி மழலைச் செவ்வாய் வாட்கடைக் கண்ணின் மைந்தர் விதுப்புற நோக்கும் ....." என்பது (பாலகாண்டம் 11) ஒரு பாடம். இந்நூலில் 'விதிர்ப்புற' என அமைந்திருத்தல் பொருத்தமாயுள்ளது. "முள்ளரை முளரி வெள்ளி மூளையில்" (பாலகாண்டம் 16). இந்நூல் "வெள்ளை முளையிற" எனும் பாடம் சொற் பொருத்தமும், பொருட் பொருத்தமும் அமைந்துள்ளது. "தந்தமிலிருந்து தாமும் விருந்தொடுந் தமரினோடும் (பாலகாண்டம் 19) என்ற ஒரு பதிப்புப் பாடத்தினும் "தந்தமிலிருந்து தாமும் விருந்தொடு தமதுண்டென்ன" என்ற இந்நூற் பாடம் சிறந்ததாம், இவ்வரிகளில் 'தம்மிலிருந்து தமது பாத்துண்டற் றால்' என்னும் திருக்குறட் கருத்து பொலிகிறது.

இவை யாவும் ஆராய்வார்க்குப் பயன் பல அளிக்கும் என்பதில் ஐயமில்லை. இறை பணியும் தமிழ்ப் பணியுமாய் அமையும் இப்பதிப்பை மேற்கொண்ட ஆன்றோர்க்கு மூலமும் நடுவும் ஈறும் இல்லா முழுமுதற் பரம்பொருள் எல்லா நலங்களையும் நல்குவதாக.

வாணிதாஸர் கூறியவை

"நம்மாழ்வார் தாலாட்டு"

மாலூட்டும் பிறவியெனும் பெருங்கடலைக் கடந்துயிர்கள் மாலைச்சேரப்
பாலூட்டும் பசுந்தமிழிற் பரமகுரு வகுளமொளிர் பகவனேற்குந்
தாலாட்டின் சுவையறிந்து மனமுருக வச்சேற்றித் தரணிக்கீந்த
கோலாட்டும் பெரியனெனு மரபுதித்த கோதில்குணக் கொழுந்தீயே

"சடகோப திவ்ய சரிதம்"

மயக்குறு மாமறை மாசு நீங்கிடக்
கயக்கறு போதங் கனிந்து தெளிய
கோதில் கனியென குணபரன் றன்னைத்
தீதில் திருவாய் மொழியினில் திரட்டிய
பகவன் பெரியன் பாராங்குசன் சரிதம்
தகையுறு நெஞ்சந் தழைக்க வருளிய
தேவேச பாரதித் தெருளோன் பெயரை
நாவீ றன்றன் நற்புகழ் தன்னால்
உலகுக் களித்த ஒருபெருங் குணத்தோய்
நிலவுஞ் செல்வ நீடிசைக் குலத்துப்
பெரியன் ஸ்ரீனி வாஸப் பெரியோய்
அரிது நின்செயல் அனைத்து மோங்குக
கைம்மா றெவன்செயக் கருதுவன் வாழி
அம்மா பெரிதுன் அன்பின் திறனே.

"பராங்குச நாடகம்"

தமிழினுக் களித்தான் முத்தி தாந்தமாப் புனித நாடன்
அமிழ்தொலி வேத நான்கின் ஆயிரம் உரைத்த நாவோன்
உமிழ்திரைத் தாளப் பாண்டி ஒளியிசைக் குருகை யாளன்
இமிழ்பொழி காதை மாந்தர் இழைப்பருந் தவத்தின் பேறே.

வேதமாக் கடல் கடைந்த வித்தகன் அதற்கு முத்தி
கோதறத் தந்த மாறன் புகழைமுத் தமிழிற் கூறும்
சோதியா மிந்தத் தொன்னூற் சுவையினைப் பருகு விக்கும்
தீதறு பெரியன் ஸ்ரீநி வாசனின் செவ்வி வாழி.

வித்துவான் தென்திருப்பேரை அபிநவ காளமேகம்
ஸ்ரீ அநந்த கிருஷ்ணையங்கார் ஸ்வாமி 24—9—45

பராங்குச நாடகம்

சேடனும் புலவர் கோன்முன் செய்பராங் குசன்றன் காதை
நாடகச் சுவையுட் கொண்டே நல்லறி வாளர் யாரும்
ஏடவிழ் வகுளத் தாரான் இன்னருட் கிலக்காய் வாழ்வான்
பீடமை சீநி வாசப் பெரியனே வெளியிட் டானே.

நம்மாழ்வார் தாலாட்டு

காரனைய மேனியன் ஸ்ரீபூமி நீளையின் காந்தனு மாதிநாதன்
கழற்கஞ்ச மென்றுமே தொழுதுகக் குஞ்சீல கவிச்சக்ர வர்த்தியான
காரிமகிழ் மாறனுக் கேற்றதா யெவ்விதக் கவினுமுறு பிள்ளைத்தமிழ்
கவிவாணர் யார்க்குமே யின்பம் பயக்குநற் கவிகணிறை யொருநூலினைப்
பேரினை விளக்கம லொருபெரிய புலவர்கோன் பெருமையாய்ச் செய்தவிதனைப்
பெரியனும் சீனிவாசப் பெயருளான் சகல பேறுபெறு வள்ளற்குணன்
பாரினிற் பற்பல வயிணவப் பிரபந்த பந்திகளை வெளியாக்கிய
பான்மையன் புலவர்புகழ் மேன்மையன் பாவவே பதித்தனன் வளவச்சிலே.

Hilal Press, Tirunelveli—7-48 C. 1000

ஆழ்வார்திருநகரி திருஞான முத்திரை
பிரசுராலய வெளியீடு

இதுவரை பதிப்பிக்காது இப்போதுதான் அச்சாகியுள்ள
ஆழ்வார்திருநகரி பழைய நூல்கள்

பதிப்பாசிரியர்: பெரியன். வே. நா. ஸ்ரீநிவாஸையங்கார்

கோவை.		ரூ.	அ.
1.	ஸ்ரீ நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு ...	0	4
2.	ஸ்ரீ சடகோபன் சந்திர கலாமாலை	0	1
	தேவராஜ பாரதிகளின் சகோதரர் அநந்தையங்கார் இயற்றியது		
3.	ஸ்ரீ சடகோபன் திவ்ய சரித்திரம்	2	0
	ஸ்ரீ ராவ்சாகிப் மு. இராகவையங்கார் ஸ்வாமியின் திருத்தகப்பனாராகிய, ராமநாதபுரம் சமஸ்தான வித்வான் சதாவதானம் முத்துசாமி அய்யங்காரென்ற சேஷய்யங்கார் ஸ்வாமியின் மாணாக்கரான ஸ்ரீ தேவராஜையங்காரென்ற தேவேச பாரதிகளால் 15 படலங்களில் 119 கவிகளாக (நம்மாழ்வார் வைபவம் முழுதும்) இயற்றிய காவியம் B. A. வகுப்புக்குப் பாடமாக இருந்தது.		
4.	ஸ்ரீ ராமாயணம்		
	(பெரியவாச்சான் பிள்ளை அருளிய திவ்வியப்பிரபந்த பாசுரப்படி) பதிப்பில்		
5.	துலைவில்லிமங்கலம் தேவர்பிரான் சந்திர கலாமாலை ...	0	1
	ஷை தேவச பாரதிகள் என்ற தேவராஜ பாரதிகளியற்றியது		
6.	ஸ்ரீ நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ் (வாணிதாஸன் முகவுரையுடன்)	1	0
7.	திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம்	0	4
8.	குருகூர்ப்பள்ளு	0	6
	ஸ்ரீ சடகோபப் புலவர் இயற்றியது ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், B. A., B. L., பரிசோதித்தது விரிவான முன்னுரையுடன்		
9.	ஆழ்வார்கள் வைபவம் (முதலாழ்வார், பெரியாழ்வார்) ...	0	6
	வடிவழகிய நம்பிதாஸர் அருளியது		
10.	தென்திருப்பேரை திருக்கோளூர் திருப்பணி மாலைகள் ..	0	6
	ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், B. A., B. L., பரிசோதித்தது		
11.	திருவைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ்	0	8
	ராவ்சாகிப் மு. ராகவைய்யங்கார் ஸ்வாமி பரிசோதித்து எழுதிய முன்னுரையுடன்		
12.	கம்ப ராமாயணம் பாலகாண்டம் (பிரதி பேதங்களுடன் தாடகை வதைப் படலமுடிய)	0	10
	ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், B. A., B. L., } P. N. அப்புசாமி அய்யரவர்கள், B. A., B. L., } பரிசோதித்தது		

கோவை. ரூ. அ.

13. தெய்வச்சிலையார் விறலிவிடுதூது (கல்சிற்பத்தொழிலில் பிரசித்திவாய்ந்த திருச்செந்தூர் ரோட்டில் உள்ள கிருஷ்ணாபுரம் சம்பந்தமானது பழைய தாமிர சாஸனத்துடன்) 0 10

ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், B. A., B. L., பரிசோதித்தது முன்னுரையுடன்

14. கம்ப ராமாயணம் பாலகாண்டம் 2 0

ராவ்சாகிப் மு. ராகவையங்கார் ஸ்வாமி பரிசோதித்தது

15. கம்ப ராமாயணம் திருவயோத்தியா காண்டம் ... 2 4

ஸ்ரீ A. N. மகரபூஷணமையங்கார், B. A., B. L., அட்வகேட்
ஸ்ரீ K. பக்ஷிராஜையங்கார், B. A., B. L., அட்வகேட் } பரிசோதித்தது

16. கம்ப ராமாயணம் ஆரண்ய காண்டம் 2 4

ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை B. A., B. L. முன்னுரையுடன்
ஸ்ரீ K. பக்ஷிராஜையங்கார், B. A., B. L., அட்வகேட் பரிசோதித்தது

17. ஸ்ரீ பராங்குச நாடகம் 1 0

சேஷகவி இயற்றியது
செந்தமிழாசிரியர் ஸ்ரீ திருநாராயணையங்கார் ஸ்வாமி முன்னுரையுடன்

18. கம்ப ராமாயணம் கிட்கிந்தா காண்டம் 2 8

ஸ்ரீ K. பக்ஷிராஜையங்கார் B. A., B. L., அட்வகேட் பரிசோதித்தது

கம்பராமாயணம் பால, அயோத்தியா, ஆரண்ய காண்டங்களும், பாலகாண்டம் முதல் ஏழு படலங்கள் பிரதி பேதங்களுடனும் கூடிய கலிகோ 8 0

நம்மாழ்வார் தாலாட்டு, ஸ்ரீ சடகோப திவ்ய சரித்திரம், குருகூர்ப்பள்ளு, மகிழ்மாறன் பவனிக்குறம், ஆழ்வார்கள் வைபவங்கள், ஸ்ரீ பராங்குச நாடகம், இவைகளடங்கிய கலிகோ 5 0

நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ், திருவைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ், திருப்பணி மாலைகள், தெய்வச் சிலையார் விறலிவிடுதூது சேர்ந்த கலிகோ 3 8

ஷெ நூல்கள் முழுவதும் தமிழ்ப் பெரியோர்களால் மிகவும் பாராட்டப்பெற்றவை.

ஷை பதிப்புக்கள் பூராவும் தேவையுள்ளவர்கள் முன் பணமாக அனுப்பினால் தபால் ரிஜிஸ்தர் செலவின்றி அனுப்பப்படும்.

S. VAIYAPURI PILLAI, B.A., B.L.,
HEAD OF THE DEPARTMENT OF TAMIL
(Retd.)
UNIVERSITY OF MADRAS

Kamban Nilayam,
86, Second Main Road,
Gandhinagar
Adyar, Madras 20.

Dated: 21—4—1951

அன்பார்ந்த நண்பர் அவர்களுக்கு,

தாங்கள் அன்புடன் அனுப்பிய சுந்தரகாண்டப் பிரதியும், தங்கள் கடிதமும் வந்து சேர்ந்தன. எனது நன்றி.

ராமசரிதம் பாற்கடல் போன்றது என்று கம்பனே கூறிவிட்டான். அவன் எழுதிய ராமாயணம் பாற்கடலினும் சுவைமிகுந்த அமுதக் கடலாகவே உள்ளது. அவ் அமுதக் கடலில் ஒரு பெரும் பரப்பைத் தாங்கள் அளித்ததுபற்றி மிகவும் மகிழ்கின்றேன.

கம்பராமாயணத்திற்கு இன்று வரையில் ஆராய்ச்சிப் பதிப்பாக ஒன்று வெளிவந்ததில்லை. அவ்வாறு ஒன்று வெளிவரவேண்டுமானல், தாங்கள் வெளியிட்டுள்ளது போன்ற பல பதிப்புக்கள் வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் வழங்குகிறபடியே பிரதிகள் பலவற்றையும் ஆராய்ச்சி நோக்கோடு ஒத்திட்டு நோக்கினல்தான் உண்மையான கம்பன் பதிப்பு வெளிவர இயலும்.

பிரதேசப் பிரதிகள் என்று நான் கூறுவதைச் சிறிது விளக்க எண்ணுகிறேன் தொண்டை மண்டலப் பிரதி, கொங்கு மண்டலப் பிரதி, சோழ தேசப் பிரதி, மதுரைப் பிரதேசப் பிரதி, திருநெல்வேலிப் பிரதி, நாஞ்சில் நாட்டுப் பிரதி, ஈழதேசத்துப்பிரதி என்பனவற்றை முக்கியமாகக் கூறலாம். இவற்றுளெல்லாம் தலைசிறந்தவை ஆழ்வார் திருநகரிப் பிரதிகளேயாகும் இங்குள்ள வித்வான்கள் பக்தியிலும், கல்வியிலும், இலக்கியங்களைப் பரிபாலித்து வரும் பழக்கத்திலும் மிகச் சிறந்தவர்கள். ஒரு சில குடும்பங்கள் பரம்பரையாய் இம் மூன்று வகையிலும் சிறந்து விளங்கி வருபவை. ஆகவே, அந்தத் தேசத்துப் பிரதிகளைத் தாங்கள் பயன்படுத்தி வெளியிட்டிருக்கும் இப்பதிப்பு மிகவும் பயன்படத் தக்கது என்று உறுதியாகக் கூறுவேன்.

சுந்தர காண்டத்தைப் பரிசோதித்தவராகிய எனது நண்பர் ஸ்ரீ என் கே பக்ஷிராஜ ஐயங்கார் அவர்கள் இப் பதிப்புத் தொழிலில் ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள். இதற்கு முன்பும் ஆரணிய காண்டத்தை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் போன்றுள்ள நண்பர்களின் உதவியால் வெளிவந்துள்ள தங்கள் பதிப்பு பலராலும் கொண்டாடத்தக்கதாயிருக்கும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை.

அச்சு யந்திர சாலையில் இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளால் சில சில குறைபாடுகள் தங்கள் பதிப்பில் காணுதல் இயற்கை. அவற்றையெல்லாம் அடுத்த பதிப்பில் திருத்திக்கொள்ளலாம்.

தாங்கள் செய்துவரும் இப்பரோபகார முயற்சி இனிது நிறைவேறும்படி எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிக.

தங்கள் அன்பன்,
எஸ். வையாபுரிப் பிள்ளை

கம்பராமாயணம் (ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி)

சுந்தரகாண்டம்

படல அட்டவணை

எண்	படலம்	பக்கம்	கவி
௧.	கடல்தாவு படலம்	1	௯௬
௨.	நிலாத்தோற்றுப் படலம்	13	௫௯
௩.	இலங்காதேவிப் படலம்	21	௩௬
௪.	ஊர் தேடு படலம்	25	௧௩௯
௫.	வந்தனைப் படலம்	43	௧௧௪
௬.	உருக்காட்டுப் படலம்	57	௧௬௩
௭.	சூடாமணிப் படலம்	77	௮௩
௮.	பொழிலிறுத்த படலம்	89	௫௭
௯.	கிங்கரர்வதைப் படலம்	95	௬௪
௰.	சம்புமாலிவதைப் படலம்	103	௫௧
௰௧.	பஞ்சசேனபதிவதைப் படலம்	110	௬௭
௰௨.	அக்ககுமாரன்வதைப் படலம்	118	௫௰
௰௩.	பாசப் படலம்	125	௬௨
௰௪.	பிணிவிடு படலம்	132	௧௩௮
௰௫.	இலங்கை எரியூட்டு படலம்	150	௬௪
௰௬.	திருவடிதொழு படலம்	158	௫௨

ஆகப் படலம் ௰௬-க்கு திருவிருத்தம் ௧௨௯௫

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



கம்பராமாயணம்

சுந்தர காண்டம்

க. கடல்தாவு படலம்.

க அலங்கலில் தோன்றும் பொய்ம்மை ஆமெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டால் அவரென்ப கைவில் ஏந்தி
இலங்கையில் பொருதார் அன்றே மறைகளுக் கிறுதி ஆவார்.

உ ஆண்டகை ஆண்ட வானோர் துறக்கநா டருகிற் கண்டான்
ஈண்டிது தான்கொல் வேலை இலங்கையென் றையம் எய்தா
வேண்டரும் விண்ணுடென்று மெய்ம்மைகண் டுள்ளம் மீட்டான்
காண்டகும் கொள்கை உம்பர் இல்லெனக் கருத்திற் கொண்டான்.

ங கண்டனன் இலங்கை மூதூர்க் கடிபொழிற் கனக நாஞ்சில்
மண்டல மதிலுங் கொற்ற வாயிலும் மணியிற் செய்த
வெண்டளத் தரள மாட வீதியும் பிறவும் எல்லாம்
அண்டமும் திசைகள் எட்டும் குலுங்கத்தோள் கொட்டி ஆர்த்தான்.

ச வன்றந்த வரிகொள் நாகம் வயங்கழல் உமிழும் வாய
பொன்றந்த முழைகள் தோறும் புறத்துராய்ப் புரண்டு போந்த
நின்றந்தம் இல்லான் ஊன்ற நெரிந்துகீழ் அழுந்தி நீலக்
குன்றந்தன் வயிறு கீறிப் பிதுங்கின குடர்கள் மான. 4861

ரு புகலரு முழையுள் துஞ்சும் பொங்குளைச் சீயம் பொங்கி
உகலருங் குருதி கக்கி உள்ளுற நெரிந்த ஊழின்
அகலருட் பரவை நாண அரற்றுறு குரல ஆகிப்
பகலொளி கரப்ப வானை மறைத்தன பறவை எல்லாம்.

௬ மொய்யுறு செவிகள் தாழ்ந்து முதுகுற முறைகால் தள்ள
மையுறு விசும்பின் ஊடு நிமிர்ந்தவான் மதியம் அஞ்ச
மெய்யொடும்தழீஇய மெல்லென்பிடியொடும் வெருவலோடும்
கையுற மரங்கள் சுற்றிப் பிளிறின களிநல் யானை. 4863

௭ பொன்பிறழ் சிமயக் கோடு பொடியுறப் பொறியும் சிந்த
மின்பிறழ் குடுமிக் குன்றம் வெரினுற நெரியும் வேலை
புன்புற மயிரும் பூவாக் கட்புலம் புறத்து நாறு
வன்பறழ் வாயிற் கவ்வி வல்லியம் இரிந்த மாதோ. 4864

௮ தெக்குறு சிகரக் குன்றந் திரிந்துமெய் நெரிந்து சிந்தத்
தூக்குறு தோலர் வாளர் துருதத்தின் எழுந்த தோற்றம்
தாக்குறு செருவில் நேர்ந்தார் தாளற வீசித் தாவி
மேக்குற விசைத்தார் என்னப் பொலிந்தனர் விஞ்சைவேந்தர்

௯ தாரகைச் சுடர்கள் மேகம் என்றிவை தவிரத் தாழ்ந்து
பாரிடை அழுந்து கின்ற படர்நெடும் பனிமாக் குன்றம்
கூருகிர்க் குவவுத் தோளான் கூம்பெனக் குமிழி பொங்க
ஆர்கலி அழுவத் தாழுங் கலமெனல் ஆயிற் றன்றே 4866

௰ தாதுகு நறுமென் சாந்தங் குங்குமங் குலிகங் கண்ணென்
போதுகு பொலன்தா தென்றித் துடக்கத்த யாவும் பூசி
மீதுறு சுனைநீ ராடி அருவிபோல் எகினம் வீழ்வ
ஓதிய குன்றம் கீறிக் குருதிநீர் சொரிவ தொத்த 4867

௧௧ கடலுறு மத்தி தென்னக் கார்வரை திரியுங் காலை
மிடலுறு புலன்கள் வென்ற மெய்த்தவர் விசும்பின் உற்றார்
திடலுறு கிரியில் தங்கஞ் செய்வினை முற்றி முற்றா
உடலுறு பாசம் வீசா தும்பர்ச்செல் வாரை ஒத்தார். 4868

௧௨ வெயிலியல் குன்றங் கீறி வெடித்தலும் நடுக்கம் எய்தி
மயிலியல் தளிர்க்கை மாதர் தழீஇக்கொளப் பொலிந்த வானோர்
அயிலெயிற் றரக்கன் அள்ளத் திரிந்தநாள் அணங்கு புல்லக்
கயிலையில் இருந்த தேவைத் தனித்தனி கடுத்தல் செய்தார்

௧௩ ஊறிய நறவை உண்ட குற்றந்தம் உணர்வை உண்ணச்
சீறிய மனத்தர் தெய்வ மடந்தையர் ஊடல் தீர்வுற்
றூறினர் அஞ்சு கின்றார் அன்பரைத் தழுவி உம்பர்
ஏறினர் இட்டு நீந்த பைங்கிளிக் கிரங்கு கின்றார். 4870

க௪ இத்திறம் நிகழும் வேலை இமையவர் முனிவர் மற்றும்
முத்திறத் துலகத் தாரும் முறைமுறை விசும்பின் மொய்த்தார்
தொத்துறு மலருஞ் சாந்துஞ் சுண்ணமும் மணியுந் தூவி
வித்தக சேறி என்றார் வீரனும் விரைவ தானான். 4871

க௫ குறுமுனி குடித்த வேலை குப்புறு கொள்கைத் தாதல்
வெறுவிது விசயம் வைகும் விலங்கற்றோள் அலங்கல் வீர
சிறிதிதென் றிகழற் பாலை அல்லைநீ சேறி யென்றாங்
குறுவலித் துணைவர் சொன்னார் ஒருப்பட்டான் பொருப்பையொப்பான்

க௬ இலங்கையின் அளவிற் றன்றால் இவ்வுரு எடுத்த தோற்றம்
விலங்கவும் உளதன் றென்று விண்ணவர் வியந்து நோக்க
அலங்கல்தாழ் மார்ப முன்தாழ்த் தடித்துணை அழுத்த லோடும்
புலம்தெரி மலையும் தாளும் பூதலம் புக்க மாதோ. 4873

க௭ வால்விசைத் தெடுத்து வன்தாள் மடக்கிமார் பொடுக்கி மானத்
தோள்விசைத் துணைகள் பொங்கக் கழுத்தினைச் சுருக்கித் தூண்டிக்
கால்விசைத் திமைப்பில் லோர்க்கும் கட்புலம் தெரியா வண்ணம்
மேல்விசைத் தெழுந்தான் உச்சி விரிஞ்சனு டுரிஞ்ச வீரன். 4874

க௮ ஆயவன் எழுத லோடும் அரும்பணை மரங்கள் தாமும்
வேயுயர் குன்றும் வென்றி வேழமும் பிறவும் எல்லாம்
நாயகன் பணியீ தென்னா நளிர்கடல் இலங்கை தாமும்
பாய்வன என்ன வானம் படர்ந்தன பழுவ மான. 4875

க௯ விசையுடை அண்ணல் சென்ற வேகத்தால் எழுந்த குன்றம்
பசையுடை மரனும் மாவும் பல்லுயிர்க் குலமும் வல்லே
திசையுறச் சென்று சென்று செறிகடல் இலங்கை சேரும்
விசையில வாகித் தாழ்ந்து வீழ்ந்தன என்ன வீழ்ந்த. 4876

உ௰ மாவொடு மரமும் மண்ணும் வல்லியும் மற்றும் எல்லாம்
போவது புரிந்த வீரன் விசையினால் புணரி போர்க்கத்
தூவின கீழும் மேலும் தூர்ந்தன சுருதி யன்ன
சேவகன் சிறு முன்னம் சேதுவும் இயன்ற மாதோ. 4877

உக கீண்டது வேலை நன்னீர் கீழுறக் கிடந்த நாகர்
வேண்டிய உலகம் எல்லாம் வெளிப்பட மணிகள் மின்ன
ஆண்டகை அதனை நோக்கி அரவினுக் கரசன் வாழ்வும்
காண்தகு தவத்தன் ஆனேன் யானெனக் கருத்திற் கொண்டான்.

௨௨ வெய்துவான் சிறைபி னால்நீர் வேலையைக் கிழிய வீசி
நொய்தினால் அமுதங் கொண்ட நோன்மையை நுவலு நாகர்
உய்துநாம் என்ப தென்னே உறுவலிக் கலுழன் ஊழின்
எய்தினான் ஆமென் றஞ்சி அலக்கணுற் றிரியல் போனார்.

௨௩ துள்ளுறு மகர மீன்கள் துடிப்புறச் சுறவு தூங்க
ஒள்ளிய பனைமீன் துஞ்சத் திவலைய தூழிக் காலின்
வள்ளுகிர் வீரன் செல்லும் விசைபொரு மறுகி வாரி
தள்ளிய திரைகள் முந்துற் றிலங்கைமேல் தவழ்ந்த மாதோ.

௨௪ இடுக்குறும் பொருள்கள் என்னும் எண்திசை சுமந்த யானை
நடுக்குற விசும்பிற் செல்லும் நாயகன் தூதன் ஆகம்
ஒடுக்குறு கால வன்காற் றடியொடும் ஒடித்த அந்நாள்
முடுக்குறக் கடலிற் செல்லும் முத்தலைக் கிரியும் ஒத்தான்.

௨௫ கொட்புறு புரவித் தெய்வக் கூர்நுதிக் குலிசத் தாற்கும்
கட்புலங் கதுவ லாகா வேகத்தால் கடலும் மண்ணும்
உட்படக் கூடி அண்டம் உறவுள செலவின் ஒற்றைப்
புட்பக விமானந் தானவ் விலங்கைமேல் போவ தொத்தான்

௨௬ விண்ணவர் ஏத்த வேத முனிவர்கள் வியந்து வாழ்த்த
மண்ணவர் இறைஞ்சச் செல்லு மாருதி மறமுற் கூர
அண்ணல்வாள் அரக்கன் தன்னை அமுக்குவன் இன்னம் என்னக்
கண்ணுதல் ஒழியச் செல்லும் கயிலையங் கிரியும் ஒத்தான்.

௨௭ கேழுலா முழுநி லாவிற் கிளரொளி இருளைக் கீறப்
பாழிமா மேரு நாண விசும்பிடைப் படர்ந்த தோளான்
ஆழிசூழ் உலகம் எல்லாம் அருங்கனல் முருங்க உண்ணும்
ஊழிநாள் வடபால் தோன்றும் உவாமுழு மதியும் ஒத்தான்.

௨௮ மாணியாம் வேடந் தாங்கி மலரயற் கறிவு மாண்டோர்
ஆணியாய் உலகுக் கெல்லாம் அறப்பொருள் நிரப்பும் அண்ணல்
சேணுயர் நெடுநாள் தீர்ந்த திரிதலைச் சிறுவன் தன்னைக்
காணிய விரைவில் செல்லுங் கனகமால் வரையும் ஒத்தான்.

௨௯ மழைகிழித் துதிர மீன்கள் மறிகடல் பாய வானம்
குழைவுறத் திசைகள் கீற மேருவுங் குலுங்கக் கோட்டின்
முழைபுடைக் கிரிகள் முற்றும் முடிக்குவான் முடிவு காலக்
கழிவுறக் கடிதுர் வேகத் தாதையும் அனையன் ஆனான். 4886

௩௰ கடக்கைநா லைந்துபத்துத் தலைகளும் உடையான் தானை
அடக்கியைம் புலன்கள் வென்ற தவப்பயன் அறுதலாலே
கெடக்குறி யாகி மாகங் கிழக்கெழ வழக்கு நீங்கி
வடக்கெழுந் திலங்கை செல்லும் பருதிவா னவனும் ஒத்தான்.

௩௧ புறத்துறல் அஞ்சி வேலை அரணம்புக் குறைதல் போக்கி
மறத்தொழில் அரக்கன் வாழும் மாநகர் மனுவின் வந்த
திறத்தகை இராமன் என்னும் சேவகற் பற்றிச் செல்லும்
மறத்தகை அரசன் தன்போர் ஆழியும் அனையன் ஆனான்.

௩௨ அடலுலாந் திகிரி மாயற் கமைந்ததன் ஆற்றல் காட்டக்
குடரெலாம் அவுணர் சிந்தக் குன்றெனக் குறித்து நின்ற
திடரெலாம் தொடர்ந்துசெல்லச் சேண்விசும் பொதுங்கத்தெய்வக்
கடலெலாங் கடக்கத் தாவுங் கலுழனும் அனையன் ஆனான்.

௩௩ நாலினோ டுலக மூன்றும் நடுக்குற அடுக்கு நாகர்
மேலின்மேல் நின்ற காலுஞ் சென்றகா லத்தின் விண்டு
காலினால் அளந்த வான முகட்டையுங் கடக்கக் கால
வாலினால் அளந்தான் என்று வானவர் மருளச் சென்றான்.

௩௪ வெளித்துப்பின் வேலை தாவும் வீரன்வால் வேத மெய்க்கும்
அளித்துப்பின் அனுமன் என்னும் அருந்துணை பெற்ற தாயும்
களித்துப்புன் தொழின்மேல் நின்ற அரக்கர்கண் ணுறுவர் என்ன
ஒளித்துப்பின் செல்லும் கால பாசத்தை ஒத்த தன்றே. 4891

௩௫ மேருவை முழுதுஞ் சூழ்ந்து மீதுற்ற வேக நாகம்
கார்நிறத் தண்ணல் ஏவக் கலுழன்வந் துற்ற காலைச்
சோர்வுறு மனத்த ஆகிச் சுற்றிய சுற்று நீங்கிப்
பேர்வுறு கின்ற வாறும் ஒத்ததப் பிறங்கு பேழ்வால். 4892

௩௬ குன்றொடு குணிக்குங் கொற்றக் குவவுத்தோட் குரக்குச் சீயம்
சென்றுறு வேகத் திண்கால் எறிதரத் தேவர் வைகும்
மின்றொடர் வானத் தான விமானங்கள் விசையில் தம்மில்
ஒன்றொடொன் றுடையத் தாக்கி மாக்கடல் உற்ற மாதோ.

௩௭ வலங்கையின் வயிர வேதி வைத்தவன் வைகு நாடும்
கலங்குற எங்கு வான்தன் கருத்தெனச் சொல் என்னும் கற்பால்
விலங்கயில் எயிற்று வீரன் முடுகிய வேகம் வெய்யோன்
இலங்கையின் அளவன் றென்ன இம்பர்நா டிரிந்த தன்றே.

௩௮ ஓசனை உலப்பி லாத உடம்பமைந் துடைய என்னத்
தேசமும் நூலுஞ் சொல்லுந் திமிங்கில கிலங்க ளோடும்
ஆசையை உற்ற வேலை கலங்கலன் றண்ணல் யாக்கை
வீசிய காலின் வீய்ந்து மிதந்தன மீன்கள் எல்லாம். 4895

௩௯ பொருவரும் உருவத் தன்னான் போகின்ற போது வேகம்
தருவன தடக்கை தள்ளா நிமிர்ச்சிய தம்முள் ஒப்ப
ஒருவருங் குணத்து வள்ளல் ஒருயிர்த் தம்பி என்னும்
இருவரும் முன்னர்ச் சென்றால் ஒத்ததவ் விரண்டு பாலும்.

௪௰ * இந்நாகம் அன்னான் எறிகாலென ஏகும் வேலை
தென்னாகை மண்ணிற் செறிகீழ்த்திசைக் காவல் செய்யுங்
கைநாகம் அன்னான் கடல்வந்ததொர் காட்சி தோன்ற
மைநாகம் என்னும் மலைவானுற வந்த தன்றே. 4897

௪௧ மீயோங்கு செம்பொன் முடியாயிர மின்னி மைப்ப
ஓயா அருவித்திர ளுத்தரி கத்தை ஒப்ப
தீயோர் உளராகிய காலவர் தீய்மை தீர்ப்பான்
மாயோன் மகரக்கட னின்றெழு மாண்ப தாகி. 4898

௪௨ நூலேந்து கேள்வி நுகரார்புலன் நோக்கல் உற்றார்
போலேந்தி நின்ற தனியான்மெய் பொருது நீங்கக்
காலாழ்ந் தழுந்திக் கடல்புக்குழிக் கச்ச மாகி
மாலேந்த ஓங்கும் நெடுமந்தரம் தன்னை மான. 4899

௪௩ தள்ளற் கருநற் சிறைமாடு தழைப்பொ டோங்க
எள்ளற் கருநன் னிறம்எல்லை யிலாது பொங்க
வள்ளற் கடலைக் கெடநீக்கி மருந்து வவ்வி
உள்ளூற் றெழுமோர் உவணத்தர சேயும் ஒத்த. 4900

௪௪ ஆன்றாழ் நெடுநீரிடை யாதியொ டந்த மாகித்
தோன்றாது நின்றான்அருள் தோன்றிட முந்து தோன்றும்
மூன்றா முலகத் தொடும்மூற் றுயிராய முற்றும்
ஈன்றானை ஈன்ற சுவணத்தனி அண்ட மென்ன. 4901

௪௫ இந்நீரின் என்னைத்தரு மெந்தையை எய்தி அன்றிச்
சென்னீர்மை செய்யேன்எனச் சிந்தனை செய்து நொய்தின்
அந்நீரில் வந்தமுத லந்தணன் ஆதி நாளின்
முந்நீரின் மூழ்கித் தவமுற்றி முளைத்த வாபோல். 4902

---

* இவ்வடையாளம் செய்யுள்நடையின் வேறுபாட்டை உணர்த்தும்.

௪௬ பூவால் இடையூறு புகுந்து பொருது நெஞ்சிற்
கோவா முனிசீறிட வேலை குளித்த வெல்லாம்
மூவா முதனாயகன் மீள முயன்ற அந்நாள்
தேவா சுரர்வேலையில் வந்தெழு திங்க ளென்ன. 4903

௪௭ நிறங்குங் குமம்ஒப்பன நீல்நிறம் வாய்ந்த நீரின்
இறங்கும் பவளக்கொடி சுற்றின செம்பொன் ஏய்ந்த
பிறங்கும் சிகரப்படர் முன்றில் தொறும் பிணைவோ
டுறங்கும் மகரங்கள் உயிர்ப்பொடு ணர்ந்து பேர. 4904

௪௮ கூன்சூன் முதிரிப்பி குறைக்க நிறைத்த பாசி
வான்சூன் மழையொப்ப வயங்கு பளிங்கு முன்றில்
தான்சூலி நாளில் தகைமுத்தம் உயிர்த்த சங்கம்
மீன்சூழ்வரும் அம்முழு வெண்மதி வீறு கீற. 4905

௪௯ பல்லாயிரம் ஆயிரங் காசினம் பாடிமைக்குங்
கல்லார் சிமயத் தடங்கைத்தல நீண்டு காட்டத்
தொல்லார் கலியுட்புக மூழ்கி வயங்கு தோற்றத்
தெல்லாமணி ஈட்டம் முகந்தெழ வானும் என்ன. 4906

௫௰ மலையிற்பொலி மாக நெடுங்கொடி மாலை ஏய்ப்ப
விலையிற்பொலி வெள்ளருவித்திரள் தூங்கி வீழ
நினைவிற்கடல் ஊடெழ லோடும் உணர்ந்து நீங்காச்
சுனையிற் பனைமீன் திமிலோடு தொடர்ந்து துள்ள. 4907

௫௧ கொடுநாலொ டிரண்டு குலப்பகை குற்ற மூன்றும்
சுடுஞானம் வெளிப்பட உய்த்த துயக்கி லார்போல்
விடநாகம் முழைத்தலை விம்மல் உழந்து வீங்கி
நெடுநாள் பொறையுற்ற உயிர்ப்பு நிமிர்ந்து நிற்ப. 4908

௫௨ எழுந்தோடி விண்ணோடு மண்ணெணுக்க இலங்கு மாடி
உழுந்தோடு காலத்திடை உம்பரின் உம்பர் ஓங்கி
கொழுந்தோடி நின்றநெடுங் குன்றை வியந்து நோக்கி
அழுந்தாமனத் தண்ணலி தென்கொ லெனா அயிர்த்தான்.

௫௩ நீர்மேற்படர் நன்னெடுங் குன்றம் நிமிர்ந்து நிற்றல்
சீர்மேற்பட ராகிதனச் சிந்தை உணர்ந்து செல்வான்
வேர்மேற்பட வன்றலை கீழ்ப்பட நூக்கி விண்ணோர்
ஊர்மேற்பட ரக்கடி தும்பரி னூடு பாய்ந்தான். 4910

௫௪ உந்தாமுன் உலைந்துயர் வேலை ஒளித்த குன்றம்
சிந்தாகுலம் உற்றது பின்னரும் தீர்வில் அன்பால்
வந்தோங்கி ஆண்டோர் சிறுமானிட வேட மாகி
எந்தாய்இது கேளென இன்ன திசைத்த தன்றே. 4911

௫௫ வேற்றுப்புலத் தோரெனல் ஐய விலங்கல் எல்லாம்
மாற்றுச்சிறை வாசவன் வச்சிர மான தேவி
வீற்றுப்பட நூறிய வேலையின் வேலை உய்த்து
காற்றுக்கிறை வன்னெனைக் காத்தனன் அன்பு காந்த. 4912

௫௬ அன்னானருங் காதலன் ஆதலின் அன்பு தூண்ட
என்னாலுனக் கீண்டு செயற்குரித் தாய தன்மை
பொன்னார்சிக ரத்திடை ஆறினை போதி என்றே
உன்னாவுயர்ந் தேனுயர் விற்கு முயர்ந்த தோளாய். 4913

௫௭ கார்மேக வண்ணன்பணி பூண்டவன் காலின் மைந்தன்
தேர்வான்வரு கின்றனன் சீதையைத் தேவர் உய்யப்
பேர்வானயல் சேறி இநிற்பெறும் பேறில் என்ன
நீர்வேலையும் இன்ன துரைத்தது நீதி நின்றாய். 4914

௫௮ நற்றாயினு நல்லன் நமக்கிவன் என்று நாடி
இற்றேயிறை எய்தி இசைந்தது கோடி என்னாப்
பொற்றாரகல் மார்பகம் இல்லுழை வந்த போழ்தின்
உற்றார்செயல் முற்றுமுண் டோவென உற்று வைத்தான்.

௫௯ உரைத்தானுரை யாலிவன் ஊறிலன் என்ப துன்னி
விரைத்தாமரை வாண்முகம் விட்டு விளங்க வீரன்
சிரித்தானள வேசிரித் தத்திசை செல்ல நோக்கி
வரைத்தா ணெடும்பொற் குடுமித் தலைமாடு கொண்டான்.

௬௰ வருந்தேனது என்துணை வானவன் வைத்த காதல்
அருந்தேனினி யாதுமென் ஆசை நிரப்பி அல்லால்
பெருந்தேன்பிழி சாரல்நின் அன்பு பிணித்த போதே
இருந்தேனுகர்ந் தேனிதன் மேலினி ஈய்வ தென்னோ.

௬௧ முன்பிற்சிறந் தாரிடை யுள்ளவர் காதல் முற்றப்
பின்பிற்சிறந் தார்குணத் தென்றிவர் பெற்ற யாக்கைக்
கென்பிற்சிறந் தாயதொர் ஊற்றமுண் டென்ன லாமே
அன்பிற்சிறந் தாயதொர் பூசனை யார்கண் உண்டே. 4918

௬௨ ஈண்டேகடி தேகி இலங்கை விலங்கல் எய்தி
ஆண்டானடி மைத்தொழில் ஆற்றலின் ஆற்றல் உண்டே
மீண்டானுகர் வேனுன் விருந்தென வேண்டி மெய்ம்மை
பூண்டானவன் கட்புலம் பிற்பட முன்பு போனுன். 4919

௬௩ செவ்வான் கதிருங் குளிர்திங்களுந் தேவர் வைகும்
வெவ்வேறுவி மானமும் மீனொடு மேக மற்றும்
எவ்வாயுல கத்தவும் ஈண்டி யிரிந்த தம்மில்
ஒவ்வாதன ஒத்திட ஊழிவெங் காற்றும் ஒத்தான். 4920

௬௪ நீர்மேற் கடன்மே னிமிர்கின்ற நிமிர்ச்சி நோக்காப்
பார்மேல்தவழ் சேவடி பார்நட வாப்ப தத்தென்
தேர்மேல்குதி கொண்டவன் இத்திறஞ் சிந்தை செய்தான்
ஆர்மேல்கொ லென்றெண்ணி அருக்கனும் ஐயம் உற்றான்.

௬௫ வாளொத்தொளிர் வாலெயி றாழின் மருங்கி மைப்ப
நீளொத்துயர் தோளின் விசும்பு நிறைந்த மெய்யன்
கோளொத்தவன் மேனி விசும்பிரு கூறு செய்யும்
நாளொத்தது மேலொளி கீழிருள் உற்ற ஞாலம். 4922

௬௬ மூன்றுற்றத லத்திடை முற்றிய துன்பம் வீய்ப்பான்
ஏன்றுற்றுவந் தான்வலி மெய்ம்மை உணர்த்து நீயென்
றான்றுற்றவா னோர்குறை நேர அரக்கி ஆகித்
தோன்றுற்றுநின் றாள்சுர சைப்பெயர்ச் சிந்தை தூயாள்.

௬௭ பேழ்வாயொர் அரக்கி உருக்கொடு பெட்பின் ஓங்கிக்
கோள்வாயரி யின்குலத் தாய்க்கொடுங் கூற்றும் உட்க
வாழ்வாயெனக் காமிட மாய்வரு வாய்கொல் என்ன
நீள்வான்விசும் புந்தன தாச்சி நெருக்கி நின்றாள். 4924

௬௮ தீயேயென லாய பசிப்பிணி தீர்த்தல் செய்வான்
ஆயேவிரை வுற்றெனை அன்பின் வழாமை யான
நீயேயினி வந்து நிணங்கொள் பிணங்கெ யிற்றின்
வாயேபுகு வாய்வழி மற்றிலை வானின் என்றாள். 4925

௬௯ பெண்பா லொருநீ பசிப்பீடை பொறுத்தல் போல
உண்பாயெனை தாக்கையை யானுத வற்கு நேர்வன்
விண்பாலவர் நாயகன் ஏவல் இழைத்து மீண்டால்
நண்பானுனைச் சொல்லினன் நல்லறி வாளன் நக்கான். 4926

௭௰ காய்ந்தேழுடை கங்களுங் காணாநின் யாக்கை தன்னை
ஆர்ந்தேபசி தீர்வெனி தாணையென் றன்னள் சொன்னாள்
ஓர்ந்தானும் உவந்தொரு வேனின தூழில் பேழ்வாய்
சேர்ந்தேகுகின் றேனெனை ஆமெனில் தின்றி டென்றான்.

௭௧ அக்காலை அரக்கியும் அண்டம் அனந்த மாகப்
புக்கானிறை யாத புழைப்பெரும் வாய் திறந்து
விக்காது விழுங்கநின் றாளது நோக்கி வீரன்
திக்காநெறி வாய்சிறி தாம்வகை சேணில் நீண்டான். 4928

௭௨ நீண்டானுட னேசுருங் காநிமிர் வாயி டத்தின்
ஊண்டானென உற்றொரு யிர்ப்புயி ராத முன்னர்
மீண்டானது கண்டனர் விண்ணுறை வோர்கள் எம்மை
ஆண்டானிவ னென்றலர் தூய்நெடி தாசி சொன்னார். 4929

௭௩ மின்மேற்படர் மெய்யின தானவள் வீக்க நீங்கித்
தன்மேனிய ளாயவள் தாயினும் அன்பு தாழ
என்மேன்முடி யாதன என்றினி தேத்தி நின்றாள்
பொன்மேனிய னுமினி தாசி புனைந்து போனான். 4930

௭௪ கீதங்கள் இயம்பினர் கின்னரர் கீதம் நின்ற
பேதங்கள் இசைத்தன பேதையர் ஆடல்மிக்க
பூதங்கள் தொடர்ந்து புகழ்ந்தன பூசு ரேசர்
வேதங்கள் இயம்பினர் தென்றல் விருந்து செய்ய. 4931

௭௫ மந்தார முந்து மகரந்த மலர்ந்த வாடை
செந்தாமரை வாண்முகத் துச்செறி வேர் சிதைப்பத்
தந்தாமுலை கத்திடை விஞ்சையர் பாணி தாழக்
கந்தாரவீ ணைத்தொனி செஞ்செவிக் காது நுங்க. 4932

௭௬ * பரவுக்குரல் பணிலக்குரல் பணையின்குரல் பறையின்
விரவுக்குரல் சுருதிக்குரல் விண்ணோர்களும் விரவா
அரவக்குலம் உயிருட்கிட அசனிக்குரல் அடுபோர்
உரவுக்கரு டனுமுட்கிட உடனுட்கின உலகம். 4933

௭௭ * வெங்கார் நிறப்புணரி வேறெயும் ஒன்றப்
பொங்கார் கலிப்புனல் தரப்பொலிவ தேபோல்
இங்கார் கடத்திரென என்னா எழுந்தாள்
அங்கார தாரைபிறி தாரலம் அன்னாள். 4934

எஅ காதக் கடுங்குறி கணக்கிறுதி கண்ணாள்
பாதச் சிலம்பினொலி வேலையொலி பட்ப
வேதக் கொழுஞ்சுடரை நாடிநெறி மேல்நாள்
ஓதத்தி னோடுமது காபிடவரை ஒத்தாள். 4935

எகூ துண்டப் பிறைத்துணை யெனச்சுடர் எயிற்றாள்
கண்டத் திடைக்கறை யுடைக்கடவுள் கைம்மா
முண்டத் துரித்தஉடை யாள்முளரி வந்தான்
அண்டத்தி னுக்குறை அமைத்தனைய வாயாள். 4936

அ௰ நின்றாள் நெடுங்கடல் நிறைந்தநெடு நீர்தன்
வன்தாள் அலம்பமுடி வான்முகடு வவ்வ
அன்றாய் திறத்தவன் அறத்தைஅரு ளோடும்
தின்றாள் ஒருத்திஇவள் என்பது தெரிந்தான். 4937

அக பேழ்வாய் அகத்தலகு பேருலகை மூடும்
நீள்வான் அகத்தினிடை ஏகுநெறி காணான்
வாழ்வான் அனுக்கனவள் தாழ்பில வயிற்றைப்
போழ்வான் நினைந்தினைய வாய்மொழி புகன்றான். 4938

அஉ சாயா வரந்தழலி னுய்தழிய பின்னும்
ஓயா உயர்ந்தவிசை கண்டுமுணர் கில்லாய்
வாயால் அளந்துநெடு வான்வழி அடைத்தாய்
நீயாரை என்னைஇவண் நின்றநிலை என்றான். 4939

அ௩ பெண்பால் எனக்கருது பெற்றியொழி உற்றால்
விண்பால் அவர்க்குமுயிர் வீடுவது மெய்யே
கண்பால் அடுத்தஉயிர் காலன்வரு மேனும்
உண்பால் அருத்திய தொழிப்பதரி தென்றாள். 4940

அச திறந்தாள் வயிற்றின்வழி அண்ணலிடை சென்றான்
அறந்தான் அரற்றிய தயர்த்தமரர் எய்த்தார்
இறந்தான் எனக்கொடொர் இமைப்பதனின் முன்னம்
பிறந்தான் எனப்பெரிய கோளரி பெயர்ந்தான். 4941

அரு கள்வாய் அரக்கிகத றக்குடர் கணத்தில்
கொள்வார் கடக்கையன் விசும்பின்மிசை கொண்டான்
முள்வாழ் பொருப்பின்முழை எய்திமிக நொய்தின்
உள்வாழ் அராக்கொடெழ நின்கலுழன் ஒத்தான். 4942

௮௬ சாகா [1]மிரு கத்தலைவ ரிற்றிலதம் அன்னான்
ஏகா அரக் கிகுடர் கொண்டுடன் எழுந்தான்
மாகால்வி சைக்கவட மண்ணிலுற வாலோ
டாகாசமுற் றகத லிக்குவமை ஆனான். 4943

௮௭ ஆர்த்தார்கள் வானவர்கள் தானவர் அழிந்தா
வேர்த்தார் விரிஞ்சனும் வியந்துமலர் வெள்ளம்
தூர்த்தான் அகன்கயிலை ஆளிதுயில் வோனும்
பார்த்தார் முனித்தலைவர் ஆசிகள் பகர்ந்தார். 4944

௮௮ மாண்டாள் அரக்கியவள் வாய்வயிறு காறும்
கீண்டான் இமைப்பிடையின் மேருகிரி கீழாய்
நீண்டான் வயக்கதி நினைப்பின்னெடி தென்னப்
பூண்டான் அருக்கனுயர் வானின்வழி [2] போனான். 4945

௮௯ சொற்றார்கள் சொற்றதுணை பல்தொகைய தன்றே
முற்று முடிந்தநெடு வானினிடை முன்னீர்
இற்றுவி எற்றெனினும் யானினி இலங்கை
உற்றால் விலக்குமிடை யூறென உணர்ந்தான். 4946

௯௰ ஊறுகடி தூறுவன ஊறிலறம் உன்னாத்
தேறலில் அரக்கர்புரி தீமையவை தீர
ஏறும்வகை எங்குள இராமவென எல்லாம்
மாறுமதில் மாறுபிறி தில்லென வலித்தான். 4947

௯௧ * தசும்புடைக் கனக நாஞ்சில் கடிமதில் தணித்து நோக்கான்
அசும்புடைப் பிரசத் தெய்வக் கற்பக நாட்டை அண்மி
விசும்பிடைச் செல்லும் வீரன் விலங்கெறி இலங்கை மூதூர்
பசுஞ்சுடர்ச் சோலைத் தாங்கோர் பவளமால் வரையிற் பாய்ந்தான்.

௯௨ மேக்குறச் செல்வோன் பாய வேலைமேல் இலங்கை வெற்பு
தாக்குறத் தங்கு மிங்குந் தள்ளுறத் துளங்கு நோன்மை
போக்குறற் கிடையூ றாகப் புயமொடும் பொதிந்த வாடை
தாக்குறத் தகர்ந்து சாயும் கலமென ஆயிற் றன்றே. 4949

௯௩ மண்ணடி உற்று மீது வானுறு வரம்பின் தன்மை
எண்ணடி உற்ற குன்றின் நிலைத்துநின் றுற்று நோக்கி
விண்ணிடை உலகம் என்னும் மெல்லியல் மேனி நோக்கக்
கண்ணடி வைத்த தன்ன இலங்கையைத் தெரியக் கண்டான்.

(பிரதி) 1 மிறு ; 2 போன.

௬௪ நன்னகர் தன்னை நோக்கி நளினக்கை மறித்து நாகர்
பொன்னகர் இதனை ஒக்கும் என்பது புல்லி தம்மா
அன்னகர் இதனின்நன்றே அண்டத்தை முழுதும் ஆள்வான்
இன்னகர் இருந்து வாழ்வான் இதுஅதற் கேது என்றான்.

௬௫ மாண்டதோர் தவத்திற் றாமென் றுணர்த்துதல் வாய்மைத் தன்றால்
வேண்டிய வேண்டும் செல்வம் வெறுப்பின்றி விழைந்த துய்க்கும்
ஈண்டிரும் போக இன்பம் ஈறில தியாண்டு காண்டும்
ஆண்டது துறக்கம் அஃதே அருமறைத் துணிவும் அம்மா.

௬௬ உட்புலம் எழுநூறென்பர் ஓசனை உலகு மூன்றில்
தெட்புறு பொருள்க ளெல்லாம் இதனுழைச் செறிந்த தென்றால்
நுட்புலன் நுணங்கு கேள்வி நுழைவினர் அறிவின் ஓங்கும்
கட்புல வரம்பிற் றன்றே காட்சியின் கரையிற் றம்மா. 4953

க. கடல்தாவு படலம் முற்றும்

உ. நிலாத் தோற்று படலம்

௧ பொன்கொண் டிழைத்து மணியைக்கொடு பொதிந்து
மின்கொண் டமைத்து வெயிலைக்கொடு சமைத்த
என்கொண் டியற்றிய எனத்தெரி விலாத
வன்கொண் டல்தாவி மதிமுட்டுவன மாடம். 4954

௨ நாகாலை யங்களொடு நாகருல குந்தம்
பாகார்ம ருங்குதுயில் என்னஉயிர் பண்ப
ஆகாயம் அஞ்சஅகல் மேருவை அனுக்கும்
மாகால்வ ழங்குசிறு தென்றல்வர நின்ற. 4955

௩ மாகாரின் மின்கொடி மடக்கினர் அடுக்கி
மீகாரம் எங்கணும் நறுந்துகள் விளக்கி
ஆகாய கங்கையினை அங்கையினில் அள்ளிப்
பாகாய செஞ்சொலவர் வீசுபடு காரம். 4956

௪ * பஞ்சி ஊட்டிய பாடமை கிண்கிணிப் பதுமச்
செஞ்செ விச்செழும் பவளத்தின் கொழுஞ்சுடர் சிதறி
மஞ்சின் அஞ்சன நிறமரைத் தாக்கியர் வடித்த
அஞ்சில் ஓதியோ டமைவன அவைதனக் குவமை. 4957

ரு நான நாண்மலர்க் கற்பக நறுவிரை நான்ற
பானம் வாயுற வெறுத்ததாள் ஆறுடைப் பறவை
தேன வாவிரைச் செழுங்கழு நீர்த்துயில் செய்ய
வான யாறுதம் அரமியத் தலந்தொறு மடுப்ப. 4958

சா குழலும் வீணையும் யாழுமென் றினையன குழைய
மழலை மென்மொழி கிளிக்கிருந் தளிக்கின்ற மகளிர்
சுழலும் நன்னெடுந் தடமணிச் சுவர்தொறும் துவன்று
நிழலுந் தம்மையும் மெய்ம்மைநின் றறிவரும் நிலைய. 4959

எ இனைய மாடங்கள் இந்திரற் கமைவர எடுத்து
வனையு மாட்சிய என்னிலச் சொல்லுமா சுண்ணும்
அனைய தாமெனில் அரக்கர்தந் திருவுக்கும் அளவை
நினைய லாமன்றி உவமையும் அன்னதாய் நிற்கும். 4960

அ மணிகள் அத்துணை பெரியன மால்திரு மார்பின்
அணியுங் காசினும் அகன்றன உளவெனில் அரிதால்
திணியும் நன்னெடுந் திருநகர் தெய்வமாத் தச்சன்
துணிவின் வந்தவன் தொட்டழ கிழைத்தவத் தொழில்கள்.

கூ மரம டங்கலும் கற்பகம் மனையெலாம் கனகம்
அரம டந்தையர் சிலதியர் அரக்கியர்க் கமரர்
உரம டங்கிவந் துழையராய் உழல்குவர் ஒருவர்
தரம டங்குவ தன்றிது தவஞ்செயத் தகுமால். 4962

ய போரி யன்றன தோற்றவென் றிகழ்தலிற் புறம்போய்
நேரி யன்றவன் திசைதொறும் நின்றமா நிற்க
ஆரி யன்தனித் தெய்வமாக் களிறுமோர் ஆழிச்
சூரி யன்தனித் தேருமே இந்நகர்த் தொகாத. 4963

கக தேவ ரென்பவர் யாவரும் திருநகர்க் கிறைவற்
கேவல் செய்பவர் செய்கிலா தவரெவர் என்னின்
மூவர் தம்முளும் ஒருவனங் குழையனும் முயலில்
தாவில் மாதவம் அல்லது பிறிதொன்று தகுமோ. 4964

கஉ வாழும் மன்னுயிர் யாவையும் ஒருவழி வாழும்
ஊழி நாயகன் திருவயி றொத்துள திவ்வூர்
ஆழி அண்டத்தின் அருக்கன்தன் அலங்குதேர்ப் புரவி
ஏழும் அல்லதீங் கீண்டுள குதிரைகள் எல்லாம். 4965

கங தழங்கு பேரியின் ஆர்கலி தகைநெடுங் களிறு
முழங்கும் ஓதையின் மூரிநீர் முழக்கொடு முழங்கும்
கொழுங்கு ழற்புதுக் குதலையர் நூபுரக் குரலின்
வழங்கு மேகலைக் கிண்கிணி வயின்றொறும் அறையும். 4966

கச மரக தத்தினு மற்றுள மணியினும் அமைத்த
குரக தத்தனித் தேரெலாம் உறைந்திடுங் கூடம்
இரவி வெட்கிட இமைக்கின்ற இயற்கைய என்றால்
நரகம் ஒக்குமால் நன்னெடுஞ் சுவர்க்கமிந் நகர்க்கு. 4967

கரு திருகு வெஞ்சினத் தரக்கருங் கருநிறந் தீர்ந்தார்
அருகு போகின்ற திங்களும் மறுவற்ற அழகைப்
பருகும் நன்னகர் துன்னொளி பரத்தலிற் பசும்பொன்
உருகு கின்றது போன்றுள துலகுசூழ் உவரி. 4968

கசு தேனுஞ் சாந்தமும் மான்மதச் செறிநறும் சேறும்
வான நாண்மலர்க் கற்பக மலர்களும் வயமாத்
தான வாரியில் நீரொடு மடுத்தலில் தழீஇய
மீனுந் தானுமோர் வெறிமணங் கமழுமவ் வேலை. 4969

கஎ அண்டம் முற்றவும் விழுங்கிருள் அகற்றிநின் றகல்வான்
கண்ட அத்தனிக் கடிநகர் நெடுமனைக் கதிர்கட்
குண்ட மாற்றமொன் றுரைப்பரி தொப்பிடிற் றன்முன்
விண்ட வாய்ச்சிறு மின்மினி என்னவும் விளங்கான். 4970

கஅ முன்னம் யாவரும் இராவணன் முனியுமென் றெண்ணிப்
பொன்னின் மாநகர் மீச்செலாக் கதிரென்பர் புலவர்
கன்னி யாரையின் உயர்ச்சியென் றிதுகடப் பரிதென்
றுன்னி நாள்தொறும் விலகினன் போதலை உணரார். 4971

கக தெய்வத் தச்சனைப் புகழ்துமோ செங்கண்வாள் அரக்கன்
மெய்யொத் தாற்றிய தவத்தையே வியத்துமோ விதியோன்
அய்யப் பாடிலா வரத்தையே மதித்துமோ அறியாத்
தொய்யல் சிந்தையேன் யாவரை யாதெனத் துதிப்பேன்.

உம *வானும் நிலனும் எனும் மற்றினும் மாறும் உண்டோ
கானும் பொழிலும் இவை செங்கன கத்தி னாலும்
ஏனை மணி யாலும் இயற்றிய வேனும் யாவும்
தேனும் மலரும் கனியுந் தரச் செய்த செய்கை. 4973

உக * நீரும் வையமும் நெருப்புமேல் நிமிர்நெடுங் காலும்
மாரி வானமும் வழங்கல வாகுந்தன் வளர்ச்சி
ஓரி நன்னெடுங் கோபுரத் துயர்ச்சிகண் டுணர்ந்தால்
மேரு எங்ஙனம் உட்குமோ வுடன் முற்றும் வெட்கி. 4974

உஉ தீய செய்பவர் அமரரால் அனையவர் சேரும்
வாயில் இல்லதோர் வரம்பமைக் குவனென மதியாக்
காயம் என்னுமக் கணக்கறு பதத்தையுங் கடப்ப
ஏயும் நன்மதில் இட்டனன் [1]கயிலையன் றெடுத்தான். 4975

உ௩ கறங்கு கால்புகா கார்புகா கதிர்புகா கனலி
மறம்பு காவெனின் வானவர் புகாரெனல் வம்போ
திறம்பு காலத்து யாவையுஞ் சிதைபினுஞ் சிதையா
அறம்பு காமையர்ல் அழியுமிப் பதியென அயிர்த்தான்.

உச கொண்டல் வான்றிரைக் குரைகடல் இடையதாய்க் குடுமி
எண்த வாவிசும் பெட்டநின் றிமைக்கின்ற இயல்பால்
பண்டை நாகணைப் பள்ளியான் உந்தியிற் பயந்த
அண்ட மேயுமொத் திருந்ததவ் வணிநகர் அமைதி. 4977

உரு பாடு வார்பலர் எண்ணின்மற் றவரினும் பலரால்
ஆடு வாரெனின் அவரினும் பலருளர் அமைதி
கூடு வாரிடை இன்னியங் கொட்டுவார் வீடில்
வீடு காண்குறுந் தேவரால் விழுநடங் காண்பார். 4978

உசா வான மாதரோ டிகலுவார் விஞ்சையர் மகளிர்
ஆன மாதரோ டாடுவார் இயக்கியர் அவரைச்
சோனை வார்குழல் அரக்கியர் தொடருவார் தொடர்ந்தால்
ஏனை நாகியர் அருநடச் சதியமைத் திடுவார். 4979

உஎ இழையும் ஆடையும் மாலையுஞ் சாந்தமும் ஏந்தி
உழையர் என்னநின் றுதவுவார் அமரர்தம் மகளிர்
விழையும் போகமே ஈங்கிது வாய்கொடு விளம்பில்
குழையும் நெஞ்சினுல் நினைப்பினும் மாசென்று கொள்ளும்:

உஅ பொன்னின் மால்வரை மேன்மழை பொருந்தின பொருவ
உன்னி நான்முகத் தொருவனின் றாழ்முறை உரைப்பப்
பன்னி நாள்பல பணியுழந் தரிதினிற் படைத்தான்
சொன்ன வானவத் தச்சனும் இந்நகர் துதிப்பான். 4981

---

1 பிரதி : கயிலையென்

௨௯ மகர வீணையின் மந்திர கீதத்தின் மறைந்த
சகர வேலையின் ஆர்கலி திசைமுகந் தட்டவும்
சிகர மாளிகைத் தலந்தொறும் மடந்தையர் தீற்றும்
அகரு தூமத்தின் அழுந்தின முகிற்குலம் அனைத்தும். 4982

௩௰ பளிக்கு மாளிகைத் தலந்தொறும் இடந்தொறும் பசுந்தேன்
துளிக்குங் கற்பகத் தண்ணறுஞ் சோலைகள் தோறும்
அளிக்குந் தேறலுண் டாடினர் பாடினர் ஆகிக்
களிக்கின் றாரலால் கவல்கின்றார் ஒருவரைக் காணேம். 4983

௩௧ தேறல் மாந்தினர் தேனிசை மாந்தினர் செவ்வாய்
ஊறல் மாந்தினர் இன்னுரை மாந்தினர் ஊடல்
கூறல் மாந்தினர் அனையவர்த் தொழுதவர் கோபத்
தாறல் மாந்தினர் அரக்கியர்க் குயிரன்ன அரக்கர். 4984

௩௨ எறித்த குங்குமத் திளமுலை எழுதிய தொயில்கள்
கறுத்த மேனியில் பொலிந்தன ஊடலில் கனன்று
மறிக்கண் நோக்கியர் மலரடிப் பங்கயப் பஞ்சில்
குறித்த கோலங்கள் பொலிந்தில அரக்கர்தங் குஞ்சி. 4985

௩௩ விளரிச் சொல்லியர் கோதையால் வேலையுள் மிடைந்த
பவளக் காடெனப் பொலிந்தது படைநெடுங் கண்ணால்
குவளைக் கோட்டகங் கடுத்தது குளிர்முகக் குழுவால்
முளரிக் கானகம் ஆனது முழங்குநீர் இலங்கை. 4986

௩௪ *எழுந்தனர் திரிந்து வைகும் இடத்ததாய் இன்று காறுங்
கிழிந்தில அண்டம் என்னும் இதனையே கிளப்ப தல்லால்
அழிந்துநின் றுவ தென்னே மலருளோன் ஆதி யாக
ஒழிந்தவே றுயிர்கள் எல்லாம் அரக்கருக் குறையும் போதா.

௩௫ காயத்தால் பெரியர் வீரங் கணக்கிலார் உலகங் கல்லும்
ஆயத்தார் வரத்தின் தன்மை அளவிற்கும் அறிதல் தேற்றார்
மாயத்தார் நகர்க்கெங் கேனும் வரம்புமுண் டாமோ மற்றோர்
தேயத்தோர் தேயஞ்சேறல் தெருவிலோர் தெருவிற் சேறல்.

௩௬ கழலுலாங் காலுங் கால வேலுலாங் கையுங் காந்தும்
அழலுலாங் கண்ணும் இல்லா ஆடவர் இல்லை அன்னார்
குழலுலாங் களிவண் டார்க்குங் குஞ்சியால் பஞ்சி குன்றா
மழலையாழ் குதலைச் செவ்வாய் மாதரும் இல்லை மாதோ.

௩௭ கள்ளுறக் கனிந்த பங்கி அரக்கரைக் கடுத்த காதல்
புள்ளுறத் தொடரு மேனி புலாலுறக் கடிது போவ
வெள்ளுறுப் பெயிற்ற செய்ய தலையின கரிய மெய்ய
உள்ளுறக் குணித்த குன்றின் உயர்ச்சிய ஓடை யானை. 4990

௩௮ வள்ளிநுண் மருங்குல் அன்ன வானவர் மகளிர் உள்ளம்
தள்ளுறப் பாணி தள்ளா நடம்புரி தடங்கண் மாதர்
வெள்ளியமுறுவல் தோன்றும் நகையர்தாம் வெள்குகின்றார்
கள்ளிடை அரக்கர் மாதர் களித்திடுங் குரவை காண்பார்.

௩௯ ஒறுத்தலோ நிற்க மற்றோர் உயர்படை ஒருங்க ஊர்வந்
திறுத்தலும் எளிதாம் மற்றும்யாவர்க்கும் இயக்கம்உண்டாம்
கறுத்தவாள் அரக்கி மாரும் அரக்கரும் கழித்து வீசி
வெறுத்தபூண் வெறுக்கை யாலே தூர்ந்தது வீரை எல்லாம்.

௪௰ வடங்களும் குழையும் பூணும் மாலையுஞ் சாந்தும் ஆனைக்
கடங்களுங் கலின மாவில் ஆழியுங் கணக்கி லாத
இடங்களின் இடங்கள்தோறும் யாற்றொடும் எடுத்தஎல்லாம்
அடங்கிய தென்னில் என்னே ஆழியின் ஆழ்ந்த தூண்டோ.

௪௧ விற்படை பெரிதென் கேனோ வேற்படை பெரிதென்கேனோ
மற்படை உடைத்தென்கேனோ வாட்படை மலிந்ததென்கோ
கப்பணந் தண்டு பிண்டி பாலமென் றினைய காந்தும்
நற்படை பெரிதென் கேனோ நாயகற் குரைக்கு நாளில். 4994

௪௨ என்றனன் இலங்கை நோக்கி இனையன பிறவும் எண்ணி
நின்றவண் அரக்கர் வந்து நேரினும் நேர்வர் என்னாத்
தன்தகை அரிய மேனி சுருக்கியச் சாரல் சார்ந்து
குன்றிடை இருந்தான் வெய்யோன் குடகடல் குளிப்ப தானான்.

௪௩ * ஏய்வினை இறுதியிற் செல்வம் எய்தினான்
ஆய்வினை மனத்திலான் அறிஞர் சொற்கொளான்
வீய்வினை நினைக்கிலான் ஒருவன் வெம்மையான்
தீவினை எனஇருள் செறிந்த தெங்குமே. 4996

௪௪ கரித்தழன் றெயிலுடைக் கணிச்சி வானவன்
எரித்தலை அந்தணர் இழைத்த யானையை
உரித்தபேர் உரிவையால் உலகுக் கோருறை
புரித்தனன் நான்முகன் என்னும் பொற்பதே. 4997

சடு அணங்கரா அரசர்கோன் அளவில் ஆண்டெலாம்
பணங்களின் தலைதொறும் உயிர்த்த பாய்விடம்
உணங்கலில்; உலகெலாம் முறையின் உண்டுவந்
திணங்கெரி புகையொடும் எழுந்த தென்னவே. 4998

சசூ வண்மைநீங் காநெடு மரபின் வந்தவப்
பெண்மைநீங் காதகற் புடைய பேதையைத்
திண்மைநீங் காதவன் சிறைவைத் தானெனும்
வெண்மைநீங் கியபுகழ் விரிந்த தென்னவே. 4999

சஎ அவ்வழி அவ்விருள் பரந்த ஆயிடை
எவ்வழி மருங்கினும் அரக்கர் ஏகினர்
தெவ்வழி மந்திரத் திசையர் ஆகையால்
வெவ்வழி இருள்தர மதித்து மீச்செல்வார். 5000

சஅ இந்திரன் வளநகர்க் கேகு வாரெழில்
சந்திரன் உலகினைச் சார்கு வார்சலித்
தந்தணன் உறையுளை அணுகு வார்அழல்
வெந்தொழில் அரக்கன தேவல் மேயினர். 5001

சகூ பொன்னகர் மடந்தையர் விஞ்சைப் பூவையர்
பன்னக வனிதையர் இயக்கர் பாவையர்
முன்னினர் பணிமுறை மாறி முந்துவார்
மின்னின மிடைந்தென விசும்பின் மேற்செல்வார் 5002

ருய தேவரும் அவுணருஞ் செங்கண் நாகரும்
மேவரும் இயக்கரும் விஞ்சை வேந்தரும்
ஏவரும் விசும்பிருள் இரிய ஈண்டினர்
தாவரும் பணிமுறை தழுவுந் தன்மையார். 5003

ருக சித்திரப் பத்தியில் தேவர் சென்றனர்
இத்துணை தாழ்த்தன முனியும் என்றுதம்
முத்தினா ரங்களும் முடியும் மாலையும்
உத்தரீ கங்களும் சரிய ஓடுவார். 5004

ருஉ தீண்டரும் தீவினை தீய்க்கத் தீய்ந்துபோய்
மாண்டற உலர்ந்தது மாருதிப் பெயர்
ஆண்டகை மாரிவந் தளிக்க ஆயிடை
ஈண்டற முளைத்தென முளைத்த திந்துவே. 5005

௫௩ வந்தனன் இராகவன் தூதன் வாழ்ந்தனன்
எந்தையே இந்திரன் ஆமென் றேமுறு
அந்தமில் கீழ்த்திசை அளகு வாள்நுதல்
சுந்தரி முகமெனப் பொலிந்து தோற்றிற்றே. 5006

௫௪ கற்றைவெண் கவரிபோல் கடலின் வெண்திரை
சுற்றுநின் றலமரப் பொலிந்து தோன்றிற்றால்
இற்றதென் பகையென எழுந்த இந்திரன்
கொற்றவெண் குடையெனக் குளிர்வெண் திங்களே. 5007

௫௫ தெரிந்தொளிர் திங்கள்வெண் குடத்தி னூல்திரை
முரிந்துவர் பாற்கடல் முகந்து மூரிவான்
சொரிந்ததே யாமெனத் துள்ளு மீனெடும்
விரிந்தது தண்ணிலா மேலுங் கீழுமே. 5008

௫௬ அருந்ததி சுரபிபோல் ஆதி வான்மிசை
விரிந்தபேர் உதையமாம் மிளிர்வெண் திங்களின்
வருந்தலில் பசுங்கதிர் வழங்கு தாரைகள்
சொரிந்தபால் ஒத்தது நிலவின் தோற்றமே. 5009

௫௭ எல்லியின் நிமிர் இருள் குறையும் இவ்விருள்
கல்லிய நிலவின்வெண் முறியுங் கவ்வின
புல்லிய பகையெனப் பொருவ போன்றன
மல்லிகை மலர்தொறும் வதிந்த வண்டெலாம். 5010

௫௮ எண்ணுடை அனுமன்மேல் இழிந்த பூமழை
மண்ணிடை வீழ்கில மறித்தும் போகில
அண்ணல்வாள் அரக்கனை அஞ்சி ஆய்கதிர்
விண்ணிடைத் தொத்தின போன்ற மீனெலாம். 5011

௫௯ வீசுறு பசுங்கதிர்க் கற்றை வெண்ணிலா
ஆசற எங்கணும் நுழைந்த தாயது
காசறு கடிநகர் இலங்கை காவலன்
தூசுறை இட்டது போன்று தோன்றிற்றால். 5012

உ. நிலாத்தோற்று படலம் முற்றும்

௩. இலங்கா தேவிப் படலம்.

க இகழ்வரும் பெருங்குணத் திராமன் எய்ததோர்
பகழியின் செலவென அனுமன் பற்றினன்
அகழ்புகுந் தரண்புகுந் திலங்கை ஆங்கவன்
புகழ்புகுந் துலாயதோர் பொலிவு போன்றவே. 5013

உ அவ்வழி அனுமனும் அணுக லாம்வழி
எவ்வழி என்பதை உணர்வின் எண்ணினன்
செவ்வழி ஒதுங்கினன் தேவர் ஏத்தப்போய்
வெவ்வழி அரக்கரூர் மேவல் மேயினன். 5014

௩ * ஆழியக மாகவரு காவமரர் வாழும்
எழுலகின் மேலவெளி காறுமுக டேறிக்
கேழரிய பொன்கொடு சமைத்தகிளர் வெள்ளத்
தூழிதிரி நாளுமுலை யாமதிலை உற்றான். 5015

ச கலங்கலில்க டுங்கதிர்கள் மீதுகடி தேகா
அலங்கலயில் வஞ்சகனை அஞ்சியெனல் அன்றால்
இலங்கைமதில் இங்கிதனை ஏறலரி தென்றே
விலங்கியகல் கின்றனர் விரைந்தென வியந்தான். 5016

ரு தெவ்வளவி லாதஇறை தேறல்அரி தம்மா
அவ்வளவ தன்றரணம் அண்டமிடை யாக
எவ்வளவில் உண்டுவெளி ஈறுமது என்னா
வெவ்வளவ ரக்கனைம னக்கொளவி யந்தான். 5017

சா மடங்கலரி ஏறுமத மால்களிறு நாண
நடந்துதனி யேபுகுது நம்பிநனி மூதூர்
அடங்கரிய தானைஅயில் அந்தகன தானைக்
கடுந்திசையின் வாயனைய வாயிலெதிர் கண்டான். 5018

எ மேருவை நிறுத்திவெளி செய்ததுகொல் விண்ணோர்
ஊர்புக அமைத்தபடி கால்கொலுல கேழுஞ்
சோர்வில நிலைக்கநடு விட்டதொரு தூணோ
நீர்புகு கடற்குவழி யோவென நினைந்தான். 5019

அ ஏழுலகின் வாழுமுயிர் யாவையும் எதிர்ந்தால்
ஊழின்முறை இன்றிஉட னேபுகுமி தொன்றோ
வாழியரி யங்கும்வழி ஈதென மதித்தே
ஆழியுள ஏழினள வன்றுபகை என்றான். 5020

௯ வெள்ளம்ஒரு நூறொடொரு நூறுமுடை வீரர்
கள்ளவினை வெவ்வலி அரக்கர்இரு கையும்
முள்ளெயிறும் வாளுமிக மின்னமுறை நின்றார்
எள்ளரிய காவலினை அண்ணலும் எதிர்ந்தான். 5021

௰ சூலமழு வாளொடயில் தோமரம் உலக்கை
காலவரி விற்பகழி கப்பணம் முசுண்டி
கோல்கணைய நேமிகுலி சஞ்சரிகை குந்தம்
பாலமுதல் ஆயுதம் வலத்தினர் பரித்தார். 5022

௧௧ அங்குச நெடுங்கவண் அடுத்துடல் விசிக்கும்
வெங்குசைய பாசமிவை வெய்யபயில் கையர்
செங்குருதி அன்னசெறி குஞ்சியர் சினத்தோர்
பங்குனி மலர்ந்தொளிர் பலாசவனம் ஒத்தார். 5023

௧௨ அளக்கஅரி தாகியக ணக்கொடயல் நிற்கும்
விளக்கினம் இருட்டினை விழுங்கிஒளி கால
அளக்கரிய காலன்மனம் உட்குமணி வாயின்
இளக்கமில் கடற்படை இருக்கையை எதிர்ந்தான். 5024

௧௩ எவ்வமரர் எவ்வவுணர் எவ்வர்உளர் இன்னே
கவ்வைமுது வாயிலின் நெடுங்கடை கடப்பார்
தெவ்வர்இவர் சேமம்இது சேவகனும் யாமும்
வெவ்வமரின் மேலினியெ ணாவிளையும் என்றான். 5025

௧௪ கருங்கடல் கடப்பதரி தன்றுநகர் காவல்
பெருங்கடல் கடப்பரிய தெண்ணமிறை பேரா
தருங்கடன் முடிப்பதரி தாரமர் கிடைப்பின்
நெருங்கமர் விளைப்பர்நெடு நாளென நினைந்தான். 5026

௧௫ வாயில்வழி சேரல்அரி தன்றியும் வலத்தோர்
ஆய்வில்அவர் வைக்கும்வழி ஏகல்அழ கன்றால்
காய்கதிர் இயக்கின்மதி லைக்கடிது தாவிப்
போயினகர் புக்கிடுவன் என்றோர்அயல் போனான். 5027

௧௬ *நாள்நா ளுந்தான் நல்கிய காவல் நணிமூதூர்
வாழ்நாள் அன்னாள் போதவன் மேலே வழிநின்றாள்
தூணும் என்னும் தோளுடை யானைச் சுடரோனைக்
காணா வந்தாள் கட்செவி என்னக் கனல்கண்ணாள். 5028

கஎ எட்டுத் தோளாள் நாலு முகத்தாள் உலகேழும்
தொட்டுப் பெருஞ் சோதி நிறத்தாள் சுழல்கண்ணாள்
முட்டிப் போரின் மூஉல கத்தை முதலோடும்
கட்டிச் சீறுங் காலன் வலத்தாள் கமையில்லாள். 5029

கஅ பாரா நின்றாள் எண்திசை தோறும் பலர்அப்பால்
வாரா நின்றா ரோவென மாரி மழையேபோல்
ஆரா நின்றாள் நூபுரம் அச்சந் தருதாளாள்
வேராம் மெய்யாள் மின்னில் இமைக்கும் மிளிர்பூணாள். 5030

க௯ வேல்வாள் சூலம் வீசுறு பாசம் மிளிர்சங்கங்
கோல்வாழ் சாபங் கொண்ட கரத்தாள் வடகுன்றம்
போல்வாள் திங்கள் போகும் எயிற்றாள் புகைவாயில்
கால்வாள் காணிற் காலனும் உட்குங் கதமிக்காள். 5031

௨௦ அஞ்சு வணத்தின் ஆடை உடுத்தாள் அரவெல்லாம்
அஞ்சு வணத்தின் வேகம் மிகுத்தாள் அருளில்லாள்
அஞ்சு வணத்தின் உத்தரி கத்தாள் அலையாலும்
அஞ்சு வணத்தின் முத்தொளிர் ஆரத் தணிகொண்டாள்.

௨௧ சிந்தா ரத்தின் செச்சை அணிந்தாள் தெளிநூல்யாழ்
அந்தா ரத்தின் நேர்வரு சொல்லாள் அறைதும்பி
கந்தா ரத்தின் இன்னிசை பன்னிக் களிகூரும்
மந்தா ரத்தின் மாலை அலம்பு மகுடத்தாள். 5033

௨௨ எல்லாம் உட்கும் ஆழி இலங்கை இகல்மூதூர்
நல்லாள் அவ்வூர் வைகுறை போலும் நயனத்தாள்
நில்லாய் நில்லாய் என்றுரை நேரா நினையாமுன்
வல்லலே சென்றாள் மாருதி கண்டான் வருகென்றான். 5034

௨௩ ஆகா செய்தாய் அஞ்சலை போலும் அறிவில்லாய்
சாகா மூலந் தின்றுழல் வார்மேல் சலம்என்னும்
பாகார் இஞ்சிப் பொன்மதில் தாவிப் பகையாதே
போகாய் என்றாள் பொங்கழல் என்னப் புகைகண்ணாள்.

௨௪ களியா உள்ளத் தண்ணல் மனத்தில் கதமூழ்கி
விளியா நின்றே நீதி நலத்தின் வினைஓர்வான்
அளியால் இவ்வூர் காணும் நலத்தால் அணைகின்றேன்
எளியேன் உற்றால் யாவது னக்கிங் கிழிவென்றான். 5036

௨௫ என்னா முன்னம் ஏகென ஏகா எதிர்மாற்றஞ்
சொன்னாய் நீயே யாவனடா தொல் புரம்அட்டான்
அன்னார் எய்தற் கஞ்சுவர் அம்மா அளியத்தாய்
உன்னால் எய்தும் ஊர்கொல்இவ் வூரென் றுறநக்காள். 5037

௨௬ நக்கா னைக்கண் ணையன் மனத்தோர் நகைகொண்டான்
நக்காய் நீதான் ஆர்சொல வந்தாய் உனதாவி
உக்கால் அன்றி ஓடலை என்றாள் யான்இவ்வூர்
புக்கால் அன்றிப் போகிலன் என்றான் புகழ்மிக்காள். 5038

௨௭ வஞ்சங் கொண்டான் வானரம் அல்லன் வருகாலன்
அஞ்சுங் கண்டால் என்னை இவன்சூழ் திரைஆழி
நஞ்சங் கொண்ட கண்ணுத லைப்போல் நகுகின்றான்
நெஞ்சங் கண்டே கல்லென நின்றே நினைகின்றாள். 5039

௨௮ கொல்வான் அன்றேல்கோளுறும் இவ்வூர் எனல்கொண்டாள்
வெல்வாய் நீயே வெற்றி எனத்தன் விழிதோறும்
வல்வாய் தோறும் வெங்கனல் பொங்க மதில்வாயில்
செல்வாய் என்னா மூவிலை வேலைச் செலவிட்டாள். 5040

௨௯ தடித்தாம் என்னத் தன்னெதிர் செல்லுந் தழல்வேலைக்
கடித்தார் நாகம் விண்ணில் முரிக்குங் கலுழன்போல்
ஒடித்தான் கையால் உம்பர் உவப்ப உயர்காலம்
பிடித்தாள் நெஞ்சந் துண்ணென எண்ணம் பிழையாதான்.

௩௰ இற்றுச் சூலம் நீறெழல் காணா எரிஒப்பாள்
மற்றுந் தெய்வப் பல்படை கொண்டே மலைவானை
உற்றுக் கையால் ஆயுதம் எல்லாம் ஒழியாமல்
பற்றிக்கொள்ளா விண்ணில் எறிந்தான் பழியில்லான். 5042

௩௧ வழங்கும் தெய்வப் பல்படை காணாள் மழைவான்மேல்
முழங்கும் மேகம் என்ன முரற்றி முனிகின்றாள்
கழங்கும் பந்துங் குன்றுகொ டாடுங் கரமோச்சித்
தழங்குஞ் செந்தீச் சிந்த அடித்தாள் தகவில்லாள். 5043

௩௨ அடியா முன்னம் அங்கை அனைத்தும் ஒருகையால்
பிடியா என்னே பெண்ணிவள் கொல்லில் பிழைஎன்னா
ஒடியா நெஞ்சத் தோரடி கொண்டான் உயிரோடும்
இடியே றுண்ட மால்வரை போன்மண் ணிடைவீழ்ந்தாள்.

௩௩ விழுந்தாள் நொந்தாள் வெங்குரு திச்செம் புனல்வெள்ளத்
தழுந்தா நின்றாள் நான்முக னார்தம் மருள்முன்னி
எழுந்தாள் யாரும் யாவையும் எல்லா உலகேழும்
தொழுந்தாள் வீரன் தூதுவன் முன்னின் றிவைசொன்னாள்.

௩௪ *அய்யகேள் அவைய நல்கும் அயனருள் அமைதி யாகி
எய்தியிம் மூதூர் காப்பன் இலங்கையா வேனும் யானே
செய்தொழில் இழுக்கி உள்ளம் திகைத்திந்தச் சிறுமை உற்றேன்
உய்திஎன் றளித்தி யானும் உணர்த்துவன் உண்மைஎன்றாள்.

௩௫ எத்தனை காலங் காப்பன் யான்இந்த மூதூர் என்றம்
முத்தனை வினவி னேற்கு முரண்வலிக் குரங்கொன் றுன்னைக்
கைத்தலம் அதனால் தீண்டிக் காய்ந்தஅன் றென்னைக் காண்டி
சித்திர நகரம் பின்னைச் சிதைவது திண்ணம் என்றாள். 5047

௩௬ அன்னதே முடிந்த தையா அறம்வெல்லும் பாவந் தோற்கும்
என்னுமீ தியம்ப வேண்டுந் தகையதோ இனிமற் றுன்னால்
உன்னிய தெல்லாம் முற்றும் உனக்குமுற் றுக துண்டோ
பொன்னகர் புகுதி என்று புகழ்ந்தவள் இறைஞ்சிப்போனாள்.

௩. இலங்காதேவிப் படலம் முற்றும்

---

௪. ஊர்தேடு படலம்.

௧ வீரனும் விரும்பிநோக்கி மெய்ம்மையே விளைவும் அஃதென்
றாரியன் கமலபாதம் அகத்துற வணங்கி ஆண்டப்
பூரியர் இலங்கை மூதூர்ப் பொன்மதில் தாவிப் புக்கான்
சீரிய பாலின் வேலைச் சிறுபிறை தெளித்த தன்னான். 5049

௨ வான்தொடர் மணியிற் செய்த மையறு மாடகோடி
ஆன்றபேர் இருளைச் சீய்த்துப் பகல்செய்த அழகை நோக்கி
ஊன்றிய உதையத் துச்சி ஒற்றைவாள் உருளைத் தேரோன்
தோன்றினன் கொல்லோ என்ன அறிவனுந் துயருட் கொண்டான்

௩ மொய்மணி மாடமூதூர் முழுதிருள் அகற்றுந் தானே
மெய்ம்மையை உணர்வினோடே மிகையென விலங்கிப்போனான்
இம்மதில் இலங்கை நாப்பண் எய்துமேல் தன்முன் எய்தும்
மின்மினி அல்லை னேவவ் வெயிற்கதிர் வேந்தன் அம்மா. 5051

௪ பொசிவுறு பசும்பொற் குன்றில் பொன்மதில் நடுவுள் பூத்து
வசையற விளங்குஞ் சோதி மணியினால் அமைத்த மாடத்
திசையினால் இலங்கை மூதூர் இருளின்மை ஆத லாலோ
நிசிசரர் ஆயிற் றம்மா நெடுநகர் நிருதர் எல்லாம். 5052

௫ என்றனன் இயம்பி வீதி எகுதல் இழுக்கம் என்னாத்
தன்தகை அரிய மேனி சுருக்கிமா ளிகையில் சாரச்
சென்றனன் என்ப மன்னோ தேவருக் கமிர்தம் ஈய்ந்த
குன்றென அயோத்தி வேந்தன் புகழ்எனக் குவவுத் தோளான்.

௬ ஆத்துறு சாலை தோறும் ஆனையின் கூடந் தோறும்
மாத்துறு மாடந் தோறும் வாசியின் பந்தி தோறும்
காத்துறுஞ் சோலை தோறும் கருங்கடல் கடந்த தாளான்
பூத்தொறுந் தாவிச் செல்லும் பொறிவரி வண்டில் போனான். 5054

௭ பெரியநாள் ஒளிகொள் நானா விதமணிப் பித்தி பத்தி
சொரியுமா நிழலங் கங்கே சுற்றலால் காலின் தோன்றல்
கரியனாய் வெளியன் ஆகுஞ் செய்யனாய்க் காட்டுங் காண்டற்
கரியனாய் எளிய னாம்தன் அகத்துறை அழகனே போல். 5055

௮ ஈட்டுவார் தவமல் லான்மற் றீட்டினால் இயைவ தின்மை
காட்டுவார் விதியார் இன்னும் காண்கிற்பார் காண்மி னம்மா
பூட்டுவார் முலைபொ றாத பொய்யிடை நையப் பூநீர்
ஆட்டுவார் அமரர் மாதர் ஆடுவார் அரக்கர் மாதர். 5056

௯ கானக மயில்கள் என்னக் [1]களிமட அன்னம் என்ன
ஆனனம் கமலப் போது பொலிதரும் அரக்கர் மாதர்
தேனுகு சரளச் சோலைத் தெய்வநீர் ஆற்றில் தெண்ணீர்
வானவர் மகளிர் ஆட்ட மஞ்சனம் ஆடு வாரை. 5057

௰ இலக்கண மரபிற் கேற்ற எழுவகை நரம்பின் நல்யாழ்
அலத்தகத் தளிர்க்கை நோவ அளந்தெடுத் தமைத்த பாடல்
கலக்குற முழங்க நோக்கிக் கன்னியர் சேடி மார்கள்
மலர்க்கையான் மாடத் தும்பர் மழையின்வாய் பொத்துவாரை.

௧௧ ஏந்தகப் பூம்பந் தர்வேய்ந்த தமனிய அரங்கில் தந்தா
சிந்தித்த தாதவுந் தெய்வ மணிவிளக் கொளிருஞ் சேக்கை
வந்தொத்துத் தருந மாக்கள் விளம்பின நெறி வழாமல்
கந்தற்ப மகளிர் ஆடும் நாடகங் காண்கின் றாரை. 5059

(பிரதி) 1 களிவட

கஉ திருத்திய பளிக்கு வேதித் தெள்ளிய வேல்கள் என்னக்
கருத்தியல் புரைக்கும் உண்கட் கருங்கயல் செம்மை காட்ட
வருத்திய கொழுநர் தம்பால் வரம்பின்றி வளர்ந்த காமம்
அருத்திய பயிர்க்கு நீர்போல் அருநற வருந்து வாரை. 5060

கங கோதறு குவளை நாட்டங் கொழுநர்கள் வண்ணங் கொள்ளத்
தூதுளங் கனியை வென்று துவர்த்தவாய் வெண்மை தோன்ற
மாதரும் மைந்தர் தாமும் ஒருவர்மேல் ஒருவர் வைத்த
காதலங் கள்ளுண் டார்போல் முறைமுறை களிக்கின் றாரை.

கச விற்படர் பவளப் பாதத் தலத்தகம் எழுதி மேனி
பொற்பளி வில்லா வாசம் புனைநறுங் கலவை பூசி
அற்புத வடிக்கண் வாளிக் கஞ்சனம் எழுதி அம்பொன்
கற்பகம் கொடுக்க வாங்கிக் கலன்தெரிந் தணிகின் றாரை.

கரு புலிபடு மதுகை மைந்தர் புதுப்பிறை உயிரைப் புக்கு
நலிவுடை அமுத வாயால் நச்சுயிர்த் தலைக்கண் நல்லார்
மெலிவுடை மருங்குல் மின்னின் அலமரச் சிலம்பு விம்மி
ஒலிபட உதைக்குந் தோறும் மயிர்ப்புள குதிக்கின் றாரை.

கசா உள்ளுடை மயக்கால் உண்கண் சிந்துவாய் வெண்மை ஊறித்
துள்ளிடைப் புருவங் கோட்டித் துடிக்கவேர் பொடிக்கத் தூய
வெள்ளிடை மருங்கு லார்தம் மதிமுகம் வேறுன் றாகிக்
கள்ளிடைத் தோன்ற நோக்கிக் கணவரைக் கனல்கின் றாரை.

கஎ நலன்உறு கணவர் தம்மை நவையுறப் பிரிந்து விம்மும்
முலைஉறு கலவை தீய முள்ளிலா முளரிச் செங்கேழ்
மலர்மிசை மலர்பூத் தென்ன வளைக்கையால் வதனந் தாங்கி
அலமரும் உயிரி னோடும் நெடிதுயிர்த் தயர்க்கின் றாரை.

கஅ ஆலையின் மலரிற் சாரல் முழையினில் அமுத வாசச்
சோலையில் துவசர் இல்லில் சோனகர் மனையில் துப்பு
வேலையில் கொளஒண் ணாத வேற்கண்ணார் குமுதச் செவ்வாய்
வாலெயிற் றூறுந் தீந்தேன் மாந்தினர் மயங்கு வாரை. 5066

ககூ ஏதியங் கொழுனர் தம்பால் எய்திய காத லாலே
தாதியங் கமளிச் சேக்கை உயிர்இளை உடலிற் சார்வார்
மாதுயர் காதல் தூண்ட வழியின்மேல் வைத்த கண்ணு
தூதியர் முறைவல் நோக்கி உயிர்வந் தழிக்கின் றாரை.

உ௰ சங்கொடு சிலம்பும் நூலும் பாதசா லகமுந் தாழப்
பொங்குபேர் முரசம் ஆர்ப்ப இல்உறை தெய்வம் போற்றி
கொங்கலர் கூந்தல் செவ்வாய் அரம்பையர் பாணி கொட்டி
மங்கல கீதம் பாட மலர்ப்பலி வகுக்கின் றாரை. 5068

உக இழைதொடர் வில்லும் வாளும் இருளொடு மலைய யாணர்க்
குழைதொடர் நயனக் கூர்வேல் குமரர்நெஞ் சுருவக் கோட்டி
முழைதொடர் சங்கும் பேரி முகில்என முழங்கும் மூரி
மழைதொடர் மஞ்ஞை என்ன விழாவொடு வருகின் றாரை.

உஉ பள்ளியில் மைந்த ரோடும் ஊடிய பண்பு நோக்கி
ஒள்ளிய கலவிப் பூசல் உடற்றுதற் குரித்தாம் நெஞ்சர்
மெள்ளவே இமையை நீக்கி அஞ்சனம் எழுதி வேய்ந்த
கள்ளவாள் நயனம் என்னும் வாள்உறை கழிக்கின் றாரை.

உங ஓவியம் அனைய மாதர் ஊடிய உணர்வோ டுள்ளம்
மேவிய கரண மற்றும் கொழுனரோ டொழிய யாணர்த்
தூவியம் பேடை யென்ன மின்னெனத் துவளா ஏகி
ஆவியுந் தாமு மேபுக் கருங்கத வடைக்கின் றாரை.

உச கின்னர மிதுனம் பாட வெண்மழை கிழித்துத் தோன்றும்
மின்னெனத் தரளம் வேய்ந்த வெண்ணிற விமானம் ஊர்ந்து
பன்னக மகளிர் சுற்றிப் பலாண்டிசை பாடப் பண்ணைப்
பொன்னனர் வீதி தோறும் புதுமனை புகுகின் றாரை. 5072

உரு கோவையுங் குழையு மின்னக் கொண்டலின் முரசம் ஆர்ப்பத்
தேவர்வந் தாசி கூற முனிவர்சோ பனங்கள் செப்பப்
பாவையர் குழாங்கள் சூழப் பாட்டொடு வான நாட்டுப்
பூவையர் பலாண்டு கூறப் புதுமணம் புணர்கின் றாரை.

உசா இயக்கியர் அரக்கி மார்கள் நாகியர் எஞ்சில் விஞ்சை
முயல்கறை இலாத திங்கள் முகத்தியர் முதலினோரை
மயக்கற நாடி எங்கும் மாருதி மலையில் வைகுங்
கயக்கம்இல் துயர்ச்சிக் கும்பகருணனைக் கண்ணில் கண்டான்

உஎ *ஓசனை எழுகன் றுயர்ந்த உம்பரின்
வாசவன் மணிமுடி கவித்த மண்டபம்
ஏசற விளக்குவ திருளை எண்வகை
ஆசையின் நிலைகெட அகற்றி ஆன்றது. 5075

௨௮ அன்னதன் நடுவண்ஓர் அமளி மீமிசைப்
பன்னக அரசெனப் பரவை தான்எனத்
துன்னிருள் ஒருவழித் தொக்க தாமென
உன்னருந் தீவினை உருக்கொண் டென்னவே. 5076

௨௯ முன்னிய கனைகடல் முழுகி மூவகைத்
தன்னியல் கதியொடுந் தழுவித் தாதுகு
மன்னெடுங் கற்பக வனத்து வைகிய
இன்னிளந் தென்றல்வந் திழுகி ஏறவே. 5077

௩௰ வானவர் மகளிர்கால் வருட மாமதி
ஆனனங் கண்டமண் டபத்துள் ஆய்கதிர்க்
கால்நகு காந்தமீக் கான்ற காமர்நீர்த்
தூநிற நறுந்துளி முகத்தில் [1]தோற்றவே. 5078

௩௧ மூசிய உயிர்ப்பெனும் முடுகு வாதமும்
ஆசையின் புறத்திடை அளவி வன்மையான்
நாசியின் அளவையின் நடத்தக் கண்டவன்
கூசினன் கொதித்தனன் விதிர்த்த கையினான். 5079

௩௨ பூழியின் தொகைவிசும் பணவப் போய்ப்புகுங்
கேழில்வெங் கிளர்கிடை உயிர்ப்புக் கேடிலா
வாழிய உலகெலாந் துடைக்கும் மாருதம்
ஊழியின் வரவுபார்த் துழல்வ தொத்ததே. 5080

௩௩ பகைஎன மதியினைப் பருத்துப் பாடுற
வகையில்பேழ் வாய்மடுத் தருந்து வானெனப்
புகையொடு முழங்குபேர் உயிர்ப்புப் பொங்கிய
நகைஇலா முழுமுகத் தெயிறு நாறவே. 5081

௩௪ தடைபுகு மந்திரந் தகைந்த நாகம்போல்
இடைபுகல் அரியதோர் உறக்கம் எய்தினான்
கடையுக முடிவெனுங் காலம் ஓர்ந்தயல்
புடைபெயர் மாநெடுங் கடலும் போலவே. 5082

௩௫ *ஆவதாகிய தன்மைய அரக்கனை அரக்கர்
கோவெனாநின்ற குணமிலி இவன்எனக் கொண்டான்
காவல் நாட்டங்கள் பொறியுகக் கனல்எனக் கனன்றான்
ஏவனோஇவன் இறைவர்மூ வர்களினும் ஈட்டான் 5083

பிரதி 1 தோத்தவே.

௩௬ குறுகி நோக்கிமற் றவன்தலை ஒருபதுங் குன்றத்
திறுகு திண்புயம் இருபதுங் கிவற்கிலை என்ன
மறுகி ஏறிய முனிவெனும் வடவைவெங் கனலை
அறிவெ னும்பெரும் பரவையம் புனலினால் அவித்தான்.

௩௭ அவித்து நின்றவன் ஆகிலும் ஆகஎன் றங்கை
கவித்து நீங்கிச் சிலபகல் என்பது கருதாச்
செவிக்குத் தேன்என இராகவன் புகழினைத் திருத்தும்
கவிக்கு நாயகன் அனையவன் உறையுளைக் கடந்தான். 5085

௩௮ மாட கூடங்கள் மாளிகை ஒழுங்குகள் மகளிர்
ஆட ரங்குகள் அம்பலந் தேவர்ஆ லயங்கள்
பாடல் வேதிகை பட்டிமண் டபம்முதற் பலவும்
நாடி ஏகினன் நாயகன் புகழ்எனும் நலத்தான். 5086

௩௯ மணிகள் வாசலிற் சாளரத் தலங்களின் மலரில்
கணிகொள் நாளத்தில் கால்எனப் புகைஎனக் கலக்கும்
நுணுகும் வீங்குமற் றிவன்நிலை யாவரே நுவல்வார்
அணுவின் மேருவில் ஆழியான் எனச்செலும் அறிவோன். 5087

௪௰ ஏந்தல் இவ்வழி எவ்வழி மருங்கினும் எய்திக்
காந்தள் மெல்விரல் மடந்தையர் யாரையுங் காண்பான்
வேந்தர் வேதியர் வானவர் மேலுளோர் விரும்பப்
போந்த புண்ணியன் கண்ணகல் கோயிலுள் புக்கான். 5088

௪௧ பளிக்கு வேதிகைப் பவளத்தின் கூடத்துப் பசுந்தேன்
துளிக்குங் கற்பகப் பந்தரில் கருநிறத் தோர்பால்
வெளுத்து வைகுதல் அரிதென அவர்உரு மேவி
ஒளித்து வாழ்கின்ற தருமனைப் பான்தனை உற்றான். 5089

௪௨ உற்று நின்றவன் உணர்வைத்தன் உணர்வினால் உணர்ந்தான்
குற்றம்இல்லதோர் குணத்தினன் இவன்எனக் கொண்டான்
செற்றம் நீங்கிய மனத்தினன் ஓர்திசை சென்றான்
பொற்றை மாடங்கள் கோடிஓர் நொடியிடைப் புக்கான்.

௪௩ முந்த ரம்பையர் முதலினர் முழுமதி முகத்துச்
சிந்து ரம்பயில் வாய்ச்சியர் பலரையும் தெரிந்து
மந்திரம்பல கடந்துதன் மனத்துமுன் செல்வான்
இந்திரன்சிறை இருந்தவா சலின்கடை எதிர்ந்தான். 5091

சச ஏதி எந்திய தடக்கையர் பிறைஎயி றிலங்க
மூதுரைப்பெருங் கதைகளும் பிதிர்களும் மொழிவார்
ஓதில் ஆயிரம் ஆயிரம் உறுவலி அரக்கர்
காது வெஞ்சினக் களியினர் காவலைக் கடந்தான். 5092

சரு முக்கண் நோக்கினன் முதன்மகன் அறுவகை முகமுந்
திக்கு நோக்கிய கரங்களுஞ் சிலகரந் தனையான்
ஒக்க நோக்கியர் குழாத்திடை உறங்குகின் றானைப்
புக்கு நோக்கினன் புகைபுகா வாயிலும் புகுவான். 5093

சசு வளையும் வாளெயிற் றரக்கனோ கணிச்சியான் மகனோ
அளையில் வாளரி அனையவன் யாவனோ அறியேன்
இளைய வீரனும் ஏந்தலும் இருவரும் பலநாள்
உளையும் வெஞ்சமம் இவனுடன் உளதென உணர்ந்தான்.

சஎ இவனை இன்துணை உடையபோர் இராவணன் இன்னே
புவனம் மூன்றையும் வென்றதோர் பொருளெனப் புகலேன்
சிவனை நான்முகத் தொருவனைத் திருநெடு மாலாம்
அவனை அல்லது நிகர்பிறர் என்பதும் அறிவோ. 5095

சஅ என்று கைம்மறித் திடைநின்று காலத்தை இகழ்வ
தன்று போவதன் றாயிரம் ஆயிரத் தடங்காத்
துன்று மாளிகை துரிசறத் துருவினன் தொடர்ந்து
சென்று தேடினன் இந்திர சித்தினைத் தீர்ந்தான். 5096

சகூ அக்கன் மாளிகை கடந்துபோய் மேலதி காயன்
தொக்க கோயிலுந் தம்பியர் இல்லமுந் துருவித்
தக்க மந்திரத் தலைவர்கள் மனைகளுந் தடவிப்
புக்கு நீங்கினன் இராகவன் சரமெனப் புகழோன். 5097

ருய இன்ன ராமிரும் பெரும்படைத் தலைவர்கள் இருக்கைப்
பொன்னின் மாளிகை ஆயிர கோடியும் புக்கான்
கன்னி மாமதில் புறத்தவன் கரந்துறை காண்பான்
சொன்ன மூன்றினுள் நடுவண தகழியைத் தொடர்ந்தான்.

ருக தனிக்க டக்களி றெனஒரு துணையிலான் றூய
பனிக்க டற்பெருங் கடவுள்தன் பரிபவந் துடைப்பான்
இனிக்க டப்பதன் றேழ்கடல் கிடந்ததென் றிசைத்தான்
ஞனிக்க டற்கதிர் தொடர்ந்தவன் அகழியைக் கண்டான்.

௫௨ பாழி நல்நெடுங் கிடங்கென உணர்வனேல் பல்பேர்
ஊழி காலநின் றுலகெலாங் கல்லினும் உலவா
ஆழி வெஞ்சினத் தரக்கனை அஞ்சிஆழ் கடல்கள்
ஏழும் இந்நகர்ச் சூலாயகொ லாமென நினைந்தான். 5100

௫௩ ஆய தாகிய அகன்புனல் அகழியை அடைந்தான்
தாய வேலையின் இருமடி விசைகொண்டு தாவிப்
போய காலத்தும் போக்கரி தாம்என்று புகன்றான்
நாய கன்புகழ் சூலாயபேர் உலகெலாம் நடந்தான். 5101

௫௪ * மேக்கு நால்வகை மேகமுங் கீழ்விழத்
தூக்கி னல்அன்ன தோயத்த தாய்த்துயர்
ஆக்கி னன்படை யன்ன அகழியை
வாக்கி னலுரை வைக்கவும் ஆகுமோ. 5102

௫௫ ஆனை மும்மத மும்பரி ஆழியும்
மான மங்கையர் குங்கும வாரியும்
நான மாதர் நறைக்குழல் நாவியும்
தேனும் ஆரமும் தேய்வையும் நாறுமே. 5103

௫௬ உன்ன நாரை மகன்றில் புதாஉளில்
அன்னங் கோழிவண் டானங்கள் ஆழிப்புள்
கின்னரங் குரண்டங் கிலுக் கஞ்சிரல்
சென்னங் காகங் குணலஞ் சிலம்புமே. 5104

௫௭ நலத்த மாதர் நறைஅகில் ஆவியும்
அலத்த கக்குழம் புஞ்செறிந் தாடின
இலக்க ணக்கரி யோடிள மென்னடைக்
குலப்பி டிக்குமோர் ஊடல் கொடுக்குமால். 5105

௫௮ நறவு நாறிய நாணறுந் தாமரை
துறைகள் தோறும் முகிழ்த்தன தோன்றுமால்
சிறையின் எய்திய செல்வி முகத்தினோ
டுறவு தாமுடை யாரொடுங் கார்களோ. 5106

௫௯ பளிங்கு செற்றிக் குயிற்றிய பாயொளி
விளிம்பும் வெள்ளமும் மெய்தெரி யாதுமேல்
தெளிந்த சிந்தைய ருஞ்சிறி யார்களோ
டளிந்த போதறி தற்கெளி தாவரோ. 5107

௬௰ நீல மேமுகல் நன்மணி நித்தில
மேலு யர்ந்தயல் மாணொளி வீசலால்
பாலின் வேலை முதற்பல வேலையுங்
கால்க லந்தன வோஎனக் காட்டுமே. 5108

௬௧ அன்ன வேலை அகழியை ஆர்கலி
என்ன வேகடந் திஞ்சியும் பிற்படத்
துன்ன ருங்கடி மாநகர் துன்னினான்
பின்ன ரெய்திய தன்மையும் பேசுவாம். 5109

௬௨ கரிய நாழிகை பாதியிற் காலனும்
வெருவு செய்யும் அரக்கர்தம் வெம்பதி
ஒருவ னேஒரு பன்னிரண் டோசனை
தெருவு மும்மைநூ றாயிரந் தேடினான். 5110

௬௩ *வேரியும் அடங்கின நெடுங்களி விளைக்கும்
மாரியும் அடங்கின அடங்கினது பாடல்
காரியம் அடங்கினர்கள் கம்மியர்கண் மும்மைத்
தூரியம் அடங்கின துடங்கின துறக்கம். 5111

௬௪ இறங்கின நிறங்கொள்பரி ஏமமுற எங்கும்
கறங்கின மறங்கொள்மயில் காவலர் துடிக்கண்
பிறங்கினர் நறுங்குழலர் அன்பர்பிரி யாதோர்
உறங்கினர் பிணங்கினதிர் ஊடினர்க ளெல்லார். 5112

௬௫ வடந்தரு தடங்கொள்புய மைந்தர்கல விப்போர்
கடந்தனர் இடைந்தனர் களித்தமயில் போலும்
மடந்தையர் தடந்தன முகட்டிடை மயங்கிக்
கிடந்தனர் நடந்தது புணர்ச்சிதரு கேதம். 5113

௬௬ வாமநறை யின்துறை மயங்கினர் மறந்தார்
காமநறை யின்துறை நுகர்ந்தவர் களித்தார்
பூமநறை வண்டுறை இலங்கமளி புக்கார்
தூமநறை யின்துறை பயின்றிலர் துயின்றார். 5114

௬௭ பண்ணிமை அடைத்தபல கட்பொருநர் பல்பேய்
விண்ணிமை அடைத்தன விளைந்ததிருள் வீணை
தண்ணுமை அடைத்தன தழங்கிசை வழங்கும்
கண்ணிமை அடைத்தன அடைத்தன கபாடம். 5115

௬௮ விரிந்தன நரந்தமுதல் மென்மலர் விளாகத்
துரிஞ்சிவரு தென்றல்உணர் வுண்டயல் உலாவச்
சொரிந்தனர் கருங்கண்வரு துள்ளிதரு வெள்ளம்
எரிந்தன பிரிந்தவர் தம் எஞ்சுதனி நெஞ்சம். 5116

௬௯ இளக்கர்இழு தெஞ்சவிழும் எண்ணறும் விளக்கைத்
துளக்கியது தென்றல்பகை சோரஉயர் வோரின்
அளக்கரொ டளக்கரிய ஆசைஉறு வீயா
விளக்கென விளங்குமணி மெய்புறு விளக்கம். 5117

௭௰ நித்தநிய மத்தொழில் முடித்துநெடு ஞானத்
துத்தமர் உறங்கினர்கள் யோகியர் துயின்றார்
மத்தமத வெங்களி றுறங்கின உறங்காப்
பித்தரும் உறங்கினர் இனிப்பிறர்கள் என்னும். 5118

௭௧ ஆயபொழு தம்மதில் அகத்தரசர் வைகும்
தூயதெரு ஒன்றொடொரு கோடிதுரு விப்போய்
தீயவன் இருக்கைஅயல் செய்த அகழ்இஞ்சி
மேயது கடந்தனன் வினைப்பகையை வென்றான். 5119

௭௨ *போரி யற்கை இராவணன் பொன்மனை
சீரி யற்கை நிரம்பிய திங்களாய்த்
தார கைக்குழு வில்தழைத் தோங்கிய
நாரி யர்க்குறை வாமிட நண்ணினான். 5120

௭௩ முயற்க ருங்கறை நீங்கிய மெரய்மதி
அயர்க்கும் வாண்முகத் தாரமு தன்னவர்
இயக்கர் மங்கையர் யாவரும் எய்தியே
நயக்கு மாளிகை வீதியை நண்ணினான். 5121

௭௪ தழைந்த பேரொளி மொய்மணித் தாள்தொறும்
இழைந்த நாலினும் இன்னிளங் காலினும்
நுழைந்து நொய்தினின் மையற நோக்கினான்
விழைந்த தீவினை வேரற வீசினான். 5122

௭௫ அத்தி ரம்புனை யானை அரக்கன்மேல்
வைத்த சிந்தையர் வாங்கும் உயிர்ப்பினர்
பத்தி ரம்புரை நாட்டம் பதைப்பறச்
சித்தி ரங்க ளெனவிருந் தார்சிலர். 5123

எசு வள்ளல் வெஞ்சிலை மாறனை அஞ்சியோ
மெள்ள இன்கன வின்பயன் வேண்டியோ
கள்ளம் என்கொல் அறிந்திலம் கண்முகிழ்த்
துள்ளம் இன்றி உறங்குகின் றார்சிலர். 5124

எஎ ஆவ தொன்றரு ளாயென தாவியைக்
கூவு கின்றிலை கூறலை சென்றெனப்
பாவை பேசுவ போல்கண் பசப்புறப்
பூவை யோடும் புலம்புகின் றார்சிலர். 5125

எஅ பழுதில் மன்மதன் எய்கணை பன்முறை
உழுத கொங்கையர் ஊசல் உயிர்ப்பினர்
அழுது செய்வதென் ஆணை அரக்கனை
எழுத லாங்கொலென் றெண்ணுகின் றார்சிலர். 5126

எகூ ஈரத் தென்றல் இழுக்க மெலிந்துதம்
பாரக் கொங்கையைப் பார்த்தந்தப் பாதகன்
வீரத் தோள்களின் வீக்கும்ள ளுஉயிர்
சோரச் சோரத் துளங்குகின் றார்சிலர். 5127

அ௦ நக்க செம்மணி நாறிய நீள்நிழல்
பக்கம் வீசுறு மாளிகை பல்பகல்
ஒக்க ஆசை உலத்த உலர்ந்தவர்
செக்கர் வான்தரு திங்கள்ஒத் தார்சிலர். 5128

அக வாளி னாற்றிய கற்பக வல்லியர்
தோளி னாற்றிய தூங்கம ளித்துயில்
நாளி னாற்செவி யிற்புகு நாமயாழ்த்
தேளி னாற்றிகைப் பெய்துகின் றார்சிலர். 5129

அஉ கவ்வு தீக்கணை மேருவைக் கால்வளைத்
தெவ்வி னன்மலை ஏந்திய ஏந்தல்தோள்
வவ்வு சாந்தழும் மாழலை வைகிய
செவ்வி கொண்டு குலாவுகின் றார்சிலர். 5130

அ௩ கூடி னன்குயர் வேலையுங் கோக்கஙின்
றாடி னன்புகழ் அங்கை நரம்பினால்
நாடி நாற்பெரும் பண்ணும் நயப்புறப்
பாடி னன்புகழ் பாடுகின் றார்சிலர். 5131

௮௪ இனைய தன்மை இயக்கியர் ஈண்டிய
மனையொ ராயிரம் ஆயிரம் வாயில்போய்
அனைய வன்குலத் தாய்வளை யாரிடம்
நினைவின் எய்தினன் நீதியின் எய்தினான். 5132

௮௫ *எரிசுடர் மணியின் செங்கேழ் இளவெயில் இடைவி டாது
விரிஇருள் பருகி நாளும் விளக்கின்றி விளங்கு மாடத்
தரிவையர் குழுவை நீக்கி ஆசையுந் தாமு மேயாய்
ஒருசிறை இருந்து போன உள்ளத்தோ டோடு வாரும். 5133

௮௬ நகைஎரிக் கற்றை நெற்றி நாவிதோய்த் தனைய ஓதி
புகைஎனத் தும்பி சுற்றப் புதுமலர் பொங்கு சேக்கைப்
பகைஎன எய்தி யாணர்ப் பளிக்குடைச் சீதப் பள்ளி
மிகைஉயி ரோடுங் காம விம்மலின் வெதும்பு வாரும். 5134

௮௭ சவிபடு தகைசால் வானந் தானொரு மேனி யாகக்
குவியுமீன் ஆர மாக மின்கொடி மருங்குல் ஆகக்
கவிர்ஒளிச் செக்கர்க் கற்றை ஓதியாய் மழைஒண் கண்ணார்
அவிர்மதி நெற்றி ஆக அந்தியாள் ஒக்கின் றாரும். 5135

௮௮ பானல்உண் கண்ணும் வண்ணப் படிமுறை மாறப் பண்ணை
சோனைபோன் றளிகள் பம்புஞ் சுரிகுழல் கற்றை சோர
மேல்நிவந் தெழுந்த மாட வெண்ணிலா முன்றில் நண்ணி
வானமீன் கையில் வாரி மணிக்கழங் காடு வாரும். 5136

௮௯ உழையுழை பரந்த வான யாற்றுநின் றும்பர் நாட்டுக்
குழைமுகத் தவர்கள் தந்த புனல்குளிர்ப் பிலவென் றாடி
இழைதொடுத் திலங்கு மாடத் திடைகடு மாற ஏறி
மழைபொழுத் தொழுகு நீரான் மஞ்சனம் ஆடுவாரும்.

௯௦ பன்னக அரசர் செங்கேழ்ப் பணாமணி வலியிற் பற்றி
இன்னுயிர்க் கணவன் ஈய்ந்த யாவையுங் கொடுத்து விஞ்சை
மன்னவர் முடியும் பூணும் ஆரமும் பணயம் ஆக
பொன்னின்நல் பலகைச் சூது துயிலிலர் பொருகின் றாரும்.

௯௧ தென்னவென் றமிர்தப் பாடல் சித்தியர் இசைப்பத் தீஞ்சொல்
பன்னக மகளிர் வள்வார்த் தண்ணுமை பாணி பேணப்
பொன்னகர் தாளப் பந்தர்க் கற்பகப் பொதும்பர்ப் பொற்றோள்
இன்னகை அரம்பை மாரை ஆடல்கண் டிருக்கின் றாரும். 5139

௯௨ ஆணியிற் கிடந்த காதல் அகஞ்சுட அருவிப் புண்கண்
சேணுயர் உறக்கந் தீர்ந்த சிந்தையர் செய்வ தோரார்
வீணையுங் குழலுந் தத்தம் மிடறும்வேற் றுமையில் தீர்ந்த
பாணிதள் ளாத பாடல் அமுதாகப் பாடு வாரும். 5140

௯௩ தண்டலை வாழை அன்ன குறங்கிடை அல்குல் தட்டில்
கொண்டபூந் துகிலுங் கோவைக் கலங்களுஞ் சோரக் கூர்ங்கள்
உண்டல மந்த கண்ணார் ஊசலிட் டுலாவு கின்ற
குண்டலந் திருவில் வீசக் குரவையில் குழறு வாரும். 5141

௯௪ நச்செனக் கொடிய நாகக் கள்ளொடுங் குருதி நக்கிப்
பிச்சரிற் பிதற்றி அல்குல் பூந்துகில் கலாபம் வீறிக்
குச்சரித் திறத்தின் ஓசை களங்கொளக் குழுக்கொண் டுண்டிச்
சச்சரிப் பாணி கொட்டி நிறைதடு மாறு வாரும். 5142

௯௫ தயிர்கிறக் கள்உண் டுள்ளம் தள்ளத்தம் அறிவு தள்ளப்
பயிர்உறத் தெய்வ மென்மேல் பயந்தது பார்மின் என்னா
உயிர்உயிர்த் திரண்டு கையும் உச்சிமேல் உயர நீட்டி
மயிர்சிலிர்த் துடலங் கூசி வாய்விரித் தொடுங்கு வாரும்.

௯௬ இத்திறத் தரக்கி மார்கள் ஈரிரு கோடி ஈட்டம்
பத்தியின் உறையும்பத்திப் படர்நெடுந் தெருவும் பார்த்தான்
சித்தியர் உறையும் மாடத் தெருவும்பின் ஆகச் சென்றான்
உத்திசை விஞ்சை மாதர் உறையுளை முறையில் உற்றான்.

௯௭ ***வளர்ந்த காதலர் [1]மகரிகை நெடுமுடி அரக்கனை வரக்காணார்**
தளர்ந்த சிந்தைதம் இடையினும் நுடங்கிட உயிர்கொடு தடுமாறிக்
கிளர்ந்த வாள்நெடுங் கருவியில் கிளைகளில் செயிரியர்களைகண்ணால்
அளந்த பாடல்வெவ் வரவுதஞ் செவிபுக அலமர உயிர்க்கின்றார்.

௯௮ **புரியும் நன்னெறி முனிவரும் புலவரும் புகலிலாப் பொறைகூர**
எரியும் வெஞ்சினத் திகலடு கொடுந்திறத் திராவணற்கெஞ்ஞான்றும்
பரியும்நெஞ்சினர் இவர்என அயிர்த்தொருபகையொடும்பனித்திங்கள்
சொரியும்வெங்கதிர்ப்பணைமுலைக் குவைசுட அமளியிற்றுடிக்கின்றார்.

௯௯ சிறுகு காலங்கள் ஊழிக ளாம்வகை திரிந்து சிந்தனை சிந்து
முறுகு காதலின் வேதனை உழப்பவர் முயங்கிய முலைமுன்றில்
இறுகு சாந்தமும் எழுதிய குறிகளும் இன்னுயிர்ப் பொறையீர
மறுகுவாட்கண்கள்சிவப்புறநோக்கினர் அயர்ந்தனர் உயிர்க்கின்றார்.

பிரதி 1 மதரிகை.

க00 ஆய விஞ்சையர் மடந்தையர் உறைவிடம் ஆறிரண் டமைகோடி
தூயமாளிகைநெடுந்தெருத்து றந்துபோய்த்தொலைவின்மூன் றுலகுக்கும்
நாய கன்பெருங் கோயிலை நண்ணுவான் கண்டனன் நளிர்திங்கள்
மாய நந்திய வாண்முகத் தொருதனி மயன்மகள் மணிமாடம்.

க0க கண்டுகண்ணொடுங் கருத்தொடுங் கடாவினன் காரணங்கடைநின்ற
துண்டு வேறொரு சிறப்பெங்கள் நாயகற் குயிரினும் இனியாளைக்
கொண்டுபோந்திவண்வைத்தவோர்உறையுள்கொல்குலமணிமனைக்கெல்
விண்டு வின்திரு மார்பினின் மணியொத்த திதுஎன வியப்புற்றான்.[லாம்

க0உ அரம்பை மேனகை திலோத்தமைஉருப்பசி யாதியாய்அலர்மாரன்
சாம்பெய் தூணிபோல் தளிரடி தாங்தொடச் சாமரை தடுமாறக்
கரும்பை யின்சுவை கற்பித்த சொல்லியர் காமரங் கனிகின்ற
நரம்பின் இன்னிசை செவிபுக நாசியிற் கற்பக விரைநாற. 5150

க0ங விழைவு நீங்கிய மேன்மையர்ஆயினுங் கீழ்மையோர்வெகுள்வுற்றால்
பிழைகொல்நன்மைகொல்பெறுவதென்றையுறும்பீழையால்பெருந்தென்
உழையர் கூறப்புக் கேகெனப் போவதோர் ஊசலின் உளதாகப் [றல்
பழையர் யாமெனப் பண்பல செய்வரோ பருணிதர் பயமோர்வார்.

க0ச இன்ன தன்மையின் எழின்மணி விளக்கங்கள் எழில்கெடப்பொலி
தன்னதின்னொளிதழைப்புறத்துயில்வுறுந்தையலைத்தகைவில்லா [கின்ற
அன்ன ளாகிய சானகி இவர்என அயிர்த்தகத் தெழு செந்தீத்
தின்னும் ஆருயிர் உடலொடுஞ் சுடுவதோர் துயருழந்திவைசொன்னான்.

க0ரு எற்பு வான்தொடர் யாக்கையால்பெறும்பயன்இழந்தனள்இதுநிற்க
அற்பு வான்தனை இல்பிறப் பதனொடும் இழந்தருந் ததிபோலும்
கற்பு நீங்கின கனங்குழை இவள்எனில் காகுத்தன் புகழோடும்
பொற்பும்யானும்இவ்விலங்கையும் அரக்கரும்பொன்றுவதின்றென்றான்.

க0சு மானுயர்த்திரு வடிவினள் அவள் இவள்மாறுகொண்டனள்கூறில்
தான் இயக்கியோ தானவர் தையலோ ஐயுறுந் தகை யானாள்
கானுஉயிர்த்ததார்இராமன்மேல்நோக்கியகாதலொன் றதுகாண்என்
மீன்உ யர்த்தவன் மருங்குறா நிற்குமே நினைந்தது மிகைஎன்றான்.

க0எ இலக்க ணங்களும் சிலஉள என்னினும் எல்லைசென் றுறுகில்ல
அலக்கண் எய்துவகுறியதுண்டென்றெடுத்தறைகின்றதிவள் ஆக்கை
மலர்க்கருங்குழல்சோர்ந்துவாய்வெரீஇச்சில்மாற்றங்கள்பறைகின்றாள்
உலக்கும்ஈங்கிவள்கணவனும்அழிவும்இவ்வுயர்நகர்க்குளதென்றான்.

க0அ என்று ணர்ந்துநின் றேமூறு நிலையினில் நிற்க வித்திறனென்னுப்
பின்று சிந்தையன் பேர்ந்தனன் நெடுமனை பிற்படப் பெருமேருக்
குன்று யுர்ந்தபோல் தகையுற ஓங்கிய கொற்றத்து மணிக்கோயில்
சென்று புக்கனன் இராவணற் கெடுப்பருங் கிரியன்ன திரள் தோளான்.

க0கூ நிலந் துடித்தன நெடுவரை துடித்தன நிருதர்தங் குல மாதர்
பொலந்துடித்தநுண்மருங்குல்போல்கண்களும்புருவமும்பொற்றோளும்
வலந் துடித்தன மாதிரந் துடித்தன தடித்தன்றி மதிவானம்
கலந்தி டித்தன வெடித்தன பூரண மங்கலக் கலசங்கள். 5157

கக0 புக்கு நின்றுதன் புலன்கொளநோக்கினன்பொருவருந்திருஉள்ளம்
நெக்கு நின்றனன் நீங்கும்அன் றோஇந்த நெடுநகர்த் திருஎன்னு
எக்கு லங்களில் யாவரே ஆயினும் இருவினை எல்லார்க்கும்
ஒக்கும் ஊழ்வினை அல்லது வலியதுஒன்றில்லென உணர்வுற்றான்.

ககக நூல்பெருங்கடல்நுணங்கிய கேள்வியான் நோக்கினன் மறங்கூரும்
வேல்பெரும்படை புடைபரந் தீண்டிய வெள்ளிடை வியன்கோயில்
பால்பெருங்கடல் பன்மணிப் பஃறலைப் பரப்பிடைப் படர்வேலை
மால்கருங்கடல் விரிந்ததே அனையதோர் வனப்பினில்துயில்வானை.

ககஉ குழவி நாயிறு குன்றிவர்ந் தனையன குருமணி நெடுமேனி
இழைகளோடுகின் றிளவெயில் எரித்திட இரவெனும் பொருள்வீய
முழைகொள்மேருவின் முகட்டிடைக்கனகனைமுருக்கியமுரட்சீயம்
தழைகொள்தோளொடுந்தலைபல பரப்பிமுன் துயிர்வதோர்தகையானை.

ககங குழந்தை வெண்மதிக்குடுமியன் நெடுவரைகுலுக்கியகுலத்தோளைக்
கழிந்து புக்கிடை கரந்தன அனங்கவேள் கடுங்கணை பலபாய
உழந்த வெஞ்சமத் துயர்திசை யானையின் ஒளிமருப் புற்றிற்ற
பழந்த ழும்பினுக் கிடையிடை யேசில பசும்புண் கள்அசும் பூற.

ககச ஆயபொற்கலத் தாய்வளை அரம்பையர் ஆயிரர் பலர்நின் றோர்
தூய உக்கங்கள் இயக்கினர் துயில்வரச் சூழ்பெரும் பசுங்காற்றின்
வீய கற்பகத் தேன்துளி வீரன்மேல் விழுந்தொறும் நெடு மேனி
தீய நற்றொடிச் சீதையை நினைதொறும் உயிர்த்துயிர் தேய்வானை.

ககரு சாந்த ளாவிய கலவைமேல் தவழ்புயந் தண்தமிழ்ப் பசுந்தென்றல்
ஏய்ந்த காமவெங் கனலுயிர்த் திருமடித் துருத்தியி னுயிர்ப்பேறக்
காந்தள் மெல்விரல் சனகிபால் மனமுதல் கரணங்கள் கடிதோடப்
பாந்தள் நீங்கிய முழையெனக் குழைவுறு நெஞ்சு பாழ் பட்டானை.

கககூ *கொண்டபேர் உறக்கம்மூளத் திசைதொறும் குறித்து மேனாள்
மண்டிய பெரும்போர் தன்னில் தோள்களால் வாரி வாரி
உண்டது தெவிட்டிப் பேழ்வாய்க் கடைகள்தோ றொழுகிப் பாயும்
அண்டர்தம் புகழில் தோன்றும் வெள்ளெயிற் றமைதி யானை.

ககஎ வெள்ளிவெண் சேக்கை வெந்து பொறிஎழ வெதும்பு மேனி
புள்ளிவெண்மொக்குகள்என்னப்பொடித்தவேர்கொதித்துப்பொங்கி
கள்ளவிழ் மாலைத் தும்பி வண்டொடுங் கரிந்து சாம்ப
ஒள்ளிணர் மாலை தீய உயிர்க்கின்ற உயிப்பி னானை. 5165

ககஅ தேவியை நேமி யானிற் சிந்தைமெய்த் திருவின் ஏகப்
பூவியல் அமளி மேலாய்ப் பொய்யுறக் குறங்கு வானைக்
காவியங் கண்ணி தன்பால் கண்ணிய காதல் நீரால்.
ஆவியை உயிர்ப்பென் றோதும் அம்மியிட் டரைக்கின் றானை.

ககக மிகுந்தகை நினைப்பு முற்ற உருவழிப் பட்ட வேலை
நகுந்தகை முகத்தன் காதல் நடுக்குறு மனத்தன் வான்தேன்
உகுந்தகை மொழியாள் முன்னி ஒருவகை உள்ளின் உள்ளே
புகுந்தனள் அன்றோ என்று மயிர்ப்புறம் பொடிக்கின் றானை.

கஉ௰ மென்தொழில் கலாப மஞ்ஞை வேட்கைமீக் கூற மேலும்
குன்றொழிக் தொருமாக் குன்றின் அரிதிற்சேர் கொள்கைபோல
வன்றொழில் கொற்றப் பொற்றோள் மணந்கிடு மடந்தை மார்கட்
கொன்றொழித் தொன்றின் ஏக அரியதோள் ஒழுக்கி னானை.

கஉக *தழுவாநின்ற கருங்கடன்மீ துதய கிரியில் சுடர்தயங்க
எழுவான் என்ன மின்னிமைக்கும் மார்பில் தழும்பும்இயல்பிற்றாய்
முழுவா னவராய் உலகம்ஒரு மூன்றுங் காக்கும் முதல்தேவர்
மழுவாள் நேமி குலிசத்தின் வாய்மை துடைத்த மார்பானை.

கஉஉ தோடுழுதண் தார்வண்டுந்திசையானைமதந்துதைந்தவண்டுந்துற்ற
மாடுழுத நறுங்கலவை வயக்களிற்றின் சிந்தூரத்தின்மாறுகொள்ள
கோடுழுதமார்பேபோல்கொலைஉழுதவடிவேலின்கொற்றம் அஞ்சி
தாள்தொழுதபகைவேந்தர்முடிஉழுதுதழும் பிருந்தசரணத்தானை.

கஉ௩ *கொண்டதோர் உருவ மாயோன் குறளினுங் குறுக நின்றான்
திண்தலை பத்தும் தோள்கள் இருபதும் தெரிய நோக்கிக்
கண்டனன் காண்ட லோடும் கருத்தின்முன் காலச் செந்தீ
விண்டன கண்கள் கீண்டு வெடித்தன கீழும் மேலும். 5171

௧௨௪ *தோளாற்றல் என்னாகும் மேல்நிற்கும் சொல்என்னாம்
வாளாற்றற் கண்ணனை வஞ்சித்தான் மணிமுடியென்
தாளாற்ற லால்இடித்துத் தலைபத்துந் தகர்த்தென்தன்
ஆளாற்றல் காட்டேனேல் அடியேனாய் முடியேனே. 5172

௧௨௫ நடித்துவாழ் தகைமையதோ அடிமைதான் நன்றாதலைப்
பிடித்துவாள் அரக்கனார் யான்கண்டும் பிழைப்பரோ
ஒடித்துவான் தோளனைத்துந் தலைபத்தும் உதைத்துருட்டி
முடித்திவ்வூர் முடித்தான்மேல் முடிந்தவா முடிந்தொழிக.

௧௨௬ என்றாக்கி எயிறுகடித் திருகரமும் பிசைந்தெழுந்து
நின்றாக்கி உணர்ந்துரைப்பான் நேமியான் அருள்அன்றால்
ஒன்றாக்கிஒன் றிழைத்தல்உணர்வுடையோர்க்குரித்தன்றால்
பின்றாக்கில் இவைசாலப்பிழைபயக்கும்எனப்பெயர்ந்தான்.

௧௨௭ **ஆலம்பார்த் துண்டவன்போல் ஆற்றல்அமைந் துளதெனினும்**
சீலம்பார்த் துரியோர்கள் எண்ணாது செய்குவரோ
மூலம்பார்த் திடின்உலகை முடிவிக்கும் முறைத்தெனினும்
காலம்பார்த் தயர்வேலை கடவாத கடலொத்தான். 5175

௧௨௮ இற்றைப்போர்ப் பெருஞ்சீற்றம் என்னோடும் முடிந்திடுக
கற்றைப்பூங் குழலாளைச் சிறைவைத்த கண்டகனை
முற்றப்போர் முடித்ததொரு குரங்கென்றால் முனைவீரன்
கொற்றப்போர்ச்சிலைத்தொழிற்குக் குறையுண்டாம்எனக்குறைந்தான்.

௧௨௯ அந்நிலையான்பெயர்ந்துவைப்பான் ஆய்வளைக்கைஆயிழையாள்
இந்நிலையான் உடன்துயில்வாள்உளள்அல்லள் இவன்நிலையும்
புன்னிலைய காமத்தால் புலர்கின்ற நிலைபூவை
நன்னிலையின் உளள்என்னும் நலன்எனக்கு நல்குமால்.

௧௩0 என்றெண்ணி ஈண்டினியோர் பயன்இல்லை எனநினையாக்
குன்றென்னுந் தோளவன்தன் நெடுங்கோயில் புறங்கொண்டான்
நின்றெண்ணி உன்னுவான் அந்தோவிந் நீள்நகரில்
பொன்துன்னு மணிப்பூணாள் இலள்என்னப்பொருமினான்.

௧௩௧ கொன்றானோ கற்பழியாக் குலமகளைக் கொடுந்தொழிலோன்
தின்றானோ அப்புறத்தே சேர்த்தானோ சிறைசிறியேன்
ஒன்றானும் உணரகிலேன் மீண்டினிப்போய் என்னுரைக்கேன்
பொன்றாத பொழுதெனக்கிக் கொடுந்துயரம் போகாதால்.

௧௩௨ கண்டுவரும் என்றிருக்கும் காகுத்தன் கவிக்குலத்தோன்
கொண்டுவரும் என்றிருக்கும் யான்முடித்த கோளவையால்
புண்டரிக நயனத்தான் பால்இனியான் போவேனோ
விண்டவரோ டுடன்வீயா யான்வாளா விளிவேனோ. 5180

௧௩௩ கண்ணியநாள் கழிந்துளவால் கண்டிலமால் கனங்குழையை
விண்ணடைதும் என்றோரை ஆண்டிருத்தி ஈண்டியான்
எண்ணியிது முடித்திலேன் இனிமுடியா திருப்பேனோ
புண்ணியம்என் றொருபொருள்என் உழைநின்றும் போனதால்.

௧௩௪ ஏழுநூ றோசனைசூழ்ந் தெயில்கிடந்த திவ்விலங்கை
வாழுமா மன்னுயிர்யான் காணாத மற்றில்லை
ஊழியான் பெருந்தேவி ஒருத்தியையும் யான்காணேன்
ஆழிதாய் இடாழி இடையேவீழ்ந் தழிவேனோ. 5182

௧௩௫ வல்லரக்கன் தனைப்பற்றி வாயால்செங் குருதிவரக்
கல்லரக்குங் கரதலத்தால் காட்டென்று காண்கேனோ
எல்லரக்கும் அயிலார்வேல் இராவணனும் இவ்வூரும்
மெல்லரக்கின் உருகிவிழ வெந்தழல்விட் டேகேனோ. 5183

௧௩௬ வானவரை முதலோரை வினவுவனேல் வல்லரக்கன்
தான்ஒருவன் உளன்ஆக உரைசெய்யுந் தருக்கிலரால்
ஏனையர்கள் எங்குரைப்பர் எவ்வண்ணந் தெரிக்கேனோ
ஊனொழிய நீங்காத உயிர்சுமந்த உணர்விலியேன். 5184

௧௩௭ எருவைக்கு முதலாய சம்பாதி இலங்கையிலே
திருவைக்கண் டனன்என்றான் அவ்வுரையுஞ் சிதைந்ததால்
கருவைக்கு நெடுநகரைக் கடல்இடையே கரையாதே
உருவைக்கொண் டின்னமும்நான் உளன்ஆகி உழல்வேனோ.

௧௩௮ வடித்தார்பூங் குழலாளை வானறிய மண்ணறியப்
பிடித்தான்இவ் வல்லஅரக்கன் எனுமாற்றம் பிழையாதால்
எடுத்தாழி இலங்கையினை இருங்கடலின் இட்டிவனை
முடித்தாலே யான்முடித்தல் நன்றென்று முனிகின்றான்.

௧௩௯ எள்ளுறையும் ஒழியாமல் யாண்டையினும் உளன்ஆகி
உள்ளுறையும் ஒருவனைப்போல் எம்மருங்கும் உலாவுவான்
புள்ளுறையும் மாவனத்தின் காநோக்கிப் புறம்போவான்
கள்ளுறையும் நறுஞ்சோலை அயல்ஒன்று கண்ணுற்றான்.

௪. ஊர்தேடு படலம் முற்றும்.

ரு. வந்தனைப் படலம்.

க மாடு நின்றஅம் மணிமலர்ச் சோலையை மருவி
தேடி இவ்வழி காண்பனேல் தீரும்என் சிறுமை
ஊடு கண்டிலன் என்றபின் உரியதொன் றில்லை
வீடு வேன்மற்றிவ் விலங்கன்மேல் இலங்கையை வீட்டி. 5188

உ என்று சோலைபுக் கெய்தினன் இராகவன் தூதன்
ஒன்றி வானவர் பூமழை பொழிந்தனர் உவந்தார்
அன்று வாளரக் கன்சிறை அவ்வழி வைத்த
துன்றல் ஓதிதன் நிலைஇனிச் சொல்லுவான் துணிந்தாம்.

ங வன்ம ருங்கின்வாள் அரக்கியர் நெருக்கஅங் கிருந்தாள்.
கன்ம ருங்கெழுந் தென்றுமோர் துளிவரக் காணா
நன்ம ருந்துபோல் நலன்அற உணங்கிய நங்கை
மென்ம ருங்குபோல் வேறுள அங்கமும் மெலிந்தாள். 5190

ச துயில்எனக் கண்கள் இமைத்தலு முகிழ்த்தலும் துறந்தாள்
வெயில்இடைத் தந்த விளக்கென ஒளியிலா மெய்யாள்
மயில்இயல் குயில் மழலையாள் மான்இளம் பேடை
அயில்எயிற்று வெம் புலிக்குழாத் தகப்பட்ட தன்னாள். 5191

ரு விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவா
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை எண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயர்உழந் துயிர்த்தல்
அழுதல் அன்றிமற் றயல்ஒன்றுஞ் செய்குவ தறியாள். 5192

சு தழைத்த பொன்முலைத் தடங்கடந் தருவிபோய்த் தாழப்
புழைத்த போலநீர் நிரந்தரம் பொழிகின்ற பொலிவால்
இழைக்கு நுண்ணிய மருங்குலாள் இணைநெடுங் கண்கள்
மழைக்கண் என்பது காரணக் குறியினால் வகுத்தாள். 5193

எ அரிய மஞ்சினோ டஞ்சனம் இவைமுதல் அதிகம்
கரிய காண்டலுங் கண்ணினீர் கடல்புகக் கலுழ்வாள்
உரிய காதலர் ஒருவரோ டொருவரை உலகில்
பிரிவெ னுந்துயர் உருவுகொண் டாலன்ன பிணியாள். 5194

அ துப்பினால் செய்த கையொடு கால்பெற்ற துணிமஞ்
சொப்பி னான்தனை நினைதொறும் நெடுங்கண்கள் உகுத்த
அப்பி னால்நனைந் தருந்துயர் உயிர்ப்புடை யாக்கை
வெப்பி னால்புலர்ந் தொருநிலை உறாதமென் துகிலாள். 5195

௯ அரிது போகவோ விதிவலி கடத்தலென் றஞ்சிப்
பருதி வானவன் குலத்தையும் பழியையும் பாராச்
சுருதி நாயகன் வரும்வரும் என்பதோர் துணிவால்
கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள். 5196

௰ கமையி னாள்திரு முகத்தயல் கதுப்புறக் கதுவிச்
சுமையு டைக்கற்றை நிலத்திடைக் கிடந்ததூய் மதியை
அமைய வாயில்பெய் துமிழ்கின்ற அயில்எயிற் றரவில்
குமையு றத்திரண் டொருசடை யாகிய குழலாள். 5197

௧௧ ஆவியந்துகில் புனைவதொன் றன்றிவே றறியாள்
தூவி யன்னமென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவு தெண்கடல் அமுதுகொண் டனங்கவேள் செய்த
ஓவி யம்புகை உண்டதே ஒக்கின்ற உருவாள். 5198

௧௨ கண்டி லன்கொலாம் இளவலுங் கனைகடல் நடுவண்
உண்டி லங்கையென் றுணர்ந்திலன் உலகெலாம் ஒறுப்பான்
கொண்டி றந்தமை அறிந்திலன் கொலாமெனக் குழையாப்
புண்தி றந்ததின் எரிநுழைந் தால்எனப் புகைவாள். 5199

௧௩ மாண்டு போயினன் எருவையர்க் கரசன் மற்றவரோ
டாண்டை என்நிலை உரைப்பவர் இல்லைஇப் பிறப்பில்
காண்ட லோஅரி தென்றுளம் விம்முறுங் கலங்கும்
மீண்டு மீண்டுபுக் கெரிநுழை வாள்என மெலிவாள். 5200

௧௪ என்னை நாயகன் இளவலை எண்ணிலா வினையேன்
சொன்ன வார்த்தைகேட் டறிவிலள் எனத்துறந் தானோ
முன்னை ஊழ்வினை முடிந்ததோ என்றென்று முறையால்
பன்னி வாய்புலர்ந் துணர்வுதேய்ந் தாருயிர் பதைப்பாள்.

௧௫ அருந்து மெல்லட காரிட அருந்தும்என் றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு மோவென விம்மும்
மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென மயங்கும்
இருந்த மாநிலஞ் செல்லரித் தெழவும்ஆண் டெழாதாள்.

௧௬ வன்கண் வஞ்சனை அரக்கர்இத் துணைப்பகல் வையார்
தின்பர் என்இனிச் செயத்தக்க தென்றுதீர்ந் தானோ
தன்குலப் பொறை இதுஎன்று தான்தவிர்ந் தானோ
என்கொல் எண்ணுவ தென்றெணு மிராப்பகல் இல்லாள்.

கஎ பெற்ற தாயருந் தம்பியும் பெயர்த்துவந் தெய்திக்
கொற்ற மாநகர் கொண்டெழுந் தார்களோ குறித்துச்
சொற்ற ஆண்டெலாம் உறைந்தன்றி அந்நகர் துன்னான்
உற்ற துண்டெனாப் படருழந் துருதன உறுவாள். 5204

கஅ முரனெ னத்தகு மொய்ம்பினோர் முன்பொரு தவர்போல்
வரனும் மாயமும் வஞ்சமும் வரம்பில வல்லோர்
பொரநி னைந்ததோர் பூசலுண் டாமெனப் பொருமாக்
கரனெ ரிந்தது கண்டன ளாமெனக் கலுழ்வாள். 5205

கசு *தெம் மடங்கிய சேணிடைத் திங்களின்
அம்ம டங்கிய அம்புயந் தன்னினும்
மும்ம டங்கு பொலிந்த முகத்தினன்
வெம்ம டங்கலை உன்னி வெதும்புவாள். 5206

உ0 தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணான்
வாங்கு கோல வடவரை வார்சிலை
ஏங்கு மாத்திரத் திற்றிரண் டாய்விழ
வீங்கு தோளை நினைந்து வெதும்புவாள். 5207

உக இன்ன லம்பர வேந்தர்க் கியற்றிய
பன்ன லம்பதி னாலாயி ரம்படை
கன்னல் ஒன்றில் களப்படக் கால்வளை
வில்நலம் புகழ்ந் தேங்கி வெதும்புவாள். 5208

உஉ மெய்த் திருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினுஞ்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருந்த முகத்தினை உன்னுவாள். 5209

உங ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி எனச்சொன்ன
வாழி [1] நண்பினை உன்னி மயங்குவாள். 5210

உச மெய்த்த தாதை விரும்பினன் நீட்டிய
கைத்த லங்களைக் கைகளின் நீக்கிவே
றுய்த்த போது தருப்பையில் உண்பதம்
வைத்த வைதிகச் செய்கை மனக்கொள்வாள். 5211

பிரதி 1. நண்பனை

௨௫ உரங்கொள் தேமலர்ச் சென்னி உரிமையால்
வரங்கொள் பொன்முடி தம்பி மலைகிலாச்
சிரங்கொள் செஞ்சடை கட்டிய செய்வினைக்
கிரங்கி ஏங்கிய தெண்ணி இரங்குவாள். 5212

௨௬ பரித்த செல்வம் ஒழியப் படருநாள்
அருத்தி வேதியற் காக்குலம் ஈந்தவன்
கருத்தின் ஆசைக் கரையின்மை கண்டிறை
சிரித்த செய்கை நினைந்தழுஞ் செய்கையாள். 5213

௨௭ மழுவின் வாளினின் மன்னரை மூவெழு
பொழுதில் நூறிப் புலவுறு புண்ணின்நீர்
முழுகி னான்தவம் மொய்ம்பொடு மூரிவில்
தழுவு மேன்மை நினைந்துயிர் சாம்புவாள். 5214

௨௮ ஏக வாளியவ் விந்திரன் செம்மன்மேல்
போக ஏவி யதுகண் பொடித்தநாள்
காக முற்றுமோர் கண்ணில ஆக்கிய
வேக வென்றியைத் தன்தலை மேல்கொள்வாள். 5215

௨௯ வெவ்வி ராதனை மேல்வருந் தீவினை
வவ்வி மாற்றருஞ் சாபமு மாற்றிய
அவ்வி ராமனை உன்னித்தன் ஆருயிர்
செவ்வி ராதுணர் வோய்ந்துடல் தேம்புவாள். 5216

௩௦ இருந்தனள் திரிசடை என்னும் இன்சொலில்
திருந்தினாள் ஒழியமற் றிருந்த தீவினை
அருந்திறல் அரக்கியர் அல்லுநள் உறப்
பொருந்தினர் நறவொடு துயில்பொ ருந்தினார். 5217

௩௧ ஆயிடைத் திரிசடை என்னும் அன்பினாள்
தாயினும் இனியவள் தன்னை நோக்கினள்
தூயைநீ கேட்டிஎன் துணைவி ஆம்எனா
மேயதோர் கட்டுரை விளம்பல் மேயினாள். 5218

௩௨ நலந்துடிக் கின்றதோ நான்செய் தீவினைச்
சலந்துடித் தின்னமும் தருவ துண்மையோ
பொலந்துடி மருங்குலாய் புருவங் கண்ணுதல்
வலந்துடிக் கின்றில வருவ தோர்கிலேன். 5219

௩௩ முனியொடு மிதிலையின் முனைவன் வந்தநாள்
துனிஅறு புருவமுந் தோளும் நாட்டமும்
இனியன துடித்தன ஈண்டும் ஆண்டென
நனிதுடிக் கின்றன வாயின் நல்குவாய். 5220

௩௪ மறந்தனன் இதுவும்ஓர் மாற்றங் கேட்டியால்
அறந்தரு சிந்தைஎன் ஆவி நாயகன்
பிறந்தபார் முழுவதுந் தம்பியே பெறத்
துறந்துகான் புகுதநாள் வலந்துடித்ததால். 5221

௩௫ நஞ்சனை யான்வனத் திழைக்க நண்ணிய
வஞ்சனை நாள்வலந் துடித்த வாய்மையால்
எஞ்சலின் நன்மையால் இடந்து டிக்குமால்
அஞ்சலென் றிரங்குவாய் அடுப்பதி யாதென்றாள். 5222

௩௬ என்றலுந் திரிசடை இசைந்த சோபனம்
நன்றிது நன்றெனா நயந்த சிந்தையாள்
உன்துணைக் கணவனை உறுவ துண்மையால்
அன்றியுங் கேட்டியென் றறைதல் மேயினாள். 5223

௩௭ துயில்இலை ஆதலிற் கனவு தோன்றல
அயில்இணை அனையகண் அமைய நோக்கினேன்
பயில்வன பழுதில பரிவின் ஆண்டென
வெயிலினும் மெய்யென விளம்பக் கேட்டியால். 5224

௩௮ உன்னிறம் பசப்புற உயிர் உயிர்ப்புற
இன்னிறத் தேனிசை இனிய நட்பினான்
மின்னிற மருங்குலாய் செவியின் மெள்ளஓர்
பொன்னிறத் தும்பிவந் தூதிப் போயதால். 5225

௩௯ ஆயது தெரியின்நின் ஆவி நாயகன்
ஏயதோர் தூதுவந் தெதிரும் என்னுமால்
தீயது தீயவர்க் கெய்தல் திண்ணமென்
வாயது கேள்என மறித்துங் கூறுவாள். 5226

௪0 எண்ணெய்தன் முடிதொறும் இழுகி ஏறிய
திண்ணெடுங் கழுதைபேய் பூண்ட தேரின்மேல்
அண்ணல்வேல் இராவணன் அரத்த ஆடையன்
நண்ணினன் தென்புலம் நவையில் கற்பினாய். 5227

சக மக்களுஞ் சுற்றமும் மற்று ளோர்களும்
புக்கனர் அப்புலம் போந்த தில்லையால்
சிக்கற நோக்கினன் தீய இன்னமும்
மிக்கன கேட்டியால் விளைவு கூறுகேன். 5228

சஉ ஆண் தகை இராவணன் வளர்க்கும் அவ்வனல்
ஈண்டில பிறந்தவால் இனங்கொள் செஞ்சிதல்
தூண்டரு மணிவிளக் கழலுந் தொன்மனை
நீண்டதால் வானவே றெறியக் கீழைநாள். 5229

சங பிடிமதம் பிறந்தன பிறங்கு பேரியும்
இடியென முழங்குமால் இரட்டல் இன்றியே
தடியுடை முகிற்குலம் இன்றித் தாவில்வான்
வெடிபட அதிருமால் உதிரும் மீனெலாம். 5230

சச விற்பகல் இன்றியே இரவு விண்டர
வெற்பக வெறித்துள தென்னத் தோன்றுமால்
மற்பக மலர்ந்ததோள் மைந்தர் சூடிய
கற்பக மாலையும் புலவு காலுமால். 5231

சரு திரியுமால் இலங்கையும் மதிலும் திக்கெலாம்
எரியுமால் கற்பகக் காவும் எங்கணும்
கரியுமால் மங்கல கலசஞ் சிந்துமால்
விரியுமால் விளக்கினை இருள் விழுங்குமால். 5232

சசு தோரண முறியுமால் துளங்கிச் சூழிமா
வாரண முறியுமால் வலத்த வான்மருப்
பாரண மந்திரத் தறிஞர் நாட்டிய
பூரண குடத்துநீர் நறவிற் பொங்குமால். 5233

சஎ விண்தொடு மதியினைப் பிளந்து மீன்எழும்
புண்தொடர் குருதியால் பொழியும் பொன்மழை
தண்டொடு திகிரிவாள் தனுவென் றின்னன
மண்டமர் புரியுமால் ஆழி மாறற. 5234

சஅ மங்கையர் மங்கலத் தாலி மற்றையோர்
அங்கையின் வாங்குவார் எவரும் அன்றியே
கொங்கையின் விழுந்தன குறித்த ஆற்றினால்
இங்கிதின் அற்புதம் இன்னுங் கேட்டியால். 5235

சசகூ மன்னவன் தேவியம் மயன்ம டந்தைதன்
பின்னவிழ் ஓதியும் பிறங்கி வீழ்ந்தன
துன்னருஞ் சுடர்ச்சுடச் சுறுக்கொண் டேறிற்றால்
இன்னல்உண் டெனும்இதற் கேது என்பதே. 5236

ருO என்றினள் இயம்பிவே றின்னுங் கேட்டியால்
இன்றிவண் இப்பொழு தெழுந்த தோர்கனு
வன்றுணைக் கோளரி இரண்டு மாறிலாக்
குன்றுடை உழுவையங் குழுக்கொண் டிண்டியே. 5237

ருக உரம்பொரு மதகரி உறையும் அவ்வனம்
நிரம்புற வளைந்தன நெருங்கி நேர்ந்தன
வரம்பறு பிணம்படக் கொன்று வாலிதின்
புரம்புக நீண்டதோர் மயிலும் போனதால். 5238

ருஉ ஆயிரந் திருவிளக் கமைய மாட்டிய
சேயொளி விளக்கமொன் றேந்திச் செய்யவள்
நாயகன் தனிமனை நின்று நண்ணுதல்
மேயினள் வீடணன் கோயில் மென்சொலாய். 5239

ருந பொன்நகர் புக்கவப் பொருவில் போதினில்
என்னைநீ உணர்த்தினை முடிந்த தில்லென
அன்னையே அதன்குறை காணென் றாயிழை
இன்னமுந் துயில்என இருகை கூப்பினாள். 5240

ருச இவ்விடை அண்ணல்அவ் விராமன் ஏவிய
வெவ்விடை அனையபோர் வீரர் வீரனும்
அவ்விடை எய்திநின் றரிய நோக்குடை
நொவ்விடை மடந்தைதன் இருக்கை நோக்கினான். 5241

ருரு அவ்வயின் அரக்கியர் அறிவுற் றம்மவோ
செவ்வையில் துயில்நமைச் செய்த தீங்கென
எவ்வயின் மருங்கினும் எழுந்து வீங்கினர்
வெவ்வயின் மழுவெழுக் கூலம் ஏந்தியே. 5242

ருகூ வயிற்றிடை வாயினர் வளைந்த நெற்றியில்
குயிற்றிய விழியினர் கொடிய நோக்கினர்
எயிற்றினுக் கிடையிடை யானை யாளிபேய்
துயிற்கொள்வெம் பிலன்எனத் தொட்ட வாயினர். 5243

௫௭ ஒருபது கையினர் ஒற்றைச் சென்னியர்
இருபது தலையினர் இரண்டு கையினர்
வெருவரு தோற்றத்தர் விகட வேடத்தர்
பருவரை எனமுலை பலவும் நாற்றினர். 5244

௫௮ சூலம்வாள் சக்கரந் தோட்டி தோமரங்
காலவேல் கப்பணங் கற்ற கையினர்
ஆலமே உருவுகொண் டனைய மேனியார்
பாலமே தரித்தவன் வெருவும் பான்மையார். 5245

௫௯ கரிபரி வேங்கைமாக் கரடி யாளிபேய்
அரிநரி நாயென அணிமு கத்தினர்
வெரினுறு முகத்தினர் விழிகண் மூன்றினர்
புரிதரு கொடுமையர் புகையும் வாயினர். 5246

௬௦ எண்ணினுக் களவிடல் அரிய வீட்டினர்
கண்ணினுக் களவிடல் அரிய காட்சியார்
பெண்எனப் பெயர்கொடு திரியும் கூற்றினர்
அண்ணெனத் துயில்உணர்ந் தெழுந்து சுற்றினர். 5247

௬௧ ஆயிடை உரைஅவிந் தழகன் தேவியும்
தீவினை அவர்முகம் நோக்கித் தேம்பினள்
நாயகன் தூதனும் விரைவில் நண்ணினன்
ஓய்விலன் உயர்மரப் பணையின் உம்பரான். 5248

௬௨ அரக்கியர் அயில்முதல் ஏந்தும் மங்கையர்
நெருக்கிய குழுவினர் துயிலும் நீங்கினர்
இருக்குனர் மற்றிதற் கேது வென்னெனப்
பொருக்கென அவரிடைப் பொருந்த நோக்கினன். 5249

௬௩ விரிமழைக் குலங்கிழித் தொளிரும் மின்னெனக்
கருநிறத் தரக்கியர் குழுவில் கண்டனன்
குருநிறத் தொருதனிக் கொண்டல் ஆமென
அருநிறத் தழகனுக் கமைந்த காந்தையை. 5250

௬௪ தொடற்கரும் அரக்கியர் காவல் சுற்றுளாள்
மடக்கொடி சீதையாம் மாத ரேகொலாங்
கடற்றுணை நெடியதன் கண்ணி னீர்ப்பெருங்
கடத்திடை இருந்ததோர் அன்னத் தன்மையாள். 5251

௬௫ எள்ளரும் உருவில்அவ் விலக்க ணங்களும்
வள்ளல்தன் உரையொடு மாறு கொண்டில
கள்ளவாள் அரக்கன்அக் கமலக் கண்ணனார்
உள்ளுறை உயிரினை ஒளித்து வைத்தவா. 5252

௬௬ வீடிய தீவினை யானும் வீகிலேன்
தேடினன் கண்டனன் தேவியே எனா
ஆடினன் பாடினன் அங்கும் இங்கும்பாய்ந்
தோடினன் உலாவினன் உவகைத் தேன்உண்டான். 5253

௬௭ மூவகை உலகையும் முறையின் நீக்கிய
பாவியர் உயிர்கொள்வான் இழைத்த பண்பினால்
ஆவதே அரவணைத் துயிலுள் நீங்கிய
தேவனே அவன்இவள் கமலச் செல்வியே. 5254

௬௮ மாசுண்ட மணியனாள் வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்
காசுண்ட கூந்தலாள் கற்புங் காவலும்
ஏசுண்ட தில்லையால் அறத்துக் கீறுண்டோ. 5255

௬௯ புனைகழல் இராகவன் பொற் புயத்தையோ
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ
வினைகழல் அரசரின் வண்மை மிக்கிடுஞ்
சனகர்தங் குலத்தையோ யாது சாற்றுகேன். 5256

௭0 தேவரும் பிழைத்திலர் தெய்வ வேதியர்
ஏவரும் பிழைத்திலர் அறமும் ஈறின்றால்
யாவதிங் கினிச்செயல் அரிய தெம்பிராற்
காவலன் அடிமையும் பிழைத்தின் றாமன்றே 5257

௭௧ கேழிலாள் நிறைஇறை கீண்டதாம் எனில்
ஆழியான் முனிவெனும் ஆழி மீக்கொள
ஊழியின் இறுதிவந் துறுமென் றுன்னினேன்
வாழிய உலகினி வரம்பில் நாளெலாம். 5258

௭௨ வெங்கனல் வீக்கியும் புனலில் மூழ்கியும்
நுங்குவ தருந்துவ நீக்கி நோற்பவர்
எங்குளர் குலத்தின்வந் தில்லின் மாண்புடை
நங்கையர் மனத்தவம் நவிற்றற் பாலதோ. 5259

௭௩ பேணநோற் றதுமனம் பேதை பெண்மைபோல்
நாணநோற் றுயர்ந்தது நங்கை தோன்றலால்
மாணநோற் றீண்டிவள் இருந்த வாறெலாம்
காணநோற் றிலன்கொலாம் கமலக் கண்களால். 5260

௭௪ முனிவர்கள் அருந்தவர் முறையின் நின்றுளார்
இனியிவள் தானலதி யாரும் இன்மையால்
தனிமையும் பெண்மையும் தவமும் இன்னதே
வனிதையர்க் காகநல் அறத்தின் மாண்பெலாம். 5261

௭௫ தருமமே காத்ததோ சனகன் நல்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ
அருமையே அருமையே யாரி தாற்றுவார்
ஒருமையே எம்மனோர்க் குரைக்கற் பாலதோ. 5262

௭௬ செல்வமோ இஃதிவர் தீமை யோஇது
அல்லினும் பகலினும் அமரர் ஆட்செய்வார்
ஒல்லுமே ஒருவர்க்கீ தறுகண் யாதினி
வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மையால். 5263

௭௭ என்றிவை இனையன எண்ணி வண்ணவான்
பொன்திணி முதுமரப் பொதும்பர் புக்கவண்
நின்றனன் அவ்வழி நிகழ்ந்ததி யாதெனில்
துன்றிருஞ் சோலைவாய் அரக்கன் தோன்றினான். 5264

௭௮ *சிகரவண் குடுமி நெடுவரை எவையும் ஒருவழி திரண்டன்னசிவண
மகரிகை வயிர குண்டலம் அலம்பு திண்திறல் தோள்புடை வயங்கச்
சகரநீர் வேலை தழுவிய கதிரில் தலைதொறுந் தலைதொறுந் தயங்கும்
பகையில்பொன்மகுடம் இளவெயில்எறிப்பக் கங்குலும்பகல்படநடந்தான்

௭௯ உருப்பசிஉடைவாள்ஏந்தினள்தொடரமேனகைவெள்ளடைஉதவச்
செருப்பினைத் தாங்கித் திலோத்தமைஏகஅரம்பையர் குழாம்புடைசெல்ல
கருப்புரச் சாந்துங் கலவையும் மலரும் கலந்துமிழ் பரிமள கந்தம்
மருப்புடைபொருப்பேர்மாதிரக்களிற்றின் வரிக்கைவாய்மூக்கிடைமடுப்ப

௮0 நானநெய் விளக்கு நாலிரு கோடி நங்கையர் அங்கையால் எடுப்ப
மேனிவந்தெழுந்த மணியுடை அணியின் விரிகதிர் இருளெலாம்விழுங்கக்
கான்முதல் தொடர்ந்த நூபுரம் சிலம்பக் கிண்கிணி கலையொடுங் கவின
பால்நிறத் தன்னக் குழாம்படர்ந் தென்னப் பற்பல மழலையும் பகர.

௮௧ அந்தரம் புகுந்த துண்டென முனிவுற் றருந்துயில் நீங்கினன் அன்றே
சந்திர வதனத் தருந்ததி யிருந்த தண்ணறுஞ் சோலையில் தானே
மந்திரம் யாதோ யாரொடுபோமோ என்றுதம் மனமறு குதலால்
இந்திரன் முதலோர் இமைப்பிலா நாட்டத் தெனைவரும் உயிர்ப்பவந்திருப்ப

௮௨ நீல்நிறக் குன்றின் நெடிதுடன் தாழ்ந்த நீர்த்த வெள்ளருவியின் நிமிர்ந்த
பால்நிறப் பட்டு மாலைஉத் தரிகம் பசப்புற பசும்பொன் ஆரத்தின்
மாநிற மணிகள் இடையுறப் பிறழ்ந்து வருகதிர் இளவெயில் பொருவச்
சூல்நிறக்கொள்மூச் சுழித்திடைக் கிழிக்குமின்னென மார்பினூல்தோன்ற.

௮௩ தோள்தொறுந் தொடர்ந்த மகரவாய்வயிரக் கிம்புரி வலையமாச்சுடர்கள்
நாள்தொறுஞ்சுடரும் கவிகெழுவிசும்பின் நாளொடுகோளினை நக்கத்
தாள்தொறுந் தொடர்ந்து தழங்குபொற்கழலின் தகையொளி நெடுநிலந் தடவ
கேள்தொறுந் தொடர்ந்த முறுவல்வெண்ணிலவின் முகமலர் இரவினுங் கிளர.

௮௪ தன்னிறத் தோடும் மாறுதந் திமைக்கும் நீவியந் தழைபட உடுத்த
பொன்னிறத் தூசு கருவரை மருங்கில் தழுவிய புதுவெயில் பொருவ
மின்னிறக் கதிரில் சுற்றிய பசும்பொன் விரல்தலை அவிர்ஒளிக் காசின்
கன்னிறக் கற்றை நெடுநிழல் பூத்த கற்பக முழுவனங் கவின.

௮௫ சன்ன வீரத்த கோவைவெண் தாளம் ஊழியின் இறுதியில் தழுவிப்
பொன்னெடுவரையைத் தோற்றியகோளு நாளும்ஒத் திடையிடை பொலிய
மின்ஒளி மவுலி உதையமால் வரையின் மீப்படர் வெங்கதிர்ச் செல்வர்
பன்னிரு வரிலும் இருவருந் தவிர உதித்ததோர் படியொளி பரப்ப. 5272

௮௬ பயில்எயிற் றிரட்டை முரட்பணைபொடியப் படியினில் பரிபவஞ் சுமந்த
மயிலடித் தொழுக்கி அனையமா மதத்த மாதிரங் காவன்மால் யானை
கயிலையில் திரண்ட முரண்தொடர் தடந்தோள் கனகன துயர்வரங்கடந்த
அயிலெயிற் றரியின் சுவடுதன் காத்தால் அளந்தமா கரியினின் றஞ்ச.

௮௭ அங்கயற் கருங்கண் இயக்கியர் தயக்கில் அரம்பையர் விஞ்சையர்க்கமைந்
நங்கையர் காக மடந்தையர் சித்த காரியர் அரக்கியர் முதலாங் | த
குங்குமக் கொம்மைக் குவிமுலைக் கனிவாய்க் கோகிலந் துயர்உறுங் குதலை
மங்கையர் ஈட்ட மால்வரை தழீஇய மஞ்ஞையங் குழுவென வயங்க.

௮௮ துளையுறுபுழைவேய்த் தூங்கிசைக் கானத் துயல்வருதொருகிலை தொடா
இளையவர்மிடறும் இன்னிலை இயக்கக் கின்னரம் முறைநிறுத் தெடுத்த
கிளையுறு பாடல் சில்லரிப் பாண்டில் தழுவிய முழவொடுஞ் செழுமி
அளையுறை அரவும் அமுதுவாய் உகுப்ப அண்டமும் வையமும் அளப்ப.

௮௯ அன்னபூஞ் சவுக்கஞ் சாமரை உக்கம்ஆதியாய்வரிசையின் அமைந்த
உன்னரும்பொன்னின்மணியினில்புனைந்தஉழைக்குலம் மழைக்குலமனைய
மின்னிடைச்செவ்வாய்க்குவிமுலைப்பணைத்தோள்வீங்குதோல்குலார்தாங்
நன்னிறக் காரின் வரவுகண் டுவக்கும் நாடக மயில்என நடப்ப. [இ

௯0 தந்திரிக் கண்ணில் தாக்குறு கருவி தூக்கினர் எழுவிய சதியின்
முந்துறு குணிலோ டியைவுறு குறட்டில் சில்லரிப்பாண்டிலின்முறையின்
மந்திர கீதத் திசைப்பதந் தொடர்ந்த வகையுறு கட்டளை வழாமல்
அந்தர வானத் தரம்பையர் கரும்பின் பாடலால் அருகுவந் தாட.

௯௧ அந்தியின் அனங்கன் அழல்படத் தூர்ந்த அயில்முகப்பகழிவாய் அறுத்த
வெந்துறுபுண்ணின்வேல்நுழைந்தென்ன வெண்மதிப் பசுங்கதிர் விரவ
மந்தமாருதம்போய்மலர்தொறும்வாரிவயங்குநீர் மாரியின் வருந்தேன்
சிந்து நுண் துளியின் சீகரத்திவலை உருக்கிய செம்பெனத் தெறிப்ப.

௯௨ இழைபுரைமருங்குல்இறும்இறும்எனவும்இறுகிலாவனமுலைஇரட்டை
உழைபுகு செப்பின் ஒளிதர மறைத்த உத்தரீ கத்தினர் ஒல்கிக்
குழைபொருகமலங் கோட்டினர்நோக்குங் குறுநகைக் குமுதவாய்மகளிர்
மழைபுரைஒண்கண் செங்கடைஈட்டம் மார்பினுந் தோளினும்வயங்க.

௯௩ மாலையுஞ்சாந்துங் கலவையும்பூணும் வயங்குநுண் தூசொடுகாசுஞ்
சோலையின் தொகுதிக் கற்பகத்தருவும் நிதிகளுங் கொண்டுபின் தொடரப்
பாலின்வெண்பரவைத் திரைக்கருங்கிரிமேல்பரந்தெனச்சாமரைபதைப்ப
வேலைநின் றுயரும் முயலில்வான்மதியின்வெண்குடைமீச்சென் றுவிளங்க

௯௪ ஆர்வகன் றகழி அருவரை இலங்கை அடிபெயர்த் திடுந்தொறும் அழுந்த.
நேர்பொரு பரவைப் பிறழ்திரை தவழ்ந்துநெடுந்தடந்திசைதொறும்நிரச்
சார்வருங் கடுவின் எயிறுடைப் பகுவாய் அனந்தனுந் தலைதடு மாற
மூரிநீர் ஆடை இருநிலப் பரவை முதுகுளுக் குற்றனள் முரல 5281

௯௫ கேடகத் தொடுவாள் மழுஎழு முசலம் அங்குசம் கன்னகங்கிடுகோ
டாடகச் சுடர்க்கோல்அயில்சிலைகுலிசம்முதலியஆயுதம் அனைத்தும்
தாடைக்கிரட்டிஎறும்வலித்தகைத்த தகைமையர் தடவரைபொறுக்கும்
சூடகத் தடக்கைச் சுடுசினத் தடுபோர் அரக்கியர் தலைதொறும்சுமக்க.

௯௬ விரிதளிர்முகைபூக்கொம்படைமுதலவேரிவைசெம்பொனால் அலர்ந்த
தருவமர் சோலை திசைதொறுங் கரிய தழல்உமிழ் உயிர்ப்பு முன்தவழத்
திருமகள் இருந்த திசையறிந்திருந்தந் திகைப்புறுஞ் சிந்தையான்கெடுத்த
ஒருமணிநெடும்பொன்பஃறலை அறவினுழைதொறுமுழைதொறும்[1] உலாவ

(பிரதி) 1 உலாவி

௯௭ இனையதோர் தன்மைஎறுழ்வலிஅரக்கர்ஏந்தல்வந்தெய்துகின்றானை
அனையதோர் தன்மை அஞ்சனை சிறுவன் கண்டனன் அமைவுற நோக்கி
வினையமுஞ் செயலுமேல்விளைபொருளும்இவ்வழிவிளங்குமென்றெண்ணி
வனைகழல்இராமன் பெரும்பெயர் ஓதி இருந்தனன் வந்தயல் [1]மறைந்தே.

௯௮ ஆயிடை அரக்கன் அரிவையர் குழுவும் அல்லவும் வேறயல் அகல
மேயினன்பெண்ணின்விளக்கெனுந்தகையாள் இருந்துழிஆண்டவள் வெரு
போயினஉயிராள் ஆமெனநடுங்கிப்பொறிவரிஎறுழ்வலிப்புகைக்கண் [விப்
காய்சின உழுவை தின்னிய வந்த கலைஇளம் பிணைஎனக் கரைந்தாள்.

௯௯ * கூசி ஆவி குலைவுறு வாளையும்
ஆசை யால்உயிர் ஆசறு வானையும்
காசில் கண்ணிணை சான்றெனக் கண்டனன்
ஊசல் ஆடல் ஒழிந்தன உள்ளத்தான். 5286

௧00 வாழி சானகி வாழி இராகவன்
வாழி நான்மறை வாழிய அந்தணர்
வாழி நல்லறம் என்றென்று வாழ்த்தினான்
ஊழி தோறும் உயர்வுறுங் கீர்த்தியான். 5287

௧0௧ அவ்வி டத்தரு கெய்தி அமர்ந்தனன்
எவ்வி டத்தெனக் கின்னருள் ஈவது
நொவ்வி டைக்குயி லேநுவல் கென்றனன்
வெவ்வி டத்தை அமுதென வேண்டுவான். 5288

௧0௨ *ஈசற் காயினும் ஈடழி வுற்றிறை
வாசிப் பாடழி யாத மனத்தினான்
ஆசைப் பாடுமன் [2]றாணும் அடர்த்திடக்
கூசிக் கூசி இவையிவை கூறினான். 5289

௧0௩ இன்றி றந்தனன் நாளை இறந்தனன்
என்றி றந்தருந் தன்மை இதால்எனைக்
கொன்றி றந்தபின் கூடுதியோ குழை
சென்று றங்கி மறந்தரு செங்கணாய். 5290

௧0௪ உலகு மூன்றும் ஒருங்குடன் ஓம்பினேன்
அலகில் செல்வத் தரசியல் ஆணையால்
திலக மேஉன் திறத்தனன் கன்தருங்
கலக மானது காணுதி யோகணால். 5291

பிரதி 1 மறைந்து. 2. றாணும்.

க0ரு பூந்தண் வார்குழல் பொற்கொழுந் தேபுகழ்
ஏந்து செல்வம் இழந்தனை இன்னுயிக்
காந்தன் மாண்டனன் காடு கடந்துபோய்
மாய்ந்து வாழ்வது மானிடர் வாழ்வன்றே. 5292

க0சு நோற்கின் றார்களும் நோன்பொருள் நுண்ணிதின்
பார்க்கின் றாரும் பெரும்பயன் பார்த்தியால்
வார்க்குன் றாமுலை யாய்சொல் மவுலியால்
ஒக்கின் றாரொ டுடனுறை இன்பமால். 5293

க0எ பொருளும் யாழும் விளரியும் பூவையும்
அருள நாளும் மழலை வழங்குவாய்
தெருளு நான்முகன் செய்தது சிந்தையில்
அருளு மின்மருங் கும்அரி தாகவோ. 5294

க0அ ஈண்டு நாளும் இளமையும் என்றிவை
யாண்டும் ஆண்டும் பிறிதுறும் ஆதலால்
வேண்டும் நாள்வறி தேவிளிந் தால்இனி
யாண்டு வாழ்வின் அருள்குழைந் தீய்தியோ. 5295

க0கூ பெண்மை யும்அழ கும்பிற மாமனத்
திண்மை யும்முதல் யாவையுஞ் செய்பவாய்க்
கண்மை யும்பொருந் திக்கரு ணைப்படர்
வண்மை என்கொல் சனகன் மடந்தையே. 5296

கக0 இழவெ னக்குயிர் எய்தினும் எய்துக
குழைமு கத்துநின் சிந்தனை கோடினால்
பழகி நிற்புறு பண்பிவை காமத்தோ
டழகி னுக்கினி யாருளர் ஆவரோ. 5297

கயக வீட்டுங் காலத் தலறிய மெய்க்குரல்
கேட்டுங் காண்டற் கிருத்திகொல் கிள்ளைநீ
நாட்டுங் கால்நெடு நல்லறத் தின்பயன்
ஊட்டுங் காலத் திகழ்வ துறுங்கொலோ. 5298

கயஉ தக்க தென்னுயிர் வீடெனில் தாழ்க்கிலா
தொக்க செல்வந் தொலைய ஒருத்திநீ
புக்கு யர்ந்த தெனும்புகழ் போக்கிவே
றுக்க தென்னும் உறுபழி கோடியோ. 5299

௧௰௩ தேவர் தேவியர் சேவடி கைத்தொழ
தாவின் மூவுல குந்தனி நாயகம்
மேவு கின்றது நுன்கண் விலக்கினை
ஏவர் ஏழையர் நின்னில் இலங்கிழாய். 5300

௧௰௪ குடிமை மூன்றுலகுஞ் செய்யுங் கொற்றத்தென்
அடிமை கோடி அருளுதி யால் எனு
முடியின்மீது முகிழ்த் துயர் கையினன்
படியின்மேல் படிந்தான் பழி பார்க்கிலான். 5301

௫. வந்தனைப் படலம் முற்றும்.

---

௬. உருக்காட்டுப் படலம்.

௧ காய்ந்தன சலாகை அன்ன உரைவந்து கதுவா முன்னம்
தீய்ந்தன செவிகள் உள்ளந் திரிந்தது சிவந்த சோரி
பாய்ந்தன கண்கள் ஒன்றும் பரிந்திலள் உயிர்க்கும் பெண்மைக்
கேய்ந்தன அல்ல வெய்ய மாற்றங்கள் இனைய சொன்னாள்.

௨ மல்லொடு திரள்தோள் மைந்தர் மனம்பிறி தாகும் வன்மைக்
கல்லொடுந் தொடர்ந்த நெஞ்சங் கற்பின்மேல் கண்டதுண்டே
இல்லொடும் பிறந்த மாதர்க் கேய்வன அல்ல வெய்ய
சொல்லொடுந் தொடர்கை கேட்டுத் தொலைவறக் கனன்று சொன்னாள்

௩ மேருவை உருவ வேண்டில் விண்பிளந் தேக வேண்டில்
ஈரெழு புவனம் மற்றும் முற்றுவித் திடுதல் வேண்டில்
ஆரியன் பகழி வல்ல தறிந்திருந் தறிவி லாதாய்
சீரிய அல்ல சொல்லித் தலைபத்தும் சிந்து வாயோ. 5304

௪ அஞ்சினை ஆதலாலே ஆண்டகை அற்றம் நோக்கி
வஞ்சனை மான்ஒன் றேவி மாயையால் மறைத்து வைத்தாய்
உஞ்சனை போதி ஆகில் விடுதிஉன் குலத்துக் கொல்லாம்
நஞ்சினை எதிர்ந்த போதும் நோக்குமோ நினது நாட்டம்.

௫ பத்துள தலையுந் தோளும் பலஉள பகழி தூவும்
வித்தக வில்லி னார்க்குத் திருவினை யாட்டுக் கேற்ற
சித்திர இலக்கும் ஆகும் அல்லது செருவில் ஏற்குஞ்
சத்தியை போலும் மேல்நாள் சடாயுவால் தரையின் வீழ்ந்தாய்.

௬ தோற்றனை பறவைக்கன்று துள்ளுநீர் வெள்ளம் சென்னி
ஏற்றவன் வாளால் வென்றாய் இன்றெனில் இறத்தி அன்றே
கோற்றநோன் புடைய வாள்நாள் வரம்இவை நுனித்த எல்லாங்
கூற்றினுக் கன்றே வீரன் சரத்துக்குங் கூறிற்றுண்டோ. 5307

௭ குன்றுநீ எடுத்த நாள்தன் சேவடிக் கொழுந்தால் உன்னை
வென்றவன் புரங்கள் வேவத் தனிச்சரந் துரந்த மேரு
என்துணைக் கணவன் ஆற்றற் குரணிலா திற்று வீழ்ந்த
அன்றெழுந் துயர்ந்த ஓசை கேட்டிலை போலும் ஐயா 5308

௮ பெற்றுடை வரனும் நாளும் பிறந்துடை உரனும் பின்னும்
மற்றுடை எவையுந் தந்த மலரயன் முதலோர் வார்த்தை
வில்தொடை இராமன் கோத்து விடுதலும் விலக்குண் டெல்லாம்
இற்றுடைந் திறுதல் மெய்யே விளக்கின்முன் இருளுண் டாமோ.

௯ *அங்கண்மா ஞாலமும் விசும்பும் அஞ்சவாழ்
வெங்கணாப் புன்தொழில் விலக்க மேற்கொளாய்
செங்கண்மால் நான்முகன் சிவனென் றேகொலாம்
எங்கணா யகனையும் நினைந்த தேழை நீ 5310.

௧௦ மலைஎடுத் தெண்திசை காக்கும் மாக்களை
நிலைஎடுத் தேன்எனும் மாற்றம் நேருமீ
சிலைஎடுத் திளையவன் நிற்கச் சேர்ந்திலை
தலைஎடுத் தின்னமும் மகளிர்த் தாழ்த்தியோ. 5311

௧௧ ஏழைநீ ஒளித்துறை இன்னிடத் தென
வாழிஎங் கோமகன் அறிய வந்தநாள்
ஆழியும் இலங்கையும் அழியத் தாழுமோ
ஊழியும் திரியுநின் உயிரொ டோயுமோ. 5312

௧௨ வெஞ்சின அரக்கரை வீய்த்து மீள்வதோ
வஞ்சனை நீசெய வள்ளல் சீற்றத்தால்
எஞ்சலில் உலகெலாம் எஞ்சும் எஞ்சுமென்
றஞ்சுகின் றேன்இதற் கறமும் சான்றரோ. 5313

௧௩ மானுயிர் இவர்என மனக்கொண் டாய்எனில்
கானுயர் வரைநிகர் காத்த வீரியன்
தான்ஒரு மனிதனல் தலத்து ளான்எனில்
தேன்உயர் கொன்றையான் தன்மை தேர்தியால். 5314

கச இருவர்என் றிகழ்ந்தனை என்னில் யாண்டினும்
ஒருவன்என் றேஉல கழிக்கும் ஊழியான்
செருவருங் காலமென் மெய்ம்மை தேர்தியால்
பொருவருந் திருஇழந் தாவி பேர்ன்றுவாய். 5315

கரு பொற்கணன் தம்பிஎன் றினைய போர்த்தொழில்
விற்கொள்நான் பொருவுதோள் அவுணர் வேறுளோர்
நற்கணார் நற்றவம் துறந்த நாளினும்
இற்கணார் உவந்தினி திருந்து வாழ்ந்தனர். 5316

கசு * பூவிலோன் ஆதியாகப் புலன்கள்போம் நெறியில் போகா
தேவரோ அவுணர் தாமோ நிலைநின்று வினையில் தீர்ந்தார்
ஏவர்மூன் றுலகில் செல்வம் எய்தினர் இசையின் ஏழாய்
பாவமோ முன்னர்ச் செய்த தருமமோ தெரியப் பாராய்.

கஎ இப்பெருஞ் செல்வம் நின்கண் ஈய்ந்தபேர் ஈசன் யாண்டும்
அப்பெருஞ் செல்வம் துய்ப்பான் இன்றுமா தவத்தன் அன்றே
ஒப்பருந் திருவும் நீங்கி உறவொடும் உலக்க எண்ணித்
தப்புதி அறத்தை ஏழாய் தருமத்தைக் காமி யாயோ. 5318

கஅ மறந்திறம் பாத தோலா வலியினர் எனினு மாண்டார்
அறந்திறம் பினரும் மக்கட் கருள்துறந் தவரும் அன்றே
பிறந்திறந் துழலும் பாசம் பிணக்குடைப் பிணியால் போந்தார்
துறந்தரும் பகைகள் மூன்றும் துடைத்தவர் பிறரார் சொல்லாய்.

ககூ தென்தமிழ் உரைத்தோன் முன்னுந் தீதறு முனிவர் யாரும்
புன்தொழில் அரக்கர்க் காற்றேம் நோற்கிலம் புகுந்தபோதே
கொன்றருள் உன்னால் அன்னார் குறைவது சரதங் கோவே
என்றனர் யானுங் கேட்டேன் நீஅதற் கிசைவு செய்தாய்.

உ0 உன்னையுங் கேட்டு மற்றுன் ஊற்றமும் உடைய நாளும்
பின்னைஇவ் வரக்கர் சேனைப் பெருமையும் முனிவர் பேசிச்
சொன்னபின் உங்கை மூக்கும் உர்ப்பியர் தோளும் தாளும்
சின்னபின் னங்கள் செய்த அதனையுஞ் சிந்தி யாயோ. 5321

உக ஆயிரந் தடக்கை யாலே ஐநான்கு தோளும் பற்றி
வாய்வழி குருதி சோரக் குத்திவான் சிறையில் வைத்த
தூயவன் வயிரத் தோள்கள் துணித்தவன் தொலைந்த மாற்றம்
நீஅறிந் திலையோ நீதி நிலைஅறிந் திலாத நீசா. 5322

௨௨ கடிக்கும் வாள் அரவுங் கேட்கும் மந்திரங் களிக்கின்றோயை
அடுக்குமீ தடாத தீதென் றறிவினால் ஏது காட்டி
இடிக்குனர் இல்லை நீயே எண்ணிய தெண்ணி உன்னை
முடிக்குனர் என்ற பேர்து முடிவன்றி முடிவ துண்டோ.

௨௩ *என்ற றத்துரை கேட்டலும் இருபது நயனம்
மின்றி றத்தன ஓத்தன வெயில்விடு பகுவாய்
குன்றி றத்தெழித் துரப்பினன் குறிப்பதென் காமத்
தன்தி றத்தையும் கடந்தது சீற்றத்தின் தகைமை. 5324

௨௪ வளர்ந்த தாளினன் மாதிரம் அனைத்தையும் மறைவித்
தளந்த தோளினன் அனல்சொரி கண்ணினன் இவளைப்
பிளந்து தின்பன்என் றுடன்றுநின் றனன்அடி பெயரான்
கிளர்ந்த சீற்றமுங் காதலும் எதிர்எதிர் கிடைப்ப. 5325

௨௫ அன்ன காலையில் அனுமனும் அருந்ததிக் கற்பின்
என்னை ஆளுடை நாயகன் தேவியை என்முன்
சொன்ன நீசன்கை தொடுவதன் முன்துகைத் துழக்கிப்
பின்னை நின்றது செய்குவன் என்பது பிடித்தான். 5326

௨௬ தனியில் நின்றவன் தலைபத்துங் கடிதிறத் தாக்கிப்
பனியின் வேலையின் இலங்கையைக் கீழுறப் பாய்ச்சி
புனித மாதவத் தணங்கினைச் சுமந்தனன் போவன்
இனிதின் என்பது நினைந்துதன் கரம்பிசைந் திருந்தான்

௨௭ ஆண்டவாள் அரக்கன் அகத் தண்டத்தை அழிப்பான்
மூண்ட காலவெந் தீஎன முற்றிய சீற்றம்
நீண்ட காதல்நீர் நீத்தத்தின் வீவுற நினைவின்
மீண்டு நின்றொரு தன்மையால் இவைஇவை விளம்பும். 5328

௨௮ *கொல்வன் என்றுடன்றேன் உன்னைக்கோறலன்குறித்துசொன்ன
சொல்உள அவற்றுக் கெல்லாங் காரணம் தெரியச் சொல்லில்
ஒல்லுவ தொல்லா தீதென் றெனக் கும்ஒன் றுலகத் துண்டோ
வெல்வதுந் தோற்றல் தானும் விளையாட்டின் விளைந்தமேனாள்

௨௯ ஒன்றுகேள் உரைக்க நிற்கோர் உயிரென உரியோன் தன்னை
கொன்று கோள் இழைத்தால் நீநின் உயிர்விடக் கூற்றங் கூடும்
என்றனு ருயிரும் நீங்கும் என்பதை இசைய எண்ணி
அன்றுநான் வஞ்சஞ் செய்த தார்எனக் கமரின் ஏற்பார். 5330

௩0 மான்என்ப தறிந்து போன மானிடர் வாயார் மீண்டு
யான்என்ப தறிந்து தேரா ஏழைநீ எண்ணி நோக்கித்
தேன்என்ப தறிந்த சொல்லாய் தேவர்தாம் யாவரே எங்
கோன்என்ப தறிந்த பின்னைத் திறம்புவார் குறையின் அல்லால்.

௩௧ வென்றோரும் இருப்ப யார்க்கும் மேலவர் விளிவி லாதோர்
என்றோரும் இருக்க அன்றே இந்திரன் ஏவல் செய்ய
ஒன்றாக உலக மூன்றும் ஆள்கின்ற ஒருவன் யானே
மென்தோளாய் இதற்கு வேறோர் காரணம் விரிப்பதுண்டோ

௩௨ மூவருந் தேவர் தாமும் முரண்உக முற்றுங் கொற்றம்
பாவைநின் பொருட்டி னல்லர் பழிவரப் பயன்தீர் கோன்பின்
ஆவியன் மனிதர் தம்மை அடுகிலேன் அவரை ஈண்டுக்
கூவிநின் றேவல் கொள்வன் காணுதி குதலைச் சொல்லாய்.

௩௩ சிற்றியல் சிறுமை ஆற்றல் சிறுதொழில் மனித ரோடே
முற்றிய தாயின் வீர முனிவென்கண் விளையா தேனும்
இற்றைஇப் பகலில் நொய்தின் இருவரை ஒருகை யால்வான்
பற்றினன் கொணருந் தன்மை காணுதி பழிப்பி லாதாய்.

௩௪ பதவியில் மனித ரேனும் பைந்தொடி நின்னைத் தந்த
உதவியை உணர நோக்கின் உயிர்கொலைக் குரியர் அல்லர்
சிதைவுறல் அவர்க்கு வேண்டில் செய்திநீ என்று செப்பில்
இதம்உனக் கிதேயா கில் இயற்றுவன் காண்டி இன்னும்.

௩௫ பள்ளநீர் அயோத்தி நண்ணிப் பரதனை முதலினோர் ஆண்
டுள்ளவர் தம்மை எல்லாம் உயிர்குடித் தூழித் தீயின்
வெள்ளநீர் மிதிலை யோரை வேரறுத் தெளிதின் எய்திக்
கொள்வன்நின் உயிரும் என்னை அறிந்திலை குறைந்த நாளோய்.

௩௬ ஈதுரைத் தழன்று பொங்கி எதிர்கதிர் வானை நோக்கித்
தீதுயிர்த் திழைக்கு நாளுந் திங்களோர் ஒன்றுந் தேய்ந்தால்
ஆதலிற் பின்னை நீயே அறிந்தவா றறிதி என்னப்
போதரிக் கண்ணி னாளை அகத்தினைத் துரப்பிப் போனான்.

௩௭ அஞ்சுவித் தாலும் பெண்மை அறிவுறத் தேற்றி யானும்
வஞ்சியிற் செல்வி யாளை வசித்தென்பால் வரச்சொல் லீரேல்
நஞ்சுமக் காவன் என்று நகையிலா முகத்துப் பேழ்வாய்
வெஞ்சினத் தரக்கி மார்க்கு வேறுவே றுரைத்துப்போனான். 5338

௩௮ போயினன் அரக்கன் பின்னர்ப் பொங்கரா நுங்கிக் கான்ற
தூயவெண் மதியம் ஒத்த தோகையை தொடர்ந்து சுற்றித்
தீயவல் அரக்கி மார்கள் தெழித்தெடுத் துரப்பிச் சிந்தை
மேயின வண்ணம் எல்லாம் விளம்புவான் தொடர்ந்து மிக்கார்.

௩௯ *முன்முன் நின்றார் கண்கனல் சிந்த முடுகுற்றார்
மின்மின் என்னுஞ் சூலமும் வாளும் மிசைஓச்சிக்
கொன்மின் கொன்மின் கொன்று முறித்துக் குடராரத்
தின்மின் தின்மின் என்று தெழித்தார் சிலர்எல்லாம். 5340

௪0 வையந் தந்தான் நான்முகன் மைந்தன் மகன்மைந்தன்
ஐயன் வேதம் ஆயிரம் வல்லான் அறிவாளன்
மெய்யன் புன்பால் வைத்தனன் அல்லால் வினைவேறே
செய்யும் புன்மை யாதுள தென்றார் சிலர்எல்லாம். 5341

௪௧ மண்ணில் தீயோர் மானுயர் தத்தம் வழியோடும்
பெண்ணில் தீயோய் நின்முதல் மாளும் பிணிசெய்தாய்
புண்ணில் கோலிட் டாலன சொல்லிப் பொதுநோக்கா
தெண்ணிக் காணாய் மெய்ம்மையை என்றார் சிலர்எல்லாம்.

௪௨ புக்க வழிக்கும் போந்த வழிக்கும் புகைவெந்தீ
ஒக்க விதைப்பான் உற்றனை அன்றோ உணர்வில்லாய்
இக்கணம் இற்றாய் உன்னினம் எல்லாம் உயிர்வாழாச்
சிக்க உரைத்தும் என்று கதித்தார் சிலர்எல்லாம். 5343

௪௩ கொல்லான் உற்றோர் பெற்றிமை யாதுங் குறையாதோன்
வெல்வான் எங்கோன் தின்னுமின் வம்மின் இவள்மெய்யை
வல்வாய் வெய்யோன் ஏவலின் என்னா மனம்வைத்தார்
நல்வாய் நல்லாள் கண்கள் கலுழ்ந்தாள் நகுகின்றாள். 5344

௪௪ இன்னோர் அன்ன தோதிய காலத் திடைநின்றாள்
முன்னே சொன்னேன் கண்டகனாவின் முடிவம்மா
பின்னே வாளா பேதுற வீரோ பிழைஎன்ன
அன்னே நன்றென் றன்னவர் எல்லாம் அவிவுற்றார். 5345

௪௫ அறிந்தாள் போலும் முச்சடை என்பாள் அது சொல்ல
பிறிந்தார் சீற்றம் மன்னனை அஞ்சிப் பிரிகில்லார்
செறிந்தார் சுற்றும் தீவினை நீங்குஞ் செயல்என்ன
நெறிந்தார் ஓதிப் பேதையும் ஆவி நிலைநின்றாள். 5346

சசு காண்டற் கொத்த காலமு மீதே தெருகாவல்
தூண்டற் கொத்த சிந்தையர் முன்னே துயில்வுற்றார்
ஈண்டத் துஞ்ச விஞ்சைகள் செய்தான் இகல்வீரன்
மாண்டற் றாரா மென்றிட அன்னார் மயர்வுற்றார். 5347

சஎ துஞ்சா தாரும் அஞ்சுதல் கண்டாள் துயருற்றாள்
நெஞ்சால் ஒன்றும் உய்வழி காணாள் நெகுகின்றாள்
அஞ்சா நின்றாள் பன்னெடு நாளும் அழிவுற்றாள்
எஞ்சாவன்பால் இன்ன பகர்ந்தாங் கிடருற்றாள். 5348

சஅ *கருமே கநெடுங் கடல்கார் அனையான்
தருமே தமியேன் எனதா ருயிர்தான்
உருமே றுமிழ்வெஞ் சிலைநாண் ஒலிதான்
வருமே உரையாய் வலியார் விதியே. 5349

சகூ கல்லா மதியே கதிர்வாள் நிலவே
செல்லா இரவே சிறுகா இருளே
எல்லாம் எனையே முனிவீர் நினையா
வில்லா ளனையா தும்விளித் திலிரோ. 5350

ருO தழல்வீ சிஉலா வரும்வா டைதழீஇ
அழல்வீர் எனதா விஅறிந் திலிரோ
நிழல்வீ ரையனார் உடனே நெடுநாள்
உழல்வீர் கொடியீர் உரையா டலிரோ. 5351

ருக வாரா தொழியான் எனும்வன் மையினால்
ஓரா யிரகோ டியிடர்க் குடையேன்
தீராய் ஒருநாள் வலிசே வகனே
நாரா யணனே நனிநா யகனே. 5352

ரு௨ தருஒன் றியகான் அடைவாய் தவிர்நீ
வருவன் சிலநா ளினின்மா நகர்வாய்
இருஎன் றனைஇன் னருள்தான் இதுவோ
ஒருவன் தனியா விவைஉன் னுதியோ. 5353

ருந பேணும் உணர்வே உயிரே பெருநாள்
நாண்இன் றுழல்வீர் நனிநா யகனை
காணும் துணையும் கழிவீர் அலிர்நான்
பூணும் பழியோ டுபொருந் துவதோ. 5354

௫௪ முடியா முடிமன் னன்முடிந் திடவும்
படியே மூநெடுந் துயர்பா விடவும்
அடியேன் உடன்வந் துவனம் புகுதும்
கொடியான் வருமென் றுகுலா வுவதோ. 5355

௫௫ என்றென் றுயிர்விம் மிஇருந் தயர்வாள்
மின்றுன் னுமருங் குல்விளங் கிழையாள்
ஒன்றென் உயிருண் டெனிலுண் டிடர்யான்
பொன்னும் பொழுதே புகழ்பூ ணும்எனு. 5356

௫௬ * பொறைஇருந் தாற்றிஎன் உயிரும் போற்றினேன்
அறைஇருங் கழலவற் காணும் ஆசையால்
நிறைஇரும் பல்பகல் நிருதர் நீள்நகர்ச்
சிறைஇருந் தேனைஅப் புனிதன் தீண்டுமோ. 5357

௫௭ உன்னின உன்னின உணர்ந்து சூழ்ந்தவர்
சொன்னன சொன்னன செவியில் தூங்கவும்
மன்னுயிர் காத்திருங் காலம் வைகினேன்
என்னில்வே றரக்கியர் யாண்டை யார்கொலோ. 5358

௫௮ சொல்தெரி யாப்பழி சுமந்து தூங்குவேன்
நல்பிறப் புடைமையும் நாணும் நன்றரோ
கற்புடை மடந்தையர் கதையில் தான்உளோர்
இல்பிறந் துயர்ந்தவர் என்னில் யாவரோ. 5359

௫௯ பிறர்மனை மேவிய பெண்ணைப் பேணுதல்
திறம்அல என்னுயிர்க் கிறைவன் தீர்ந்தனன்
புறமலர் தூவிடப் பொழுது போக்கியான்,
அறம்அல இயற்றிவே றென்கொண் டாற்றுகேன். 5360

௬௦ எப்பொழு திப்பெரும் பழியின் எய்தினேன்
அப்பொழு தேஉயிர் துறக்கல் ஆகுமால்
ஒப்பரும் பெருமறு உலகம் ஓதயான்
துப்பழிந் துய்வது துறக்கந் துன்னவோ. 5361

௬௧ அன்பழி சிந்தையர் ஆன ஆடவர்
வன்பழி சுமக்கினும் சுமக்க மற்றியான்
துன்பழி பெரும்புகழ்க் குலத்துள் தோன்றினேன்
என்பழி துடைப்பவர் என்னில் யாவரோ. 5362

௬௨ வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கினென்
மைஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாய்என
நஞ்சனை யான்அகம் புகுந்த நங்கை நான்
உஞ்சனன் இருத்தலும் உலகம் கொள்ளுமோ. 5363

௬௩ வல்லியல் மறவர்தம் வருக்கம் ஆசற
வெல்லினும் வெல்கபோர் விளிந்து வீடுக
இல்லியல் அறத்தையான் இகந்து வாழ்ந்தபின்
சொல்லிய என்பழி அவரைச் சுற்றுமோ. 5364

௬௪ வருந்தலில் மானமா அனைய மாட்சியர்
பெருந்தவ மடந்தையர் முன்பு பேதையேன்
கருந்தனி முகிலினைப் பிரிந்து கள்வனூர்
இருந்தவள் இவள்என ஏச நிற்பனோ. 5365

௬௫ அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசற
விற்பணி கொண்டருஞ் சிறையின் மீட்டநாள்
இற்புகத் தக்கலை என்னில் யான்உடைக்
கற்பினை எப்பரி சிழைத்துக் காட்டுகேன். 5366

௬௬ ஆதலால் இறத்தலே அறத்தின் ஆறெனச்
சாதல்காப் பவரும்என் தவத்திற் சாம்பினார்
ஈதலால் இறையும்வே றில்லை என்றொரு
போதுலா மாதவிப் பொதும்பர் எய்தினாள். 5367

௬௭ கண்டனன் அனுமனுங் கடிதுநீக் கினான்
கொண்டனன் துணுக்கம்மெய் தீண்டக் கூசுவான்
அண்டர்நா யகன்அருள் தூதன் யான்எனத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது சொல்லினான். 5368

௬௮ அடைந்தனன் அடியனேன் இராமன் ஆணையால்
குடைந்துல கனைத்தையும் நாடுங் கொட்பினால்
மிடைந்தவர் உலப்பிலர் தவத்தை மேவலால்
மடைந்தைநின் சேவடி வந்து நோக்கினேன். 5369

௬௯ ஈண்டுநீ இருந்ததை இடரில் வைகுறும்
ஆண்டகை அறிந்திலன் அதற்குக் காரணம்
வேண்டுமோ அரக்கர்தம் வருக்கம் வேரொடும்
மாண்டில ஆதலால் மற்றும் வேண்டுமோ. 5370

௭0 ஐயுறல் உளதடை யாளம் ஆரியன்
மெய்யுற உணர்த்திய உரையும் வேறுள
கையுறு நெல்லியில் கடிது காண்டியால்
நெய்யுறு விளக்கனாய் நினையல் வேறென்றான். 5371

௭௧ *என்றவன் இறைஞ்ச நோக்கி இரக்கமும் மெலிவும் எய்தி
நின்றவன் நிருதன் அல்லன் நெறிநின்று பொறிகள் ஐந்து
வென்றவன் அல்லன் ஆகில் விண்ணவன் ஆக வேண்டும்
நன்றுளன் உரையும் தூயோன் நவையிலன் போலும்என்னா.

௭௨ அரக்கனே ஆக வேறோர் அமலனே ஆக அன்றுஇக்
குரக்கினத் தொருவனே தான் ஆகுக கொடுமையாக
இரக்கமே யாக வந்திங் கெம்பிரான் நாமஞ் சொல்லி
உருக்கினன் உணர்வைத் தந்தான் உயிர்க்கிதின் உதவிஉண்டோ.

௭௩ என உணர்ந் தினிதின் நோக்கி இறங்குவான் உள்ளங் கள்ள
மனன்அகத் தடையன் ஆன வஞ்சக மார்க்கன் அல்லன்
நினைவுடைச் சொற்கள் கண்ணீர் நிலம்புகப் புலம்பா நின்றான்
வினவுதற் குரியன் என்ன வீரநீ யாரை என்றாள். 5374

௭௪ ஆயசொல் தலைமேல் கொண்ட அங்கையன் அன்னை நின்னைத்
தூயவன் பிரிந்த பின்னைத் தேடிய துணைவன் தொல்லைக்
காய்கதிர்ச் செல்வன் மைந்தன் கவிக்குலம் அதனுக் கெல்லாம்
நாயகன் சுக்கிரீவன் என்றுளன் நவையில் தீர்ந்தான். 5375

௭௫ மற்றவன் முன்னோன் அந்நாள் இராவணன் வலிதன் வாலில்
இற்றுகக் கட்டி எட்டுத் திசையினும் எழுந்து பாய்ந்த
வெற்றியன் தேவர் வேண்ட வேலையை விலங்கல் மத்தில்
சுற்றிமா நாகந் தேய அழுதெழக் கடைந்த தோளான். 5376

௭௬ அன்னவன் தன்னை உங்கோன் அம்பொன்றால் ஆவி வாங்கிப்
பின்னவற் கரசு நல்கித் துணைஎனப் பிடித்தான் எங்கள்
மன்னவன் தனக்கு நாயேன் மந்திரத் துள்ளேன் வானின்
நன்னெடுங் காலின் மைந்தன் நாமமும் அனுமன் என்பேன்.

௭௭ எழுபது வெள்ளங் கொண்ட எண்ணென உலகம் எல்லாம்
தழுவிநின் றெடுப்பர் வேலை தனித்தனி கடக்கும் தாளார்
குழுவினம் உங்கோன் செய்யக் குறித்தது குறிப்பின்உன்னி
வழுவில செய்தற் கொத்த வானரம் வானின் நீண்ட. 5378

எஅ துப்புறு பாவை ஏழும் சூழ்ந்தபார் ஏழும் ஆழ்ந்த
ஒப்புறு நாகர் நாடும் உம்பரும் இம்பர் நாடும்
இப்புறந் தேடி நின்னை எதிர்ந்தில எண்ணில் அண்டத்
தப்புறம் போயுந்தேடும் அமைதியைஅமைந்த தன்னி. 5379

எகூ புன்தொழில் அரக்கன் கொண்டு போந்தநாள் பொதிந்த தூசில்
குன்றில்எம் மருங்கில் இட்ட அணிகலக் குறிப்பி னாலே
வென்றியான் அடியேன் தன்னை வேறுகொண் டிருந்து கூறி
தென்திசைச் சேறி என்றான் அவன்அருள் சிதைவ தாமோ. 5380

அ0 கோற்றவற் கொண்டு காட்டிக் கொடுத்தபோ தடுத்ததன்மை
பெற்றியின் உணரப் பாற்றே உயிர்நிலை பிறிதும் உண்டோ
இற்றைநாள் அளவும் பொன்னே அன்றுநீ கழித்து நீத்த
மற்றநல் அணிகள் காண்உன் மங்கலம் காத்த மன்னே.

அக ஆயவன் தன்மை நிற்க அங்கதன் வாலி மைந்தன்
ஏயவன் தென்பால் வெள்ளம் இரண்டுடன் எழுந்த சேனை
மேயினன் தொடர்ந்து தீரா வினையவன் விடுத்தான் என்னைப்
பாய்புனல் இலங்கை மூதூர்க் கென்றனன் பழியை வென்றான்.

அஉ எய்தின உரைத்த லோடும் எழுந்தபேர் உவகை பொங்கி
வெய்துயிர்ப் பொடுங்கி மேனி வான்உற விம்மி ஓங்கி
உய்தல்வந் துற்றவோ என் றருவிநீர் ஒழுகுங் கண்ணாள்
அய்யசொல் ஐயன் மேனி எப்படித் தறிவை என்றாள்.

அங படியுரைத் தெடுத்துக் காட்டும் படித்தன்று படிவம் பண்பின்
முடிவுள உவமைக் கெல்லாம் இலக்கணம் உரைக்கின் முந்தாத்
துடியிடை அடையா ளத்தின் தொடர்வையே தொடர்திஎன்ன
அடிமுதன் முடியீ றாக அறிவுற அனுமன் சொல்வான். 5384

அச *சேயிதழ்த் தாமரை என்று சேண்உளோர்
ஏயின தன்துணை எளிய தில்லையால்
நாயகன் திருவடி குறித்து நாட்டுகில்
பாய்திரைப் பவளமும் குவளைப் பண்பிற்றால். 5385

அரு தளங்கிளர் கற்பக முகிழும் தண்டுறை
இளங்கொடிப் பவளமும் கிடக்க என்அவை
துளங்கொளி விரற்கெதிர் உதிக்கும் சூரியன்
இளங்கதிர் ஒக்கிலும் ஒக்கும் ஏந்திழாய். 5386

அசு சிறியவும் பெரியவும் ஆகித் திங்கள்ஓர்
மறுவில பத்துள இல்லை மற்றினி
எறிசுடர் வயிரமோ திரட்சி எய்தில
அறிகிலேன் உகிர்க்குநான் உவமை ஆவன. 5387

அஎ பொருந்தில நிலனொடும் பொருந்து கானிடை
வருந்தின எனும்அது நூலை மாறுகொண்
டிருந்தது நின்றது புவனம் யாவையும்
ஒருங்குடன் கொணர்வத துணர்த்தல் பாலதோ. 5388

அஅ தாங்கணைச் சார்ங்கமும் வளையும் தாங்கரா
வீங்கணைப் பள்ளியான் எனினும் வேறினிப்
பூங்கணைக் காற்கொரு பரிசு தாம்பொரு
ஆங்கணைக் காவமே யாவதென்னவே. 5389

அகூ அறம்கிளர் பறவையின் அரசின் ஓங்கிய
பிறங்கெருத் தனையன எவரும் பெற்றுடை
மறங்கிளர் மதகரிக் கரத்தை மாற்றின
குறங்கினுக் குவமையில் உலகிற் கூடுமோ. 5390

கூ0 வலம்சுழித் தொழுகுநீர் வாங்கு கங்கையின்
பொலம்சுழி என்றலும் புன்மை பூவொடும்
நிலம்சுழி உந்தியை உரைக்கின் நேர்இனி
இலஞ்சியும் போலும்வே றுவமை ஆவதோ. 5391

கூக பொருவரு மரகதப் புயல்கொள் மால்வரை
வெருவுற விரிந்துயர் விலங்கல் ஆகத்தைப்
பிரிவுற நோற்றனள் என்னில் பின்னைஅத்
திருவினில் திருவிலார் யாவர் தெய்வமே. 5392

கூஉ நீடுறு கீழ்த்திசை நின்ற யானையின்
கோடுறு கரம்எனச் சிறிது கூறலாம்
தோடுறு மலர்எனச் சுரும்பு சுற்றுறாத்
தாடுறு தடக்கைவே றுவமை சாலுமோ. 5393

கூங பச்சிலைத் தாமரை பகல்கண் டால்அன
கைச்செறி முகிழ்உகிர் கனகன் என்பவன்
வச்சிர யாக்கையை வகிர்ந்த வன்தொழில்
நிச்சயம் ஆம்எனில் நிலையை நீங்குமோ. 5394

௯௪ திரண்டில ஒளியில திருவும் சேர்கில
முரண்தரு மேருவின் சிலையின் மூரிநாண்
புரண்டில புகழில பொருப்பொன் றென்றுபோன்
திரண்டில புயங்களுக் குவமை ஒக்குமோ. 5395

௯௫ *எள்ளற் கரிய நிலையாகி இயைந்து தம்மில் இணைஉருவாய்த்
தள்ளப் படாத தகையாகிச் சார்கத் திரிகை வகைஒழுகா
அள்ளற் பள்ளத் தகன்புனல்சூழ் அகன்ற வாவிக் குள்நின்ற
வள்ளைத் தண்டும் வனப்பழிய மகரம் செறியாக் குழைஎன்றான்.

௯௬ * கடற்படு பணிலமும் கன்னிப் பூகமும்
மிடற்றினுக் குவமையென் றுரைப்பர் மெல்லியோர்
உடற்பட ஒண்ணுமோ உரகப் பள்ளியான்
இடத்துறை சங்கமொன் றிருக்க எங்களால். 5397

௯௭ அண்ணல்தன் திருமுகம் கமலம் ஆமெனின்
கண்ணினுக் குவமைவே றியாது காட்டுகேன்
தண்மதி எதிர்என உரைக்கத் தக்கதோ
விண்உடல் பொலிந்தது மெலிந்து தேயுமால். 5398

௯௮ *ஆரமும் அகிலும் நீவி அகன்றதோர் அமலன் செவ்வாய்
நாரமுண் டலர்ந்த செங்கேழ் நளினமென் றுரைக்க நாணி
ஈரமுண் டமுதம் ஊறும் இன்னுரை இயம்பா தேனும்
மூரல்வெண் முறுவல் பூவாப் பவளமும் மொழியற் பாற்றே.

௯௯ *முத்தம் கொல்லோ முழுநிலவின் முறியின் திறமோ மொழிஅமிர்தின்
ஒத்தின்* துள்ளிவெள்ளியெனத் தொகுத்தகொல்லோ துறைஅறத்தின்
வித்தின்முளைத்த அங்குரங்கொல் வேறே சிலகொல் மெய்ம் முகுழ்த்த
தொத்தின் தொகை கொல் யாதென்று பல்லுக்குவமை சொல்லுகேன்.

௧௦௦ எள்ளா நீரிந் திரநீலத் தெழுந்த கொழுந்து மரகதத்தின்
விள்ளா முழுவாள் நிழற்பிழம்பும் வேண்டவேண்டு மேனியதே
தள்ளா ஓதி கோபத்தைக் கவ்வ வந்து சார்ந்ததுவுங்
கொள்ளா வள்ளல் திருமூக்கிற் குவமை பின்னுங் குறியாமோ.

௧௦௧ பனிக்கற் சுரத்துக் கான்முதலோர் சுவந்த படையும் பல்பேயும்
தனிக்கைச் சிலையும் வானவரும் முனிவர் குழுவும் தனி அறமும்
இனிக்கட் டழியும் அரக்கர்குலம் என்னும் சுருதி ஈரிரண்டும்
குனிக்கக் குனித்த புருவத்துக் குவமை நீயே கோடியால். 5402

௧௦௨ வருநாள் தோன்றும் தனிமருவும் வளர்வுந் தேய்வும் வாளரவம்
ஒருநாள் கவ்வ வருகோளும் இறப்பும் பிறப்பும் ஒழிவுற்றால்
இருநாள் பகலின் இலங்குமதி இலங்க இருளின் எழில் நிழற்கீழ்ப்
பெருநாள் நிற்கில் அவன்நெற்றிப் பெற்றித் தாக பெறும்மன்னே

௧௦௩ நீண்டு சுருண்டு நெய்த்திருண்டு நெறிந்து செறிந்து நெடுநீலம்
பூண்டு புரிந்து கடைசுழன்று புகையும் நறும்பூ ஏனையவும்
வேண்டும் அல்ல எனத்தெய்வ வெறியே கமழும் நறுங்குஞ்சி
ஈண்டு சடையா யினஎன்றால் மழைஎன் றுரைத்தல் இழிவாமால்.

௧௦௪ புல்லல் ஏற்ற திருமளும் பூவும் பொருந்தப் புவிஎழின்
எல்லை அற்ற நெடுஞ்செல்வம் எதிர்ந்த ஞான்றும் அஃதன்றி
அல்லல் ஏற்ற கானத்தும் அழியா நடையை இழிவான
மல்லல் ஏற்றின் உளதென்றால் மத்த யானை வருந்தாதோ.

௧௦௫ இன்னமொழிய அம்மொழிகேட் டெரியில்இட்டமெழுகென்னத்
தன்னை அறியா தழிவாளைத் தரையின் வணங்கி நாயகனார்
சொன்ன குறிகொள் அடையாளச் சொல்லும் உளதால் அவைதோகை
அன்ன நடையாய் கேட்கஎன அறிவன் அறைவான் ஆயினான்.

௧௦௬ *நடத்தல்அரி தாகும்நெறி நாள்கள்சில தாயர்க்
கடுத்தபணி செய்திவண் இருத்திஎன அச்சுற்
றுடுத்ததுகி லோடும்உடல் உக்கஉயி ரோடும்
எடுத்தமுனி வோடும்அயல் நின்றதும் இசைப்பாய். 5407

௧௦௭ நீண்டமுடி வேந்தன்அருள் வேண்டிநிறை செல்வம்
பூண்டதனை நீங்கிநெறி போதல்உறு நாளில்
ஆண்டநக ராரையொடு வாயில்அக லாமுன்
யாண்டைஅகல் கான்என இசைத்ததும் இசைப்பாய். 5408

௧௦௮ எள்அரிய தேர்தரு சுமந்திரன் இசைப்பாய்
வள்ளல்வழி வாசகம் மனத்துயர் மறந்தாள்
கிள்ளையொடு பூவைகள் வளர்த்தல் கிளவென்றும்
பிள்ளைஉரை யின்திறம் உணர்த்துதி பெயர்த்தும். 5409

௧௦௯ மீட்டும்உரை வேண்டுவன இல்லையென மெய்ப்பேர்
தீட்டியது தீட்டரிய செய்கையது செவ்வே
நீட்டிதென நேர்ந்தனன் எனாநெடிய கையால்
காட்டினன் ஓர் ஆழியது வாள்நுதலி கண்டாள். 5410

௧௧௦ இறந்தவர் பிறந்தபயன் எய்தினர்கொல் என்கோ
மறந்தனர் அறிந்துணர்வு வந்தனர்கொல் என்கோ
துறந்தஉயிர் வந்திடை தொடர்ந்ததுகொல் என்கோ
திறந்தெரிவ தென்கொல்இவண் நன்னுதலி செய்கை. 5411

௧௧௧ இழந்தமணி புற்றர வெதிர்ந்ததெனல் ஆனாள்
பழந்தனம் மறைத்தது படைத்தவரும் ஒத்தாள்.
குழந்தையை உயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்
உழந்தவிழி பெற்றதொர் உயிர்ப்பொறையும் ஒத்தாள்.

௧௧௨ வாங்கினள் முலைக்குவையின் வைத்தனள் சிரத்தால்
தாங்கினள் மலர்க்கண்மிசை ஒத்தினள் தடந்தோள்
வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதுப்போ
டேங்கினள் உயிர்த்தனள் இதென்னதென லாமோ. 5413

௧௧௩ மோக்குமுலை வைத்துற முயங்குநெடு நன்னீர்
நீக்கிநிறை கண்ணிணை ததும்ப நெடுநீள
நோக்கும்நுவ லக்கருதும் ஒன்றும்நுவல் கில்லாள்
மேக்குநிமிர் விம்மலள் விழுங்கவிழு கின்றாள். 5414

௧௧௪ நீண்டவிழி நேரிழைதன் மின்னின்நிறம் எல்லாம்
பூண்டதொளிர் பொன்அனைய பொம்மெனிற மேயாய்
ஆண்தகைதன் மோதிரம் அடுத்தபொருள் எல்லாம்
தீண்டளவில் வேதிகைசெய் தெய்வமணி கொல்லோ. 5415

௧௧௫ இருந்துபசி யால்இடர் உழந்தவர்கள் எய்தும்
அருந்தும்அமு தாகிய துறத்தவரை எய்தும்
விருந்தும்எனல் ஆகியது வீயும்உயிர் மீளும்
மருந்தும்எனல் ஆகியதவ் வாழிமணி ஆழி. 5416

௧௧௬ இத்தகையள் ஆகிஉயிர் ஏமுற இரங்கும்
முத்தநகை யாள்விழியின் ஆலிமுலை முன்றில்
தத்திஉக மென்குதலை தள்ளஉயிர் தந்தாய்
உத்தமன தாணைய வாசகம் உரைத்தாள். 5417

௧௧௭ *மும்மையாம் உலகந்தந்த முதல்வர்க்கும் முதல்வ முற்றும்
செம்மையால் உயிர்தந்தாய்க்கும் செயல்என்னால் எளியதுண்டோ
அம்மையாய் அப்பனாய அத்தனே அருளின் வாழ்வே
இம்மையே மறுமைதானும் நல்கினை உயிரோ டென்றாள்.

ககஅ பாழியம் புயத்துவீர துணையிலேன் பரிவு தீர்த்த
வாழியாய் வள்ளலேயான் மறுவிலா மனத்தள் என்னில்
ஊழியோர் பகலாய்ஓதும் ஆண்டெலாம் உலகம் ஏழும்
ஆழிஉள் ளளவும் நீயே அழிவிலா திருத்தி என்றாள். 5419

ககசூ மீண்டுரை விளம்பல் உற்றாள் விழுமிய குணத்தோய் வீரன்
யாண்டையான் இளவலோடும் எவ்வழி எய்திற் றன்னை
ஆண்தகை அடியேன் தன்னை யார்சொல அறிந்தான் என்றாள்
தூண்திரண் டனைய தோளான் உள்ளது சொல்லல் உற்றான்.

கஉ0 உழைக்குலத் திசையுமாய உருவுகொண் டுறுதல் செய்தான்
மழைக்கரு நிறத்து மாய அரக்கன்மா ரீசன் என்பான்
இழைக்குல மார்பத் தண்ணல் எய்யவே வையஞ்சேர்ந்தான்
அழைத்ததவ் ஓசை நின்னை மயக்கிய தரக்கன் சொல்லால்.

கஉக இக்குரல் இளவல் கேளா தொழிகென இறைவன் இட்டான்
மெய்க்குரல் சாபம் பின்னை விளைந்தது விதியின் மென்மை
பொய்க்குரல் இன்று பொல்லாப் பொருள் பின்பு பயக்கும் என்பான்
கைக்குண வரிவில் லானும் இளையவன் வரவு கண்டான்.

கஉஉ கண்டபின் இளைய வீரன் முகத்தினால் கருத்தை ஓர்ந்தப்
புண்டரீ கக்க ணானும் உற்றது புகலக் கேட்டான்
வண்டுறை சோலை வந்தான் உன்திரு வடிவு காணான்
உண்டுயிர் இருந்தான் இன்னல் உழப்பதற் கேது அன்றோ.

கஉங தேண்டினன் கண்டேன் வாழி தீதிலன் எங்கோன் ஆகம்
பூண்டமெய் உயிரே நீஇப் பொய்உயிர் போயே நின்றான்
ஆண்தகை நெஞ்சில் நின்றும் அகன்றிலை அழிவுண்டாமோ
ஈண்டுநீ இருந்தாய் யாண்டங் கெவ்வுயிர் விடுமி ராமன்.

கஉச அந்நிலை யாய அண்ணல் ஆண்டுநின் றன்னை நின்னைத்
துன்னருங் கான யாறும் மலைகளும் தொடர்ந்து நாடி
இன்உயிர் இன்றி ஏகும் எந்திரப் படிவம் அன்னான்
தன்உயிர் புகழ்க்கு விற்ற சடாயுவை வந்து சார்ந்தான்.

கஉரு வந்தவன் மேனி நோக்கி வான்உயர் துயரின் வைகி
எந்தைநீ உற்ற தென்னை இயம்பென இலங்கை வேந்தன்
சுந்தரி நின்னைச் செய்த வஞ்சனை சொல்லச் சொல்ல
வெந்தன உலகம் என்ன நிமிர்ந்தது சீற்ற வெந்தீ 5426

௧௨௬ சீறிஇவ் உலகம் மூன்றுந் **தீய்ந்து**கச் சினவாய் அம்பால்
நூறுவன் என்று கைவிரல் நோக்கின காலை எய்தி
ஊறொரு சிறியோன் செய்ய முனிதியோ உலகை உள்ளம்
ஆறுதி என்று தாதை ஆற்றலிற் சீற்றம் மாற்றி. 5427

௧௨௭ எவ்வழி எய்திற் றன்னான் யாண்டையான் உறையுள் யாது
செவ்வியோய் கூறு கென்னச் செப்புவான் உற்ற காலை
வெவ்விய விதியின் கொட்பால் வீடினான் கழுகின்வேந்தன்
எவ்விய வரிவில் செங்கை இருவரும் இடரின் வீழ்ந்தார்.

௧௨௮ அயர்த்தவர் அரிதில் தேறி ஆண்டொழில் தாதைக் கன்று
செயத்தகு கடன்கள் எல்லாம் தேவரும் மருளச் செய்தார்
கயத்தொழில் அரக்கன் தன்னை நாடினர் காண்டும் என்னாப்
புயற்றொடு குடுமிக் குன்றும் கானமும் கடந்துபோனார்.

௧௨௯ அவ்வழி நின்னைக் காணா தயர்வினான் அரிதில் தேறி
செவ்வழி நயனஞ் செல்லும் நெடுவழி சேறு செய்ய
வெவ்வழல் தன்னில் உற்ற மெழுகென வழிய மேனி
இவ்வழி இளைய பண்ணி அறிவிழந் திரங்கல் உற்றான். 5430

௧௩0 *கன்மத்தை ஞாலத்தவர் யாருளர் கடக்கவல்லார்
பொன்வைத்த தோளான் மயல்கொண்டு புலன்கள்வேறாய்
நன்மத்தை நாகத்தயல் சூடிய நம்பனைபோல்
உன்மத்தன் ஆனான்தனை ஒன்றும் உணர்ந்திலாதான்.

௧௩௧ போதாயின போதுள தண்புனல் ஆடல்பொய்யோ
சீதாபவ ளக்கொழுந் தன்னது தேடிஎன்கண்
நீதாதருகிற் றிலையேல் நெருப் பாதிஎன்னக்
கோதாவிரி யைச்சினங் கொண்டனன் கொண்டல்ஒப்பான்.

௧௩௨ குன்றே கடிதேகிளை கோமளக் கொம்பின்அன்ன
என்தேவி யைக்காட்டுதி காட்டில் யென்னிலைஅவ்வம்
பொன்றேஅம்மை யும்உன் னுடைக்குலம் உள்ளதெல்லாம்
இன்றேபிள வாஎரி யாக்கரி யாக்கஎன்றான். 5433

௧௩௩ பொன்மான்உரு வாய்ச்சில மாயை புணர்க்க அன்றே
என்மான்அகல் வுற்றனள் இப்பொழு தீதிர்என்னா
நன்மான்களை நோக்கிஉம் நாமமும் மாய்ப்பன் என்னா
வின்மான்குல வாளியி னின்று வெருண்டுநின்றான். 5434

௧௩௪ வேறுற்ற மனத்தவன் இன்ன விளம்பிநோவ
ஆறுற்ற நெஞ்சில் தனதாருயிர் அன்னதம்பி
கூறுற்ற சொல்லொன் றுளகோதறு நன்மருந்தால்
தேறுற் றுயிர்பெற் றியல்புஞ்சில தேறலுற்றான். 5435

௧௩௫ வந்தான்இளை யானொடு வான்உயர் தேரின்வைகும்
நந்தாவிளக் கின்வரு நங்குல நாதன்வாழும்
சந்தார் தடங் குன்றினில் தன்னுயிர்க் காதலோனும்
செந்தாமரைக் கண்ணனும் நட்டனர் தேவர்உய்ய. 5436

௧௩௬ உண்டாயது மற்றது முற்றும் உணர்த்திஉள்ளம்
புண்தான்என நோவுற விம்முறு கின்றபோதின்
எண்தான்உழந் திட்டனும் ஏந்திழை யாங்கள்காட்டக்
கண்டான்உயர் போதமும் வேதமும் காண்கிலாதான்.

௧௩௭ தணிகின்ற நெஞ்சில்தொடர் தன்மைஅத் தன்மைதன்னைத்
துணிகொண் டிலங்குஞ் சுடர்வேலவன் தூயநின்கண்
அணிகொண் டுழியே அமுதங்தெளித் தாலும்மாறாப்
பிணிகொண்டது பண்டதுண் டாயினும் பேர்ப்பதன்றே.

௧௩௮ அயர்வுற்றறி தில்தெளிந் தம்மலைக் கப்புறத்தோர்
உயர்பொற்கிரி யான்உளன் வாலியென் றோங்கல்ஒப்பான்
துயர்வுற்றஇ ராவணன் வாளிடைப் பண்டு தூங்க
வயமுற்றபொ ருப்பொடு மாகடல் தாவிவந்தான். 5439

௧௩௯ ஆயானையொர் அம்பினில் ஆருயிர் வாங்கிஅன்பில்
தூயான்வயின் அவ்வர சீய்ந்தவன் சுற்றுசேனை
மேயாவரு வாய்என விட்டனன் மேவுகாறும்
ஏயா இருந் தான்இடர் திங்கள் இரண்டுமூன்று. 5440

௧௪0 பிற்கூடிய சேனை பெருந்திசை பின்னதாக
விற்கூடுநு தல்திரு நின்னடி மேவஏவித்
தெற்கூடுரு வக்கடி தேவினன் என்னைஎன்ன
முற்கூடின கூறினன் காலங்கள் மூன்றும்வல்லான். 5441

௧௪௧ *அன்பினன் அம்மொழி உரைக்க ஆரியன
வனபொறை நெஞ்சினன் வருத்தம் உனனுவாள்
என்புற உருகினள் இரங்கி ஏங்கினள்
துன்பமும் உவகையும் சுமந்த உள்ளத்தாள். 5442

கசஉ நையுறு சிந்தையள் நயனவாரியின்
தொய்யல்வெஞ் சுழியிடைச் சுருங்கு மேனியள்
ஐயநீ அளப்பரும் அலக்கர் நீந்தினை
எய்திய தெப்பரி சியம்பு வாய்என்றாள். 5443

கசங சுருங்கிடை நின்உயிர்த் துணைவன் தூயதாள்
ஒருங்குடை உணர்வினோர் ஓய்வில் மாயையின்
பெருங்கடல் கடந்திடும் என்னும் பெற்றிபோல்
கருங்கடல் கடந்தனன் காலி னால்என்றான். 5444

கசச இத்துணைச் சிறியவோ என்னும் யாக்கையை
தத்தினை கடல்அது தவத்தின் ஆயதோ
சித்தியின் இயன்றதோ செப்பு வாய்என்றாள்
முத்தினும் நிலவினும் முறுவல் முற்றினாள். 5445

கசரு சுட்டினன் நின்றனன் தொழுத கையினன்
விட்டுயர் தோளினன் விசும்பின் மேலுயர்
எட்டரு நெடுமுக டெய்தி அப்புறம்
முட்டுமென் றுருவொடும் வளர்ந்த மூர்த்தியான். 5446

கசசா செவ்வழிப் பெருமையென் றுரைக்கும் செம்மைதான்
வெவ்வழிப் பூதமோர் ஐந்தின் மேலதோ
அவ்வழித் தன்றெனில் அனுமன பாலதோ
எவ்வழித் தாகும்என் றெண்ணும் ஈட்டதோ. 5447

கசஎ ஒத்துயர் கனவான் குன்றின் ஓங்கிய
மெய்த்திரு மரந்தொறும் மின்மி னிக்குலம்
மொய்த்துள வாம்என முன்னும் பின்னரும்
தொத்தின தாரகை மயிரின் சுற்றெலாம். 5448

கசஅ கண்தலம் அறிவொடு கடந்த காட்சிய
விண்தலம் திருவொடும் விளங்கும் மெய்யினான்
குண்டலம் இரண்டும்அக் கோளின் மாச்சுடர்
மண்தலம் இரண்டொடும் மாறு கொண்டதே. 5449

கசகூ ஏணில தொருகுரங் கிவன்என் றெண்ணிய
ஆணியை அனுமனை அமைய நோக்குவாள்
சேண்உயர் பெருமையோர் திறதத தன்றெனா
நாண்உறும் உலகெலாம் அளந்த நாயகன்! 5450

கரு0 எண்திசை மருங்கினும் உலகம் யாவையும்
தண்டலின் உயிர்எலாம் தன்னை நோக்கின
அண்டமென் றதில்உறை அமரர் யாரையும்
கண்டனன் தானும்தன் கமலக் கண்களால். 5451

கருக எழுந்துயர் நெடுந்திசை இரண்டு பாதமும்
அழுந்துற அழுத்தலில் இலங்கை ஆர்கலி
விழுந்தது நிலமிசை விரிந்த வெண்திரை
தழங்கின புரண்டன மீனந் தான்எலாம். 5452

கருஉ வஞ்சிஅம் மருங்குல்அ மறுவில் கற்பினாள்
கஞ்சமும் புணர்வன கழலும் கண்டிலள்
அஞ்சினன் இவ்வுரு அடக்குவாய் என்றாள்
துஞ்சினர் அரக்கர்என் றுவக்கும் சூழ்ச்சியாள். 5453

கருந முழுவதும் நின்உருக் காண முற்றிய
குழுவில துலகினிற் குறுகு வாய்என்றாள்
எழுவினும் எழில்விளங் கிராமன் தோள்களைத்
தழுவின வாம்எனத் தளிர்க்குஞ் சிந்தையாள். 5454

கருச ஆண்தகை அனுமனும் அருள தாம்என
மீண்டனன் விசும்பெனும் பதத்தின் மீச்செல்வான்
காண்டலுக் கெளியதோர் உருவு காட்டினான்
தூண்டலில் விளக்கனாள் இனைய சொல்லினாள். 5455

கருரு *இடந்தாய் உலகை மலைஎழும் எடுத்தாய்விசும்பைஇவைசுமக்கும்
படந்தாழ் அரவை ஒருகரத்தால் பறித்தாய் எனினும் பயன் அன்றால்
நடந்தாய் இறையே என்றாலும் நாணுநினக்கும் நளிர் கடலைக்
கடந்தாய் என்றால் என்னாகும் காற்றே அனைய கடிமையாய். 5456

கருசா ஆழி நெடுங்கை ஆண்தகைதன் அருளும் புகழும் அழிவின்றி
ஊழி பலவும் நிலைநிறுத்தற் கொருவன் நீயே உளஆனால்
பாழி நெடுந்தோள் வீரநின் பெருமைக் கேற்ற பகைஇலங்கை
ஏழு கடற்கும் அப்புறத்த தாகா தொழிந்த திகழ்வன்றோ.

கருஎ அறிவும் ஈதே உருவீதே ஆற்றல் ஈதே ஐம்புலத்தின்
செறிவும் ஈதே செயல் ஈதே தேற்றம் ஈதே தேற்றத்தின்
நெறியும் ஈதே நிலைஈதே நீதி ஈதே நினக்கென்றால்
வெறியர் அன்றே குழாங்களாம் விரிஞ்சன்அன்ன மேலானோர்

கருஅ மின்நேர் எயிற்று வல்அரக்கர் வீக்கம் நோக்கி வீரற்குப்
பின்னே பிறந்தான் அல்லாதோர் துணையிலாத பிழைநோக்கி
உன்னா நின்றேன்உடைகின்றேன்ஒழிந்தேன்எல்லாம் உயிர்உயிர்த்தேன்
என்னே நிருதர் என்னுவார் நீயே என்கோன் துணையானால்.

கருகூ மாண்டேன் எனினும் பழுதன்றே இன்றே மாயாச்சிறைநின்றும்
மீண்டேன் என்னை ஒறுத்தார்தம் குலங்களோடும் வேர்அறுத்தேன்
பூண்டேன் எங்கோன் பொலன்கழலும் புகழேஅன்றிப் புன்பழியும்
தீண்டேன் என்ன மனமகிழ்ந்தாள் திருவின் கழுத்தின் திருஅன்னாள்.

கசுO அண்ணற்பெரியோன்அடிவணங்கஅறியஉரைப்பான் அருந்துதியே
வண்ணக்கடலின்இடைக்கிடைந்த மணலிற்பலவாம் வானரங்கள்
எண்ணற் கரிய படைத்தலைவர் இராமற் கடியார் யானவர்தம்
பண்ணைக் கொருவன் எனப்போந்தேன் ஏவல்கூவல் பணிசெய்வேன்.

கசுக வெள்ளம் எழுப தூளதன்றோ வீரன் சேனை இவ்வேலைப்
பள்ளம் ஒருகை நீர் அள்ளிக் குடிக்கப் போதும் பான்மையதோ
கள்ள அரக்கர் கடி இலங்கை காணத் தொழிந்த தாலன்றோ
உள்ள துணையும் உளதாவ தறிந்து பின்னும் உளதாமோ. 5462

கசுஉ வாலி இளவல் அவன்மைந்தன் வசந்தன் துமிந்தன் வயக்குமுதன்
நீலன் இடபன் குமுதாக்கன் பனசன் சரபன் நெடுஞ் சாம்பன்
காலன் அனைய துன்மருடன் கனகன் கவையன் கவையாக்கன்
ஞாலம் அறியும் நளன் சங்கன் சிங்கன் வினதன் மதன் என்போன்.

கசுஙு தம்பன் தும்பன் தனிமயிந்தன் சசியன் வதனன் சதவலியென்
றிம்பர் உலகோ டெவ்வுலகும் எடுக்கும் மிடுக்கர் இராமன்கை
அம்பின் உதவும் படைத் தலைவர் அவரைநோக்கில் இவ்வரக்கர்
வம்பின் முலையாய் உறையிடவும் போதார் கணக்கு வரம்புடைத்தால்.

சு. உருக்காட்டுப் படலம் முற்றும்.

எ. சூடாமணிப் படலம்.

க உண்டுதுணை யென்னஎளி தோஉலகில் அம்மா
புண்டரிகை போலுமயில் அன்னபுன மானை
அண்டமுதல் நாயகன தாவிஅனை யாளைக்
கொண்டகல்வ தேகருமம் என்றுணர்வு கொண்டான் 5465

௨ கேட்டிஅடி யேன்உரைமு னிந்தருளல் கேளாய்
வீட்டியிடு மேலவனை வென்றல்வினை அன்றால்
ஈட்டியினி என்பலை இராமன்எதிர் நின்னைக்
காட்டிஅடி தாழ்வன்அது காண்டிஇது காலம். 5466

௩ பொன்திணிபொ லன்கொடிஎன் மென்மயிர் பொருந்தித்
துன்றியபு யத்தினிதி ருத்திதுயர் விட்டாய்
இன்துயில்வி ளக்கலர்இ மைப்பின்இறை வைகும்
குன்றிடைஉ னைக்கொடுகு திப்பன்இடை கொள்ளேன். 5467

௪ அறிந்திடைஅ ரக்கர்தொடர் வார்கள்உள ராமேல்
முறிந்துதிர நூறிஎன்ம னச்சினமு டிப்பன்
நெறிந்தகுழல் நின்நிலைமை கண்டுநெடி யோன்பால்
வெறுங்கைபெய ரேன்ஒருவ ராலும்விளி யாதேன். 5468

௫ இலங்கையொடும் ஏகுதிகொல் என்னினும் இடந்தென்
வலங்கள்ஒரு கைத்தலையில் வைத்தெதிர் தடுப்பான்
விலங்கினரை நூறிவரி வெஞ்சிலையி னோர்தம் 5469
பொலங்கழல்கள் தாழ்குவன்இ தன்னைபொருள் அன்றால்.

௬ அருந்ததிஉ ரைத்திஅழ கற்கருகு சென்றுன்
மருந்தனைய தேவிநெடு வஞ்சர்சிறை வைப்பில்
பெருந்துயரி னோடும்ஒரு வீடுபெறு கில்லாள்
இருந்தனள்எ னப்பகரின் என்அடிமை என்னும். 5470

௭ புண்தரஅ கற்றியபு யத்தினொடு புக்கேன்
விண்டவர்ந லத்தையும்வ லத்தையும்வி ளிப்பன்
கொண்டுவரு கிற்றிலன்உ யிர்க்கிறுதி கொண்டேன்
கண்டுவரு கிற்றிலன்எ னக்கழறு கேனோ. 5471

௮ இருக்குமதில் சூழ்கடிஇ லங்கையைஇ மைக்கண்
உருக்கிஇக லால்வரும்அ ரக்கனையும் ஒன்றாய்
முருக்கிநிரு தக்குலமு டித்துவினை முற்றிப்
பொருக்கெனகல் கென்னினும்இ தின்றுபுரி கின்றேன்.

௯ இந்துநுதல் நின்னொடிவண் ஏகிஇகல் வீரன்
சிந்தைஉறு வெந்துயர் தவிர்ந்துதெளி வோடும்
அந்தம்இல்அ ரக்கர்குலம் அற்றவிய நூறி
நந்தலில்பு விக்கண்இடர் பிற்களைதல் நன்றால். 5473

௧0 வேறினிவி ளம்பஉள தன்றுவிதி யால்இப்
பேறுபெற என்கண்அருள் தந்தருளும் இன்னே
ஆறுதுயர் அஞ்சொல்இள வஞ்சிஅடி யேன்தோள்
ஏறுகடி தென்றுதொழு தின்னடிப ணிந்தான். 5474

௧௧ *ஏய நன்மொழி எய்தவி ளம்பிய
தாயை முன்னிய கன்றனை யான்தனக்
காய தன்மை அரியதன் றுல்எனத்
தூய மென்சொல் இனையன சொல்லுவாள். 5475

௧௨ அரிய தன்றுன தாற்றலுக் கேற்றதே
தெரிய எண்ணினை செய்வதும் செய்தியே
உரிய தன்றென ஓர்கின்ற துண்டதென்
பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால். 5476

௧௩ வேலை யின்இடை யேவந்து வெய்யவர்
கோலி நின்றுடும் வெஞ்சமர் கோத்தபோ
தாலம் அன்னவர்க் கல்லைஎற் கல்லையால்
சால வுந்தடு மாறுந் தனிமையோய். 5477

௧௪ அன்றி யும்பிறி துள்ள துண் டாரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றி என்பவோ வஞ்சித்த நாயவன்
நின்ற வஞ்சனை நீரும் நினைத்திரோ. 5478

௧௫ கொண்ட போரில்உன் கொற்றவன் வில்தொழில்
அண்டர் ஏவரும் காணஎன் ஆக்கையைக்
கண்ட வாளரக் கன்விழி காகங்கள்
உண்ட போதன்றி யான்உளங் கூர்வனே. 5479

௧௬ வெற்றி நாண்உடை வில்லியர் வில்தொழில்
முற்ற நாணில் அரக்கியர் மூக்கொடும்
அற்ற நாணில ராக்கிய போதன்றிப்
பெற்ற நாணமும் பெற்றிய தாகுமோ. 5480

௧௭ பொற்பி றங்கல் இலங்கை பொருந்தலர்
எற்பு மால்வரை ஆக்கிய தில்எனில்
இல்பி றப்பும் ஒழுக்கும் இழுக்கம்இல்
கற்பும் யான்பிறர்க் கெங்ஙனம் காட்டுகேன். 5481

கஅ அல்லல் மாக்கள் இலங்கைய தாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவும்என்
சொல்லி னல்சுடு வேனஅது தூயவன்
வில்லி [1]னற்றற்கு மாசென்று வீசினேன். 5482

கசு வேறும் உண்டது கேள்இது மெய்மையோய்
ஏறு சேவகன மேனிஅல் லால்இடை
ஆறும் ஐம்பொறி நின்னையும் அண்ணனைக்
கூறும் அவ்வுருத் தீண்டுதல் கூடுமோ. 5483

உ0 தீண்டி னன்எனில் இத்தனை சேண்பகல்
ஈண்டு மெய்உயிர் எண்ணில் இமைப்பின்முன்
மாண்டு போதும்என் றேநிலம் வன்கையால்
கீண்டு கொண்டெழுந் தேகினன் கீழ்மையான். 5484

உக மேவு சிந்தையின் மாதரை மெய்தொடில்
தேவு பொன்தலை சிந்துக நீஎனப்
பூவில் வந்தபு ராதன னேபுகல்
சாவம் உண்டென தாருயிர் தந்ததால். 5485

உஉ அன்ன சாபம் உளஎன ஆணையான்
மின்னு மோலிய வீடணன் மேன்மையான்
கன்னி என்வயின் வைத்த கருணையாள்
சொன்ன துண்டு துணுக்கம் அகற்றுவாள். 5486

உ௩ ஆய தூண்மையி னாலும் அதன்றெனின்
மாய்வன் என்றும் அறம்வழு வாதென்றும்
நாய கன்வலி எண்ணியும் நாண்உடைத்
தூய்மை காட்டவும் இத்துணை தாங்கினேன். 5487

உச ஆண்டு நின்றும் அரக்கன் அகழ்ந்துகொண்
டிண்டு வைத்தது இளவல் இயற்றிய
நீண்ட சாலை யொடுநிலை நின்றது
காண்டி ஐயநின் மெய்உணர் கண்களால். 5488

உரு தீர்வி லேன்இதொ ருபக லுஞ்சிலை
வீரன் மேனியை மானும்இவ் வீங்குநீர்
நார நாண்மலர்ப் பொய்கையை நண்ணுவேன்
சோரும் ஆருயிர் காக்குந் துணிவினால். 5689

பிரதி [1] னற்றகு

உசா ஆத லால்அது காரியம் அன்றப்பா
வேத நாயகன் பால்இனி மீண்டனை
போதல் காரியம் என்றனள் பூவைஅக்
கோதி லானும் இனையன கூறினான். 5490

உஎ நன்று நன்றுஇவ் உலகுடை நாயகன்
தன்து ணைப்பெருந் தேவித வத்தொழில்
என்று சிந்தைக ளித்துவந் தெய்தினான்
நின்ற சங்கை இடரொடு நீக்கினான். 5491

உஅ இருளு ஞாலம் இராவண னால்இது
தெருளும் நீஇனிச் சில்பகல் தீங்குறல்
மருளும் மன்னற்கு இயான்சொ லும் வாசகம்
அருளு வாய்என் றடியின் இறைஞ்சினான். 5492

உகூ இன்னம் ஈண்டொரு திங்கள் இருப்பல்யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தபின் நீதியாய்
பின்னை யாக்கை பிடிக்கின்றி லேன் என்தன்
மன்னன் ஆணை இதனை மனக்கொள்வாய். 5493

ஙO ஆரந் தாழ்திரு மார்பற் கமைந்ததோர்
தாரந் தான் அலள்எ னும் தபாஎனும்
ஈரந் தான் மனத் தில்லைஎன் றாலுந்தன்
வீரங் காத்தலை வேண்டென்று வேண்டுவாய். 5494

ஙக எத்தும் வென்றி இளையவற் கிதொரு
வார்த்தை சொல்லுதி மன்அரு ளால்எனைக்
காத்தி ருந்த தனக்கே கடன்இடை
கோத்த வெஞ்சிறை வீடென்று கூறுவாய். 5495

ஙஉ திங்கள் ஒன்றில்என் செய்தவம் தீர்தலால்
இங்கு வந்தில னேஎனின் யாணர் நீர்க்
கங்கை யாற்றங் கரைஅடி யேற்குத்தன்
செங்கை யாற்கடன் செய்கெனச் செப்புவாய். 5496

ஙங சிறக்கும் மாமியர் மூவர்க்கும் சீதைஆண்
டிறக்கின் றாள்தொழு தாள்எனும் இன்னசொல்
அறத்தின் நாயகன் பால்அருள் இன்மையால்
மறக்கும் ஆயினும் நீமற வேல்ஐயா. 5497

௩௪ வந்தெனைக் கரம் பற்றிய வைகல்வாய்
இந்தஇப் பிறவிக் கொரு மாதரைச்
சிந்தையா லுந்தொடேம் என்ற செவ்வரம்
தந்த வா று திருச்செவி சாற்றுவாய். 5498

௩௫ ஈண்டு நான்இறந் தின்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்டல் ஆவதோர் தீவினை தீர்வரம்
வேண்டி னள்தொழு தென்று விளம்புவாய் 5499

௩௬ அரைசு வீற்றிருந் தாளவும் ஆய்மணிப்
புரைசை யானையின் வீதியிற் போதவும்
விரைசெய் கோலங்கள் காண விதியிலேன்
உரைசெய் தென்பல ஊழ்வினை உன்னுவேன். 5500

௩௭ தன்னை நோக்கி உலகம் தளர்தற்கும்
மன்னை நோக்கி பரதன் மயங்குறும்
இன்னல் நோக்கியும் ஏகுவ தன்றிஇங்
கென்னை நோக்கிவந் தெங்ஙனம் எய்துமோ. 5501

௩௮ *எந்தையர் முதலினர் கிளைஞர் யார்க்கும்என்
வந்தனை விளம்புதி கவியின் மன்னனைச்
சுந்தரத் தோளனைத் தொடர்ந்து காத்துப்போய்
அந்தமில் திருநகர்க் கரசன் ஆக்கென்பாய். 5502

௩௯ இத்திறம் அனையவள் இயம்ப இன்னமும்
தத்துறல் ஒழிந்திலை தையல் நீஎன
எத்திறத் தேதுவும் இசைந்த இன்னுரை
ஒத்தன தெரிவுற உணர்த்து வானரோ. 5503

௪0 *வீவாய் நீஇவண் மேவாதே
ஓய்வான் இன்னுயிர் உய்வானும்
பேர்வான் அந்நகர் புக்கன்றோ
வெய்வான் மோலியும் மெய்அன்றோ. 5504

௪௧ கைத்தோ டுஞ்சிறை கற்போயை
வைத்தோன் இன்உயிர் வாழ்வானும்
பொய்த்தோர் வில்லிகள் போவாராம்
இத்தோ டொப்புள யாதுண்டோ. 5505

சஉ நல்லோய் நின்னை நலிந்தோனைக்
கொல்லோம் எம்உயிர் கொண்டங்கே
எல்லோ ருஞ்செல எங்கோவும்
வில்லோ டுஞ்செல வேண்டாவோ. 5506

சங நீந்தா இந்நிலை நீந்தாவே
தேய்ந்தே றாதபெ ருஞ்செல்வம்
ஈய்ந்தா னுக்குனை ஈயாதே
ஓய்ந்தால் எம்மில் உயர்ந்தாரார். 5507

சச நன்றா நல்வினை நல்லோரைத்
தின்றார் தங்குடர் பேய்தின்னக்
கொன்றால் அல்லது கொள்ளேன்நா
டென்றா னுக்கிவை ஏயாவோ. 5508

சரு மாட்டா தார்சிறை வைத்தானை
மீட்டோம் என்கிலம் மீளாமோ
நாட்டார் நல்லவர் நன்னாளும்
கேட்டார் இவ்வுரை கேட்பாரோ. 5509

சசு பூண்டாள் கற்புடை யாள்பொய்யாள்
தீண்டா வஞ்சகர் தீண்டாமுன்
மாண்டாள் என்றும னந்தேறி
மீண்டால் வீரம் விளங்காதோ. 5510

சஎ கெட்டே நீஉயிர் கேதத்தால்
விட்டாய் என்றிடில் மேலென்பார்
ஒட்டா ரோடுல கீரேழும்
சுட்டா லுந்தொலை யாதன்றோ. 5511

சஅ முன்னே கொல்வான் மூவுலகும்
பொன்னே பொங்கிய போர்வில்லான்
என்னே நின்னிலை ஈதென்றால்
பின்னே செம்மை பிடிப்பானோ. 5512

சகூ தாழிக் தண்கடல் தன்னோடும்
ஏழுக் கேழுல கெல்லாம்அன்
றாழிக் கையவன் அம்பம்மா
ஊழித் தீஎன உண்ணாதோ. 5513

௫0 படுத்தான் வானவர் பற்றாரைத்
தடுத்தான் தீவினை தக்கோரை
எடுத்தான் நல்வினை எந்நாளும்
கொடுத்தான் என்றிவை கொள்வாரோ. 5514

௫௧ கோளான் ஆருயிர் கோளாடும்
மூளா வெஞ்சினம் முற்றாக
மீளா வேல்அவை வேறுண்டோ
மாளா தோடுவி வாளோடும். 5515

௫௨ சின்னாள் நீஇடர் தீராதால்
இன்னா வைகலின் எல்லோரும்
நன்னாள் காணுதல் நன்றன்றோ
உன்னால் நல்அறம் உண்டானால். 5516

௫௩ புளிக்குங் கண்டகர் புண்ணீருள்
குளிக்கும் பேய்குடை யுந்தொறும்
ஒளிக்குந் தேவர் உவந்துள்ளம்
களிக்கும் நல்வினை காணாயோ. 5517

௫௪ *ஊழியின் இறுதியின் உரும்எறிந் தெனக்
கேழ்கிளர் சுடுகணை கிழித்த புண்பொழி
தாழியங் குருதியில் தரங்க வேலைகள்
ஏழும்ஒன் றாகிநின் றிரைப்பக் காண்டியால். 5518

௫௫ விண்ணில்நீ ளியநெடுங் கழுதும் வெஞ்சிறை
எண்ணில்நீ ளியபெரும் பறவை ஈட்டமும்
புண்ணில்நீர்ப் புணரியில் படிந்து பூவையர்
கண்ணில்நீர் ஆற்றிடைக் குளிப்பக் காண்டியால். 5519

௫௬ சூல்இரும் பெருவயி றலைத்துச் சோர்வுறும்
ஆலியம் கண்ணியர் அறுத்து நீத்தன
வாலியும் கடப்பரும் வனப்ப வான்உயர்
தாலிஅம் பெருமலை தயங்கக் காண்டியால். 5520

௫௭ தாக்கலில் இராவணன் தலையில் தாயின
பாக்கியம் அனையநின் பழிப்பின் மேனியை
நோக்கிய கண்களை நுதிகொள் மூக்கினால்
காக்கைகள் கவர்ந்துகொண் டுண்ணக் காண்டியால். 5521

௫அ கரம்பையின் முரசினங் கறங்கக் கைதொடர்
நரம்புகள் இமிழ்இசை நவில நாடகம்
அரம்பையர் ஆடிய அரங்கின் ஆண்தொழில்
குரங்குகள் முறைமுறை குனிப்பக் காண்டியால். 5522

௫௯ புரையுறு புன்தொழில் அரக்கர் புன்மொழி
திரையுறு குருதியால் தீர்ப்பச் செல்வன
வரையுறு பிணப்பெரும் பிறக்க மண்டின
கரையுறு நெடுங்கடல் தூர்ப்பக் காண்டியால். 5523

௬0 வினைஉடை அரக்கராம் இருந்தை வெந்துகச்
சனகிஎன் றொருதழல் நடுவுள் தங்கலால்
அனகன்நல் அம்பெனும் அவைகள் ஊதையாய்
கனகநீள் இலங்கைநின் றுருகக் காண்டியால். 5524

௬௧ மேலுற இராவணற் கஞ்சி வெள்கின
நீலுறு திசைக்கரி திரிந்து நிற்பன
மாலுறஅனையவன் தலையை அவ்வவை
காலுறக் கணைகடிந் திடுவ காண்டியால். 5525

௬௨ நீர்த்தெழு கன்மழை வழங்கு நீலவான்
வேர்த்ததென் றிடையிடை பொங்கி வீசலின்
போர்த்தெழு பொலங்கொடி இலங்கை பூழியோ
டார்த்தெழுந் திரைத்துநின் றுடக் காண்டியால். 5526

௬௩ நீல்நிற அரக்கர்தம் குருதி நீத்தநீர்
வேலைமிக் காற்றொடு மீள வேலைசூழ்
ஞாலமுற் றுறுகடை யுகத்து நச்சறுக்
காலனும் வெறுத்துயிர் காலக் காண்டியால். 5527

௬௪ அணங்கன மகளிரொ டரக்கர் நாள்தொறும்
மணங்கிளர் கற்பகச் சோலை வாவி வாய்ப்
பிணங்குறு வான்முறை பிணித்த மாலையைக்
கணங்கிளர் கழுதினங் களிப்பக் காண்டியால். 5528

௬௫ செப்புறல் என்பல தெய்வ வாளிகள்
இப்புறத் தரக்கரை முருக்கி ஏகின
முப்புறத் துலகையும் முருக்கி முட்டலால்
அப்புறத் தரக்கரும் அவியக் காண்டியால். 5529

௬௬ ஈண்டொரு திங்கள்நீ இடரின் வைகவும்
வேண்டுவத தன்றுயான் விரைவின் வீரனைக்
காண்டலே குறைபின்னுங் காலம் வேண்டுமோ
ஆண்தகை இனிஒரு பொழுதும் ஆற்றுமோ. 5530

௬௭ ஆவியுண் டென்னுமீ துண்டென் ஆருயிர்ச்
சேவகன் திருஉருத் தீண்டத் தீய்ந்திலாப்
பூவில தளிரில பொரிந்து வெந்திலாக்
காவில கொடிஇல நெடிய கான்எலாம். 5531

௬௮ சோகம்வந் துறுவது தெளிவு தோய்ந்தன்றே
மேகம்வந் திடித்துரும் ஏறு வீழினும்
ஆகமும் புயங்களும் அழுந்த ஐந்தலை
நாகம்வந் தடர்ப்பினும் உணர்வு நாறுமோ. 5532

௬௯ மத்துறு தயிர்என வந்து சென்றிடைத்
தத்துறும் உயிரொடு புலன்கள் தம்மொடும்
பித்தனின் பிரிவினிற் பிறந்தி றந்தன
எத்தனை உளஅவை எண்ணும் ஈட்டதோ. 5533

௭0 இந்நிலை உடையவன் இருக்கும் என்றியேல்
மெய்ந்நிலை உணர்ந்துழி விடைதந் தீகென
பொய்ந்நிலை காண்டியான் புகன்ற யாவும்உன்
கைந்நிலை நெல்லியங் கனியில் காட்டுகேன். 5534

௭௧ தீர்த்தனுங் கவிக்குலத் திறையுந் தேவிநின்
வார்த்தைகேட் டுவப்பதன் முன்ன மாழ்கடல்
தூர்த்தன இலங்கையைச் சூழ்ந்து மாக்குரங்
கார்த்தன கேட்டுவந் திருத்தி அன்னைநீ. 5535

௭௨ எண்ணரும் பெரும்படை ஈண்டி இந்நகர்
நண்ணிய பொழுதத்து நடுவண் நங்கைநீ
விண்ணுறு கலுழன்மேல் விளங்கும் விண்டுவில்
கண்ணனை என்நெடும் புயத்தில் காண்டியால். 5536

௭௩ அங்கதன் தோள்மிசை இளவல் அம்மலைப்
பொங்கிளங் கதிர்எனப் பொலியப் போர்ப்படை
இங்குவந் திறுக்கும்நீ இடரும் மையலும்
சங்கையும் நீங்குதி தனிமை நீங்குவாய். 5537

எச குராவருங் குழலிநீ குறித்த நாளினில்
விராவரு நெடுஞ்சிறை மீட்கலான் எனில்
பராவரும் பழியொடும் பாவம் முற்றுதற்
கிராவணன் அல்லனே இராமன் என்றனன். 5538

எரு *ஆக இம்மொழி ஆசிகள் கேட்டறி வுற்றாள்
ஓகை கொண்டுக ளிக்குழ னத்தவள் உய்ந்தாள்
போகல் நன்றிவன் என்பது புந்தியின் வைத்தாள்
தோகை யும்சில வாசகம் இன்னன சொன்னாள். 5539

எசு சேறி ஐய விரைந்தன தீயவை எல்லாம்
வேறி யானினி ஒன்றும் விளம்பலன் மேலோய்
கூறுகின்றனள் முன்குறி யுற்றன கோமாற்
கேறும் என்றவை சொல்லினள் இன்சொல் இசைப்பாள்.

எஎ நாகம் ஒன்றிய நல்வரை யின்தலை மேல்நாள்
ஆகம் வந்தெனை வள்ளுகிர் வாளி னளைந்த
காகம் ஒன்றை முனிந்தயல் கல்எழு புல்லால்
வேக வெம்படை விட்டது மெல்ல விரிப்பாய். 5541

எஅ என்னொ ரின்னுயிர் மென்கிளிக் கார்பெயர் ஈகேன்
மன்ன என்றலும் மாசறு கைகையன் மாதென்
அன்னை தன்பெயர் ஆக்கென அன்பினொ டந்நாள்
சொன்ன மெய்ம்மொழி சொல்லுதி மென்மை தொடர்ந்தோய்.

எகூ என்றுரைத் தனள் இத்தனை பேரடை யாளம்
ஒன்று ணர்த்துவ தில்என எண்ணி உணர்ந்தாள்
தன்தி ருத்துகி லில்பொதி வுற்றது தானே
வென்ற தச்சுடர் கிழன மேல்உற மெய்யாள். 5543

அ0 வாங்கி னாள்தன் மலர்க்கையி னான்மன முன்னா
ஏங்கி னான்அவ் அநுமனும் என்கொல்இ தென்னா
வீங்கி னான்வியந் தான்உல கேழும் விழுங்கித்
தூங்கு கார்இருள் முற்றும் இரிந்தது சுற்றில். 5544

அக கூந்தல் மென்மழை கொள்முகில் மேல்எழு கோளின்
வேந்தன் அன்னது மெல்இயல் தன்திரு மேனி
சேர்ந்த தந்தமில் சேவகன் சேவடி என்னக்
காந்து கின்றது காட்டினள் மாருதி கண்டான். 5545

அஉ சூடை யிம்மணி கண்மணி ஒப்பது தொன்னுள்
ஆடை யின்கண் இருந்தது பேர்அடை யாளம்
நாடி வந்தென தின்னுயிர் நல்கினை நல்லோய்
கோடி என்றுகொ டுத்தனள் மெய்ப்புகழ் கொண்டாள்.

அரு தொழுது வாங்கினன் சுற்றிய தூசினன் முற்றப்
பழுது றுவகை பந்தனை செய்தனன் பல்கால்
அழுது மும்மை வலங்கொ டிறைஞ்சினன் அன்போ
டெழுது பாவையும் ஒத்தனள் போயினன் இப்பால். 5547

எ. சூடாமணிப் படலம் முற்றும்.

அ. பொழிலிறுத்த படலம்

க நெறிக்கொடு வடக்குற நினைப்பினில் நிமிர்ந்தான்
பொறிக்குல மலர்ப்பொழி லிடைக்கடிது போனன்
சிறுத்தொழில் முடித்தகல்கை தீதெனல் தெரிந்தான்
மறித்தும்ஓர் செயற்குரிய காரணம் மதிப்பான். 5548

உ ஈனம்உறு பற்றலரை எற்றிஎயில் மூதூர்
மீனநிலை யத்தின்உற வீசிவிழி மானை
மானவன் மலர்க்கழலின் வைத்தும் இலன் என்றால்
ஆனபொழு தெப்பணியி னல்அடியன் ஆவேன். 5549

ஙு வஞ்சனை அரக்கனை நெருக்கிநெடு வாலால்
அஞ்சினுடன் அஞ்சுதலை தோள்உற அசைத்தே
வெஞ்சிறையில் வைத்தும்இலன் வென்றும்இலன் என்றால்
தஞ்சம்ஒரு வர்க்கொருவர் என்றல்தக வாமோ. 5550

ச கண்டநிரு தக்கடல் கலக்கினன் வலத்தில்
திண்திறல் அரக்கனும் இருக்கஓர் திறத்தின்
மண்டுக தரத்திதன் மலர்க்குழல் பிடித்துக்
கொண்டுசிறை வைத்திடுத லில்குறையும் உண்டோ. 5551

ரு மீட்டும்இனி எண்ணும்வினை வேறுஉள தன்றால்
ஓட்டிஇவ் அரக்கர்உயிர் உண்டுரிமை எல்லாம்
காட்டும்இது வேகருமம் அன்னவர் கடும்போர்
மூட்டும்வகை யாவதுகொல் என்னமுயல் கின்றான். 5552

௬ இப்பொழி லினைக்கடி திருக்குவன் இறுத்தால்
அப்பெரிய பூசல்செவி சார்தலும் அரக்கர்
வெப்புறு சினத்தெதிர மேல்வருவர் வந்தால்
துப்புற முருக்கியுயிர் உண்பன்இது சூதால். 5553

௭ வந்தவர்கள் வந்தவர்கள் மீள்கிலர் மடிந்தால்
வெந்திறல் அரக்கனும் வெலற்கரும் வரத்தான்
முந்தும்எனில் அன்னவன் முடித்தலை முரித்தென்
சிந்தைஉறு வெந்துயர் தவிர்த்தினிது செல்வேன். 5554

௮ என்றுநினை யாஇரவி சந்திரன் இயங்கும்
குன்றம்இரு தோள்அனைய தன்உருவு கொண்டான்
அன்றுல கெயிற்றின்அடை ஏனம்எனல் ஆனான்
துன்றுகடி காவினை அடிக்கொடு துகைத்தான். 5555

௯ முடிந்தன பிளந்தன முறிந்தன நெரிந்த
மடிந்தன பொடிந்தன மறிந்தன முறிந்த
இடிந்தன தகர்ந்தன எரிந்தன கரிந்த
ஒடிந்தன ஒசிந்தன உதிர்ந்தன பிதிர்ந்த. 5556

௧௦ வேரொடு பறிந்தசில வெந்தசில விண்ணில்
காரொடு செறிந்தசில காலினொடும் ஓடித்
தூரொடு பறிந்தசில தும்பியொடு வானோர்
ஊரொடு மறிந்தசில உக்கசில நெக்க. 5557

௧௧ சோலைமுதல் மற்றைய சுழற்றின திசைப்பேர்
ஆனைநுகர் அக்குளகு மானபடி பற்று
மீனினம் விழுந்திட விசும்பின்வழி மீப்போய்
வானவர்கள் நந்தன வனத்தையும் ஒடித்த. 5558

௧௨ அலைந்தன கடற்றிரை அரக்கர்அகல் மாடம்
குலைந்துக இடித்தன குலக்கிரிக ளோடும்
மலைந்துபொடி உற்றன மயங்கிநெடு வானத்
துலைந்துவிழ மீனினொடு வெண்மலர் உதிர்ந்த. 5559

௧௩ முடக்குநெடு வேரொடு முகந்துலகம் முற்றும்
கடக்கும்வகை வீசின களித்ததிசை யானை
மடப்பிடியி னுக்குதவ மையின்நிமிர் கையைத்
திடுக்கியொ டெடுத்தன எயிற்றின்இடை நால்வ. 5560

கச விஞ்சைஉல கத்தினும் இயக்கர்மலை மேலும்
துஞ்சுதலில் வானவர் துறக்கநக ரத்தும்
பஞ்சிஅடி வஞ்சியர்கள் மொய்த்தனர் பறித்தார்
நஞ்சம்அனை யான்உடைய சோலையில் நறும்பூ. 5561

கரு பொன்திணி மண்ணிப்பரு மரந்திசைகள் போவ
மின்திரிவ தொத்தன வெயிற்கதிரும் ஒத்த
ஒன்றிெனொடும் ஒன்றிடை உடைந்துதிர்வ தூழில்
தந்திரள்க ளோடும்விழு தாரகையும் ஒத்த. 5562

கசு புள்ளினொடு வண்டுமிஞி றுங்கனிகொள் பூவும்
கள்ளுமுகை யுந்தளிர்க ளோடினிய காயும்
வெள்ளநெடு வேலையிடை மீனினம் விழுங்கித்
துள்ளின மரம்பட நெரிந்தன துடித்த. 5563

கஎ தூவிய மலர்த்தொகை சுமந்துதிசை தோறும்
பூவின்மணம் நாறுவ புலால்கமழ் விலாத
தேவியர்க ளோடும்உயர் தேவர்இனி தாடும்
ஆவிஎனல் ஆனதிரை ஆர்கலிகள் அம்மா. 5564

கஅ இடந்தமணி வேதியும் இறுத்தகடி காவும்
தொடர்ந்தன துரந்தன படிந்தநெறி தூரக்
கடந்துசெலல் என்பது கடந்ததிரு காலால்
நடந்துசெலல் ஆகும்எனல் ஆகியது நன்னீர். 5565

ககூ வேனில்விளை யாடுசுட ரோனில்ஒளி விம்மும்
வானின்இடை வீசிய இரும்பணை மரத்தால்
தானவர்கள் மாளிகை தகர்ந்துபொடி ஆன
வானஇடி யால்இடியும் மால்வரைகள் மான. 5566

உ0 எண்ணில்தரு கோடிகள் எறிந்தன செறிந்தே
தண்ணென்மழை போல்இடை தழைத்தது சலத்தால்
அண்ணல்அநு மான்அடல் இராவணன தன்னுள்
விண்ணினும்ஓர் சோலைஉள தாம்என விரித்தான். 5567

உக தேன்உறை துளித்தநிறை புட்பல சிலம்பப்
பூநிறை மணித்தரு விசும்பின்மிசை போவ
மீன்முறை நெருக்கஒளி வாளொடுவில் வீச
வான்இடை நடக்கும்நெடு மானம்எனல் ஆன. 5568

உஉ சாகைநெடு மாபணைத ழைத்தனத ளிப்போர்
நாகம்அனை யான்எறிய மேல்கிமிர்வ நாளும்
மாகநெடு வானிடைஇ ழிந்துபுனல் வாரும்
மேகம்எனல் ஆகும்நெடு மாகடலில் வீழ்வ. 5569

உ௩ *ஊனம் முற்றிட மண்ணில் உதித்தவர்
ஞானம் முற்றிட நண்ணுவர் வீடெனத்
தான கற்பகத் தண்டலை விண்தலம்
போன புக்கன முன்னுறை பொன்னகர். 5570

உச மணிகொள் குட்டிமம் மட்டித்து மண்டபம்
துணிப டுத்தயல் வாவிகள் தூர்த்தொளிர்
திணிசு வர்த்தலஞ் சிந்திச் செயற்கரும்
பணிப குத்துயர் குன்றம் பகுத்தரோ. 5571

உரு வேங்கை செற்று மராமரம் வேர்பறித்
தோங்கு கற்பகம் பூவொ டொடித்துராய்ப்
பாங்கர் சண்பகப் பத்தி பறித்தயல்
மாங்க னிப்பணை மட்டித்து மாற்றியே. 5572

உசா சந்த னங்கள் தகர்ந்தன தாம்படர்
இந்த னங்களில் வெந்தெரி சிந்தின
முந்த னங்கன் வசந்தன் முகம்கெட
நந்த னங்கள் கலங்கி நடுங்கவே. 5573

உஎ காம ரம்களி வண்டு கலங்கிட
மாம ரங்கள் மடிந்தன மண்ணொடும்
தாம ரங்கவ ரங்குத கர்ந்தாக
பூம ரங்கள் எரிந்து பொரிந்தவே 5574

உஅ பவள மாக்கொடி வீசிய பன்மழைத்
துவளும் மின்னெனச் சுற்றிடச் சூழ்வரைத்
திவளும் பொற்பணை மாமரம் சேர்ந்தன
கவள யானையின் ஓடையில் காந்தவே. 5575

உகூ குழையும் கொம்பும் கொடியும் குயில்குலம்
விழையும் தண்தளிர்ச் சூழலும் மென்மலர்ப்
புழையும் வாசப் பொதும்பும் பொலங்கொள்தேன்
மழையும் வண்டும் மயிலும் மறிந்தவே. 5576

௩0 பறவை ஆர்த்தெழும் ஓசையும் பன்மரம்
இறவெ டுத்த இடிக்குரல் ஓசையும்
அறவன் ஆர்த்தெழும் ஓசையும் அண்டத்தின்
புறநி லத்தையும் கைம்மிகப் போயதே. 5577

௩௧ பாட லம்படர் கோங்கொடு பன்இசைப்
பாட லம்படர் வண்டொடும் பஃறிரைப்
பாட லம்புயர் வேலையில் பாய்ந்தன
பாட லம்படப் புள்ளினம் பார்ப்பொடே 5578

௩௨ வண்ட லம்புநல் ஆற்றில் மராமரம்
வண்ட லம்புநல் ஆற்றில் மடிந்தன
விண்ட லம்புக நீக்கிய வெண்புனல்
விண்ட லம்புக நீண்மரம் வீழ்ந்தன. 5579

௩௩ தாம மைத்தடம் பொய்கைசெஞ் சந்தனம்
தாம ரைத்தன ஒத்தது கைத்தலில்
காம ரங்களி வண்டொடும் கள்ளொடும்
காம ரங்கமழ் பூக்கடல் கண்டவே. 5580

௩௪ சிந்து வாரந் திசைதொறுஞ் சென்றன
சிந்து வாரம் புரைதிரை சேர்ந்தன
தந்து வாரம் புகநெடுந் தாழ்வரை
தந்து வாரம் துகள்படச் சார்ந்தவே. 5581

௩௫ நந்த வானத்து நாண்மலர் நாறுதேன்
நந்த வானத்த நாண்மலர் நாறின
சிந்து வானந் திரிந்துகச் செம்மணி
சிந்து வானந் திரிந்த திரைக்கடல். 5582

௩௬ புல்லும் பொற்பணைப் பன்மணிப் பூமரம்
கொல்லும் இப்பொழு தேஎனுங் கொள்கைப
எல்லி விட்டு விளங்கிய இந்திரன்
வில்லும் ஒத்தன விண்உற வீசின 5583

௩௭ மயக்கில் பொற்குல வல்லிகள் வாரிநேர்
இயக்கறத் திசை தோறும் எரிந்தன
வெயிற்கதிர்க் கற்றை இற்று விழுந்தென
புயற் கடற்றதலை புக்கன போவன. 5584

௩௮ ஆனைத் தானமும் ஆடல் அரங்கமும்
பானத் தானமும் பாய்பரித் தானமும்
ஏனைத் தாரணி தேரொடும் இற்றன
கானத் தார்தரு அண்ணல் கடாவவே. 5585

௩௯ பெரிய மாமர மும்பெருங் குன்றமும்
விரிய வீசலின் மின்னெடும் பொன்மதில்
நெரிய மாட நெருப்பெழ நீறெழ
இரியல்போன இலங்கையும் எங்கணும். 5586

௪௦ *தொண்டையங் கனிவாய்ச் சீதை துவக்கினல் என்னைச் சுட்டாய்
விண்டவா னவர்கள் முன்னே விரிபொழில் இறுத்தா வீக்கக்
கண்டனை நின்றாய் என்று காணுமேல் அரக்கன் காய்தல்
உண்டென வெருவி னன்போல் ஒளித்தனன் உடுவின் கோமான்.

௪௧ காசறு மணியும் பொன்னும் காந்தமும் கனல்வ தான
மாசறு மரங்க ளாகக் குயிற்றிய மதனச் சோலை
ஆசைகள் தோறும் அய்யன் கைகளால் வாரி வாரி
வீசின விளக்க லாலே விளங்கின உலகம் எல்லாம். 5588

௪௨ கதறின வெருவி உள்ளம் கலங்கின விலங்கு கண்கள்
குதறின பரவை வேலை குளித்தன குளித்தி லாத
பதறின பதைத்த வானில் பறந்தன மறிந்து பார்வீழ்ந்
துதறின சிறகை மீள ஒடுக்கின உலந்து போன 5589

௪௩ தோட்டொடும் தொடர்ந்த தெய்வ மரந்தொறும் தொடுத்த புட்டம்
கூட்டொடும் துறக்கம் புக்க குன்றெனக் குவவுத் திண்தோள்
சேட்டகன் பருதி மார்பன் சீறியுந் தீண்டல் தன்னல்
மீட்டவன் கருணை செய்தால் பெறும்பயன் விளம்ப லாமோ. 5590

௪௪ பொய்முறை அரக்கர் காக்கும் புள்உறை புதுமென் சோலை
விம்முறும் உள்ளத் தன்னம் இருக்கும்அவ் விருக்கம் ஒன்றும்
மும்முறை உலகம் எல்லாம் முற்றுற முடிவதான
அம்முறை ஐயன் வைகும் ஆல்என நின்ற தன்றே. 5591

௪௫ உறுசுடர்ச் சூடைக் காசுக் கரசினை உயிர்ஒப் பானுக்
குறிகுறி யாக விட்டாள் ஆதலால் வறியள் அந்தோ
செறிகுழல் சீதைக் கன்றோர் சிகாமணி தெரிந்து வாங்கி
எறிகடல் ஈவ தென்ன எழுந்தனன் இரவி என்பான். 5592

சசு தாழிரும் பொழில்கள் எல்லாம் துடைத்தொரு தமியன் நின்றான்
ஏழினோ டேழு லோகம் அளந்தவன் என்னல் ஆனான்
ஆழியின் நடுவுநின்ற அருவரைக் கரசும் ஒத்தான்
ஊழியின் இறுதிக் காலத் துருத்திர மூர்த்தி ஒத்தான்.

சஎ இன்னன நிகழும் வேலை அரக்கியர் எழுந்து பொங்கி
பொன்மலை என்ன நின்ற புனிதனைப் புரிந்து நோக்கி
அன்னைஈ தென்ன மேனி யார்கொல்என் றச்சம் உற்றார்
நன்னுதல் தன்னை நோக்கி அறிதியோ நங்கை என்றார். 5594

சஅ தீயவர் தீய செய்கை தீயவர் தேரின் அல்லால்
தூயவர் தெரிதல் உண்டோ நும்முழைச் சூழல் எல்லாம்
மாயமான் எய்த அம்மான் இளையவன் அரக்கர் செய்த
மாயமென் றுரைக்க வேறு மெய்யென மையல் கொண்டேன்.

சகூ என்றனள் அரக்கி மார்கள் வயிறலைத் திரியல் போகிக்
குன்றமும் வானும் மண்ணும் கடல்களும் குலையப் போனார்
நின்றசெய் குன்றங் கண்டான் நீக்குவன் இதனை என்னாத்
தன்தடக் கைகள் நீட்டி எடுத்தனன் தாதை ஒப்பான். 5596

ருO கண்கொள அரிது மீது கார்கொள அரிது திண்கால்
எண்கொள அரிது தீரா இருள்கொள அரிது மாக
விண்கொள நிவந்த மேரு வெள்குற வெதும்பி உள்ளம்
புண்கொள உயர்ந்ததிப்பார் பொறைகொள அரிது போலாம்

ருக பொங்கொளி நெடுநாள் ஈட்டிப் புதியபால் பொழிவ தொக்கும்
திங்களை நக்கு கின்ற இருளெல்லாம் வாரித் தின்ற
அங்கைபத் திரட்டி யான்தன் ஆணையால் அழகு மானப்
பங்கயத் தொருவன் தானே பசும்பொனால் படைத்ததம்மா.

ருஉ தூண்எலாம் சுடரும் காசு சுற்றெலாம் முத்தம் செம்பொன்
பேணலாம் மணியின் பித்தி பிடர்எல்லாம் ஒளிகள் விம்மச்
சேண்எலாம் விரியும் கற்றைச் சேய்ஒளிச் செல்வர்க் கேயும்
பூண்எலாம் எம்ம னோரால் புகலலாம் பொதுமைத் தன்றே. 5599

ருங வெள்ளியங் கிரியைப் பண்டு வெந்தொழில் அரக்கன்வேரோ
டள்ளினன் என்னக் கேட்டான் அத்தொழிற் கழிவு தோன்றப்
புள்ளிமா மேரு என்னும் பொன்மலை எடுப்பான் போல
வள்உகிர்த் தடக்கை தன்னால் மண்நின்றும் வாங்கி வள்ளல். 5600

ருச விட்டனன் இலங்கை தன்மேல் விண்ணுற விரிந்த மாடம்
பட்டன பொடிகள் ஆன பரந்தன பாங்கு நின்ற
சுட்டன பொறிகள் வீழத் துளங்கினர் அரக்கர் தாமும்
கெட்டனர் வீரர் அம்மா பிழைப்பரோ கேடு சூழ்ந்தார்.

ருரு நீரிடு துகிலர் அச்சம் நெருப்பிடு [1]நெஞ்சர் முற்றிப்
பீரிடும் உருவர் தெற்றிப் பிணங்கிடு தாளர் பேழ்வாய்
ஊரிடு பூசல் ஆர உரைத்தனர் ஓடி உற்றார்
பார்இடு பழுவச் சோலை பாரிக்கும் பருவத் தேவர். 5602

ருசா அரிபடு சீற்றத் தான்தன் அருகுசென் றடியில் வீழ்ந்தார்
கரிபடு திசையில் நின்ற காவலர் காவல் ஆற்றோம்
கிரிபடு குவவுத் திண்தோள் குரங்கிடை கிழித்து வீச
எரிபடு துகிலின் நொய்தின் இற்றது கடிகா என்றார். 5603

ருஎ சொல்லிட எளிய தன்றால் சோலையைக் காலின் கையில்
புல்லிடு துகளும் இன்றிப் பொறிபட நூறிப் பொன்றா
வில்லிடு குன்றந் தன்னை வேரொடும் வாங்கி வீசச்
சில்லிடம் ஒழியத் தெய்வ இலங்கையும் சிதைந்த தென்றார்.

அ. பொழிலிறுத்த படலம் முற்றும்.

கூ கிங்கரர் வதைப் படலம்.

க ஆடகத் தருவின் சோலை பொடிபடுத் தரக்கர் காக்கும்
கேடரும் குன்றம்வாங்கி இலங்கையைச் சிதைத்த தம்மா
கோடரம் ஒன்றே நன்றிவ் விராக்கதர் கொற்றம் சொற்ற
மூடர்தம் மொழியே என்ன மன்னவன் முறுவல் செய்தான்.

உ தேவர்கள் முன்னும் பின்னும் மதன்உருச் சுமக்கும் திண்மைப்
பூவலே யத்தை அன்றோ புகழ்வது புலவர் போற்றும்
மூவரில் ஒருவன் என்றே புகலினும் முடிவிலாத
ஏவம ரலைக்கும் செங்கைக் குரங்குகாண் இன்னும் என்றார்.

ங மண்டலங் கிழிய வாயின் மறிகடல் மோழை மண்ட
எண்திசை சுமந்த மாவுந் தேவரும் இரியல் போகத்
தொண்டைவாய் அரக்கி மார்கள் சூல்வயி றுடைந்து சோர
அண்டமும் பிளந்து விண்ட தாமென அனுமன் ஆர்த்தான்.

[1] பிரதி 1 நெஞ்சம்

௪ அருவரை முழையின் முட்டும் அசனியின் இடிப்பும் ஆழி
வெருவரு முழக்கும் ஈசன் வில்இறும் ஒலியும் என்னக்
குருமணி மகுட கோடி முடித்தலை குலுங்கும் வண்ணம்
இருபது செவியின் ஊடும் நுழைந்தன எழுந்த ஓசை.

௫ புல்லிய முறுவல் தோன்றப் பொருமையும் சிறிது பொங்க
எல்லையில் ஆற்றல் மாக்கள் எண்ணிறந் தாரை ஏவி
வல்லையின் அகலா வண்ணம் வானையும் வழியை மாற்றிக்
கொல்லவிர் குரங்கை நொய்தில் பற்றுதிர் கொணர்மின் என்றான்,

௬ சூலம்வாள் முசலங் கூர்வேல் தோமரம் தண்டு பிண்டி
பாலமே முதலாய் உள்ள படைக்கலம் பரித்த கையர்
ஆலமே அனைய மெய்யர் அகல்இடம் அழிவு செய்யும்
காலமே எழுந்த மாரிக் கடல்எனக் கடிது செல்வார்.

௭ நானிலம் அதனின் உண்டு போர்என நவிலும் அச்சொல்
தேனினும் களிப்புச்செய்யும் சிந்தையர் தெரித்தும் என்னில்
கானினும் பெரியர் ஓசை கடலினும் பெரியர் கீர்த்தி
வானினும் பெரியர் மேனி மலையினும் பெரியர் மாதோ.

௮ திருகுறுஞ் சினத்துத் தேவர் தானவர் என்னும் தெவ்வர்
இருகுறும் பெறிந்து நின்ற விசையினல் வசைஎன் றெண்ணிப்
பொருகுறும் பென்று வென்றி புணர்வது பூவுண் வாழ்க்கை
ஒருகுறுங் குரங்கென் றுள்ளி நெடிதுநாண் உழக்கு நெஞ்சர். 561 2

௯ கட்டிய வாளர் இட்ட கவசத்தர் கழலர் திக்கைத்
தட்டிய தோளர் மேகம் தழுவிய உடலர் வானைத்
எட்டிய முடியர் காலில் இடரிய பொருப்பர் ஈட்டிக்
கொட்டிய பேரி என்ன மழைஎனக் குமிறும் சொல்லார்.

௧0 வானவர் எறிந்த தெய்வப் படையிடும் வடுக்கண் மற்றைத்
தானவர் துரந்தவேதித் தழும்பொடு தயங்குந் தோளாய்
யானையும் பிடியும் வாரி இடும்பில வாயர் ஈன்ற
கூனல்வெண்பிறையில்தோன்றும்எயிற்றினர்கொதிக்குங்கண்ணர்.

௧௧ சக்கரம் முசலம் தண்டு தாரைவாள் பரிசை சங்கு
முற்கரம் முசுண்டி பாலம் வேல்எழுச் சூலம் முள்கோல்
பொற்கரம் குலிசம் பாசம் புகர்மழு எழுக்கோல் குந்தம்
வில்கருங் கணைவிட் டேறு கழுக்கடை எழுக்கண் மின்ன.

கஉ பொன்னின்று கனலுந் தெய்வப் பூணினர் பொருவில் தோளர்
மின்னின்ற படையும் கண்ணும் வெயில்விரிக் கின்ற மெய்யர்
என்என்றார்க் கிகன்என் கின்றார் எய்திய தறிந்தி லாதார்
முன்னின்றார் முதுகும் தீயப் பின்னின்றார் மூசு கின்றார்.

கங வெய்துறு படையின் மன்னர் வில்லினர் வீசு காலர்
மைஅறு விசும்பில் தோன்றும் மேனியர் இடிக்கும் வாயர்
கைபரந் துலகம் பொங்கிக் கடையுகம் முடியுங் காலம்
பெய்என் றெழுந்த மாரிக் குவமைசால் பெருமை பெற்றார்.

கச பனிஉறு சோலைசிந்திக் குன்றமும் பறித்த தம்மா
தனிஒரு குரங்கு போலாம் நன்றுநம் தருக்கென் கின்றார்
இனிஉறு பழிமற் றுண்டோ இதில்என எழுந்து பொங்கி
முனிவுறு மனத்தில் தாமே முந்துற முடுகு கின்றார். 5618

கரு எற்றுறு முரசும் வில்நாண் ஏறும்விட் டெடுத்த ஆர்ப்புஞ்
சுற்றுறு கழலும் சங்கும் தெழிதெழித் துரப்பும் சொல்லும்
உற்றுடன் றொன்றாய் ஓங்கி ஒலித்தெழுந் தூழிப் போர்வில்
நல்திரைக் கடல்க ளோடும் மலைகளை நாவ டக்க. 5619

கசு தெருவிடம் இல்லென் றெண்ணி வானிடைச் செல்கின் றாரும்
ஒருவரில் ஒருவர்முந்தி முறைமறுத் துரைக்கின் றாரும்
புருவமும் சிலையுங் கோட்டிப் புகைஉயிர்த் துயிர்க்கின்றாரும்
விரிவில இலங்கை என்று வழிபெறா விழிக்கின் றாரும். 5620

கஎ வாளினை விதிர்க்கின் றாரும் வாயினை மடிக்கின் றாரும்
தோளுறக் கட்டிக் கல்லைத் துகள்படத் துகைக்கின் றாரும்
தாள்பெயர்த் திடம்பெ றாது தருக்கினர் நெருக்கு வாரும்
கோள்வளை எயிறு தின்று தீஎனக் கொதிக்கின் றாரும்.

கஅ *அனைவரும் மலையென நின்றார் அளவறு படைகள் பயின்றார்
அனைவரும் அமரி லுயர்ந்தார் அகல்இடம் நெளிய நடந்தார்
அனைவரும் வானின் நிமிர்ந்தார் அசனியின் இடிகள் அணைந்தார்
அனைவரும் அமரரை வென்றார் அசுரரை வேரொடு தின்றார்.

ககூ குறுகின தலைவரும் மின்போல் குரைகழல் உரகரும் வன்போர்
முறுகின பொழுதில் உடைந்தார் முதுகிட முறுவல் பயின்றார்
இறுகின நிதிகிழ வன்பேர் இசைகெட அளகை எறிந்தார்
தெறுகிலர் இன்மையின் வன்தோள் தினவுற உலகு திரிந்தார்.

உ0 வரைகளை இடறுமின் என்றால் மறிகடல் பருகுமின் என்றால்
இரவியை விழவிடும் என்றால் எழுமழை பிழியுமின் என்றால்
அரவின தரசினை ஒன்றோ தரையினொ டரையுமின் என்றால்
தரையினை எடும் எடும் என்றால் ஒருவர்தம் அமைதல் சமைந்தார்.

உக தூளியின் நிமிர்பட லம்போய் இமையவர் விழிதுற வெம்போர்
ஆளியின் இனம்என வன்தாள் அடுபுலி நிரைஎன விண்தோய்
மீளியின் அணிஎன வன்தோல் அலைகடல் விடம்என எஞ்சார்
வாளியின் விசைகொடு திண்கார் வரைவரு வனஎன வந்தார். 5625

உஉ பொறிதர விழிஉயிர் ஒன்றோ புகைஉக அயில்ஒளி மின்போல்
செறிதர உரும்எதிர் நின்றார் திசைதொறு திசைதொறு சென்றார்
எறிதரு கடையுக வன்கால் இடறிட உடுவின் இனம் போய்
மறிதரு மலைஅகல் விண்போல் வடிவழி பொழிலை வளைந்தார்.

உ௩ வயிரொலி வளைஒலி வண்கார் மழைஒலி முரசொலி மண்பால்
உயிர்உலை வறநிமி ரும்பேர் உரும்எறி செவியின் உணர்ந்தான்
வெயில்விரி கதிரவ னும்போய் வெருவிட வெளியிடை விண்தோய்
கயிலையின் மலைஎன நின்றான் அனையவர் வருதொழில் கண்டான்.

உ௪ இதவிய திதுஎன முந்தே இசைவுற இனிது தெரிந்தார்
பதவிய அறிவு பயந்தால் அதினல பயன்உள துண்டோ
சிதைவில கடிபொழில் ஒன்றோ சிதறிய செயல்தரு திண்போர்
உதவியை இனிதின் உவந்தான் எவரினும் அதிகம் உயர்ந்தான்.

உ௫ இவன்இவன் இவன்என நின்றார் இதுஎன முதல்வர் எதிர்ந்தார்
பவனனின் முடுகி அடர்ந்தார் பகல்இர வுறமிடை கின்றார்
புவனியும் மலையும் விசும்பும் பொருவரும் நகரும் உடன்போர்
துவனியில் அதிரும் விடம்போல் சுடர்விடு படைகள் துரந்தார்.

உ௬ மழைகளும் மறிகட லும்போய் மறைதர முரசம் அறைந்தார்
முழைகளின் வாய்கள் திறந்தார் முதிர்புகை கதுவ முனிந்தார்
பிழைஇல படஅர வின்தோல் பிடர்இட அடியிடு கின்றார்
கழைதொடர் வளம் எரி உண்டால் எனஎறி படைஞர் கலந்தார்.

உ௭ அறிவனும் அதனை அறிந்தான் அருகினில் அழகில் அமைந்தோர்
இறவினின் உதவு நெடுந்தோள் எழுபணை மரமிக மின்கால்
உறுபொரு துணைஎன ஒன்றோ உதவிய அதனை உவந்தான்
நிறைகடல் கடையும் நெடுந்தாள் மலைஎன அனுமன் நிமிர்ந்தான்.

உஅ பருவரை புரள்வன ஒன்றோ படர்மழை அருவி நெடுங்கால்
சொரிவன பலஎன மண்தோய் துறைபொரு குருதி சொரிந்தார்
ஒருவரை ஒருவர் தொடர்ந்தார் உயர்தலை உடைய உருண்டார்
அருவரை நெளியவிழும்போர் அசனியு மறைய அறைந்தான். 5642

உகூ பறைபுரை விழிகள் பறிந்தார் படியிடை நெடிது படிந்தார்
பிறைபுரை எயிறும் இழந்தார் பிடரொடு தலைகள் பிளந்தார்
குறைஉயிர் சிதறி நெரிந்தார் குடரொடு குருதி சொரிந்தார்
முறைமுறை படைகள் தெரிந்தார் முடையுடன் மறிய முறிந்தார்.

௩0 புடைபுடை இடுகன லின்காய் பொறியிடை மயிர்கள் புகைந்தார்
தொடையொடு முதுகு துணிந்தார் சுழிபடு குருதி சொரிந்தார்
படையிடை ஒடிய நெடுந்தோள் பறிதர வயிறு திறந்தார்
இடைஇடை மலையின் விழுந்தார் இகல்பொர முடுகி எழுந்தார்.

௩க புதைபடும் இருளின் மிடைந்தார் பொடியிடை நெடிது புரண்டார்
விதைபடும் உயிரர் விழுந்தார் விழியொடு விளியும் இழந்தார்
கதைகொடு முதிர மலைந்தார் கணைபொரு சிலையர் கலந்தார்
உதைபட உரனும் நெரிந்தார் உயிரொடு குருதியு மிழந்தார். 5635

௩உ அயல்அயல் மலைகொ டறைந்தார் அடுபகை அளவை அடைந்தார்
வியல்இடம் மறைய விரிந்தார் மிசைஉல கடைய மிடைந்தார்
புயல்தொடு மலையின்விழுந்தார் புடைபுடை திசைதொறும்சென்றார்
உயர்வுற விசையின் எறிந்தார் உடலொடும் உலகு துறந்தார். 5636

௩௩ *பற்றிக் தோளொடு தாள்பறித் தெறியவே பழகி
இற்ற சித்திரம் இடைந்தன ஆம்எனக் கிடந்தார்
கொற்ற வாலிடைக் கொடுந்தொழில் அரக்கரை அடங்கச்
சுற்றி வீசிடப் பம்பரம் எனநின்று சுழன்றார். 5637

௩ச வாள்கள் இற்றன வார்சிலை இற்றன வயிரத்
தோள்கள் இற்றன இற்றன சுடர்மழுச் சூலம்
நாள்கள் இற்றன இற்றன நகைஎயி றீட்டம்
தாள்கள் இற்றன இற்றன படைஉடைத் தடக்கை. 5638

௩ரு தெறித்த வன்தலை தெறித்தன செறிசுடர்க் கவசம்
தெறித்த பைங்கழல் தெறித்தன சிலம்பொடு பொலந்தார்
தெறித்த பன்மணி தெறித்தன பெரும்பொறித் திறங்கள்
தெறித்த குண்டலம் தெறித்தன கண்மணி சிதறி. 5639

௩௬ உக்க பற்குவை உக்கன தூவக்கெலும் புதிரம்
உக்க முற்கரம் உக்கன முசுண்டிகள் உடைவுற்
றுக்க மூளைகள் உக்கன நிணக்குழம் புலைவுற்
றுக்க சக்கரம் உக்கன உடல்துறந் துயிர்கள் 5640

௩௭ தாள்க ளால்பலர் தடக்கைக ளால்பலர் தாக்கும்
தோள்க ளால்பலர் சுடர்விழி யால்பலர் தொடரும்
கோள்க ளால்பலர் குன்றுக ளால்பலர் தத்தம்
வாள்க ளால்பலர் மரங்களி னால்பலர் மடிந்தார். 5641

௩௮ ஈர்க்கப் பட்டனர் சிலர்சிலர் இடருண்டு பட்டார்
பேர்க்கப் பட்டனர் சிலர்சிலர் பிடியுண்டு பட்டார்
ஆர்க்கப் பட்டனர் சிலர்சிலர் அடியுண்டு பட்டார்
பார்க்கப் பட்டனர் சிலர்சிலர் பயமுண்டு பட்டார். 5642

௩௯ ஓடிக் கொன்றனன் சிலவரை உடல்உடல் தோறும்
கூடிக் கொன்றனன் சிலவரை கொடுநெடு மரத்தால்
சாடிக் கொன்றனன் சிலவரைப் பிணந்தொறும் தடவித்
தேடிக் கொன்றனன் சிலவரைக் கறங்கெனத் திரிவான்.

௪0 முட்டி னார்பட முட்டினன் முறைமுறை முடுகிக்
கிட்டி னார்படக் கிட்டினன் கிரிஎன நெருங்கிக்
கட்டி னார்படக் கட்டினன் கைகளால் மெய்யில்
தட்டி னார்படத் தட்டினன் மலைஎனத் தகுவான். 5644

௪௧ உறக்கினும் கொல்லும் உணரினும் கொல்லுமால் விசும்பில்
பறக்கினும் கொல்லும் படரினும் கொல்லுமின் படைக்கும்
நிறக்க ருங்கழல் அரக்கர்கள் நெறிதொறும் பொறிகள்
பிறக்க நின்றெறி படைகளைக் கைகளால் பிசையும் 5645

௪௨ சேறும் வண்டலும் மூளையும் நிணமுமாய்ச் செறிய
நீறு சேர்நெடுந் தெருவெலாம் நீத்தமாய் நிரம்ப
ஆறு போல்வரும் குருதிய அனுமனால் அலைப்புண்
டிறில் வாய்தொறும் உமிழ்வதே ஒத்ததவ் விலங்கை. 5646

௪௩ கருதி வாளினும் கையினும் கடிகையில் கட்டிச்
சுருதி யேஅன்ன மாருதி மரத்திடை துரப்ப
நிருதர் எந்திரத் திடுகரும் பாம்என நெரியக்
குருதி சாறெனப் பாய்ந்தது குரைகடற் கூனே. 5647

௪௪ எடுத்த ரக்கரை எறிதொறும் அவர்உடல் எற்றக்
கொடித்திண் மாளிகை இடிந்தன மண்டபம் குலைந்த
தடக்கை யானைகள் மடிந்தன கோபுரம் தகர்ந்த
பிடிக்கு லங்களும் புரவியும் அவிந்தன பெரிய. 5648

௪௫ தத்தம் மாடங்கள் தம்உட லால்சிலர் தகர்த்தார்
தத்தம் மாதரைத் தம்கழ லால்சிலர் தவிர்த்தார்
தத்தம் மக்களைத் தம்படை யால்சிலர் தடிந்தார்
தத்தி மாருதி தடக்கைக ளால்விசைத் தெறிய. 5649

௪௬ ஆடல் மாக்களி றனையவன் அரக்கியர்க் கருளி
வீடு நோக்கிய செல்கென்று சிலவரை விட்டான்
கூடி னார்க்கவர் உயிர்எனச் சிலவரைக் கொடுத்தான்
ஊடி னார்க்கவர் மனைதொறும் சிலவரை உய்த்தான். 5650

௪௭ தருஎ லாம்உடல் தெற்றிஎல் லாம்உடல் சதுக்கத்
துருஎ லாம்உடல் உவரிஎல் லாம்உடல் உள்ளூர்க்
கருஎ லாம்உடல் காவும்எ லாம்உடல் அரக்கர்
தெருஎ லாம்உடல் தேசம்எ லாம்உடல் சிதற. 5651

௪௮ கான்எ லாம்உயிர் கவர்வுறும் காலன்ஓய்ந் தமைந்தான்
தான்எ லாரையும் மாருதி சாடுகை தவிரான்
மீன்எ லாம்உயிர் மேகம்எ லாம்உயிர் மேன்மேல்
வான்எ லாம்உயிர் மற்றும்எ லாம்உயிர் சுற்ற. 5652

௪௯ ஆக இச்செரு விளைவுறும் அமைதியில் அரக்கர்
மோக முற்றினர் ஆம்என முறைமுறை முனிந்தார்
மாகம் முற்றவும் மாதிரம் முற்றவும் வளைந்தார்
மேகம் ஒத்தனர் மாருதி வெய்யவன் ஒத்தான். 5653

௫௦ அடல்அ ரக்கரும் ஆர்த்தலின் அலைத்தலின் அடர்த்துப்
புடைவ ளைத்துயர் பெருமையில் கருமையில் பொலிவின்
மிடல்அ யில்படை மீன்என விலங்கலில் கலங்கும்
கடல்நி கர்த்தனர் மாருதி மந்தரங் கடுத்தான். 5654

௫௧ கரத லத்தினுங் காலினும் வாலினும் கதுவ
நிரைம ணித்தலை நெரிந்துகச் சாய்ந்துயிர் துறப்பார்
சுரர்ந டுக்குற அமுதுகொண் டெழுந்தநாள் தொடரும்
உரகர் ஒத்தனர் அனுமன்அக் கலுழனை ஒத்தான். 5655

௫௨ மானம் உற்றதம் பகையினால் முனிவுற்று வளைந்த
மீன்உ டைக்கடல் இடையினும் உலகெலாம் மிடைந்த
ஊன்உ றக்கொன்று துகைக்கையின் ஒழிவிலா அரக்கர்
ஆனை ஒத்தனர் ஆள்அரி ஒத்தனன் அனுமன். 5656

௫௩ எய்த எற்றின எறிந்தன ஈர்த்தன இகலில்
பெய்த குத்தின பொதுத்தன தொளைத்தன பிளந்த
கொய்த சுற்றின பற்றின குடைந்தன பொலிந்த
ஐயன் மல்பெரும் புயத்தன புண்அளப் பரிய 5657

௫௪ கார்க்க ருங்கடல் கணங்களும் மழைமுகில் கணமும்
வேர்க்க வெஞ்சமர் விளைத்தெழும் வெள்எயிற் றரக்கர்
போர்க்குள் ஆர்த்தெழும் பூசலில் ஐயனைப் புகழ்வுற்
றார்க்கும் வானவர் அமலையும் எழுந்ததன் றமரில். 5658

௫௫ மேவும் வெஞ்சினத் தரக்கர்கள் முறைமுறை விசையால்
ஏவு பல்படை எத்தனை கோடிகள் எனினும்
தூவு தேவரும் முனிவரும் மகளிரும் சொரிந்த
பூவும் புண்களும் தெரிந்தில மாருதி புயத்தில். 5659

௫௬ பெயர்க்கும் சாரிகை கறங்கெனத் திசைதொறும் பெயர்வில்
உயர்க்கும் விண்மிசை ஓங்கலின் மண்ணில்வந் துறலில்
அயர்த்து வீழ்ந்தனர் அழிந்தனர் அரக்கராய் உள்ளார்
வெயர்த்தி லன்உரு அசைத்திலன் உயிர்த்திலன் வீரன்.

௫௭ எஞ்ச லில்கணக் கறிந்தில இராவணன் ஏவ
நஞ்சம் உண்டவர் ஆம்என அனுமன்மேல் நடந்தார்
துஞ்சி னார்அல்லதி யாவரும் அமர்த்தொழில் தொலைவுற்
றஞ்சி னார்இல்லை அரக்கரில் வீரர்மற் றாரோ. 5661

௫௮ வந்த கிங்கரர் ஏஎனும் மாத்திரை மடிந்தார்
நந்த வானத்து நாயகர் ஓடினர் நடுங்கிப்
பிந்து காலினர் கையினர் பெரும்பயம் பிடரின்
உந்த ஆயிரம் பிணக்குவை மேல்விழுந் துளைவார். 5662

௫௯ விரைவில் உற்றனர் விம்மினர் யாதொன்றும் விளம்பார்
கரத லத்தினால் பட்டது கட்டுரைக் கின்றார்
தரையில் நிற்கிலர் திசைதொறும் நோக்கினர் சலிப்பால்
அரசன் மற்றவர் அலக்கணே உரைசெய அறிந்தான். 5663

௬௰ இறந்து நீங்கின ரோஇன்றென் ஆணையின் இகழ்ந்தார்
துறந்து நீங்கின ரோவென்றிவ் வெஞ்சமந் தொலைந்தார்
மறந்து நீங்கின ரோஎன்ன வந்ததென் றுரைத்தான்
நிறம்செ ருக்குற வாய்தொறும் நெருப்புமிழ் கின்றான்.

௬௰௧ *சலந்தலைக் கொண்டஅவ் அரக்கர் தன்மையால்
அலந்தனர் செருக்களத் தஞ்சி னார்அலர்
புலந்தரு பொய்க்கரி புகன்ற புண்கணார்
குலங்களில் அவிந்தனர் குரங்கி னால்என்றார். 5665

௬௰௨ ஏவலின் எய்தினர் இருந்த எண்திசைத்
தேவரை நோக்கினன் நாணும் சிந்தையான்
ஆவதொன் றறிந்திலீர் போலு மால்என்றான்
மூவகை உலகமும் விழுங்க மூழ்கினான்.

௬௰௩ மீட்டவர் உரைத்திலர் பயத்தில் விம்முவார்
தோட்டலர் இனமலர்த் தொங்கல் மோலியான்
வீட்டின தரக்கரை என்னும் மெய்உரை
கேட்டதோ கண்டதோ கிளத்துவீர் என்றான்.

௬௰௪ கண்டனம் ஒருபுடை நின்று கண்களால்
தெண்திரைக் கடல்என வளைந்த சேனையை
மண்டலம் திரிந்தொர் மரத்தி னால்உயிர்
உண்டதக் குரங்கினி ஒழிவ தன்றென்றார். 5668

௯. கிங்கரர் வதைப்படலம் முற்றும்.

௰ சம்புமாலி வதைப் படலம்.

௧ கூம்பின கையின் நின்ற குன்றிவர் குவவுத் திண்தோள்
பாம்பிவர் தறுகண் சம்பு மாலிஎன் பானைநோக்கி
வாம்பரித் தானை யோடும் வளைத்தகன் வலிமை மாற்றித்
தாம்பினில் பற்றித் தந்தென் மனச்சினம் தணித்திஎன்றான்.

௨ ஆயவன் வணங்கி ஐய அளப்பரும் அரக்கர் முன்னே
நீஇது முடித்தி என்று நேர்ந்தெனை நினைவின் எண்ணி
ஏயினைப் என்னப்பெற்றால் என்னில்யார் உயர்ந்தார் என்னாப்
போயினன் இலங்கை வேந்தன் போர்ச்சினம் போவ தொப்பான்.

௩ தன்னுடைத் தானை யோடும் தந்திரக் கிழவர் சூழ்ந்த
மன்னுடைச் சேனை யோடும் மாதவம் தீய்ந்த வாளின்
மின்னுடைப் பாவை யோடும் வேறுளோர் சிறப்பின் விட்ட
பின்னுடைச் சேனை சூழச் சென்றனன் பெரும்போர் பெற்றான்.

௪ உருமொத்த முழக்கில் செங்கண் வெள்ளெயிற் றோடை நெற்றிப்
பருமித்த கிரியில் தோன்றும் வேழமும் பதுமத் தண்ணல்
நிருமிக்க வேழ்வி உற்ற எண்ணலா நிலைய நேமிச்
சொரிமுத்த மாலை சூழ்ந்த துகிற்கொடி தடந்தேர் சுற்ற.

௫ காற்றினை மருங்கில் கட்டிக் கால்வகுத் தூயிருங் கூட்டிக்
கூற்றினை ஏற்றி அன்ன குலப்பரிக் குழுவும் குன்றில்
தூற்றினில் எழுப்பி ஆண்டு தொகுத்தன சுழலுங் கண்ண
வேற்றினப் புலிஏ றென்ன இயைந்தது பதாதி ஈட்டம்.

௬ தோமரம் உலக்கை கூர்வாள் சுடர்மழுக் குலிசம் தோட்டி
தாமரம் தின்ற கூர்வேல் சக்கரம் எழுக்கள் சாபப்
காமரம் தண்டு பிண்டி கப்பணம் கால பாசம்
மாமரம் வலையம் வெங்கோல் முதலிய வயங்க மாதோ. 5674

௭ எத்திய அயில்வேல் குந்தம் எழுமுதல் இனைய ஏந்திக்
குத்திய திளைப்ப மீதில் குழுவின மழைமாக் கொண்டல்
பொத்துகள் பொருவில் நன்னீர் சொரிவன போவ போலச்
சித்திரப் பதாகை ஈட்டம் திசைதொறும் செறிவ செல்ல.

௮ பல்லியம் துவைப்ப நன்மாப் பணிலங்கள் முறலப் பொற்றேர்ச்
சில்லிகள் இடிப்ப வாசி சிரித்திடச் செறிபொற் றாரும்
வில்லும்மின் றிசைப்ப வான முழக்கும்விட் டார்ப்ப விண்தோய்
ஒல்லொலி வானில் தேவர் உரைதெரி ஒழிக்கும் மன்றோ. 5676

௯ மின்நகு கிரிகள் யாவும் மேருவின் விளங்கித் தோன்ற
தொன்னகர் பிறவும் எல்லாம் பொலிந்தன துறக்கம் என்ன
அன்னவன் சேனை செல்ல ஆர்கலி இலங்கை ஆன
பொன்னகர் துறந்து பொங்கி ஆர்த்தெழும் தூணிபோர்ப்ப.

க0 ஆயிரம் ஐந்தொ டைந்தாம் ஆழியந் தடந்தேர் தேருக்
கேயின இரட்டி யானை யானையின் இரட்டி பாய்மாப்
போயின பதாதி சொன்ன புரவியின் இரட்டி போலாம்
தீயவன் தடந்தேர் சுற்றித் தெற்றெனச் சென்ற சேனை.

கக வில்மறைக் கிழவர் நாலு விஞ்சையர் வரத்தின் மிக்கார்
வல்மறக் கண்ணர் ஆற்றல் வரம்பிலார் வயிரத் தோளார்
தொல்மறைக் குலத்தார் தூணி தூக்கிய புறத்தார் மார்பாம்
கல்மறைத் தொளிரும் செம்பொன் கவசத்தர் கடுந்தேர் ஆட்கள்

க௨ பொருதிசை யானை ஊரும் புனிதரைப் பொருவும் பொற்பர்
சொரிபடைத் தொழிலும் மற்றும் அங்குசத்தொழிலும் தொக்கார்
நிருதியில் பிறந்த வீரர் நெருப்பென நீட்டுங் கண்ணர்
பரிதியில் பொலியும் மெய்யர் படுமதக் களிற்றின் பாகர்.

க௩ ஏர்கெழு குசையும் சாரி பதினெட்டும் இயல்பின் எண்ணி
போர்கெழு படையும் கற்ற வித்தகப் புலவர் போரில்
தேர்கெழு மறவர் யானைச் சேவகர் திறத்தில் செல்லும்
தார்கெழு புரவி என்னும் தம்மனம் தாவப் போவார் 5681

க௪ அன்னெடும் தானை சுற்ற அமரரை அச்சம் சுற்றப்
பொன்னெடும் தேரின் ஏறிப் பொருபடை நெருப்பில் பொங்கித்
தன்னெடும் கண்கள் காந்தத் தாழ்தரு கவசம் மார்பின்
மின்இடை வெயிலும் வீச வில்இடும் எயிற்று வீரன். 5682

க௫ நந்தன வனத்து நின்ற நாயகன் தூதன் தானும்
வந்திலர் அரக்கர் என்னும் மனத்தினன் வழியை நோக்கிச்
சந்திரன் முதல வான மீன்எலாம் தவழ நின்ற
இந்திர தனுவில் தோன்றும் தோரணம் ஏறி நின்றான்.

க௬ கேழ்இரு மணியும் பொன்னும் விசும்பிருள் கிழித்து நீக்கும்
ஊழ்இருங் கதிர்க ளோடும் தோரணத் தும்பர் மேலான்
சூழ்இருங் கோட்கள் எல்லாம் தொத்திடத் தொடரும்சோதி
ஆழியின் நடுவுள் தோன்றும் அருக்கனும் அனையன் ஆனான்.

க௭ சொல்லொடு மேகம் சிந்தத் திரைகடல் இரைப்புத் தீரக்
கல்அளைக் கிடந்த நாகம் உயிரொடு விடமும் காலக்
கொல்எயிற் றரக்கர் நெஞ்சில் குடிபுக அச்சம் வான
[1] வில்என வெடிக்க விண்ணோர் நடுக்குற வீரன் ஆர்த்தான்.

க௮ நின்றன திசைக்கண் வேழம் நெடுங்களிச் செருக்கு நீங்கத்
தென்திசை நமனும் உள்ளம் துணுக்கெனச் சிந்து வானில்
பொன்றலில் மீன்கள் எல்லாம் பூஎன உதிரப் பூவும்
குன்றமும் பிளக்க வேலை துளக்குறக் கொட்டினன்தோள்.

பிரதி 1. பல்லென.

ககூ அவ்வழி அரக்கர் எல்லாம் அலைநெடுங் கடலின் ஆர்த்தார்
செவ்வழிச் சேறல் செல்லார் பிணப்பெருங் குன்றஞ் செற்றி
வெவ்வழிக் குருதி வெள்ளம் படைமிடைந் துயர்ந்து வீங்கி
எவ்வழிச் சேறும் என்றார் தமர்உடம் பிடறி வீழ்வார். 5687

உ0 ஆண்டுநின் றரக்கன் வெவ்வே றணிவகுத் தனிகம் தன்னை
மூண்டிரு புடையு முன்னும் முறைமுறை முடுக ஏவித்
தூண்டினன் தானும் திண்தேர் தோரணத் திருந்த சூரன்
வேண்டிய தெதிர்ந்தான் என்று வீங்கினன் விசயத் திண்தோள்.

உக அய்யனும் அமைந்து நின்றான் ஆழியான் அளவில் நாமம்
நெய்சுடர் விளக்கில் தோன்றும் நெற்யே நெற்றி ஆக
மொய்மயிர்ச் சேனை பொங்க முரண்உகிர் அயில்வாண் மொய்த்த
கைகளே கைக ளாகக் கடைக்கூழை திருவால் ஆக. 5689

உஉ வயிர்கள்வால் வளைகள் விம்ம வரிசிலை சிலம்ப மாயப்
பயிர்கள்ஆர்ப் பெடுப்ப மூரிப் பல்லியம் முழங்கப் பற்றிச்
செயிர்கொள் வாள் அரக்கர் சீற்றச் செருக்கின படைகள் சிந்த
வெயில்கள்போல் ஒளிகள் வீச வீரன்மேல் கடிது விட்டார். 5690

உங *கருங்கழல் அரக்கர்தம் படைக்கலம் கரத்தால்
பெருங்கடல் உறப்புடைத் திறுத்துகப் பிசைந்தன
விரிந்தன பொரிக்குலம் நெருப்பென வெகுண்டாண்
டிருந்தவன் கிடந்ததோர் எழுத்தெரிந் தெடுத்தான். 5691

உச இருந்தனன் எழுந்தனன் இழிந்தனன் உயர்ந்தான்
திரிந்தனன் புரிந்தனன் எனநனி தெரியார்
விரிந்தவர் குவிந்தவர் விலங்கினர் கலந்தார்
பொருந்தினர் பிரிந்தனர் களப்படப் புடைத்தான். 5692

உரு எறிந்தன எய்தன இடிஉரும் எனமேல்
செறிந்தன படைக்கலம் இடக்கையில் சிதைத்தான்
முறிந்தன தெறுங்கரி முடிந்தன தடந்தேர்
மறிந்தன பரிநிரை வலக்கையில் மலைந்தான். 5693

உசு இழந்தன நெடுங்கொடி இழந்தன இருங்கோ
டிழந்தன நெங்கரம் இழந்தன வியன்தாள்
இழந்தன முழங்கொலி இழந்தன மதப்பா
டிழந்தன பெருங்கதம் இருங்கவுளி யானை. 5694

௨௭ நெரிந்தன தடம்சுவர் நெரிந்தன பெரும்பார்
நெரிந்தன நுகம்புடை நெரிந்தன அகன்ஞார்
நெரிந்தன கொடிஞ்சிகள் நெரிந்தன வியன்தார்
நெரிந்தன கடும்பரி நெரிந்தன தடந்தேர். 5695

௨௮ ஒடிந்தன உருண்டன உலந்தன பொலந்தார்
இடிந்தன எரிந்தன நெரிந்தன எழுந்தாண்
மடிந்தன மறிந்தன முறிந்தன வயப்போர்
படிந்தன முடிந்தன கிடந்தன பரிமா. 5696

௨௯ வெருண்டனர் விழுந்தனர் வியந்தனர் எழுந்தார்
மருண்டனர் மயங்கினர் மறந்தனர் இறந்தார்
உருண்டனர் உலைந்தனர் உழைத்தனர் பிழைத்தார்
சுருண்டனர் புரண்டனர் தொலைந்தனர் மலைந்தார். 5697

௩0 கரிகொடு கரிகளைக் களப்படப் புடைத்தான்
பரிகொடு பரிகளைத் தலத்திடைப் படுத்தான
வரிசிலை வயவரின வயவரின மடித்தான்
நிரைமணித் தேர்களை தேர்களின நெரித்தான். 5698

௩௧ மூளையும் உதிரமும் முழங்கிருங் குழம்பாய்
மீளிருங் குழைபடக் கரிவிழுந் தழுந்தத்
தாளொடு தலைஉகத் தடநெடுங் கிரிபோல்
தோளொடு நிருதரை வாளொடு துகைத்தான். 5699

௩௨ மல்லொடு மலைதலத் தோளினர் வளைவாய்ப்
பல்லொடு நெடுங்கரப் பகட்டொடும் படுத்தான்
வில்லொடும் வாளொடும் வேலொடும் விளிக்கும்
சொல்லொடும் உயிரொடும் நிலத்தொடும் துகைத்தான்.

௩௩ புகைநெடும் பொறியுகுங் திசைதொறும் பொலந்தார்ச்
சிகைநெடும் சுடர்விடும் தேர்தொறும் செறிதாள்
தகைநெடும் கரிதொறும் பரிதொறும் சபித்தார்
நகைநெடும் படைதொறும் தலைதொறும் நடந்தான். 5701

௩௪ வென்றிவெம் புரவியின் வெரிநினும் விரவார்
மன்றல்அம் தார்அணி மார்பினும் மணித்தேர்
ஒன்றின்நின் றொன்றினும் உமிழ்மத மழைதாழ்
குன்றினும் கடையுகத் தரும்எனக் குதித்தான். 5702

௩௫ பிரிவரும் பெருநெடுங் கால்எனப் பெயரா
இருவினை துடைத்தவர் அறிவென எவர்க்கும்
வரிமுலை விலக்கென மதித்தயல் வழங்கும்
தெரிவையர் தம்மனக் கறங்கெனத் திரிந்தான். 5703

௩௬ அண்ணல்அவ் அரியினுக் கடியவர் அவன்சீர்
நண்ணுவர் எனும்பொருள் நவைஅறத் தெரிப்பான்
மண்ணினும் விசும்பினும் மருங்கினும் மலைந்தார்
கண்ணினும் மனத்தினும் தனித்தனி கலந்தான். 5704

௩௭ கொடித்தடந் தேரொடும் குரகதக் குழுவை
அடித்தொரு தடக்கையில் நிலத்திடை அரைத்தான்
இடித்துநின் றெதிர்கதக் தெயிற்றுவன் பொருப்பைப்
பிடித்தொரு தடக்கையின் உயிருகப் பிழிந்தான். 5705

௩௮ கறுத்தெழு மனத்தினர் எயிற்றினர் கயிற்றார்
செறுத்தெரி விழிப்பவர் சிகைக்கெழு வலத்தார்
வெறுத்தெழு மறலிகள் இவர்என எதிர்ந்தார்
ஒறுத்துருத் திரன்எனத் தனித்தனி உதைத்தான். 5706

௩௯ சக்கரம் தோமரம் உலக்கைதண் டயில்வாள்
மிக்கவன் தேர்பரி குடைகொடி விரவி
உக்கன குருதிஅம் பெருந்திரை உருட்டிப்
புக்கன கடல்இடை நெடுங்கரப் பூழ்க்கை.

௪0 எட்டின விசும்பிடை எழுபடை அழுந்த
முட்டின மலைகளை முயங்கின திசையை
ஒட்டின ஒன்றொடொன் றூடிடத் துடைந்து
தட்டுமுட் டாடின தலையொடு தலைகள். 5708

௪௧ *கானே காவல் வேழக் கணங்கள் கதவாள் அரிகன்ற
வானே எய்தத் தனியே நின்ற மதமால் வரையொப் பான்
தேனே புரைகண் கனலே சொரியச் சீற்றத் தருக்கினான்
தானே ஆனான் சம்புமாலி சண்டன் போனற தகைமையான்.

௪௨ *காற்றில் கடிய கலினப் புரவி நிருதர் களத்துக் கார்
ஆற்றுக் குருதி நிணத்தோ டுடுத்த வள்ளற் பெருங் கொள்ளைக்
சேற்றுச் செல்லாத் தேரின் ஆழி யாழும் நிலைதீரா
வேற்றுச் செல்லும் வெளியோ இல்லை எளியன் விரைகின்றான்

௪௩ ஏதி ஒன்றால் தேரும் அஃதால் எளியோர் உயிர் கோடல்
நீதிஅன்றால் உடன்வந் தோரைக் காக்கும் நிலைஇல்லாய்
சாதி அன்றே பிறிதென் செய்தி அவர்பின் தனிநின் றாய்
போதி என்றான் பூத்தமரம்போல் புண்ணால்பொலிகின்றான்.

௪௪ நன்று நன்றுன் கருணை என்னா நெருப்பு முந்தநக் கான்
பொன்றி னவரில் ஒருவ னேநீ போ னும் எனை என்னா
வன்திண் சிலையின் வயிரக் காலால் வடித்திண் சுடர் வாளி
ஒன் று பத்து நூ று நூறா யிரமும் உதைப்பித் தான். 5712

௪௫ செய்தி செய்தி சிலைகைக் கொண்டால் வெறுங்கை திரி வாரை
நொய்தின் வெல்வ தரிதோ என்று முறுவல் உகநக் கான்
அய்யன் அங்கும் இங்கும் காலால் அழியும் மழை என்ன
எய்த எய்த பகழி எல்லாம் எழுவால் அகல்வித் தான். 5713

௪௬ முற்ற முனிந்த நிருதன் முனியா முன்னும் பின்னும் சென்
றுற்ற பகழி உறாது முறியா உதிர்கின் றதைஉன் னாச்
சுற்றும்நெடுந்தேர் ஓட்டித்தொடர்ந்தான் தொடரும் துறைகாணான்
வெற்றி எழுவைப் பிறைவாய் அம்பால் அறுத்து வீழ்த்தினான்.

௪௭ சலித்தான் ஐயன் கரத்தால் எய்யும் சரத்தை உகச் சாடி
ஒலித்தார் அமரர் ஆர்ப்ப உயர்மா மணித்தே ருள் புக்குக்
கலித்தான் அவன்கை யில்வில்வாங்கிச் சழுத்தின் இடையிட்டுலைய
வலித்தான் பகுவாய் மடித்த மலைபோற் தலைமண் ணிடை வீழ.

௪௮ குதித்துத் தேரும் கோல்கொள் ஆளும் பரியும் குழம் பாக
மிதித்துப்பெயர்ந்து நெடுந்தோரணத்தை வீரன் மேற்கொண்டான்
கதித்துப் பதித்துக் கழிந்தார் பெருமை கண்டு களத்தஞ்சி
உதித்துப் புலர்ந்த துருத்தித் தோல்போல் உருவத்தமரர் ஓடினர்.

௪௯ பரிந்து புலம்ப மகளிர் காணக் கணவர் பிணம் பற்றி
விரிந்த குருதிப் பெரியா றீர்த்து மனைகள் தொறும் வீச
விரிந்த திலங்கை எழுந்த தழலை இன்றிங் கிவ ளாலே
சரிந்த தரக்கர் வலிஎன் றெண்ணி அறமும் சாலத் தளிர்த்ததால்.

௫௰ புக்கார் அமரர் பொலந்தார் அரக்கன் பொருவில் பெருங்கோயில்
விக்கா நின்றார் விளம்பல் ஆற்றார் வெருவி விம்மு வார்
நக்கான் அரக்கன் நடுங்கல் என்றான் ஐயா நமர் எல்லாம்
உக்கார் சம்பு மாலி உலைந்தான் ஒன்றே குரங்கென்றார். 5718

ருக என்னும் அளவில் எரிந்து வீங்கி எழுந்த வெகுளி யால்
உன்னஉன்ன உதிரக் குமிழி விழியோ டுமிழ்கின் றான்
சொன்ன குரங்கை யானே பிடிப்பன் கடிது தொடர்ந் தென்றான்
அன்னது கண்ட சேனைத் தலைவர் ஐவர் அறிவித்தார். 5719

ய. சம்பு மாலி வதைப்படலம் முற்றும்.

கக. பஞ்ச சேனாபதி வதைப் படலம்.

க சிலந்தி உண்பதோர் குரங்கின்மேல் சேறியேல் திறலோய்
கலந்த போரில்உன் கட்புலக் கடுங்கனல் கதுவ
உலர்ந்த மால்வரை அருவியா றொழுக் கற்ற ஒப்பப்
புலர்ந்த மாமதம் பூக்கும்அன் றேதிசைப் பூழ்க்கை. 5720

உ இலங்கும் வெஞ்சினத் தஞ்சிறை எறும்வலிக் கலுழன்
உலங்கு மேலெழுந் தென்னநீ குரங்கின் மேல் உருத்ததல்
அலங்கல் மாலேயின் புயகிரிணங் தல்லுநன் பகலும்
குலுங்கும் வன்துயர் நீங்குமால் வெள்ளிஅம் குன்றம். 5721

ங உருவ தென்கொலோ உரன்அழி வென்பதொன் றுடையார்
பெறுவ தியாதொன் றுங் காண்கிலர் கேட்கிலர் பெயர்ந்தார்
சிறுமை ஈதொப்ப தியாதுநீ குரங்கின்மேல் செல்லின்
முறுவல் பூக்கும்அன் றேநின்ற மூவர்க்கு முகங்கள். 5722

ச அன்றி யும்முனக் காளின்மை தோன்றுமால் அரச
வென்றி யில்லவர் மெல்லியோர் தமைச் செல்ல விட்டாய்
நன்றி நீஇன்று காண்டியேல் எமைச்செல நயத்தி
என்று கைதொழு திறைஞ்சினர் அரக்கனும் இசைந்தான்.

ரு உலகம் மூன்றுந்தம் முடைமைபெற் றார்என உவந்தார்
திலகம் மண்உற வணங்கினர் கோயிலில் தீர்ந்தார்
அலகில் தேர்பரி யானையோ டடைந்தபோர் அரக்கர்
தொலேவி லாதது கதும்என வருகெனச் சொன்னார். 5724

சா ஆனைமேல்முர சறைந்தனர் வள்ளுவர் உரைத்தார்
போன வேலையில் புடைபரந் ததுபெருஞ் சேனை
சோனை மாமழை முகில்எனப் போர்ப்பணை துவைத்த
மீன வான்இடு வில்எனப் படைக்கலம் மிடைந்த. 5725

எ கூன மாக்கொடி மழைபொதுத் துயர்நெடுங் கோல
மான மாத்தகு மாருதி முனியநாள் உலைந்து
போன மாற்றலர் புகழ்எனக் கால்பொரப் புரண்ட
வான யாற்றுவெண் திரைஎன வரம்பில பரந்த. 5726

அ விரவு பொற்கழல் விசித்தனர் வெரின்உற விளங்கச்
சரம்ஒ டுக்கின புட்டிலும் சாத்தினர் சமையக்
கருவி புக்கனர் அரக்கர்மாப் பல்லணங் கவினப்
புரவி இட்டதேர் பூட்டினர் பருமிதப் பூழ்க்கை. 5727

கூ ஆறு செய்தன ஆனையின் மதங்கள்அவ் ஆற்றைச்
சேறு செய்தன தேர்களின் சில்லியச் சேற்றை
நீறு செய்தன புரவியின் குழாம்மற் றைநீற்றை
ஈறு செய்தன வயப்பரி கவினமா விலாளி. 5728

க0 வழங்கு தேரொலி இடிப்பொடு வாசியின் ஆர்ப்பும்
முழங்கு வெங்களிற் றதிர்ச்சியும் மொய்கழல் ஒலியும்
தழங்கு பல்லியத் தமலையும் கடையுகக் காழி
முழங்கும் ஓசையின் மும்மடி எழுந்தது முடுகி. 5729

கக ஆழித் தேர்த்தொகை ஐம்பதி னாயிரம் அஃதே
சூழிப் பூழ்க்கைக்குந் தொகையவற் றிரட்டியின் தொகைய
ஊழிக் காற்றன்ன புரவிமற் றவற்றின்றி னிரட்டிப்
பாழித் தோள்நெடும் படைக்கலப் பதாதியின் பகுதி. 5730

கஉ கூய்த் தருந்தொறும் தருந்தொறும் தானைவெம் குழுவில்
நீத்தம் வந்துவந் தியங்கிடும் இடம்இன்றி நெருங்கக்
காய்த்த மைந்தவெங் கதிர்ப்படை ஒன்றொன்று கதுவித்
தேய்த்தெ ழுந்தன பொறிக்குல மழைக்குலம் தீய. 5731

கங பண்மணிக்குலம் யானையின் புடைதொறும் பரந்த
ஒண்மணிக்குலம் மழையிடை உருமென ஒலிப்பக்
கண்மணிக்குலம் கனல்எனக் காந்துற மார்பில்
தண்மணிக்குலம் மழைஎழுங் கதிர்எனத் தழைப்ப. 5732

கச தொக்க தாம்படை சுரிகுழல் மடந்தையர் தொடிக்கை
மக்கள் தாயர்மற் றியாவரும் தொடர்ந்தனர் மறுகி
ஒக்க ஏகுதும் என்றனர் குரங்கின்முன் ஒருவர்
புக்கு மீண்டிலர் என்றழு திரங்கினர் புலம்பி. 5733

கரு கைகலந்தவெம் சேனைஅம் கடலிடைக் கலந்தார்.
செய்கை தாம்வரும் தேரிடைக் கதிர்எனச் செல்வார்
மெய்கலந்தமா னிகர்வரும் உவமையை வென்றார்
ஐவ ரும்பெரும் பூதங்கள் ஐந்தும்ஒத் தமைந்தார். 5734

கசு முந்தி யம்பல கறங்கிட முறைமுறை பொறிகள்
சிந்தி யம்புறு கொடும்சிலை உரும்எனத் தெரிப்பார்
வந்தி யம்புறு முனிவர்க்கும் அமரர்க்கும் வலியார்
இந்தி யம்பகை ஆயவை ஐந்தும்ஒத் திசைந்தார். 5735

கஎ வாச வன்வயக் குலிசமும் வருணன்வன் கயிறும்
ஏசில் தென்திசைக் கிழவன்தன் அயில்முனை எழுவும்
ஈசன் வன்தனிச் சூலமும் என்றிவை ஒன்றும்
ஊசி போல்வதோர் வடுச்செயா நெடும்புயம் உடையார்.

கஅ சூர்த டிந்தவன் மயிலிடைப் பறித்தவன் தோகை
பார்ப யந்தவன் அன்னத்தின் இடையிடைப் பறித்த
மூரி வெம்சிலை இடையிடுத் தொடுத்தன முறுக்கி
வீர சூடிகை கயிறிட்டு நெற்றியின் விசித்தார். 5737

கசு பொன் திணிந்ததோள் இராவணன் மார்பொடும் பொருத
அன்றி முந்தகோ டரிந்திடும் அழகுறு குழையார்
நின்ற வன்திசை நெடுங்களி யானையின் நெற்றி
மின்தி ணிந்தன ஓடையின் வீரப்பட் டத்தார். 5738

உ0 *நிதிநெடும் கிழவனை நெருக்கி நீள்நகர்ப்
பதியொடும் பெருந்திருப் பறித்த பண்டைநாள்
விதியொடும் அன்னவன் இழிந்து வென்னிடப்
பொதியொடும் வாரிய பொலன்கொள் பூணினர். 5739

உக இந்திரன் இசைஇழந் தேகு வான்இகல்
தந்திமுன கடாவினன் முடுகத் தாமதன்
மந்தர வாலடி பிடித்து வல்லையேல்
உந்துதி நீஎன வலித்த ஊற்றத்தார். 5740

உஉ பால்நிறத் தந்தணன் பணியி னல்வரும்
கோன்நினைத் திலன்என உலகம் கூறலும்
நீல்நிறத் திராவணன் முனிவு நீக்குமான்
கால்நிறக் காலனைக் கையில் கட்டினர் 5741

௨௩ தோல்கிளர் திசைதொறும் உலகைச் சுற்றிய
சால்கிளர் முழங்கெரி தழங்கி ஏறினும்
கால்கிளர்ந் தடிப்பினும் காலம் கையுற
மால்கடல் கிளரினும் சரிக்கும் வன்மையார். 5742

௨௪ மலைகளை நகும்நெடும் மார்பர் மாகடல்
அலைகளை நகும்நெடும் தோளர் அந்தகன்
கொலைகளை நகும்நெடும் கொலையர் கொல்லனூ
துலைகளை நகும்அனல் உமிழும் கண்ணினர். 5743

௨௫ இவ்வகை ஐவரும் எழுந்த தானையர்
மொய்கிளர் தோரணம் அதனை முற்றினர்
கையொடு கைஉற அணியும் கட்டினர்
அய்யனும் அவர்நிலை அமைய நோக்கினன். 5744

௨௬ அரக்கர்தம் ஆற்றலும் அளவில் சேனையின்
தருக்கும்அம் மாருதி தனிமைத் தன்மையும்
பொருக்கென நோக்கிய புரந்த ராதியர்.
இரக்கமும் அவலமும் துளக்கும் எய்தினர் 5745

௨௭ இற்றனர் அரக்கர்இப் பகலு ளேயெனக்
கற்றுணர் மாருதி களிக்கும் சிந்தையான்
முற்றுறச் சுலாவிய முடிவில் தானையைச்
சுற்றுற நோக்கித்தன் தோளை நோக்கினன். 5746

௨௮ புன்தலைக் குரங்கிது போலு மால்அமர்
வென்றது விண்ணவர் புகழை வேரொடும்
தின்றவல் அரக்கரைத் தீர்த்த தன்றதால்
என்றனர் அயிர்த்தனர் நிருதர் எண்ணிலார். 5747

௨௯ ஆயிடை அனுமனு அமரர் கோன்நகர்
வாயின்நின் றிவ்வழி கொணர்ந்து வைத்தமாச்
சேய்ஒளித் தோரணத் தூம்பர்ச் சேணெடு
மீஉயர் விசும்பையும் கடக்க வீங்கினன். 5748

௩௰ வீங்கிய வீரனை வியந்து நோக்கிய
தீங்குடை அரக்கரும் திருகி னர்சினம்
வாங்கினர் வரிசிலை வழங்கி னர்படை
ஏங்கின சங்கம்நின் றிடித்த பேரியே. 5749

௫௧ எறிந்தனர் எய்தனர் எண்ணி றந்தன
பொறிந்தெழு படைக்கலம் அரக்கர் போக்கினார்
செறிந்தன மயிர்ப்புறம் தினவு தீர்தரச்
சொறிந்தன எனஇருந் தனுமன் தாங்கினான். 5750

௫௨ உற்றுடன் அரக்கரும் உருத்து உடன்றனர்
செற்றுற நெருக்கினர் செருக்கும் சிந்தையார்
மற்றையர் வருடாரி சிவரை வல்விரைந்
தெற்றுவன் எனஎழுந் தனுமன் எய்தினான். 5751

௫௩ ஊக்கிய படைகளும் உருத்த வீரரும்
தாக்கிய பரிகளும் தடுத்த தேர்களும்
மேக்குயர் கொடிஉடை மேக மாலைபோல்
தூக்கிய கரிகளும் புரள நூறினான். 5752

௫௪ வார்மதக் கரிகளின் கோடு வாங்கிமாத்
தேர்படப் புடைக்கும்அத் தேரின் சில்லியால்
வீரரை உருட்டும்அவ் வீரர் வாளினால்
தாருடைப் புரவியைத் துணியத் தாக்குமால். 5753

௫௫ இரண்டுதேர் இரண்டுகைத் தலமும் ஏந்திவே
றிரண்டுபால் வரும்பெரும் கரியை எற்றிவே
றிரண்டுமால் யானைகை இரண்டும் ஏந்திவே
றிரண்டுமா வினும்வரும் பரியை எற்றுமால். 5754

௫௬ மாஇரு நெடுவரை வாங்கி மண்ணில்இட்
டாயிரம் தேர்பட அரைக்கு மால்அழித்
தாயிரம் களிற்றைஓர் மரத்தினால் அடித்
தேயெனும் மாத்திரத் தெற்றி முற்றுமால். 5755

௫௭ விசையின்மான் தேர்களும் களிறும் விட்டகன்
றிசையும்ஆ காசமும் சிதையச் சிந்துமால்
குசைகொள்பாய் பரியொடும் கொற்ற வேலொடும்
பிசையும்ஆல் அரக்கரைப் பெரும் கரங்களால். 5756

௫௮ உதைக்கும்வெங் கரிகளை உழக்கும் தேர்களை
மிதிக்கும்வன் புரவியைத் தேய்க்கும் வீரரை
அதுக்கும்வல் எழுவினால் அரைக்கும் விண்ணிடைக்
குதிக்கும்வன் தலைகளைக் கடிக்கும் குத்துமால். 5757

௩௯ தீஉறு பொறிஉடைச் செங்கண் வேங்கைமா
மீஉறத் தடக்கையால் வீரன் வீசுதோ
றுய்ப்பெருங் கொடியன கடலில் ஆழ்வன
பாய்உடை நெடும்கலம் படிவ போன்றவே. 5758

௪0 தாரொடு பொருதன தடக்கை யால்தனி
வீரன்விட் டெறிந்தன கடலின் வீழ்வன
வாரியின் எழுசுடர்க் கடவுள் வானவன்
தேரினை நிகர்த்தன புரவித் தேர்களே. 5759

௪௧ மீயுறு விண்ணினை முட்டி வீழ்வன
வாய்பெரும் திரைக்கடல் அழுவத் தாழ்வன
ஓய்வில புரவிகள் உதிரம் கால்வன
வாயிடை எரிஉடை வடவை போன்றவே. 5760

௪௨ வரிந்துற வல்விதில் சுற்றி வாலினால்
விரிந்துற வீசலில் கடலின் வீழ்ந்தவர்
திரிந்தனர் செறிகயிற் றரவி னால்திரி
அருந்திறல் மந்தரம் அனையர் ஆயினார். 5761

௪௩ வீரனவன் தடத்கையால் எடுத்து வீசிய
வார்மதக் களிற்றினில் தேரில் வாசியில்
மூரிவெம் கடல்புகக் கடிது முந்தின
ஊரில்வெம் குறிதியா றிரைப்ப ஓடின. 5762

௪௪ பிறைக்கடை எயிற்றின பிலத்தின் வாயின
கறைப்புனல் பொறிகளோ டுமிழுங் கண்ணின
உறைப்புறு படையின உதிர யாக்கைகள்
மறைத்தன மகரதோ ரணத்தை வான்உற. 5763

௪௫ குன்றுள மரம்உள குலங்கொள் பேர் எழு
ஒன்றல பலஉள உயிர்உண் பான்உளன்
அன்றினர் பலர்உளர் ஐயன் கையினில்
பொன்றுவ தல்லது புறத்துப் போவரோ. 5764

௪௬ முழுமுதல் கண்நுதல் முருகன் தாதைகை
மழுஎனப் பொலிந் தொளிர் வயிர வான்தனி
எழுவினில் பொலன்கழல் அரக்கர் ஈண்டிய
குருவினைக் கரிஎனக் கொன்று நீக்கினான். 5765

ORIENTAL 20 FEB MAD

சஎ *உலந்தது தானை உவந்தனர் உம்பர்
அலந்தலை உற்றது வாழி இலங்கை
கலந்த தழங்குரல் கண்டனர் நின்ற
வலந்தரு தோளவர் ஐவரும் வந்தார். 5766

சஅ ஈர்த்தெழு செம்புனல் எக்கர் இழுக்கத்
தேர்துணை ஆழி அழுத்தினர் சென்றார்
ஆர்த்தனர் ஆயிரம் ஆயிரம் அம்பால்
தூர்த்தனர் அஞ்சனை தோன்றலை என்றார். 5767

சகூ எய்த கடுங்கணை யாவையும் எய்தா
நொய்தக லும்படி கைகளின் நூறாப்
பொய்தக டொன்று பொருந்தி நெடுந்தேர்
செய்தக டும்பொறி ஒன்றுசி தைத்தான். 5768

ரு0 உற்றுறு தேர்சிதை யாமுன் உயர்ந்தான்
முற்றின வீரனை வானின் முனிந்தான்
பொற்றிரள் நீள்எழு ஒன்று பொறுத்தான்
எற்றினன் அஃதவன் வில்லினில் ஏற்றான். 5769

ருக முறிந்தது மூரிவில் அம்முறி யேகொண்
டெறிந்த அரக்கன்ஓர் வெற்பை எடுத்தான்
அறிந்த மனத்தவன் அந்தஎழுக் கொண்
டெறிந்த அரக்கனை இன்உயிர் உண்டான். 5770

ருஉ ஒழிந்தன நால்வரும் ஊழி உருத்த
கொழுந்துறு தீயென வெஞ்சிலை கோவாப்
பொழிந்தனர் வாளி புகைந்தன கண்கள்
விழுந்தன சோரிகள் வீரன் மணித்தோள். 5771

ருங ஆயிடை வீரனும் உள்ளம் அழன்றான்
மாய அரக்கர் வலத்தை உணர்ந்தான்
மீளரி ஒப்பதோர் கல்செல விட்டான்
தீயவர் அச்சிலை யைப்பொடி செய்தார். 5772

ருச தொடுத்த தொடுத்த சரங்கள் துரந்த
அடுத்தன மார்பி லழுந்தவ னந்த
மிடல்தொழி லான்விடு தேரொடும் எய்தி
எடுத்தொரு வன்தனை விண்ணில் எறிந்தான். 5773

௫௫ ஏய்ந்தெழு தேரும் விண்ணினை எல்லாம்
நீந்திய தோடி நிமிர்ந்தது வேகம்
ஓய்ந்தது வீழ்வதன் முன்உயர் பாரில்
பாய்ந்தவன் மேல்உடன் மாருதி பாய்ந்தான். 5774

௫௬ மதித்த கணிற்றினில் வாள்அரி ஏறு
கதித்தது பாய்வது போல்கதி கொண்டு
குதித்தவன் மால்வரைத் தோள்கள் குழம்ப
மிதித்தனன் வெஞ்சின வீரருன் வீரன். 5775

௫௭ மூண்ட சினத்தினர் மூவர் முனிந்தார்
தூண்டிய தேரர் சரங்கள் துரந்தார்
வேண்டின வெம்சமம் வேறு விளைப்பார்
ஈண்டினி தேகுவ தென்றெதிர் சென்றார். 5776

௫௮ திரண்டுயர் தோள்இணை அஞ்சனை சிங்கம்
மருண்டு விசும்புறை வோர்களும் அஞ்ச
முரண்தரு தேர்அவை ஆண்டொரு மூன்றில்
இரண்டை இரண்டுகை யிற்கொ டெழுந்தான். 5777

௫௯ தூங்கிய பாய்பரி சூதர் உலைந்தார்
வீங்கிய தோளவர் விண்ணில் விசைத்தார்
ஆங்கது கண்டவர் போய்அக லாமுன்
ஓங்கினன் மாருதி ஒல்லையில் உற்றான். 5778

௬௦ கால்நிமிர் வெம்சிலை கையின் இறுத்தான்
ஆனவர் தூணியும் அம்பும் இறுத்தான்
ஏனைய வெம்படை இல்லவர் எஞ்சார்
வானிடை நின்றுயர் மல்லின் மலைந்தார். 5779

௬௧ வெள்ளை எயிற்றர் கறுத்துயர் மெய்யர்
பிள்ள விரித்த பிலப்பெரு வாயர்
கொள்ள உருத்தடர் கோள்அர வொத்தார்
ஒள்இகல் வீரன் அருக்கனை ஒத்தான். 5780

௬௨ தாம்பென வாலின் வரிந்துயர் தாளோ
டேம்பல்இ லாஇரு தோள்கள் இறுத்தான்
பாம்பென நீங்கினர் பட்டனர் வீழ்ந்தார்
ஆம்பல் நெடும்பகை போல்பவன் நின்றான். 5781

சுங நின்றவன் ஏனையன் நின்றது கண்டான்
குன்றிடை வாவுறு கோள்அரி போல
மின்திரி வன்தலை மீதுகு தித்தான்
பொன்றிய வன்புவி தேரொடு புக்கான். 5782

சுச *வஞ்சமும் களவும் வெஃகி வழிஅலா வழிமேல் ஓடி
நஞ்சினும் கொடியர்ஆகி நவைசெயற் குரிய நீரார்
பைங்கழல் அரக்கர்ஐவர் ஒருவனே வெல்லப்பட்டார்
ஐம்பெரும் பூதம்ஒத்தார் அனுமன்நல் அறிவைஒத்தான்.

சுரு நெய்தலை உற்ற வேல்கை நிருதர்அச் செருவில் நேர்ந்தார்
உய்தலை உற்று மீண்டார் ஒருவரும் இல்லை உள்ளார்
கைதலைப் பூசல் பொங்கக் கடுகினர் காலன் உட்கும்
ஐவரும் உலந்த தன்மை அனைவரும் அமையக் கண்டார்.

சுசு இறுக்குறும் இன்றே நம்மை இக்குரங் கென்ன ஏங்கி
மறுக்குறு கின்ற நெஞ்சின் மாதரை வைது நோக்கி
உறுக்குறு சொல்லான் ஊழித் தீஎன உலகம் ஏழும்
சுறுக்குற நோக்கு வான்தன் செவித்துளை தீயச்சொன்னார்.

சுஎ தானையும் உலந்த தைய தலைவரும் சமைந்தார் தாக்கப்
போனபின் னொடியாரும் எய்தும்போர் புரிகி லாமை
வானையும் வென்று ளோரை வல்லையின் மடிய நூறி
ஏனையர் இன்மை சோம்பி இருந்ததக் குரக்கும் என்றார்.

கக. பஞ்சசேனபதி வதைப் படலம் முற்றும்.

கஉ. அக்க குமாரன் வதைப் படலம்

க கேட்டலும் வெகுளி வெந்தீக் கிளர்ந்தெழ அலங்கன் மார்பில்
தோட்டலர் தெரியல் மாலை வண்டொடும் சுருக்கொண் டேற
ஊட்டரக் குண்ட போலும் நயனத்தான் ஒருப்பட் டானைத்
தாட்டுணைத் தொழுதா மைந்தன் தடுத்திடை தருதி என்றான்.

உ முக்கணன் ஊர்தி அன்றே மூஉல கடியில் தாயோன்
ஒக்கஊர் பறவை அன்றே அவன்துயில் உரகம் அன்றே
திக்கயம் அல்ல ஆகில் குரங்கின்மேல் சேறி போலாம்
இப்பணி அடியேற் கீய்தி இருத்திஎண் டினிதின் எந்தாய்.

௩ அண்டர்கோன் தன்னைப்பற்றித் தருகென அடியேன் நிற்கக்
கொண்டனை எம்முன் தன்னைப் பணிஎன நெஞ்சம்கொண்ட
துண்டது தீரும் அன்றே உரன்இலாக் குரங்கொன் றேனும்
எண்திசை வென்ற நீயே ஏவுதி என்னை என்றான். 5789

௪ கொய்தளிர் கோதும் வாழ்க்கை கோடரத் துருவங் கொண்டு
கைதவம் கண்ணி ஈண்டோர் சிறுபழி இழைக்கும் கற்பால்
எய்தினன் இமையா முக்கண் ஈசனே என்ற போதும்
நொய்தினில் வென்றுபற்றித் தருகுவன் நொடியின் நின்பால்

௫ துண்டத்தூண் அகத்துத்தோன்றும் கோளரி சுடர்வெண்கோட்டு
மண்டொத்த நிமிர்ந்த பன்றி ஆயினும் மலைந்த போதிவ்
வண்டத்தைக் கடந்து பொங்கி அப்புறம் போகில் என்பால்
தண்டத்தை இடுநீ அன்றே நின்வயிற் றந்தி லேனேல். 5791

௬ எனஇவை இயம்பி ஈய்தி விடைஎன இறைஞ்சி நின்ற
வனைகழல் வயிரத் திண்தோள் மைந்தனை மகிழ்ந்துநோக்கித்
துனைபரித் தேரின் ஏறிச் சேறிஎன் றினைய சொன்னான்
புனைமணித் தாரி னானும் போர்அணி அணிந்து போனான்.

௭ ஏறினன் என்ப மன்னோ இந்திரன் இகலில் இட்ட
நூறொடு நூறு பூண்ட நொறில்வயப் புரவி நோன்தேர்
கூறினர் அரக்கர் ஆசி குமுறின முரசக் கொண்மூ
ஊறின உரவுத் தானை ஊழிபேர் கடலை ஒப்ப. 5793

௮ பொருகடல் மகரம் எண்ணில் எண்ணலாம் பூழ்க்கை பொங்கித்
திரிவன மீன்கள் எண்ணில் எண்ணலாம் செம்பொற் றிண்தேர்
உருவுரு மணலை எண்ணில் எண்ணலாம் உரவுத் தானை
வருதிரை மரபின் எண்ணில் எண்ணலாம் வரவும் வாசி.

௯ ஆயிரண் டடுத்த எண்ணில் ஆயிரம் குமரர் ஆவி
வேறிலாத் தோழர் வென்றி அரக்கர்தம் வேந்தர் மைந்தர்
ஏறிய தேரர் சூழ்ந்தார் இறுதியின் யாவும் உண்பான்
சீறிய காலத் தீயின் செறிசுடர்ச் சிகைகள் அன்னார். 5795

௧௦ மந்திரக் கிழவர் மைந்தர் மதிநெறி அமைச்சர் மக்கள்
தந்திரத் தலைவர் ஈன்ற தனையர்கள் பிறரும் காதைக்
கந்தரத் தரம்பை மாரில் தோன்றின ராதி ஆனோர்
எந்திரத் தேரர் வந்தார் ஈரிரண் டிலக்க வீரர். 5796

கக தோமரம் உலக்கை சூலம் சுடர்மழுக் குலிசம் தோட்டி
ஏமரும் வரிவில் வேல்கோல் ஈட்டிவாள் எழுவிட் டேறு
மாமரம் வீசு பாசம் வளைஅயில் வயிரத் தண்டு
காமரு கணைஅம் குந்தம் கப்பணம் கால நேமி. 5797

கஉ என்றிவை முதல ஆய எழில்திகழ் படைகள் ஈண்டி
மின்திரண் டனைய ஆகி வெயிலொடு நிலவும் வீசத்
துன்றிரும் தூளி பொங்கித் துறுதலால் இறுதி செல்லாப்
பொன்திணி உலகம் ஆன பூதலம் எவையும் மாதோ. 5798

கங காகமும் கழுகும் பேயும் காலனும் கணக்கில் காலம்
சேகற வினையில் செய்த தீமையும் தொடர்ந்து செல்லப்
பாகுறுகிளவிச்செவ்வாய்ப் படைவிழிபணைத்தவேய்த்தோள்
தோகையர் மனமும் தொங்கல் தும்பியும் தொடர்ந்து சுற்ற.

கச உழைக்குலம் நோக்கினார்கள் உலந்தவர்க் குரிய மாதர்
அழைத்தெழு குரலின் வேலை அமலையின் அரவச் சேனை
தழைத்தெழும் ஒலியின் ஓசை பல்லியம் துவைக்கும்தாவின்
மழைக்குரல் இடியின் சொன்ன மாற்றங்கள் ஒழிப்பப் போனார்.

கரு வெயிற்கதிர் மணிகள்வீச விரிகதிர் விழுங்க வெய்ய
அயிற்கரம் மணிகள் கான்ற அவிர்ஒளி பருக வெள்கும்
எயிற்றிளம் பிறைகள் ஈன்ற இலங்கொளி பொங்க யாணர்த்
துயிற்குல விரவும் அன்று பகல்அன்றென் றுணர்தல் தோன்றா.

கசு ஓங்கிரும் தடந்தேர் பூண்ட உளைவயப் புரவி ஒல்கித்
தூங்கின வீரர் தோளும் கண்களும் இடத்தில் துள்ள
வீங்கின மேகம் எங்கும் குருதிநீர் துள்ளி வீழ்ப்ப
ஏங்கின காகம் ஆர்ப்ப இருளில்விண் இடிப்ப மாதோ. 5802

கஎ வெள்ளவெம் சேனை சூழ விண்உளோர் வெருவி விம்ம
உள்ளம்நொந் தனுங்கி வெய்ய கூற்றமும் உறுவ துன்னத்
துள்ளின சுழல்கட் பல்பேய் தோள்புடைத் தார்ப்பத் தோன்றும்
கள்அவிழ் அலங்க லானைக் காற்றின்சேய் வரவு கண்டான். 5803

கஅ இந்திர செயித்தோ மற்றத இராவணன் தானோ என்னச்
சிந்தையின் உவகை தோன்ற முனிவுற்ற குரக்குச் சீயம்
வந்தன முடிந்த தன்றோ மனக்கருத் தென்ன வாழ்த்திச்
சுந்தரத் தோளை நோக்கி இராமனை வாழ்த்திச் சொன்னான்.

கசு எண்ணிய இருவர் தம்முள் ஒருவனேல் யான்முன் செய்த
புண்ணியம் உளதாம் எங்கோன் தவத்தொடும் பொருந்தி றானே
நண்ணிய நானும் நின்றேன் காலனும் அமைந்து நின்றான்
கண்ணிய கருமம் இன்றே முற்றுவன் கடிதின் என்றான்.

உ0 பழியில துருவன் றானும் பண்பிலே அரக்கன் அல்லன்
விழிகள்ஆயிரமும் கொண்ட வேந்தைவென் றானும் அல்லன்
மொழியின்மற் றவர்க்கு மேலான் முரட்டொழில் முருகன்அல்லன்
அழிவில்வெம் குமரன் ஆரோ அஞ்சனக் குன்றம் அன்னான். 5806

உக என்றவன் உவந்து விண்தோய் இந்திர சாபம் என்ன
நின்றதோ ரணத்தின் உம்பர் இருந்ததோர் நீதி யானை
வன்தொழில் அரக்கன் நோக்கி வாள்எயி றிலங்க நக்கான்
கொன்றதிக் குரங்கு போலாம் அரக்கர்தம் குழாத்தை என்றான்.

உஉ அன்னதாம் நகுசொல் கேட்ட சாரதி ஐய கேண்மோ
இன்னதாம் என்னல் ஆமோ உலகியல் இகழல் அம்மா
மன்னனோ டெதிர்ந்த வாலி குரங்கென்றால் மற்றும்உண்டோ
சொன்னது துணிவில் கொண்டு சேறிஎன் றுணரச் சொன்னான்.

உங விடம்திரண் டனைய மெய்யான் அவ்வுரை விளம்பக் கேளா
இடம்புகுந் தினைய செய்த இதனொடும் சீற்றம் எஞ்சத்
தொடர்ந்துசென் றுலகம் மூன்றும் துருவினன் ஒழிவு றாமல்
கடந்துபின் குரங்கென் றோதும் கருவையும் களைவன் என்றான்

உச ஆர்த்தெழுந் தரக்கர் சேனை அஞ்சனைக் குரிய குன்றைப்
போர்த்தது பொழிந்த தம்மா பொருபடைப் பருவ மாரி
வேர்த்தனர் திசைகாப் பாளர் சலித்தது விண்ணும்மண்ணும்
தார்த்தனி வீரன் தானும் தனிமையும் வரமேல் சார்ந்தான்.

உரு எறிந்தனர் நிருதர் வெய்தின் எய்தன படைகள் யாவும்
முறிந்தன வீரன் மேனி முட்டின மொகர யானை
மறிந்தன மடிந்த தேரும் வாவுமாக் குழுவும் ஆவி
பிறிந்தன வரம்பில் யாக்கை இலங்கைதன் நிலையில் பேர.

உசு காயெரி முனிபுல் கானைக் கலந்தெனக் காற்றின் செம்மல்
ஏயெனும் அளவில் கொல்லும் நிருதர்க்கோர் எல்லை இல்லை
போய்வரும் உயிரும் போகித் தென்புலம் படர்தல் பொய்யா
ஆயிர கோடி தூதர் உளர்கொலோ நமனுக் கம்மா.

உஎ வரவுற்றார் வாரா நின்றார் வந்தவர் வரம்பில் வெம்போர்
பொரஉற்ற பொழுது வீரன் மும்மடங் காற்றல் பொங்கி
இரவிப்பேர்க் கதிரோன் ஊழி இறுதியின் என்னல் ஆனான்
உரவுத்தோள் அரக்கர் எல்லாம் என்பிலா உயிர்கள் ஒத்தார்.

உஅ *பிள்ளப் பட்டது நுதலோடைக்கரிபிறழ்பொற்றேர்பரிபிழையாமல்
அள்ளற் பட்டழி குருதிப் பொருபுனல் ஆறு கப்படி சேறாக
வள்ளற் பட்டன மகரக் கடல்என மதில்சுற்றியபதி மறலிக்கே
கொள்ளபட்டுள துயிர்என்னும்படிகொன்றான்ஐம்புலன்வென்றானே.

உகூ தேரேபட்டன என்றார்சிலர்சிலர் தெறுகட்செம்முக வயிரத்தோள்
பேரேபட்டன என்றார்சிலர்சிலர் பரியேபட்டன பெரிதென்றார்
காரேபட்டன நுதலோடைக்கட கரியேபட்டன கடிதென்றார்
நேரேபட்டவர் மாடே பட்டனர் நில்லாஉயிர்கொடு நின்றாரே, 5815

௩0 ஆழிப்பொருபடைநிருதப்பெருவலி அடலோராய்மகள் அடுபேழ்வாய்த்
தாழிப் படுதயிர்ஒத்தான்மாருதிதனிமத்தென்பதோர் தகையானான்
ஏழ்இப்புவனமும்இடைவாழ்உயிர்களும்எறிவேல்இளையவர்இனமாக
ஊழிப்பெயர்வதொர்புனல்ஒத்தான்அனல்ஒத்தான்மாருதம்ஒத்தானே

கொன்றான்உடன்வருகுழுவைச்சிலர்பலர்திசைநின்றுருடல்குலைகின்றார்
பின்றாநின்றனர் உதிரப்பெருநதி பெருகாநின்றனர் அருகாக
நின்றார் நின்றிலர் தனிநின்றான்ஒரு நேமித் தேரொடும் அவர்நேரே
சென்றான்வன்திறல்அயில்வாய்அம்புகள்தெரிகின்றான்விழி எரிகின்றான்.

௩உ உற்றான் இந்திர சித்துக் கிளையவன் ஒருநாளேபலர்உயிர்உண்ணக்
கற்றானும்முகம்எதிர்வைத்தான்அதுகண்டார்விண்ணவர்கசிவுற்றார்
எற்றேமாருதி நிலைஎன்பார்இனி இமையாவிழியிணை இவைஒன்றே
பெற்றேம்நல்லதுபெற்றேம்என்றனர்பிரியாதெதிரெதிர்செறிகின்றார்.

௩௩ எய்தான்வாளிகள்எரிவாய்உமிழ்வனஈரேழ்எதிர்எதிர்அவைசோரப்
பொய்தான்மணிஎழுஒன்றால்அன்றது பொடியாய்உதிர்வுறவடிவாளி
வெய்தாயினபல விட்டான்வீரனும் வேறோர்படைஇலன் மாறுவெம்
கைதானேஒரு படையாகத்தொடர்காலார்தேர்அதன் மேல்ஆனான்.

தேரில்சென்றதுகால்கொள்வான்உயிர்தின்றானப்பொருசெரிதிண்தேர்
பாரில்சென்றதுபரிபட்டனவவன்வரிவில்சிந்தியபகழிககோல்
மார்பில்சென்றனசிலபொற்றோளிடைமறைவுற்றனசிலமறவோனும்
நேரில்சென்றவன்வயிரக்குனிசிலைபற்றிக்கொண்டெதிர்உறநின்றான்.

௩௫ ஒருகை யால்அவன் வயிரச்சிலையினை உற்றுப்பற்றலும் உரவோனும்
இருகையால்எதிர்வலியாமுன்னமதிற்றேருடியதிவர் பொற்றோளான்
சுருகைவாள்எதிர்உருவிக்குத்தலும்அதனைச்சொற்கொடுவருதூதன்
பொருகையால்எதிர்பிதிர்வித்தான்முதிர் பொறியோடும்படிபறியாவே.

௩௬ வாளாலேபொர உற்றானிற்றது மண்சேர்வதனின்முன்வயிரத்திண்
தோளாலேபொர முடுகிப்புக்கிடை தழுவிக்கொண்டலும் உடல்சுற்றும்
நீளார்அயில்என மயிர்தைத்தனமணி நெடுவால் அவனுடல் நிமிர்வுற்று
மீளாவகைபுடைசுற்றிக்கொண்டதுபற்றிக்கொண்டனன்மேல்ஆனான்.

௩௭ பற்றிக்கொண்டவன்வடிவாள்எனஒளிர்பல்இற்றுகநிமிர் படர்கையால்
எற்றிகொண்டனன்இடைநின்றுமிழ்சுடர் மின்னின் இனம்விழுவன என்ன
முற்றிக் குண்டலம் முதலா மணியுக முழைநாலாஇவர் குடர்நாலக்
கொற்றத்திண்சுடர்வயிரக்கைகொடுகுத்திப்புடைஒருகுதிகொண்டான்.

௩௮ நீத்தாய் ஓடின உதிரப் பெருநதி நீரா கச்சிலை பாராகப்
போய்த்தாழ்செறிதசை அரிசிந்தினபடிபொங்கப்போம்உயிர்போகாமல்
மீய்த்தானிமிர்சுடர் வயிரக்கைகொடு பிடியாமண்ணொடு விண்காணத்
தேய்த்தான்ஊழியொ டுலசேழ்தேயினும் ஒருதன்புகழ்இறைதேயாதான்.

புண்தாழ்குருதியின்வெள்ளத்துயிர்கொடுபுக்கார்சிலர்சிலர்பொருபேயின்
பண்டாரத்திடைஇட்டார்தம்உடல்பட்டாரில்சிலபயமுந்தத்
திண்டாடித்திசைஅறியார்மறுகினர்சென்றார்சிலர்சிலர் செலவற்றார் [ர்
கண்டார்கண்டதொர்திசையேவிசைகொடுகால்விட்டார்படைகைவிட்டா

௪௦ மீனாய்வேலையைஉற்றார்சிலர்சிலர்பசுவாய்வழிதொறும் மேய்வுற்றார்
ஊனார்பறவையின் வடிவானார்சிலர் சிலர்நான்மறையவர் உருவானார்
மானார்கண்இள மடவார்ஆய்இவன் முன்னேதங்குழல் வகிர்வுற்றார்
ஆனார் சிலர்சிலர் அய்யா நின்சரண் என்றார் நின்றவர் அரிஎன்றார்.

௪௧ தந்தாரமும்முதுகிளையும்தனைஎதிர்தழுவும்தொறும்நுமதமரல்லோம்
வந்தோம்வானரம்என்றேகினர்சிலர்சிலர்மானுயர்எனவாய்விட்டார்
மந்தாரம் கிளர் பொழில்வாய்வண்டுகள் ஆனார்சிலர்சிலர்மருள்கொண்டார்
இந்தார் எயிறுகள் இறுவித்தார்சிலர் எரிபோல்குஞ்சியை இருள்வித்தார்.

௪௨ * குண்டலக் குழைமுகக் குங்குமக் கொங்கையார்
வண்டலைத் தெழுகுழல் கற்றைகால் வருடவே
விண்டலத் தகவிரைக் குமுதவாய் விரிதலால்
அண்டமுற் றுளதவ் வூர் அமுதமேர் அமலையே. 5828

௪௩ கதிர்எழுந் தனையசெந் திருமுகக் கணவன்மார்
எதிர்எழுந் திடைவிழுந் தழுதுசோர் இளநலார்
அதிரவங் கோதைசேர் ஓதியோ டன்ற ஊர்
உதிரமும் தெரிகிலா திடைபரந் தொழுகியே. 5829

௪௪ தாவில்வெம் செருநிலத் திடைஉலந் தவர்தம்மேல்
ஓவியம் புரைநலார் விழுதொறும் சிலர்உயிர்த்
தேவுகண் களும்இமைத் தனர்களால் இவைஎலாம்
ஆவிஒன் றுடல்இரண் டாதலா லேகொலாம். 5830

௪௫ ஓடினார் உடல்களும் உயிர்கள்போல் உதவியால்
வீடினார் வீடினார் மிடல்உடற் குவைகள்வாய்
நாடினார் மடநலார் நவைஇலா நண்பரைக்
கூடினார் ஊடினார் உம்பர்வாழ் கொம்பனார். 5831

௪௬ நீட்டுவாள் அனையகண் தெரிவையோர் திருஅனாள்
ஆட்டம்நின் றயர்வதோர் அறுதலைக் குறையினைக்
கூட்டிநின் றார்உயிர்த் துணைவன்எம் கோனைநீ
காட்டுவாய் ஆதிஎன் றழுதுகை கூப்பினாள். 5832

௪௭ ஏந்தினாள் தலையை ஓர் எழுதுபூங் கொம்பனாள்
காந்தன்நின் றுடுவான் உயர்கவந் தத்தினை
வேந்தநீ அலசினாய் விடுதியால் நடம்எனாப்
பூந்தளிர்க் கையினால் மெய்யுறப் புல்லினாள். 5833

௪௮ *அவ்வகை கண்டவர் அமரர் யாவரும்
உய்வகை அரிதென ஓடி மன்னவன்
செவ்வடி அதன்மிசை வீழ்ந்து செப்பினார்
எவ்வகைப் பெரும்படை யாவும் மாய்ந்ததே. 5834

௪௯ கயன்மகிழ் கண்இணை கலுழி கான்றுகப்
புயன்மகிழ் புரிகுழல் பொடி அளாவுற
அயன்மகன் மகன்மகன் அடியில் வீழ்ந்தனள்
மயன்மகள் வயிறலைத் தலறி மாழ்கினாள். 5835

௫௰ தாவரும் திருநகர்த் தைய லார்முதல்
ஏவரும் இடைவிழுந் திரங்கி ஏங்கினார்
காவலன் கால்மிசை விழுந்து காவல்மாத்
தேவரும் அழுதனர் களிக்கும் சிந்தையார். 5836

கஉ. அக்ககுமாரன் வதைப்படலம் முற்றும்.

---

௧௩. பாசப் படலம்.

க அவ்வழி அவ்வுரை கேட்ட ஆண்தகை
வெவ்விழி எரிஉக வெகுளி வீங்கினான்
எவ்வழி உலகமும் குலைய இந்திரன்
தெவ்வழி தரஉயர் விசையச் செய்கையான். 5837

உ அரம்சுடு வேல்தன திளவல் இற்றசொல்
உரம்சுட வரிசிலை ஒன்று வாங்கினான்
புரம்சுட வரிசிலைப் பொருப்பு வாங்கிய
பரம்சுடர் ஒருவனைப் பொருவும் பான்மையான். 5938

௩ ஏறினன் விசும்பினுக் கெல்லை காட்டுவான்
ஆறிரு நூறுபேய் பூண்ட ஆழித்தேர்
கூறின கூறின சொற்கள் கோத்தலால்
பீறின நெடும்திசை பிளந்த தண்டமே. 5839

ச *ஆர்த்தன கழலும் தாரும் பேரியும் அசனி என்ன
வேர்த்துயிர் குலைய மேனி வெதும்பினன்அமரர் வேந்தன்
சீர்த்தது போரும் என்னாத் தேவர்க்கும் தேவர் ஆய
மூர்த்திகள் தாமும் தந்தம் யோகத்தின் முயற்சி விட்டார். 5840

ரு தம்பியை நினையும் தோறும் தாரைநீர் ததும்பும் கண்ணன்
வம்பியல் சிலையை நோக்கி வாய்மடித் துருத்து நக்கான்
கொம்பியல் மாய வாழ்க்கைக் குரங்கினாற் குரங்கா ஆற்றல்
எம்பியோ தேய்ந்தான் எந்தை புகழ்அன்றோ தேய்ந்தது என்றான்.

சா வேல்திரண் டனவும் வில்லு மிடைந்தவும் வெற்பென் றானும்
கூறிரண் டாக்கும் வாட்கைக் குழுவையும் குணித்தல் ஆற்றேன்
சேறிரண் டருகு செய்யும் செறிமதக் சிறுகண் யானை
ஆறிரண் டைந்து நூற்றின் இரட்டிதேர்த் தொகையும் அஃதே.

எ ஆயமாத் தானை தான்வந் தணவின தணவு தானைத்
தீயவாள் நிருதர் வேந்தர் சேர்ந்தவர் சோரத் தேரின்
ஏயெனும் அளவில் வந்தான் இராவணன் இருந்த யாணர்
வாயில்தோய் கோயில்புக்கான் அருவிசோர் வயிரக்கண்ணான்.

அ தாளிணை விழுந்தான் தம்பிக் கிரங்குவான் தறுகண்ணானும்
தோளிணை பற்றி ஏந்தித் தழுவினன் அழுது சோர்ந்தான்
வாளிணை நெடுங்கண் ணார்தம் வயிறலைத் தலறி மாழ்க
மீளிபோல் மொய்ம்பி னானும் விலக்கினான் விளம்பல் உற்றான்.

௯ ஒன்றுநீ உறுதி ஓராய் உற்றறிந் துளைய கிற்றி
வன்திறல் குரங்கின் ஆற்றல் மரபுநீ உணர்ந்து மன்னே
சென்றுநீர் பொருதிர் என்று திறத்திறம் செலுத்தித் தேயக்
கொன்றனை நீயே அன்றோ நிருதர்தம் குழுவை எல்லாம். 5845

௧0 சிங்கிரர் சம்பு மாலி கேடிலா ஐவர் என்றிப்
பைங்கழல் அரக்க ரோடும் உடன்சென்ற பகுதிச் சேனை
இங்கொரு பேரும் மீண்டார் இல்லையேல் குரங்க தெந்தாய்
சங்கரன் அயன்மால் என்போர் தாம்எனும் தரத்த தாமே.

௧௧ திக்கினை வென்ற மேலைத் திரிபுரம் தீயச் செற்ற
முக்கணான் வாளை வாங்கி உலகொரு மூன்றும் வென்றாய்
அக்கனைக் கொன்று நின்ற குரங்கினை ஆற்றல் காட்டிப்
புக்கினி வென்றும் என்றால் புலம்பன்றி புலமைத் தாமோ.

௧௨ ஆயினும் ஐய நொய்தின் ஆண்தொழில் குரங்கை யானே
ஏயெனும் அளவில் பற்றித் தருகுவன் இடர்என்றொன்று
நீயினை உழக்கற் பாலை அல்லைஈண் டிருத்தி என்று
போயினன் அமரர் கோனைப் புகழொடுங் கொண்டு போந்தான்.

௧௩ ஆழியுந் தேரும் மாவும் அரக்கரும் உருக்கும் செங்கண்
சூழிவெங் கோல மாவும் துன்றிய நிருதர் சேனை
ஊழிவெங் கடலில் சுற்ற ஒருதனி நடுவுண் நின்ற
பாழிமா மேரு ஒத்தான் வீரத்தின் பன்மை தீர்த்தான்.

௧௪ சென்றனன் என்ப மன்னோ திசைகளோ டுலகம் எல்லாம்
வென்றவன் இவன்என் றாலும் விருந்தென நின்ற வீரன்
அன்றது கண்ட ஆழி அனுமனும் அமரின் ஆற்றல்
நன்றென உவகை கொண்டான் யாவரும் நடுக்கம் கொண்டார்.

௧௫ இலைகுலாம் பூணி னான்அவ் இரும்பிணக் குருதி ஏற்ற
அலகில் வெம் படைகள் தெற்றி அளவிடற் கரியதாகி
மலைகளும் கடலும் யாறும் கானமும் பெற்று மற்றோர்
உலகமே ஒத்த தம்மா போர்ப்பெரும் களம்என் றன்னோ.

௧௬ வெப்படை கில்லா நெஞ்சில்சிறியதோர் விம்மல்கொண்டான்
அப்படை வேலை அன்ன பெருமையார் ஆற்ற லோடும்
ஒப்படை கில்லார் எல்லாம் உலந்தனர் குரங்கும் ஒன்றே
எப்படை கொண்டு வெல்வதிரா.மன்வந்தெதிர்க்கில்என்றான்.

௧௭ கண்ணனார் உயிரை ஒப்பாங் கைப்படை கருத்தின் மிக்கார்
எண்ணலாம் தகையர் அல்லர் இறந்தெதிர் கிடந்தார் தம்மை
மண்ணுளே நோக்கி நோக்கி வாய்மடித் துயிர்த்தான் மாயாப்
புண்ணுள்ளே கோலிட் டன்ன மானத்தான் புழுங்கு கின்றான்.

௧௮ கான்இடை அத்தைக் குற்ற குற்றமும் கரனார் பாடும்
யான்உடை எம்பி வீய்ந்த இடுக்கணும் பிறவும் எல்லாம்
மானிடர் இருவ ராலும் வானரம் ஒன்றி னாலும்
ஆனதே உளஎன் வீரம் அழகிற்றே அம்ம என்றான். 5854

௧௯ நீர்ப்புண்ட உதிர வாரி நெடுந்திரைப் புணரி தோன்ற
வீர்ப்புண்டற் கரிய வாய பிணக்குவ டிடறிச் செல்வான்
தேய்ப்புண்ட தம்பி யாக்கை சிவப்புண்ட கண்கள் தீயில்
காய்ப்புண்ட செம்பில் தோன்ற கருப்புண்ட மனத்தன் கண்டான்.

௨௦ தாருகன் குருதி அன்ன குருதியில் தனிமாச் சீயம்
கூர்உகிர் வாய்ந்த கொற்றக் கனகன்மெய்க் குழம்பில் தோன்றத்
தேர்உகக் கால்தள் ளாடச் சிலைநெக வயிரச் செங்கண்
நீர்உகக் குருதி சிந்த நெருப்புக உயிர்த்து நின்றான். 5856

௨௧ வெவ்இலை அயில்வேல் உந்தை வெம்மையைக் கருதி ஆவி
வவ்வுதல் கூற்றும் ஆற்றா மாறுமா றுலகில் வாழ்வார்
அவ்வுல கத்து ளோரேல் அஞ்சுவர் ஒளிக்க ஐயா
வெவ்வுல கத்தை உற்றாய் எம்மைநீத் தெளிதின் எந்தாய்.

௨௨ ஆற்றலன் ஆகி அன்பால் அறிவழிந் தயரும் வேலைச்
சீற்றம்என் றொன்று தானே மேல்நிமிர் செலவிற் றாகித்
தோற்றிய துன்ப நோயை உள்ளுறத் துரந்த தம்மா
ஏற்றம்சால் ஆணிக்காணி எதிர்செலக் கடாயதென்ன. 5858

௨௩ *ஈண்டிது நிகழ்வுழி இரவி தேர்எனத்
தூண்டிய தேரின்மேல் தொன்றும் தோன்றலை
மூண்டுமுப் புரம்சுட முடுகும் ஈசனில்
ஆண்டகை வனைகழல் அநுமன் நோக்கினான். 5859

௨௪ *வென்றேன் இதன்முன் சிலவீரரை என்னும் மெய்மை
அன்றே முடுகிக் கடிதெய்தி யழைத்த தம்மா
ஒன்றே இனிவெல் லுதல்தோற் றலடுப் பதுள்ள
தின்றே சமையும் இவன்இந் திரசித்து என்பான். 5860

௨௫ கட்டேறு நறுங்கமழ் கண்ணியிக் காளை என்கைப்
பட்டால் அதுவேய இராவணன் பாடும் ஆகும்
கெட்டேம் எனஎண் ணியக் கேடறு கற்பினாளை
விட்டேகு வதன்றி அரக்கரும் வெம்மை தீர்வார். 5861

௨௬ ஒன்றே இவனால்வரும் ஊதியம் ஒண்மை யானைக்
கொன்றேன் எனில்இந் திரனும்துயர்க் கோளும் நீங்கும்
இன்றே குடிகெட் டதரக்கர் இலங்கை மூதூர்
வென்றேன்அ இராவணன் தன்னையும் வேரோ டென்றான்.

௨௭ அக்காலை அரக்கரும் ஆனையும் தேரும் மாவும்
முக்கால் உலகம்ஒரு மூன்றையும் வென்று முற்றிப்
புக்கா னின்முன்புக் குயர்பூசல் பெருக்கும் வேலை
மிக்கா னும்வெகுண் டொர்மராமரம் கொண்டு புக்கான்.

௨௮ உதையுண் டனயானை யுருண்டன யானை ஒன்றோ
மிதியுண் டனயானை விழுந்தன யானை மேன்மேல்
புதையுண் டனயானை புரண்டன யானை போரால்
வதையுண் டனயானை மறிந்தன யானை மண்ணில். 5864

௨௯ *முடிந்த தேர்க்குலம் முறிந்தன தேர்க்குலம் முரணிற்
றிடிந்த தேர்க்குலம் இற்றன தேர்க்குலம் அச்சிற்
றொடிந்த தேர்க்குலம் உக்கன தேர்க்குலம் நெக்குப்
படிந்த தேர்க்குலம் பறிந்தன தேர்க்குலம் படியில். 5865

௩௦ சிரம்நெ ரிந்தவும் கண்மணி சிதைந்தவும் செறிதாள்
தரம் நெரிந்தவும் முதுகிறச் சாய்ந்தவும் தார்பூண்
உரம் நெரிந்தவும் உதிரங்கள் உமிழ்ந்தவும் ஒளிர்பொற்
குரனெ ரிந்தவும் கொடுங்கழுத் தொடிந்தவும் குதிரை.

௩௧ பிடியுண் டார்களும் பிளப்புண் டார்களும் பெருந்தோள்கள்
ஒடியுண் டார்களும் தலைநெரிந் தார்களும் உருவம்
கடியுண் டார்களும் கழுத்திழந் தார்களும் மரத்தால்
அடியுண் டார்களும் அச்சமுண் டார்களும் அரக்கர். 5867

௩௨ வட்ட வெஞ்சிலை யோட்டிய வாளியும் வயவர்
விட்ட வெந்திறல் படைகளும் வீரன்மேல் விழுந்த
சுட்ட மெல்இரும் படைகலைத் தொடர்கிலாதது போல்
பட்ட பட்டன திசைதொறும் பொறியொடும் பறந்த 5868

௩௩ சிகையெ ழுஞ்சுடர் வாளிகள் இராக்கதர் சேனை
மிகையெ ழுஞ்சினத் தனுமன்மேல் விட்டன வெந்து
புகையெ ழுந்தன பொரிந்தன கரிந்தன போத
நகையெ ழுந்தன வழிந்தன வானுளோர் நாட்டம். 5869

௩௪ தேரும் யானையும் அரக்கரும் புரவியும் சிந்திப்
பாரின் வீழ்தலும் தான்ஒரு தனிநின்ற பணைத்தோள்
வீரர் வீரனும் முறுவலும் வெகுளியும் விளங்க
வாரும் வாரும்என் றழைக்கின்ற அனுமன்மேல் வந்தான்.

௩௫ புரந்த ரன்தலை பொதிர்எறிந் திடப்புயல் வானில்
பரந்த பல்உரும் ஏற்றினம் எறிந்துயிர் பதைப்ப
நிரந்த ரம்புவி முழுவதும் சுமந்தநீ டுரகன்
சிரந்து ளங்கிட அரக்கன்வெஞ் சிலைநாண் எறிந்தான்.

௩௬ ஆண்ட நாயகன் தூதனும் அயன்உடை அண்டம்
கீண்ட தாம்எனக் கிரிஉக நெடுநிலம் கிழிய
நீண்ட மாதிரம் வெடிபட அவன்நெடும் சிலையில்
பூண்ட நாண்இறத் தன்னெடும் தோள்புடைத் தார்த்தான்.

௩௭ நல்லை நல்லையிஞ் ஞாலத்து நின்ஒக்கும் நல்லார்
இல்லை இல்லையால் எறுழ்வலிக் கியாரொடும் இகல
வல்லை வல்லைஇன் றுருகும்நீ படைத்துடை வாழ்நாட்
கெல்லை எல்லைஎன் றிந்திர சித்துவும் மிசைத்தான். 5873

௩௮ நாளுக் கெல்லையும் நிருதராய் உலகத்தை நலியும்
கோளுக் கெல்லையும் கொடுந்தொழிற் கெல்லையும் கொடியீர்
வாளுக் கெல்லையும் வந்தன வகைகொண்டு வந்தேன்
தோளுக் கெல்லைஒன் றில்லைஎன் றனுமனும் சொன்னான்.

௩௯ இச்சி ரத்தையைத் தொலைப்பன்என் றிந்திரன் பகைஞன்
வச்சி ரத்தினும் வலியன வயிரவான் கணைகள்
பச்சி ரத்தம்வந் தொழுகிட வானவர் பதைப்ப
அச்சி ரத்தினும் மார்பினும் செறித்தனும் அநுமன். 5875

௪0 குறிது வான்என்று குறைந்திலன் கொடுஞ்சினம் கொண்டான்
மறியும் வெண்திரை மாகடல் உலகெலாம் வழங்கிச்
சிறிய தாய்சொன்ன திருமொழி சென்னியிற் சூடி
நெறியில் நின்றதன் நாயகன் புகழென நிமிர்ந்தான். 5876

சக பாகம் அல்லது கண்டிலன் அநுமனைப் பார்த்தான்
மாகம் வன்திசை பத்தொடும் வரம்பிலா உலகில்
ஏக நாதனை எறும்வலித் தோள்பிணித் தீர்த்த
மேக நாதனும் மயங்கின னெமென வியந்தான். 5877

சஉ நீண்ட வீரனும் நெடுந்தடக் கைகளை நீட்டி
ஈண்டு வெஞ்சரம் எய்தன எய்திடா வண்ணம்
மீண்டு போய்விழ வீசிஅங் கவன்விட்ட தடந்தேர்
பூண்ட பேயொடு சாரதி தரைப்படப் புடைத்தான். 5878

சங ஊழிக் காற்றென ஒருபரித் தேரவன் உதவப்
பாழித் தேரவன் அத்தடந் தேர்மிசைப் பாய்ந்தான்
ஆழிப் பல்படை அனையவன் அளப்பரும் சரத்தால்
வாழிப் போர்வலி மாருதி மேனியை மறைத்தான். 5879

சச உற்ற வாளிகள் உரத்தடங் கினவிழ உதறுக்
கொற்ற மாருதி அனையவன் தேர்மிசைக் குதித்தான்
பற்றி வன்கையால் பறித்தெழுந் துலகெலாம் பலகால்
முற்ற வென்றபோர் மூரிவெஞ் சிலையினை முறித்தான். 5880

சரு முறிந்த வில்லின்வல் ஓசைபோய் முடிவதன் முன்னம்
மறிந்து பாரிடை வழிக்கொளா வயிரவாட் படையால்
செறிந்த வான்பெருஞ் சிறையற மலைகளைச் செயிரா
எறிந்த இந்திரன் இட்டவான் சிலையினை எடுத்தான். 5881

சசா நூறு நூறுபோர் வாளிஓர் தொடைகொண்டு நொய்தின்
மாறில் வெஞ்சினத் திராவணன் மகன்சிலை வளைத்தான்
ஊறு தன்னெடு மேனியில் பலபட ஒல்கி
ஏறு சேவகன் தூதனும் சிறிதுபோ திருந்தான். 5882

சஎ ஆர்த்த வானவர் ஆகுலம் கொண்டறி வழிந்தார்
பார்த்த மாருதி தாருஒன் றங்கையால் பற்றித்
தூர்த்த வாளிகள் துணிபட முறைமுறை சுழற்றிப்
போர்த்த பொன்நெடு மணிமுடித் தலத்திடைப்புடைத்தான்

சஅ பார மாமணி முடியுடைத் தலையிடைப் படலும்
தாரை யின்நெடுங் கற்றைகள் சுற்றிய தயங்க
வார மால்வரை அருவியின் அழிகொழுங் குருதி
சோர நின்றுளந் துளங்கினன் அமரரைத் துரந்தான். 5884

௪௯ நின்று போதம்வந் துறுதலும் நிறைபிறை எயிறு
தின்று தேவரும் அவுணரும் முனிவரும் திகைப்பக்
குன்று போல்நெடு மாருதி அகமும் குலுங்க
ஒன்று போல்வன ஆயிரம் பகழிகோத் துய்த்தான். 5885

௫௦ உய்த்த வெஞ்சரம் உரத்தினும் சிரத்தினும் ஒளிப்பக்
கைத்த சிந்தனை மாருதி ஆகமுங் கனன்றான்
வித்த கச்சிலை விடுகணை விசையினும் கடுகி
அத்த டம்பெருந் தேரொடும் எடுத்தெறிந் தார்த்தான். 5886

௫௧ கண்ணின் மீச்சென்ற விசும்பிடை கலப்பதன் முன்னம்
எண்ணின் மீச்சென்ற எறுழ்வலித் திறலுடை இகலோன்
புண்ணின் மீச்சென்ற பொழிபுலால் பசும்புனல் பொடிப்ப
விண்ணின் மீச்சென்ற தேரொடும் பார்மிசை விழுந்தான். 5887

௫௨ விழுந்து பார்அடை யாமுனம் மின்னன மெய்யான்
எழுந்து மாவிசும் பெய்தினன் இடைஅவன் படியில்
செழுந்திண் மாமணித் தேர்க்குலம் யாவையும் சிதைய
உழுந்து பேர்வதன் முன்னெடு மாருதி உதைத்தான். 5888

௫௩ ஏறு தேரிலன் எதிர்நிற்கும் முரண்இலன் எரியின்
சீறும் வெஞ்சினம் திருகினன் அந்தரம் திரிவான்
வேறு செய்வதோர் வினைபிறி தின்மையின் விரிஞ்சன்
மாறி லாப்பெரும் படைக்கலம் தொடுப்பதே மதித்தான்.

௫௪ பூவும் பூநிற அயினியும் தீபமும் புகையும்
தாவில் பாவனை யால்கொடுத் தருச்சனை சமைத்தான்
தேவும் யாவையும் உலகமும் திருத்திய தெய்வக்
கோவில் நான்முகன் படைக்கலம் தடக்கையிற் கொண்டான். 5890

௫௫ கொண்டு கொற்றவெஞ் சிலைநெடு நாணொடுங் கூட்டிச்
சண்ட வேகத்தம் மாருதி தோளொடும் சாத்தி
மண்டு ளங்கிட மாதிரம் துளங்கிட மதிதோய்
விண்டு ளங்கிட மேருவும் துளங்கிட விட்டான். 5891

௫௬ தணிப்ப ரும்பெரும் படைக்கலம் தழல்உமிழ் தறுகட்
பணிக்கு லங்களுக் கரசின துருவினைப் பற்றித்
துணிக்க உற்றுயர் கலுழனுந் துணுக்குறச் சுற்றிப்
பிணித்த தப்பெரு மாருதி தோள்களைப் பிறங்க. 5892

ருஎ திண்ணன் யாக்கையைத் திசைமுகன் படைசென் றுதிருக
அண்ணல் மாருதி அயர்வொடும் ஆழிசூழ் தலத்தில்
கண்ணில் நீளிய கனகதோ ரணத்தொடும் கடைநாள்
தண்ணென் மாமதி கோளொடும் சாய்ந்தெனச் சாய்ந்தான். 5893

ருஅ சாய்ந்த மாருதி சதுமுகன் படைஎனும் தன்மை
ஆய்ந்து பற்றிதன் ஆணையை அவமதித் தகல்கை
ஏய்ந்த தன்றென எண்ணினன் கண்முகிழ்த் திருந்தான்
ஓய்ந்த தால்இவன் வலிஎன அரக்கன்வந் துற்றான். 5894

ருகூ உற்ற காலையில் உயிர்கொண்டு திசைதொ றும் ஒதுங்கி
அற்றம் நோக்கினர் நிற்கின்ற வாள்எயிற் றரக்கர்
சுற்றும் வந்துடல் சுற்றிய துளைஎயிற் றரவைப்
பற்றி ஈர்த்தனர் ஆர்த்தனர் தெழித்தனர் பலரால். 5895

கூ0 குரக்கு நல்வலம் குறைந்ததென் றுவலம் கொட்டி
இரைக்கும் மாநகர் எறிகடல் ஒத்ததெம் மருங்கும்
திரைக்கு மாசுணம் வாசுகி ஒத்தது தேவர்
அரக்கர் ஒத்தனர் மந்தரம் ஒத்தனன் அனுமன். 5896

கூக கறுத்த மாசுணம் கனகமா மேனியைப் பற்ற
அறத்துக் காங்கொரு தனித்துணை யெனநின்ற அனுமன்
மறுத்து மாருதம் பொருதநாள் வாசுகி என்பான்
புறத்துச் சுற்றிய மேருமால் வரையையும் போன்றான். 5897

கூஉ வந்தி ரைத்தனர் மைந்தரும் மகளிரும் மழையின்
அந்த ரத்தினும் விசும்பினும் திசைதொ றும் ஆர்ப்பார்
முந்தி உற்றதேர் உவகைக்கோர் கரையில்லை முனியின்
இந்தி ரன்பிணிப் புண்டநாள் ஒத்ததவ் விலங்கை. 5898

கூ௩ பாசப்படலம் முற்றும்.

கூச பிணிவிடு படலம்.

க எய்யுமின் ஈருமின் எறிமின் போழுமின்
கொய்யுமின் குடர்களைக் கூறு கூறுகள்
செய்யுமின் உலகிடைத் தேய்மின் தின்னுமின்
உய்யுமேல் இல்லைநம் உயிர்என் றோடுவார். 5899

உ நச்சுறு படைகளால் நலியும் ஈட்டதோ
வச்சிரம் உடன்மறி கடலின் வாய்மடுத்
துச்சியின் அழுத்துமின் உருத்த தன்றெனில்
கிச்சிடை இடும்எனக் கிளத்தி னார்பலர். 5900

ங மைத்தடங் கண்ணியர் மைந்தர் யாவரும்
பைத்தலை அரவெனக் கனன்று பைதலை
இத்தனை பொழுதுகொண் டிருப்ப தோஎன
மொய்த்தனர் கொலைசெய முயல்கின் றார்சிலர். 5901

ச எந்தையை எம்பியை எம்மு னோர்களைத்
தந்தனை போகெனத் தடுக்கின் றார்பலர்
அந்தரத் தமரர்தம் ஆணை யால்இவண்
வந்ததென் றுயிர்கொள மறுகு வார்பலர். 5902

ரு ஓங்கரும் பெருவலி உயிரின் அன்பரை
நீங்கலம் இன்றொடும் நீங்கி னோம்இனி
யாங்களும் இவன்சிரம் அற்றி லால்திரு
வாங்கலம் என்றெழும் மாத ரார்பலர். 5903

சு கொண்டனர் எதிர்செலும் கொற்ற மாநகர்
அண்டம் உற் றதுநெடி தார்க்கும் ஆர்ப்பது
கண்டம் அற் றுலந்ததம் கணவர்க் கேங்கிய
குண்டல முகத்தியர் ஓகை கூறவே. 5904

எ வடிவுடைச் கனற்படை வயவர் மால்கரி
கொடியுடைத் தேர்பரி கொண்டு வீசலின்
இடிபடச் சிதைந்தமால் வரையின் இல்எலாம்
பொடிபடக் கிடந்தன கண்டு போயினான். 5905

அ முயிறலைத் தெழுமுது மரத்தின் முன்புதோள்
கயிறலைப் புண்டது கண்டு காண்கிலார்
எயிறலைத் தழுதெழும் அரக்கர் ஏழையர்
வயிறலைத் திரியலின் மயங்கினார் பலர். 5906

கூ ஆர்ப்புற அஞ்சினர் அடங்கி னார்பலர்
போர்புறச் செயலினைப் புகழ்கின் றார்பலர்
பார்ப்புறப் பார்ப்புறப் பயத்தி னல்பதைத்
தூர்ப்புறத் திரிய லுற் றோடு வார்சிலர். 5907

க0 காந்துகண் தழல்எயிற் றரவின் கட்டொரு
பூந்துணர் அசைத்தெனப் பொலியும் வாண்முகம்
தேர்ந்துறு பொருள்பெற எண்ணிச் செய்யுமின்
வேந்துறல் பழுதென விளம்புவார் சிலர். 5908

கக திண்திறல் அரக்கர்தம் செருக்குச் சிந்துவான்
தண்டலில் தண்உருக் கரந்த தன்மையான்
மண்டமர் தொடங்கிய வான ரத்துருக்
கொண்டனர் அந்தகன் கொல்லென் பார்பலர். 5909

க௨ கயிலையில் ஒருதனிக் கணிச்சி வானவன்
மயில்இயற் சீதைதன் கற்பின் மாட்சியால்
எயில்உடைத் திருநகர் சிதைப்ப எய்தினன்
அயில்எயிற் றுக்குரங் காய்என் பார்சிலர். 5910

க௩ ஒளிவரு நாகத்துக் கொல்கல் உண்மையன்
றெளிதர வன்றிதன் எண்ணம் வேறெனக்
களிவரு சிந்தையால் காட்டி எங்களைச்
சுளியலை யாம்எனத் தொழுகின் றார்சிலர். 5911

க௪ நீர்இடைக் கண்துயில் நெடிய நேமியும்
தார்உடைத் தனிமலர் உலகின் தாதையும்
ஓர்உடல் கொண்டுதம் உருவு மாற்றினார்
பார்இடைப் புகுந்தனர் பகைத்தென் பார்சிலர். 5912

க௫ பைங்கழல் அநுமனைப் பிணித்த பாந்தளைக்
கிங்கரர் ஒருபுடை பற்றி ஈர்க்கின்றார்
ஐம்பதி னாயிரர் அரக்கர் ஆண்தொழில்
மொய்ம்பினர் எறுழ்வலிக் கலுழன் மும்மையார் 5913

க௬ அரமியத் தலந்தொறும் அம்பொன் மாளிகைத்
தரம்உறு நிலந்தொறும் சாள ரந்தொறும்
முரசெறி கடைதொறும் நிறைந்து மொய்த்தனர்
நிரைவளை மகளிரும் நிருதர் மைந்தரும். 5914

க௭ அரம்பையர் விஞ்சைநாட் டளக வல்லியர்
நரம்பினும் இனியசொல் நாக நாடியர்
கரும்பியல் சித்தியர் இயக்கர் கன்னியர்
வரம்பறு சும்மையர் தலைம யங்கினார். 5915

கஅ அரக்கரும் அரக்கியர் குழாமும் அல்லவர்
கரக்கிலர் நெடுமழைக் கண்ணின் நீர்அது
விரைக்குழல் சீதைதன் மெலிவு நோக்கியோ
இரக்கமோ அறத்தின தெளிமை யேகொலாம். 5916

ககூ ஆண்தொழில் அநுமனும் அவரோ டேகினன்
மீண்டிலன் வேறொன்றும் விரும்பல் உற்றிலன்
ஈண்டிது வேதொடர்ந் திலங்கை வேந்தனைக்
காண்டலே நலன்எனக் கருத்தின் எண்ணினன். 5917

உ0 எந்தைய தருளினும் இராமன் சேவடி
சிந்தைசெய் நலந்தினும் தேவர் ஈய்ந்தன
முந்துள வரத்தினும் பாசம் முற்றறச்
சிந்துவன் அயர்வுறு சிந்தை சிரிதால். 5918

உக வளைஎயிற் றரக்கனை உற்று மந்திரத்
தளவறு முதியரும் அறிய ஆணையால்
விளைவன விளம்பினல் மிதுலை நாடியை
இளகினன் என்வயின் ஈதல் ஏயுமால். 5919

உஉ அல்லதும் அவனுடைத் துணைவர் ஆயினோர்க்
கெல்லையும் தெரிவுறும் எண்ணும் தேரலாம்
வல்லவன் நிலைமையும் மனமும் தேரலாம்
சொல்லுது முகம்எனும் தூது சொல்லவே. 5920

உ௩ வாலிதன் இறுதியும் மாத்திற் குற்றதும்
கூலவெஞ் சேனையின் குணிப்பி லாமையும்
மேலவன் காதலன வலியும் மேன்மையும்
நீல்நிறத் திராவணன் நெஞ்சில் தைக்குமால். 5921

உச ஆதலால் அரக்கனை எய்தி ஆற்றலும்
நீதியும் மனக்கொள நிறுவி நின்றதில்
பாதியின் மேல்செல நூறிப் பைப்பையப்
போதலே கருமம்என் றனுமன் போயினன். 5922

உரு கடவுளர்க் கரசனைக் கடந்த தோன்றலும்
புடைவரும் பெரும்படைப் புணரி போர்த்தெழ
விடைபிணிப் புண்டது போலும் வீரனைக்
குடைகெழு மன்னனிற் கொண்டு போயினன். 5923

௨௬ தூதுவர் ஓடினர் தொழுது தொல்லைநாள்
மாதிரம் கடந்தவற் குறுகி மன்னநின்
காதலன் செருவினில் கடவு ளாம்எனப்
பேதியா வானரம் பிணித்திட் டான்என்றார். 5924

௨௭ கேட்டலும் கிளர்சுடர் கெட்ட வான்என
வீட்டிருள் விழுங்கிய மார்பின் யானையின்
கோட்டொடும் பொருதபேர் ஆரம் கொண்டெதிர்
நீட்டினன் உவகையின் நிமிர்ந்த நெஞ்சினான். 5925

௨௮ எல்லையில் உவகையால் இவர்ந்த தோளினன்
புல்லுற மலர்ந்தகட் குமுதப் பூவினான்
ஒல்லையின் ஓடிநீர் உரைத்தென் ஆணையால்
கொல்லலை தருகெனக் கூறுவீர் என்றான். 5926

௨௯ அவ்வுரை தூதரும் ஆணை யால்வரும்
தெவ்வுரை நீக்கினான் அறியச் செப்பினார்
இவ்வுரை நிகழ்வுழி இருந்த சீதையாம்
வெவ்வுரை நீங்கினாள் நிலைவி ளம்புவாம். 5927

௩0 இறுத்தனன் கடிபொழில் எண்ணி லோர்பட
ஒறுத்தனன் என்றுகொண் டுவக்கின் றாள்உயிர்
வெறுத்தனள் சோர்வுற வீரற் குற்றநோய்
கறுத்தெழு சிந்தையாள் கனன்று கூறுவாள். 5928

௩௧ *ஓவி யம்புகை யுண்டது போலஓர்
பூவின் மெல்லியன் மேனி பொடியுறப்
பாவி வேடன்கைப் பார்ப்புற வெய்துறும்
தூவி அன்னம்அன் னாள்இவை சொல்லினாள். 5929

௩௨ உற்றுண் டாய விசும்பை உருவினாய்
முற்றுண் டாய்கலை யாவையும் முற்றுறக்
கற்றுண் டாய்ஒரு கள்ள அரக்கனால்
பற்றுண் டாய்இது வோஅறப் பான்மையே. 5930

௩௩ கடல்க டந்துபு குந்தனை கண்டகர்
உடல்க டந்துநின் றாழி கடந்திலை
அடல்க டந்ததி றள்புயத் தையநீ
இடர்க டந்தனை வந்திடர் மேலுமே. 5931

௩௪ ஆழி காட்டிஎன் ஆருயிர் காட்டினாய்
ஊழி காட்டுவன் என்றுரைத் தேன்அது
வாழி காட்டும்என் றுண்டுன் வரைப்புயம்
பூழிகாட்டி அரும்பழி பூட்டினாய். 5932

௩௫ கண்டு போயின நீநெறி காட்டிட
மண்டு போரில் அரக்கரை மாய்த்தெனை
கொண்டு மானவன் போம்எனும் கொள்கையைத்
தண்டினாய்எனக் காருயிர் தந்தநீ. 5933

௩௬ ஏயப் பன்னினள் இன்னன தன்உயிர்
தேயக் கன்று பிடிஉணத் தீங்குறும்
தாயைப் போலத் தளர்ந்து மயங்கினாள்
தீயைச் சுட்டதோர் கற்பெனும் தீயினாள். 5934

௩௭ பெருந்த கைப்பெரி யோனைப்பிணித்தவன்
உருந்து மற்ற உலகொரு மூன்றையும்
அருந்த வப்பய னால்அர சாள்கின்றான்
இருந்த கற்பகச் சோலைசென் றெய்தினான். 5935

௩௮ *தலங்கள் மூன்றிற்கும் பிறிதொரு மதிதழைத் தென்ன
அலங்கல் வெண்குடை கண்குடை அவிர்ஒளி பரப்ப
வலம்கொள் தோளினன் மண்நின்றும் வான்உற எடுத்த
பொலம்கொள் மாமணி வெள்ளியங் குன்றெனப் பொலிய.

௩௯ புள்உ யர்த்தவன் நேமியும் புரந்தான் அயிலும்
தள்ளி முக்கணன் கணிச்சியும் தாக்கிய தழும்பும்
கள்உ யிர்க்குமென் குழலியர் முகிழ்விரல் கதிர்வாள்
வள்உ கிர்ப்பெரும் குறிகளும் புயங்களின் வயங்க. 5937

௪0 துன்று செம்மயிர்ச் சுடர்நெடும் கற்றைகள் சுற்ற
நின்று திக்குற நிறைத்தன கதிர்க்குழாம் நிமிர
ஒன்று சீற்றத்தின் உயிர்ப்பெனும் பெரும்புகை உயிர்ப்பக்
தென்தி சைக்கும்ஓர் வடவனல் திருத்திய தென்ன. 5938

௪௧ மரக தக்கொழுங் கதிரொடு மாணிக்க நெடுவாள்
நரகதேயத்து நடுக்குற இருளையும் நக்கச்
சிரம்அ னைத்தையும் திசைதொறும் திசைதொறும் செலுத்தி
உரகர் கோன்இனி தரசுவீற் றிருந்தனன் ஒப்ப. 5939

௪௨ குவித்த பன்மணிக் குப்பைகள் தலைதொறும் கொழிப்பச்
சவிச்சு டர்க்கலன் அணிந்தபோல் ஆனனம் தயங்கச்
புவித்த டம்படர் மேருவைப் பொன்முடி என்னக்
கவித்த மால்இருங் கடல்இருந் தனனது கடுப்ப. 5940

௪௩ சிந்து ராகத்தின் செறிதுகில் கச்சொடும் செறியப்
பந்தி வெண்முத்தின் அணிகலம் முழுநிலாப் பரப்ப
இந்து வெண்குடை நீழலில் தாரகை இனம்பூண்
டந்தி வான்உடுத் தல்லுவீற் றிருந்ததாம் என்ன. 5941

௪௪ வண்மைக் கும்திரு மறைகட்கும் வானினும் பெரிய
திண்மைக் கும்தனி உறையுளான் முழுமுகம் திசையில்
கண்வைக் கும்தொறும் களிற்றொடும் மாதிரம் காக்கும்
எண்மர்க் கும்மற்றை இருவர்க்கும் பெரும்பயம் எய்த. 5942

௪௫ ஏக நாயகன் தேவியை எதிர்ந்ததின் பின்பு
நாகர் வாழ்இடம் முதலினர் நான்முகன் வைகும்
மாக மால்விசும் பீறென நடுவுள வரைப்பில்
தோகை மாதர்கள் மைந்தரில் தோன்றினர் சுற்ற. 5943

௪௬ வான ரங்களும் வானவர் இருவரும் மனிதர்
ஆன புன்தொழி லோர்என இகழ்கின்ற அவரும்
ஏனை நின்றவர் இருடிகள் சிலர் ஒழிந் தியாரும்
தூந வின்றவேல் அரக்கர்தம் குழுவொடும் சுற்ற. 5944

௪௭ நரம்பு கண்அகத் துள்உடை நறைநிறை பாண்டில்
நிரம்பு சில்லரிப் பாணியும் குறடுநின் றிசைப்ப
அரம்பை மங்கையர் அமுதருத் தாலன்ன பாடல்
வரம்பில் இன்னிசை செவிதொறும் செவிதொறும் மடுப்ப.

௪௮ கூடு பாணியின் இசையொடு முழவொடும் கூடத்
தோடு சீறடி விழிமனம் கையொடு தொடரும்
ஆடல் நோக்குறில் அருந்தவ முனிவர்க்கும் அமைந்த
வீடு மீட்குறும் மேனகை மேல்நகை விளங்க. 5946

௪௯ ஊடி னார்முகத் துறுநற வொருமுகம் உண்ணக்
கூடி னார்முகக் களிநறை ஒருமுகம் குடிப்பப்
பாடி னார்முகத் தாரமு தொருமுகம் பருக
ஆடி னார்முகத் தாரமு தொருமுகம் அருந்த. 5947

௫௦ தேவ ரோடிருந் தொருமுகம் அரசியல் செலுத்த
மூவ ரோடுமா மந்திரம் ஒருமுகம் முயலப்
பாவ காரிதன் பாவகம் ஒருமுகம் பயிலப்
பூவை சானகி [1]உருவெளி ஒருமுகம் பொருந்த. 5948

௫௧ காந்தன் மெல்விரல் சனகிதன் கற்பெனும் கடலை
நீந்தி ஏறுவ தென்றென ஒருமுகம் நினைப்பச்
சாந்த ளாவிய வனமுலை மகளிர்தற் சூழ்ந்தார்
ஏந்துகோடியின் ஒருமுகம் எழிலினை நோக்க. 5949

௫௨ பொதும்பர் வைகுதேன் புக்க நந் துதற்கரும் புலனும்
மதம்பெய் வண்டெனச் சனகிபால் மனஞ்செல மறுகி
வெதும்பு வார்அகம் வெந்தழி வார்முலை விழிநீர்
ததும்பு வார்விழித் தாரைவேல் தோள்தொறும் தாக்க.

௫௩ மாற ளாவிய மகரந்த நறைஉண்டு மகளிர்
வீற ளாவிய முகிழ்முலை எழுதிய சாந்தின்
சேற ளாவிய சிறுநறும் சீதளத் தென்றல்
ஊற ளாவிய கடுஎன உடலிடை நுழைய. 5951

௫௪ திங்கள் வாள்நுதல் மடந்தையர் சேய்அரி கிடந்த
அம்க யல்தடம் தாமரைக் கலரியோன் ஆகி
வெம்கண் வானவர் தானவர் என்றிவர் விரியாப்
பொங்கு கைகளாம் தாமரைக் கிந்துவே போன்றும். 5952

௫௫ இருந்த எண்திசைக் கிழவனை மாருதி எதிர்ந்தான்
கருந்திண் நாகத்தை நோக்கிய கலுழனில் கனன்றான்
திருந்து தோளிடை வீக்கிய உரகத்தைச் சிந்தி
உருந்து நஞ்சுபோல் அவன்வயின் பாய்வன்என் றுருத்தான் 5953

௫௬ உறங்கு கின்றபோ தயிர்உண்டல் குற்றம்என் றொழிந்தேன்
பிறங்கு பொன்மணி ஆசனத் திருக்கவும் பெற்றேன்
திறங்கள் என்பல சிந்திப்ப திவன்தலை சிதறி
அறங்கொள் கொம்பினை மீட்டுடன் அகல்வன்என் றமைந்தான்.

௫௭ தேவர் தானவர் முதலினர் சேவகன் தேவி
காவல் கண்டிவண் இரங்கவர் கண்புலன் கதுவ
பாவ காரிதன் முடித்தலை பறித்திலன் என்றால்
ஏவ தாம்இனி மேல்செய்யும் ஆள்வினை என்றான். 5955

பிரதி 1. உருவழி.

௫௮ மாடி ருந்தமற் றிவன்புணர் மங்கையர் மறுகி
ஊடி நுந்திட முடித்தலை திசைதொறும் உருட்டி
ஆடல் கண்டுநின் றார்க்கின்ற ததுநெடி தம்மா
தேடி வந்ததோர் குரங்கெனும் பெரும்பொருள் தெரிய.

௫௯ நீண்ட வாள்எயிற் றரக்கனை கண்களின் நேரே
காண்டல் வேண்டிஇவ் உயிர்சுமந் தெதிர்சில கழறி
மீண்ட போதுண்டு வசைப்பொருள் வென்றிலேன் எனினும்
மாண்ட போதினும் புகழ்அன்றி மற்றும்ஒன் றுண்டோ.

௬0 என்று தோளிடை இறுக்கிய பாசம்இற் றேக
குன்றின் மேல்எழும் கோளரி ஏறெனக் குதியில்
சென்று கூடுவன் என்பது சிந்தனை செய்யா
நின்று காரியம் அன்றென நீதியில் நினைந்தான். 5958

௬௧ *கொல்லலாம் தரத்தனும் அல்லன் கொற்றமும்
சொல்லலாம் தரத்தனும் அல்லன் தொல்லைநாள்
அல்எலாம் திரண்டன்ன நிறத்தன் ஆற்றலை
வெல்லாம் இராமனுற் பிறரும் வெல்வரோ. 5959

௬௨ என்னையும் வெலற்கரி திவனுக் கீண்டிவன்
தன்னையும் வெலற்கரி தெனக்கும் தாக்கினால்
என்னவே காலங்கள் இறக்கும் ஆதலால்
துன்னரும் அமர்த்தொழில் துடங்கல் தூயதோ. 5960

௬௩ ஏழுபேர் உலகங்கள் யாவும் இன்புறப்
பாழிவண் புயங்களோ டரக்கன் பல்தலைப்
பூழியில் புரட்டுவன் பூணிப் பாம்என
ஊழியான் விளம்பிய உரையும் ஒன்றுண்டால். 5961

௬௪ இங்கொரு திங்களே இருப்பன் யான்என
அங்கண்நா யகன்தனி ஆணை கூறிய
மங்கையும் மன்உயிர் துறத்தால் வாய்மைசால்
பொங்குவெம் செருவிடைப் பொழுது போக்கினால். 5962

௬௫ ஆதலால் அமர்த்தொழில் அழகிற் றன்றரும்
தூதனும் தன்மையே தூய்தென் றுன்னினான்
வேதநா யகன்தனித் துணைவன் வென்றிசால்
ஏதில்வாள் அரக்கன திருக்கை எய்தினான். 5963

௬௬ தீட்டிய வாள்எனத் தெறுகண் தேவியர்
ஈட்டிய குழுவிடை இருந்த வேந்தற்கு
காட்டினன் அநுமனைக் கடலி னாமு
தூட்டிய உம்பரை உலைய ஓட்டினான். 5964

௬௭ புவனம்எத் தனைஅவை அனைத்தும் போர்கடந்
தவனைஉற் றரிஉரு ஆன ஆண்தகை
சிவன்எனச் செங்கண்மால் என்னச் செய்தவன்
இவன்எனக் கூறிநின் றெதிர் இறைஞ்சினான். 5965

௬௮ நோக்கிய கண்களால் நொறில்க னற்பொறி
தூக்கிய அநுமன்மெய் மயிர்சு றுக்கொளத்
தாக்கிய உயிர்ப்பொடு தவழ்ந்த வெம்புகை
வீக்கின அவன்உடல் விசித்த பாம்பினே. 5966

௬௯ அன்னதோர் வெருளியன் அமரர் ஆதியர்
துன்னிய துன்னலர் துணுக்கம் சுற்றுற
என்இவண் வரவுநீ யாரை என்றவன்
தன்மையை வினவினன் கூற்றின் தன்மையான். 5967

௭௦ நேமியோ குலிசியோ நெடுங்க ணிச்சியோ
தாமரைக் கிழவனோ தறுகண் பல்தலைப்
பூமிதாங் கொருவனோ பொருது முற்றுவான்
நாமமும் உருவமும் கரந்து நண்ணினாய். 5968

௭௧ நின்றிசைத் துயிர்கவர் நீலக் காலனோ
குன்றிசைத் தயில்உக எறிந்த கொற்றனோ
தென்திசைக் கிழவனோ திசைநின் றாட்சியோர்
என்றிசைக் கின்றவர் யாருள் யாவன்நீ. 5969

௭௨ அந்தணர் வேள்வியின் ஆக்கி ஆணையின்
வந்துற விடுத்ததோர் வயவெம் பூதமோ
முந்தொரு மலருளோன் இலங்கை முற்றுறச்
சிந்தெனத் திருத்திய தெறுகண் தெய்வமோ. 5970

௭௩ யாரைநீ என்னைஈங் கெய்து காரணம்
ஆருனை விடுத்தவர் அறிய ஆணையால்
[1] சோர்விலை சொல்லுதி என்னச் சொல்லினான்
வேரொடும் அமரர்தம் புகழ்வி ழுங்கினான். 5971

எச சொல்லிய அனைவரும் அல்லன் சொன்னஅப்
புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்
அல்லிஅங் கமலமே அனைய செங்கணோர்
வில்லிதன் தூதன்வந் திலங்கை மேவினேன். 5972

எரு அனையவன் யாரென அறிதி ஆகியேல்
முனைவரும் அமரரும் மூவர் தேவரும்
எனையவர் எனையர் யாவர் யாவையும்
நினைவரும் வினையமும் முடிக்க நின்றுளான். 5973

எசு *ஈட்டிய வலியும் மேல்நாள் இயற்றிய தவமும் யாணர்க்
கூட்டிய படையும் தேவர் கொடுத்தநல் வரமும் கொட்பும்
தீட்டிய அறிவும் மிக்க திருத்திய பிறவும் எல்லாம்
நீட்டிய பகழி ஒன்றால் முதலொடும் நீக்க நின்றான். 5974

எஎ தேவரும் பிறரும் அல்லன் திசைக்களி றல்லன் திக்கின்
காவலர் அல்லன் வெள்ளிக் கயிலைஅம் கிரியன் அல்லன்
மூவரும் அல்லன் மற்றை முனிவரும் அல்லன் எண்ணில்
பூவலை யத்தை ஆண்ட புரவலன் புதல்வன் போலாம். 5975

எஅ போதமும் பொருந்தும் வேள்விப் புரையறு பயனும்பொய்தீர்
மாதவம் சுமந்து தீரா வரங்களும் மற்றும் யாவும்
யாதவன் நினைந்தான் அன்ன பயத்தன ஏது வேண்டில்
வேதமும் அறமும் சொல்லும் மெய்யற மூர்த்தி வில்லோன்.

எகூ காரணம் கேட்டி யாயில் கடைஇலா மறையின் கண்ணும்
ஆரணம் காட்ட மாட்டா அறிவினுக் கறிவும் அன்னான்
போரணங் கிடங்கர் கவ்வப் பொதுநின்ற முதலை என்ற
வாரணம் காக்க வந்தான் அமரரைக் காக்க வந்தான். 5977

அ0 மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி வந்தான்.

அக அறந்தலை நிறுத்தி வேதம் அருள்சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந் துலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் இடர்துடைத் தேக ஈண்டும்
பிறந்தது பிறவி நோய்க்கு மருந்திவன் பிறிதொன் றுண்டோ. 5979

௮௨ அன்னவற் கடிமை செய்வேன் நாமமும் அநுமன் என்பேன்
நல்நுதல் தன்னைநாடி நால்பெருந் திசையில் போந்த
மன்னரில் தென்பால் வந்த தானைக்கு மன்னன் வாலி
தன்மகன் அவன்தன் ஏவல் தூதன்யான் தமியன் என்றான்.

௮௩ என்றலும் இலங்கை வேந்தன் எயிற்றின்மேல் எழிலி நாப்பண்
மின்திரிந் தென்ன நக்கு வாலிசேய் விடுத்த தூதா
வன்துணை ஆய வாலி வலியன்கொல் அரசின் வாழ்க்கை
நன்றுகொல் என்ன லோடும் நாயகன் தூதன் நக்கான். 5981

௮௪ அஞ்சலை அரக்க மாண்டதவ் உறவி யாண்டு மாண்ட
வெஞ்சின வாலி மீளான் வாலும்போய் விளிந்த தன்றே
மஞ்சனமேனி யான்தன் வடிக்கணை ஒன்றால் வாலி
துஞ்சினன் எங்கள் வேந்தன் சூரியன் தோன்றல் என்றான்.

௮௫ என்னுடை ஈட்டி னால்அவ் வாலியை எறுழ்வாய் அம்பால்
இன்உயிர் உண்ட திப்போதி யாண்டையான் இராமன் என்பான்
அன்னவன் தேவி தன்னை அங்கதன் நாடல் உற்ற
தன்மையை உரைசெய் என்னச் சமீரணன் தனயன் சொல்வான்.

௮௬ தேவியை நாடிவந்த செங்கணற் கெங்கள் கோமான்
ஆவிஒன் றாக நட்டான் அருந்துயர் துடைத்தி என்ன
ஓவியர்க் கெழுத ஒண்ணா உருவத்தான் உரிமையோடும்
கோஇயல் செல்வம் முன்னே கொடுத்துவா லியையும்கொன்றான்.

௮௭ ஆயவன் தன்னோ டாண்டு திங்களோர் ஆறு வைகி
மேயவெம் சேனையோடும் வீற்றிருந் தானை வீரன்
போய்இனி நாடும் என்னப் போந்தனம் புகுந்த தீதென்
றேயவன் தூதன் சொன்னான் இராவணன் இதனைச் சொன்னான்.

௮௮ உம்குலத் தலைவன் தன்னோ டொப்பிலா உயர்ச்சி யோனை
வெம்கொலை அம்பில் கொன்றான் காண்தொழில்மேற்கொண் டீரேல்
எங்குலப் புறநும் கீர்த்தி நும்மொடும் இயைந்த தென்றான்
மங்குலில் பொலிந்த வையம் மாசுமை உடைத்து மாதோ. 5986

௮௯ தம்முனைக் கொல்வித் தன்னற் கொன்றவற் கன்பு சான்ற
உம்இனத் தலைவன் ஏவ யாதெமக் குரைக்கல் உற்ற
தெம்முனைத் தூது வந்தாய் இகல்புரி தன்மை என்னை
நொம்மெனக் கொல்லா நெஞ்சம் அஞ்சலை நுவல்தி என்றான்.

௬௦ *துணர்த்த தாரவன் சொல்லிய சொற்களைப்
புணர்த்து நோக்கிப் பொதுநின்ற நீர்மையை
உணர்த்தி னால்அ துறும்என உன்னரும்
குணத்தி னானும் இனையன கூறினான். 5988

௬௧ தூது வந்தது சூரியன் கான்முளை
ஏது ஒன்றிய நீதி இயைந்தனை
சாது ஒன்றுணர் கிற்றியேல் தக்கன
கோதிறந்தன நின்வயிற் கூறுவாம். 5989

௬௨ வறிது வீழ்த்தனை வாழ்க்கையை மன்அறம்
சிறிதும் நோக்கலை தீய்மை திருத்தினாய்
இறுதி உற்றுள தாயினும் இன்னம்ஓர்
உறுதி கேட்டி உயிர்நெடி தோம்புவாய். 5990

௬௩ போயிற் றீர்நும் புலன்வென்று போக்கிய
வாயிற் றீர்வரி தாகிய மாதவம்
ஆயிற் றீர்பெரும் கேடருங் கற்பினால்
தீயிற் றாயவ ளைத்துயர் செய்ததால். 5991

௬௪ இன்று வீய்ந்தது நாளைச் சிறிதிறை
நின்று வீய்ந்ததல் லானிறை நிற்குமோ
ஒன்று வீய்ந்தது நல்உணர் உம்பரை
வென்று வீக்கிய ஆக்கம் விதியினால் 5992

௬௫ தீமை நன்மையைத் தீத்தல்ஒல் லாதெனும்
வாய்மை நீக்கினை மாதவத் தால்வந்த
தூய்மை தூயவள் தன்வயிற் றோன்றிய
நோய்மை யாற்றுடைக் கின்றனை நோக்கலாய். 5993

௬௬ திறம்தி றம்பிய காமச் செருக்கினால்
மறந்து தத்தம் மதியின் மயங்கினார்
இறந்தி றந்திழிந் தேறுவ தேஅலால்
அறம்தி றம்பினர் ஆருள ராயினார் 5994

௬௭ நாமத் தாழ்கடல் ஞாலம் விரிந்ததவ்
ஏமத் தார்நறைத் தார்இள மாதர்பால்
காமத் தால்இறந் தார்களி வண்டுறை
தாமத் தாரினர் என்னினும் சார்வரோ. 5995

௯௮ பொருளும் காமமும் என்றிவை போக்கிவே
றிருளுண் டாம்என எண்ணலர் ஈய்தலும்
அருளுங் காதலில் தீர்தலும் அல்லதோர்
தெருளுண் டாம்என எண்ணலர் சீரியோர். 5996

௯௯ இச்சைத் தன்மையி னிற்பிறர் இல்லினை
நச்சி நாளும் நகையுற நாணலை
பச்சை மேனி உலர்ந்து பழிபடும்
கொச்சை ஆண்மையும் சீர்மையில் கூடுமோ. 5997

௧00 வெறுப்புண் டாய ஒருத்தியை வேண்டினால்
மறப்புண் டாணபின் வாழ்கின்ற வாழ்வினில்
உறுப்புண் டாய்மிக ஓங்கிய நாசியை
அறுப்புண் டால்அது அழகெனல் ஆகுமோ. 5999

௧0௧ ஓத நீர்உல காண்டவர் உன்துணைப்
போத நீதியர் ஆருளர் போயினர்
வேத நீதி விதிவழி மேல்வரும்
காதல் நீஅறத் தெல்லை கடத்தியோ. 5998

௧0௨ பாரை நூறுவ பற்பல பொற்புயம்
ஈரை நூறு தலைஉள என்னினும்
ஊரை நூறு கடுங்கனல் உட்பொதி
சீரை நூறவை சேமம் செலுத்துமோ. 6000

௧0௩ புரம் பிழைப்பரும் தீப்புகப் பொங்கினால்
நரம் பிழைத்தநின் பாடலில் நல்கிய
வரம் பிழைக்கு மறைபிழை யாதவன்
சரம் பிழைக்கும்என் றெண்ணுதல் சாலுமோ. 6001

௧0௪ ஈறி னுளக எஞ்சலில் நல்திரு
நூறின் எய்திடும் எஃகின் நுழைதியோ
வேறும் இந்நகை ஆய வினைத்தொழில்
தேறி னைப்பல காமிக்கும் செவ்வியோய். 6002

௧0௫ பிறந்து ளார்பிற வாத பெருந்தவம்
சிறந்து ளார்பெரும் தேவர்க்கும் தேவராய்
இறந்து ளார்பலர் யாரும் இராமனை
மறந்து ளார்உள ராகிலர் வாய்மைபால். 6003

௧௦௬ ஆத லால்தன் அரும்பெறற் செல்வமும்
ஓது பல்கிளை யும்உயி ரும்உறச்
சீதை யைத்தரு கென்னெனச் செப்பினான்
சோதி யான்மகன் நிற்கென்று சொல்லினான். 6004

௧௦௭ என்ற லும்இவை சொல்லிய தெற்கொரு
குன்றின் வாழும் குரங்குகொ லாம்இது
நன்று நன்றென மாநகை செய்தனன்
வென்றி என்றொன்று தான்அன்றி வேறிலான். 6005

௧௦௮ குரக்கு வார்த்தையும் மானிடர் கொற்றமும்
இருக்க நிற்கநீ என்கொல் அடாஇரும்
புரத்தி னுள்தரும் தூது புகுந்தபின்
அரக்க ரைக்கொன்ற த°துரை யாய்என்றான். 6006

௧௦௯ காட்டு வார்இன்மை யால்கடி காவினை
வாட்டி னேன்என்னைக் கொல்லவந் தார்களை
வீட்டி னேன்பின்னை மென்மையி னால்உன்தன்
மாட்டு வந்தது காணும் மதியினால். 6007

௧௧௦ என்னு மாத்திரத் தீண்டெரி நீண்டுக
மின்னும் வாள்எயிற் றன்சினம் வீங்கினான்
கொன்மின் என்றனன் கொல்லியர் சேர்தலும்
நின்மின் என்றனன் வீடணன் நீதியான். 6008

௧௧௧ ஆண்டெ ழுந்துநின் றண்ணல்அ ரக்கனை
நீண்ட கையின் வணங்கினன் நீதியாய்
மூண்ட கோபம் முறைய தன் றும்என
வேண்டும் மெய்உறை என்னவி ளம்பினான். 6009

௧௧௨ *அந்தணன் உலகம்மூன்றும் ஆதியின் அறத்தின் ஆற்றல்
தந்தயன் மரபின் வந்தாய் தவநெறி ஆய தக்கோய்
இந்திரன் திருவை மாற்றும் இறைவநீ இயம்பு தூது
வந்தனன் என்ற பின்னும் கோறியோ மறைகள் வல்லோய்

௧௧௩ பூதலப் பரப்பின் அண்டப் பொகுட்டிடைப் புறத்துப் பொய்தீர்
வேதமுற் றுயர்ந்த வைப்பின் வேறுவே றிடத்தின் வேந்தர்
மாதரை கொலைசெய் தார்கள் உளர்என வரினும் வந்த
தூதரைக் கொன்று ளார்கள் யாவரே தொல்லை நல்லோர். 6011

கக௪ பகைப்புலன் அணுகி உற்றார் பகர்ந்தது பகர்ந்து பற்றார்
மிகைப்புலன் அடக்கி மெய்ம்மை விளம்புதல் விரதம் பூண்ட 6012
தகைப்புலத் தருமத் தோரைக் கோறலில் தக்கார் யார்க்கும்
நகைப்புலம் பிறிதுண் டாமோ நம்குலம் நவைஇன் றாமே.

கக௫ முத்தலை எஃகன் மற்றை முராந்தகன் முனிவன் முன்னோர்
அத்தலை நம்மை நோனா அமரர்க்கும் நகையிற் றாமால்
எத்தலை உலகம் காக்கும் வேந்தனின் மாற்றோர் ஏவ
இத்தலை எய்தி னானைக் கொல்லுதல் இழுக்கம் இன்னும்.

கக௬ இளையவள் தன்னைக் கொல்லா திருசெவி மூக்கோ டீர்ந்து
விளைவுரை என்று விட்டார் வீரராய் மெய்ம்மை பார்ப்பார்
களைதியால் ஆவி நண்பால் இவன்வந்து கண்ணில் கண்ட
அளவுரை யாமல் செய்தி ஆதிஎன் றறியச் சொன்னான்.

கக௭ *நல்லதுரைத் தாய் நீநம்பி இவன்தான் நவைசெய் தானேனும்
கொல்லல் பழுதே போய்அடா கூறிக் கொணர்தி கடிதென்னத்
தொல்லைவாலை மூலமுறச் சுட்டு நகரைச் சூழ்போக்கி
எல்லை கடக்க விடுமின்கள் என்றான் நின்றார் இரைத்தெழுந்தார்.

கக௮ ஆய காலை அயன்படையோ டிருப்ப [1]ஆகா கணவிடுகை
தூய பாசம் எனப்பலவும் கொணர்ந்து பிணிமின் தோள்என்னா
மேய தெய்வப் படைக்கலத்தை விதியின் மீட்டான் போர்வென்றான்
ஏயெனாமுன் இடைபுக்குத் தொடைவன் கயிற்றால் பிணித் தீர்ப்பான்.

கக௯ நாட்டின் நகரின் நடுவுள்ள கயிறு நவிலும் தகையனவோ
வீட்டின் ஊசல் நெடும்பாசம் அற்றதேரும் விசி மறந்த
வாட்டும் புரவி பயிலாயம் எல்லாமருங்கும் தொடையிழந்த
பூட்டும்வல்லி முதலாயபுரசை இழந்த போரானை. 6017

க௨0 மண்ணில் கண்ட வானவரை வலியில் கவர்ந்த வரம்பெற்ற
எண்ணற்கரிய ஏனையரை இகலில் பறித்த தமக்கியைந்த
பெண்ணிற் கமைந்த மங்கலத்தில் பிணித்தசயிறே இடைபிழைத்த
கண்ணில் கண்ட வன்பாசம் எல்லாம் இட்டுக் கட்டினார்.

க௨க கடவுள் படையை கடந்தறக்கின் ஆணை கடந்தேன் ஆகாமே
விடுவித் தளித்தார் தேவரே வென்றேன் இன்றே இவர்வென்றி
சுடுவிக் கின்ற திவ்வூரைச் சுடுகென் றுரைத்த துணிவென்று
நடுவுற் றையன் உறநோக்கி முற்றும் உவந்தான் நவை அற்றான்.

பிரதி 1 ஆக்கர்

கஉஉ நொய்ய பாசம் புறம்பிணிப்ப நோன்மை இல்லான் போல்நடங்கி
வெய்ய அரக்கர் புறத்தலைப்ப வீடும் உணர்ந்தே விசைவில்லான்
ஐயன் விஞ்சை தனைஅறிந்தும் அறியா தான்போல் அவிஞ்சைஎனும்
பொய்யை மெய்யே நடிக்கின்ற யோகி போன்றான் போகின்றான்.

கஉ௩ வேந்தன்கோயில்வாயில்தொறும்விரைவில்கடந்துவெள்ளிடையில்
போந்து புறநின் றிரைக்கின்ற பொறைதீர் மறவர் புடைசுற்ற
ஏந்து நெடுவால் கிழிசுற்றி முற்றுந் தோய்த்தார் இழுதெண்ணெய்
காந்து கடுந்தீ கொளுத்திப் பின் ஆர்த்தார் அண்டம் கடிகலங்க.

கஉச ஒக்க ஒக்க உடன்விசித்த உலப்பிலாத உடற் பாசம்
பக்கம் பக்கம் இரு கூறாய் நூறா யிரவர் பற்றினர்
புக்க படைஞர் புறங் காப்போர் புணரிக்கணக்கர் புறம் செல்வோர்
திக்கின் அளவாய் முன்நின்று காண்போர்க் கெல்லை தெரிவரிதால்,

கஉ௫ அந்தண் நகரும் கடிகாவும் அழிவித் தக்கன் முதலோரைச்
சிந்தநூறிச் சீதையொடு பேசி மனிதர் திறம்செப்ப
வந்த குரங்குக் குற்றதனை வம்மின் காண வம்மின்என
தந்தம்தந்தம் தெருவு தொறும் யாரும் அறியச் சாற்றினர். 6023

கஉசு ஆர்த்தார் அண்டத் தப்புறத்தும் அறிவிப்பார்போல் அங்கோர்டிங்
கீர்த்தார் முரசம் எற்றினர் இடித்தார் தெழித்தார் எம்மருங்கும்
பார்த்தார் ஓடிச் சனகிக்குப் பகர்ந்தார் அவளும் உயிர்பதைத்தாள்
வேர்த்தாள்உலர்ந்தாள்விம்மினள்விழுந்தாள்அழுதாள்வெய்துயிர்த்தாள்.

கஉஎ தாயே அனைய கருணையோன் துணையே ஏதும் தகவில்லா
நாயே அனைய வல்லரக்கன் நலியக் கண்டால் நல்காயோ
நீயே உலகுக் கொரு சான்று நிற்கே தெரியும் கற்பினல்
தூயேன் என்னில் தொழுகின்றேன் எரியே அவனைச் சுடல்என்றாள்.

கஉஅ *வெளுத்த வெண் ணகைஅவள் விளம்பும் எல்லையில்
ஒளித்தவெங் கனலவன் உள்ளம் உட்கினன்
தளிர்த்தன மயிர்ப்புறம் சிலிர்ப்பத் தன்மையால்
குளிர்த்ததக் குரிசில்வால் என்பு கூரவே. 6026

கஉகூ *மற்றினிப் பலவென் வேலை வடவனல் புவிவ ளாய
கற்றைவெம் கனலி மற்றைக் காயத்தீ முனிவர் காக்கும்
முற்றுறு மும்மைச் செந்தீ முப்புரம் முருங்கச் சுட்ட
கொற்றவன் நெற்றிக்கண்ணில் வன்னியும் குளிர்ந்த தன்றே.

௧௩௦ அண்டமும் கடந்தான் அங்கை அனலியும் குளிர்ந்த தங்கிக்
குண்டமும் குளிர்ந்த மேகத் துரும்எலபம் குளிர்ந்த கொற்றச்
சண்டவெம் கதிர்கள் ஆகித் தழங்கிருள் விழுங்கும் தாவின்
மண்டலம் குளிர்ந்த மீளா நரகமும் குளிர்ந்த மாதோ.

௧௩௧ வெற்பினால் இயன்ற தன்ன வாலினை விளங்கும் செந்தீ
நிற்பினும் சுடாது நின்ற நீர்மையை நினைந்து நோக்கி
அற்பினார் அறுத உள்ளத் தனுமனும் சனகன் பாவை
கற்பினால் இயன்ற தென்னப் பெரியதோர் களியன் ஆனான். 6029

௧௩௨ அற்றைஅவ் இரவில் தான்தன் அறிவினால் முழுதும் உள்ளப்
பெற்றிலன் எனினும் ஆண்டொன் றுள்ளது பிழையுறாமல்
மற்றுறு பொறிமுன் செல்ல மறைந்துசெல் அறிவை மானக்
கற்றிலா அரக்கர் தாமே காட்டலில் தெரியக் கண்டான். 6930

௧௩௩ முழுவதும் தெரிய நோக்கி முற்றும்ஊர் முடியச் சென்றான்
வழுவுவ காலம் ஈதென் றெண்ணினன் வலியில் பற்றித்
தழுவினர் இரண்டு நூறா யிரம்புயத் தடக்கைத் தாம்போ
டெழுவன நால விண்மேல் எழுந்தனன் விழுந்த எல்லாம். 6931

௧௩௪ இற்றவாள் அரக்கர் நூறா யிரவரும் இழந்த தோளார்
முற்றினர் உலந்தார் ஐயன் மொய்ம்பினோ டுலைய மூழ்கச்
சுற்றிய கயிற்றி னோடும் தோன்றுவான் அரவின் சுற்றம்
பற்றிய கலுழன் என்னப் பொலிந்தனன் விசும்பின் பாலான்.

௧௩௫ துன்னலர் புரத்தை முற்றும் சுடுதொழில் தொல்லை யோரும்
பன்னிய பொருளே நாணப் பாதகர் இருக்கை பாற
மன்னனை வாழ்த்தி வாழ்த்தி வயங்கெரி மடுப்பன் என்னாப்
பொன்நகர் மேலே தன்போர் வாலினைப் போக விட்டான். 6033

௧௩௬ அப்புறழ் வேலை சூழும் அலங்குபேர் இலங்கை தன்னை
எப்புறத் தளவும் தீய ஒருகணத் தெரித்த கொட்பால்
துப்புறழ் மேனி அண்ணல் மேருவில் குழைத்த தோளான்
முப்புரத் தெய்த கோலை ஒத்தது மூரிப் போர்வால்.

௧௩௭ வெள்ளியில் பொன்னின்ஆக விளங்கும்பன் மணியின் விஞ்சை
தெள்ளிய கடவுள் தச்சன் கைமுறை திருந்தச் செய்த
தள்ளறு மனைகள் தோறும் முறைமுறை தாவிச் சென்றான்
ஒள்ளெரி யோடுங் குன்றத் தூழிவீழ் உருமோ டொப்பான் 6035

௧௮ நீல்நிற நிருதர் யாண்டும் நெய்பொழி வேள்வி நீக்கப்
பால்வரும் பசியன் அன்பால் மாருதி வாலைப் பற்றி
ஆலம்உண் டவன்நின் றாட்ட உலகெலாம் அவியின் உண்ணும்
காலமே என்ன மன்னோ கனலியும் கடிதின் உண்டான்.

௧௪. பிணிவிடு படலம் முற்றும்.

௰௫. இலங்கை யெரியூட்டு படலம்.

௧ கொடியைப் பற்றி விதானம் கொளுத்தியே
நெடிய தூணைத் தடவி நெடுஞ்சுவர்
முடியச் சுற்றி முழுதும் முருக்கிற்றால்
கடிய மாமனை தோறும் கடுங்கனல். 6037

௨ வாசல் இட்ட எரிமணி மாளிகை
மூச முட்டி முழுதும் முருக்கலால்
ஊசல் இட்டன ஓடி உலைந்துளை
பூசல் இட்ட திரியப் புரம்எலாம். 6038

௩ மணியின் ஆய வயங்கொளி மாளிகை
பணியிற் செஞ்சுடர்க் கற்றை பரத்தலால்
திணிகொள் தீஉற்ற துற்றில தேர்கிலார்
அணிவ ளைக்கைநல் லாரல மந்துளார். 6039

௪ வான கத்தை நெடும்புகை மாய்த்ததால்
போன திக்கறி யாதுபு லம்பினர்
தேன கத்து மலர்பல சிந்திய
கான கத்து மயில்அன்ன காட்சியார். 6040

௫ கூய்க்கொ ழும்புனல் குஞ்சியிற் கூந்தலின்
மீச்சொ ரிந்தனர் மாதரும் வீரரும்
ஏய்த்த தன்மையி னால்எரி இன்மையும்
தீக்கொ ழுந்தின வும்தெரி யாமையால். 6041

௬ இல்லில் தங்கும் வயங்கெரி யாவையும்
சொல்லில் தீர்ந்தன போல்வருந் தொல்உருப்
புல்லிக் கொண்டன மாயைப் புணர்ப்பறக்
கல்லித் தம்இயல் பெய்தும் கருத்தர்போல். 6042

எ ஆய தங்கோர் குறள்உரு வாய்அடித்
தாப ளந்துல கங்கள்தரக் கொள்வான்
மீயெ ழுந்த கரியவன் மேனியில்
போயெ ழுந்து பரந்தது வெம்புகை. 6043

அ நீல நின்ற நிறநிலை கீழ்நிலை
மாலின் வெஞ்சின ஆனையை மாறுவ
மேல்வி ழுந்தெரி முற்றும் விழுங்கலால்
தோல்உ ரிந்து கழன்றன தோல்எலாம். 6044

கூ மீதி மங்கலந் தால்அன்ன வெம்புகைச்
சோதி மங்கலத் தீயொடும் சுற்றலால்
வீதி மங்குலின் வீழ்புனல் மீப்படர்
ஓதி மங்களின் மாதர் ஒடுங்கினர். 6045

க0 பொடித் தெழுந்த பெரும்பொறி போவன
இடிக்கு லங்களின் வீழ்வன எங்கணும்
வெடித்த வேலை வெதும்பிட மீன்குலம்
துடித்து வெந்து புலர்ந்துயிர் சோர்ந்தவால். 6046

கக பருகு தீமடுத் துள்ளுறப் பற்றலால்
அருகு நீடிய ஆடகத் தாரைகள்
உருகி வேலையின் ஊடுபுக் குற்றன
திருகில் பொன்நெடும் தண்டில் திரண்டவால். 6047

கஉ உரையின் முந்துல குண்ணும் எரியதால்
வரைநி வந்தன பன்மணி மாளிகை
நிரையின் நீள்நெடும் சோலையின் நிற்குமோ
தரையும் வெந்தது பொன்எனும் தன்மையால். 6048

கந கல்வி னும்வலி தாம்புகைக் கற்றையால்
எல்வி பெற்ற திமையவர் நாட்டிடம்
வல்லி போல நிமிர்ந்தன மாமணிச்
சில்லி யோடும் திரண்டன தேர்எலாம். 6049

கச பேய மன்றெனில் அன்று பிறங்கெரி
மாயர் உண்ட நறவை மடுத்தவால்
தூயர் என்றிவர் வைகிடம் துன்னினர்
தீயர் அன்றியும் தீய்மையும் செய்வரால். 6050

கரு தழுவி லங்கை தழங்கெரி தாய்ச்செல
வழுவில் வேலை உலையின் மறுகின
எழுகொ ழும்சுடர்க் கற்றைசென் றெய்தலால்
தழுவு தண்புனல் மேகம் கொதித்தவே. 6051

கசு ஊனில் ஓடும் எரியொ டுயங்குவார்
கானில் ஓடும் நெடும்புனல் காணுறு
வானில் ஓடும் மகளிர் மயங்கினர்
வேனில் ஓடரும் தேரிடை வீழ்ந்தனர். 6052

கஎ தேன வாம்பொழில் தீப்படச் சிந்திய
சோனை மாமலர்த் தும்பி தொடர்ந்தயல்
போன தீச்சுடர் புண்டரி கத்தடம்
கானம் ஆம்என வீழ்ந்து கரிந்தவே. 6053

கஅ நற்க டம்மிது நம்உயிர் நாயகர்
மற்க டந்தெற மாண்டனர் வாழ்விலம்
இற்க டந்தினி ஏகலம் யாம்என
விற்க டந்த நுதலியர் வீடினர். 6054

க௯ பூக்க ரிந்து பொறிப்பொறி யாய்அடை
நாக்க ரிந்து சினைநறும் சாம்பராய்
மேக்கெ ரிந்து நெடும்பணை வேர்உறக்
காக்க ரிந்து கருங்கரி ஆனவே. 6055

உ0 கார் முழுக்க எழுங்கனல் கற்றைபோய்
ஊர் முழுக்க வெதும்பி உருகின
சோர் வொழுக்க மருங்கையில் துன்னுபொன்
வேர் விழுப்பது போன்றது விண்எலாம். 6056

உக நெருக்கி மீமிசை ஓங்கு நெருப்பழல்
செருக்கும் வெண்கதிர்த் திங்களைச் சேண்உற
உருக்கி மெய்யின் அமுதம் உகுத்தலால்
அரக்க ருஞ்சிலர் ஆவிபெற் றார்அரோ. 6057

உஉ பருதி பற்றி நிமிர்ந்தெழு பைங்கனல்
கருதி முற்றும் எரிந்தெழு கார்மழை
அருகு சுற்றும் இருந்தைய தாய்அகல்
உருகு பொற்றிரள் ஒத்தது லாங்கதிர். 6058

உ௩ தளைகொ ழுந்திய தாவெரி தாம்பணி
முளைகொ ழுந்திமு கத்திடை மொய்த்தபோர்
உளைகொ ழுந்தள ரிந்துலை வுற்றன
வளைகு ளம்பின மணிநிற வாசியே. 6059

உ௪ எழுந்து பொற்றலத் தேறலில் நீள்புகைக்
கொழுந்து சுற்ற உயிர்ப்பிலர் கோள்உற
அழுந்து பட்டுளர் ஒத்தயர்ந் தார்அழல்
விழுந்து முற்றினர் கூற்றை விழுங்குவார். 6060

உ௫ கோசி கத்தினில் உற்றகொ ழுங்கனல்
தூசில் உத்தரி கத்தொடும் சுற்றுறு
வாச மைக்குழல் பற்ற மயங்கினர்
பாசி மைப்பர வைப்படர் அல்குலார். 6061

உ௬ *நிலவு கக்கிய துகிலினை நெருப்புண நிருதர்
இலவி னும்சில முத்துள எனும்நகை இளையார்
புலவி யின்கரை கண்டவர் அமுதகப் புணரும்
கலவி யின்கரை கண்டிலர் மண்டினர் கனல்மேல். 6062

உ௭ பஞ்ச ரத்தொடு பசுநிறக் கிளிவெந்து பதைப்ப
அஞ்ச னக்கண்ணின் அருவிநீர் முலையின்வந் தலைப்பக்
குஞ்ச ரத்தன கொழுநரைப் தழுவுறுங் கொதிப்பான்
மஞ்சி டைப்புகு மின்னெனப் புகையிடை மறைந்தார். 6063

உ௮ வரையி னைப்புரை மாடங்கள் எரிபுக மகளிர்
புரையில் பொற்கலன் மின்னிடை விசும்பிடைப் போவார்
கரையின் உட்புகைப் படலையில் கரந்தனர் கவின்கத்
திரையின் உட்பொதி சித்திரப் பாவையின் செயலார். 6064

உ௯ அகரு வும்நறும் சாந்தமும் முதலிய அனேகம்
புகரி னன்மரத் துறுவெறி உலகெலாம் போர்ப்பப்
பகரும் ஊழியில் காலவெம் கொடுங்கனல் பருகும்
மகர வேலையில் வெந்தன நந்தன வனங்கள். 6065

௩0 மினல் பரந்தெழும் கொழும்சுடர் இலங்கைஊர் விழுங்கி
நினைவ ரும்பெரும் திசையுற விரிகின்ற நிலையால்
சினைப ரந்தெரி சேர்ந்திலா நின்றவும் சிலவெங்
கனல்ப ரந்தவுந் தெரிந்தில கற்பகக் கானம். 6066

௬௧ மூளும் வெம்புகை முற்றுறச் சுற்றிய முழுநீர்
மாளும் வண்ணமா மலைநெடுந் தலைதொறும் வழங்கிப்
பூளை வீஎனப் போவன புணரியில் புனலின்
மீள யாவையும் தெரிந்தில முகில்கணம் மிசையே. 6067

௬௨ மிக்க வெண்புகை விழுங்கலில் வெள்ளியங் கிரியும்
ஒக்க வெற்பினோ டன்னமும் காக்கையின் உருவும்
பக்க வேலையின் படியது பாற்கடல் முடிவில்
திக்க யங்களும் கயங்களும் வேற்றுமை தெரியா. 6068

௬௩ கரிந்து சிந்திடக் கடுங்கனல் தொடர்ந்துடல் கதுவ
உரிந்த மெய்யினர் ஓடினார் நீரிடை ஒளித்தார்
விரிந்த கூந்தலும் குஞ்சியும் மிடைதலில் தானும்
எரிந்து வேகின்ற தொத்தன எறிதிரைப் பரவை. 6069

௬௪ மருங்கின் மேல்ஒரு மகவுகொண் டொருதனி மகவை
இருங்கை யால்பற்றி மற்றொரு மகவுபின் றரற்ற
நெருங்கி நீள்நெடு நிறைகுழல் சுறுக்கொள நீங்கிக்
கருங்க டல்தலை வீழ்ந்தனர் அரக்கியர் கதறி. 6070

௬௫ வில்லும்வே லும்வெங்குந்தமும் முதலிய விறகாய்
எல்லுடைச் சுடர் எனப்புகல் எஃகெலாம் உருகித்
தொல்லை நல்நிலை தொடர்ந்தபேர் உணர்வினர் தோலாச்
சில்லிஉண் டையில் திரண்டன படைக்கலத் திரள்கள். 6071

௬௬ செய்தொ டர்க்கன வல்லியும் புரசையும் சிந்தி
நொய்தில் இட்டவன் தறிபறித் துடல்எரி நுழைய
மொய்த டச்செவி அகற்றிய வாலினை முறுக்கிக்
கைஎடுத் தழைத் தோடின ஓடைவெங் கரிமா. 6072

௬௭ வெருளும் வெம்புகைப் படலையின் மீச்செல வெருவி
இருளும் வெங்கடல் விழுந்தன எழுந்தில பறவை
மருளும் மீன்கணம் விழுங்கிட உலந்தன மனத்தோர்
அருளிலில் வஞ்சனைத் தஞ்சம்என் றடைந்தனர் அனைய.

௬௮ நீரை வற்றிடப் பருகிமா நெடுநிலம் தடவித்
தாரு வைச்சுட்டு மலைகளைத் தழல்செய்து தனிமா
மேரு வைப்பற்றி எரிகின்ற காலவெங் கனல்போல்
ஊரை முற்றுவித் திராவணன் மனைபுக்க துயர்தீ. 6074

௩௯ வான மாதரும் மற்றுள மகளிரும் மறுகிப்
போன போனதிக் கறிவரும் அறிவிலார் போனார்
ஏனை நின்றவர் எங்கணும் இரிந்தனர் இலங்கைக்
கோன வானவர் பதிகொண்ட நாளெனக் குலைந்தார். 6075

௪0 நாவி யும்நறும் கலவையும் கற்பகம் நக்க
பூவும் ஆரமும் அகிலும்என் றினையன புகையத்
தேவு தண்மழைச் செறிபெரும் குலம்எனத் திசையில்
பாவை மார்நறுங் குழல்களும் பரிமளம் பரந்த. 6076

௪௧ சூழும் வெம்சுடர் தொடர்ந்திட யாவரும் தொடரா
ஆழி வெம்சினத் தாண்தொழில் இராவணன் மனையில்
ஊழி வெம்கனல் உண்டிட உலகம்என் றுயர்ந்த
ஏழும் வெந்தென எரிந்தன நெடுநிலை ஏழும். 6077

௪௨ பொன்தி ருத்திய காதலின் இராவணன் புனைதீர்
குன்றம் ஒத்துயர் தடநெடு மாநிலைக் கோயில்
நின்று துற்றெரி பருகிட நெறியுற உருகித்
தென்தி சைக்கும்ஓர் மேருஉண் டாம்எனத் தெரிந்த. 6078

௪௩ அனைய காலையின் அரக்கனும் அரிவையர் குழுவும்
புனைம ணிப்பொலி புட்பக விமானத்திற் போனார்
நினையு மாத்திரத் தியாவரும் நீங்கினர் நினையும்
வினையி லாமையில் வெந்தன விலங்கன்மேல் இலங்கை. 6079

௪௪ ஆழித் தேரவன் அரக்கனை அழல்எழ நோக்கி
ஏழுக் கேழென அடுக்கிய உலகங்கள் எரியும்
ஊழிக் காலம்வந் துற்றதோ பிரிதுற்ற துண்டோ
பாழித் தீச்சுட வந்ததென் நகர்எனப் பகர்ந்தான். 6080

௪௫ கரங்கள் கூப்பினர் தம்கிளை திருவொடுங் காணார்
இரங்கு கிளறவல் அரக்கரி தியம்பினர் இறையோய்
தரங்க வேலையின் நெடிதின்வால் இட்டன தழலால்
குரங்கு சுட்டது என்றலும் இராவணன் கொதித்தான்.

௪௬ இன்று புன்தொழில் குரங்குதன் வலியினால் இலங்கை
நின்று வெந்துமா நீறெழு கின்றது நெருப்புத்
தின்று தேக்கிடு கின்றது தேவர்கள் சிரிப்பார்
நன்று நன்றுபோர் இராவணன் வலியென நக்கான். 6082

௪௭ *உண்ட நெருப்பைக்
கண்டனர் பற்றிக்
கொண்டணை கென்றான்
அண்டரை வென்றான். 6083

௪௮ உற்றக லாமுன்
செற்ற குரங்கைப்
பற்றுமின் என்றான்
முற்றமு னிந்தான். 6084

௪௯ சார்அயல் நின்றார்
வீரர்வி ரைந்தார்
நேருதும் என்றார்
தேரினர் சென்றார். 6085

௫௦ எல்லை இகந்தார்
வில்லர் வெகுண்டார்
பல்லதி காரத்
தொல்லை பயந்தார். 6086

௫௧ *நீர்கெழு வேலை நிமிர்ந்தார்
தார்கெழு தானை சமைந்தார்
போர்கெழு மாலை புனைந்தார்
ஓர்எழு வீரர் உயர்ந்தார். 6087

௫௨ விண்ணினை வேலை விளிப்பார்
மண்ணினை ஓடி வளைந்தார்
அண்ணலை நாடி அணைந்தார்
கண்ணினில் வேறயல் கண்டார். 6088

௫௩ பற்றுதிர் பற்றுதிர் என்பார்
எற்றுதிர் எற்றுதிர் என்பார்
சுற்றுதிர் சுற்றுதிர் என்பார்
முற்றினர் முற்றும் முனிந்தார். 6089

௫௪ ஏல் கொடு வஞ்சர் எதிர்ந்தார்
கால்கொடு கைகொடு கால்போல்
வேல்கொடு கோலினர் வெந்தீ
வால்கொடு தானும் வளைந்தான். 6090

ருரு பாதவம் ஒன்று பகுத்தான்
மாதிரம் வாலின் வளைத்தான்
மோதினன் மோதி முனிந்தார்
ஏதியும் நாளும் இழந்தார். 6091

ருசு நூறிட மாருதி நொந்தார்
ஊறிட ஊனொடு புண்ணீர்
சேறிட ஊர்இடு செந்தீ
ஆறிட ஓடின காறாய். 6092

ருஎ தோற்றிலர் துஞ்சினர் அல்லால்
ஏற்றிகல் வீரர் எதிர்ந்தார்
காற்றின் மகன்கலை கற்றான்
கூற்றினும் மும்மடி கொன்றான். 6093

ருஅ மஞ்சுறழ் மேனியர் வன்தோள்
மொய்ம்பினர் வீரர் முடிந்தார்
ஐம்பதி னாயிரர் அல்லார்
பைம்புனல் வேலை படிந்தார். 6094

ருகூ தோய்த்தனன் வாலதி தோயக்
காய்த்துயர் வேலை கலந்தார்
போய்த்திலர் பொன்றினர் போனார்
ஏய்த்தனர் வீரர் எதிர்ந்தார். 6095

கூ0 சுற்றினர் தேரினர் தோலா
வில்திறல் வீரர் விரைந்தார்
எற்றினன் மாருதி எற்ற
உற்றெழு வீரர் உலைந்தார். 6096

கூக விட்டுயர் விஞ்சையர் வெந்தீ
வட்ட முலைத்திரு வைகும்
புள்திரள் சோலை புறத்தும்
சுட்டிலை என்பது சொன்னார். 6097

கூஉ வந்தவர் சொல்ல மகிழ்ந்தான்
வெந்திறல் வீரன் வியந்தான்
உய்ந்தனன் என்ன உயர்ந்தான்
பைந்தொடி தாள்கள் பணிந்தான். 6098

௯௩. பார்த்தனள் சானகி பாரா
கூர்த்தெரி மேனி குளிர்ந்தாள்
வார்த்தைஎன் வந்தனை என்னாப்
போர்த்தொழில் மாருதி போனான். 6099

௯௪ தெள்ளிய மாருதி சென்றான்
கள்ள அரக்கர்கள் கண்டால்
எள்ளுவர் பற்றுவர் என்னா
ஒள்ளெரி யோனும் ஒளித்தான். 6100

௧௫ இலங்கை யெரியூட்டு படலம் முற்றும்.

௰௬. திருவடி தொழு படலம்.

௧ நீங்குவன் விரைவின் என்னும் நினைவினன் மருங்கு நின்ற
ஆங்கொரு குடுமிக் குன்றை அருக்கனில் அணைந்த ஐயன்
வீங்கினன் உலகை எல்லாம் விழுங்கினன் என்ன வீரன்
பூங்கழல் தொழுது வாழ்த்தி விசும்பிடைக் கடிது போனான்.

௨ மைநாகம் என்னநின்ற குன்றையும் மரபின் எய்திக்
கைநாகம் அனையோன்உற்ற துணர்த்தினன்கணத்தின்காலைப்
பைநாக வரையின் வீரர் தன்நெடு வரவு பார்க்கும்
கொய்நாகம் நறுந்தேன் சிந்தும் குன்றிடைக் குதியும்கொண்டான்.

௩. போய்வரும் கருமம்முற்றிற் றென்பதோர் பொம்மல் பொங்க
வாய்வெரு கின்ற வென்றி வானர வீரர் மன்னோ
பாய்வரு நீளத் தாங்கண் இருந்தனர் பறவைப் பார்ப்புத்
தாய்வரக் கண்டதன்ன உவகையில் தளிர்த்தார் அம்மா.

௪ அழுதனர் சிலவர் முன்னின் றார்த்தனர் சிலவர் அன்பில்
தொழுதனர் சிலவர் ஓடித் துள்ளினர் சிலவர் அள்ளி
முழுதுற விழுங்குவார்போல் மொய்த்தனர் சிலவர் முற்றும்
தழுவினர் சிலவர் கொண்டு சுமந்தனர் சிலவர் தாங்கி. 6104

௫ தேனொடு கிழங்குங் காயும் நறியன அரிதில் தேடி
மேன்முறை வைத்தோம் அண்ணல் நுகர்ந்தனை மெலிவுதீர்தி
மானவாள் முகமே எங்கட் குரைத்தது மாற்றம் என்னாத்
தாம்நுகர் சாகம் எல்லாம் முறைமுறை சிலவர் தந்தார். 6105

சு தாள்களில் மார்பில் தோளில் தலைகளில் தடக்கை தம்மில்
வாள்களில் வேலில் வாளி மழைகளில் வகிர்ந்த புண்கள்
நாள்கள்மேல் உலகில் சென்ற நம்பிதன் கண்ண வாக
ஊழ்கொள நோக்கிநோக்கி உயிர்உக உயிர்த்து நொந்தார்.

எ வாலிகா தலனை முந்தி வணங்கினன் எண்ணின் மன்னைக்
கால்உற நோக்கிப் பின்னைக் கடன்முறை கடவோர்கெல்லாம்
மேல்உற இயற்றி ஆங்கண் இருந்திவண் இருந்தோர்க் கெல்லாம்
ஞாலநா யகன்தன் தேவி சொல்லினள் நன்மை என்றான். 6107

அ என்றலும் கரங்கள் கூப்பி எழுந்தனர் இறைஞ்சித் தாழ்ந்து
நின்றனர் உவகை பொங்க விம்மலால் கிமிர்ந்த நெஞ்சர்
சென்றனர் முதலாய் வந்த திறுதியாய்ச் செப்பற் பாலை
வன்திறல் உரவோய் என்னச் சொல்லினன் மருத்தின் மைந்தன்.

சு ஆண்தகை தேவி உள்ளத் தரும்தவம் அமையச் சொல்லிப்
பூண்டபேர் அடையா ளம்கைக் கொண்டதும் புகன்று போரில்
நீண்டவாள் அரக்கரோடு நிகழ்ந்ததும் நெருப்புச் சிந்தி
மீண்டதும் விளம்பான் செய்த வென்றியை விளம்பவெள்கி.

க0 பொருதமை புண்ணே சொல்ல வென்றமை போந்ததன்மை
உரைசெய ஊர்தீ இட்ட தோங்கிரும் புகையே ஓத
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர உணர்ந்தோம்பின்னர் என்இனிச் செய்தும்என்றார்

கக யாவதும் இனிவே றெண்ண வேண்டுவ திறையும் இல்லைச்
சேவகன் தேவி தன்னைக் கண்டது விரைவில் செப்பி
ஆவதவ் அண்ணல் உள்ளத் தருந்துயர் ஆற்ற லேயாம்
போவது புலமை என்னப் பொருக்கென எழுந்து போனார்.

கஉ ஏதுநாள் இறந்த சால வருந்தின திருந்த சேனை
ஆதலால் விரைவில் செல்லல் ஆவதென் றளிய எம்மைச்
சாதல்தீர்த் தளித்த வீர தலைமகன் மெலிவு தீரப்
போதும்நீர் முன்னர் என்றார் நன்றென அநுமன் போனான்.

கந முத்தலை எஃகி னேற்கும் முடிப்பரும் கருமம் முற்றி
வித்தகத் தூதன் மீண்ட திறுதியாய் விளைந்த தன்மை
அத்தலை அறிந்த தெல்லாம் அறைந்தனம் ஆழி யான்மாட்
டித்தலை நிகழ்ந்த எல்லாம் இயம்புவான் எடுத்துக் கொண்டாம்.

கச *கார்வரை இருந்தஅக் கதிரின் காதலன்
சீரிய சொல்களால் தெருட்டச் செங்கணான்
ஆருயிர் ஆயிரம் உடையன் ஆம்எனச்
சோர்தொறும் சோர்தொறும் உயிர்த்துத் தோன்றுவான்.

கரு தண்டலில் நெடுந்திசை மூன்றும் தாவினர்
கண்டிலம் மடந்தையை என்னும் கட்டுரை
உண்டுயிர் அகத்தென ஒறுக்க வும்உளன்
திண்திறல் அநுமனை நினையும் சிந்தையான். 6115

கசு ஆரியன் அருந்துயர்க் கடலுள் ஆழ்பவன்
சீரிய தன்றுநம் செய்கை தீர்வரும்
மூரிவெம் பழியொடு முடிந்த தாம்எனச்
சூரியன் புதல்வனை நோக்கிச் சொல்லினன். 6116

கஎ குறித்தநாள் இறந்தன குன்றத் தென்திசை
வெறிக்கருங் குழலியை நாடல் மேயினர்
மறித்திவண் வந்திலர் மாண்டு ளார்கொலோ
பிறித்தவர்க் குற்றது கூறு பெற்றியோய். 6117

கஅ மாண்டனள் அவள்இவண் மாண்ட வார்த்தையை
மீண்டவர்க் குரைத்தலின் விளிதல் நன்றெனப்
பூண்டதோர் துயரொடும் பொன்றி னார்கொலோ
தேண்டினர் இன்னமுந் திரிகின் றார்கொலோ. 6118

கசு கண்டனர் அரக்கரைக் கறுப்புக் கைமிக
மண்டமர் தொடங்கிய வஞ்சர் மாயை யால்
விண்டலம் மேயின ரோகொல் வேறிலாத்
தண்டலில் நெடுஞ்சிறைத் தளைப்பட் டார்கொலோ. 6119

உ0 கூறிய நாளவர் இருக்கை கூடலம்
ஏறின சூலம்என் றின்ப துன்பங்கள்
ஆறினர் அருந்தவம் அயர்கின் றார்கொலோ
வேறவர்க் குற்றதென் விளம்பு வாய்என்றான். 6120

உக என்புழி அனுமனும் இரவி என்பவன்
தென்புறத் துளன் எனத் தெரிவ தாயினன்
பொன்பொழி தடக்கைஅப் பொருவில் வீரனும்
அன்புறச் சிந்தையின் அமைய நோக்கினன். 6121

௨௨ எய்தினன் அனுமனும் எய்தி எந்தைதன்
மொய்கழல் தொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகம் தழீஇநெடிது இறைஞ்சி வைகினான். 6122

௨௩ திண்திறல் அவன்செயல் தெரிய நோக்கினான்
வண்டுறை ஓதியும் வலியள் மற்றிவன்
கண்டதும் உண்டவள் கற்பும் நன்றெனா
கொண்டனன் குறிப்பினால் உணரும் கொள்கையான். 6123

௨௪ ஆங்கவன் செய்கையை அளவை யாம்எனா
ஓங்கினன் வினையினான் விளைந்த துன்னினான்
வீங்கின தோள்புனல் மலர்க்கண் விம்மின
நீங்கின கருந்துயர் காதல் நீண்டதால். 6124

௨௫ கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை அலைகடல் இலங்கைத் தொன்னகர்
அண்டர்நா யகஇனித் தவிர்தி ஐயமும்
பண்டுள துயரும்என் றநுமன் பன்னினான். 6125

௨௬ *உன்பெருந் தேவி என்னும் உரிமைக்கும் உன்னைப்பெற்ற
மன்பெரு மருகி என்னும் வாய்மைக்கும் மிதிலை வேந்தன்
தன்பெரும் புதல்வி என்னும் தன்மைக்கும் தகைமை சான்ற
என்பெருந் தெய்வம் ஐய என்னினும் கேட்டி என்றான். 6126

௨௭ பொன்அல்ல தில்லைப் பொன்னை ஒப்பன பொறையின் நின்றாள்
தன்அல்ல தில்லைத் தன்னை ஒப்பன தனக்கு வந்த
நின்அல்ல தில்லை நின்னை ஒப்பவர் நினக்கு நேர்ந்தாள்
என்அல்ல தில்லை என்னை ஒப்பன எனக்கும் ஈந்தாள். 6127

௨௮ உன்குலம் உன்ன தாக்கி உயர்புகழ்க் கொருத்தி ஆன
தன்குலம் தன்ன தாக்கித் தன்னைஇத் தன்மை செய்த
வன்குலம் மறலிக் கீந்து வானவர் குலத்தை வாழ்வித்
தென்குலம் எனக்குத் தந்தாள் என்இனிச் செய்வதம்மா.

௨௯ விற்பெருந் தடக்கை வீர விலங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்.

௩௦ கண்ணினும் உளைநீ தையல் கருத்தினும் உளைநீ வாயின்
எண்ணினும் உளைநீ கொங்கை இணைக்குவை எண்ணில் ஓவா
அண்ணல்வெம் காமன் எய்த அயில்அம்பு துளைத்த ஆறாப்
புண்ணினும் உளைநீ நின்னைப் பிரிந்தமை பொருந்திற் றாமோ

௩௧ வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் ஒருசார் விண்தோய்
காலையும் மாலை தானும் இல்லது கனகக் கற்பச்
சோலைஅங் கதனுள் உம்பி புல்லினால் தொடுத்த தூய
சாலையுள் இருந்தாள் அய்ய தவம்செய்த தவமாம் தையல்.

௩௨ மண்ணொடுங் கொண்டு போனான் வான்உயர் கற்பி னாள்தன்
புண்ணிய மேனி தீண்ட அஞ்சுவான் உலகம் பூத்த
கண்ணகல் கமலத் தண்ணல் கருத்திலாள் தொடுதல் கண்ணில்
எண்ணரும் கூறும் யாக்கை என்பதோர் மொழியுண் டென்பான்.

௩௩ தீண்டிலன் என்னும் வாய்மை திசைமுகன் செய்த முட்டை
கீண்டில தனந்தன் உச்சி கிழிந்தில எழுந்து வேலை
மீண்டில சுடர்கள் யாவும் விழுந்தில வேதம் செய்கை
மாண்டில என்னும் தன்மை வாய்மையால் உணர்தி மன்னோ. 6133

௩௪ சோகத்தாள் ஆய நங்கை கற்பினால் தொழுதற் கொத்த
மாகத்தார் தேவி மாரும் வான்சிறப் புற்றார் மற்றைப்
பாகத்தாள் அல்லள் ஈசன் மகுடத்தாள் பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள் மாயன் ஆயிரம் மோலி யாளால். 6134

௩௫ இலங்கையை முழுதும் நாடி இராவணன் இருக்கை எய்திப்
பொலங்குழை அவரை எல்லாம் பொதுவுற நோக்கிப் போனேன்
அலங்குதண் சோலை புக்கேன் அவ்வழி அணங்கி னாளைக்
கலங்குதெண் திரையிற் றூய கண்ணீர்க் கடலுள் கண்டேன்

௩௬ அரக்கியர் அளவற் றார்கள் அமரர்தம் குழுவும் அஞ்ச
நெருக்கினர் காப்ப நின்பால் நெஞ்சமே அச்சம் நீக்க
இரக்கம்என் றொன்று தான்ஓர் ஏந்திழை வடிவம் எய்தித்
தருக்குயர் சிறைஉற் றன்ன தகைமையள் தமியள் அம்மா.

௩௭ தையலை வணங்கற் கொத்த இடம்பெறு தன்மை நோக்கி
ஐயநான் இருந்த காலை அலங்கல்வேல் இலங்கை வேந்தன்
எய்தினன் இரந்து கூறி இறைஞ்சினன் இருந்து நங்கை
வெய்துரை சொல்லச் சீறிக் கோறல்மேல் கொண்டு விட்டான்.

௩அ ஆயிடை அணங்கின் கற்பும் ஐயநின் அருளும் செய்ய
தூயநல் அறமும் என்றிங் கினையன தொடர்ந்து காப்பப்
போயினன் அரக்கி மாரைக் கொல்லுமின் போமின் என்றுங்
கேயினன் அவரெ லாம்என் மந்திரத் துறங்கி இற்றார்.

௩௯ அன்னதோர் பொழுதில் நங்கை ஆருயிர் துறப்பதாக
உன்னினள் கொடியொன் றேந்திக் கொம்பொடு முறைக்கச் சுற்றித்
தன்மணிக் கழுத்தில் சாத்தும் அளவையில் தடுத்து நாயேன்
பொன்னடி வணங்கி நின்று நின்பெயர் புகழ்ந்த போழ்தில். 6139

௪0 வஞ்சனை அரக்கர் செய்கை ஆமென மனக்கொண் டேயும்
அஞ்சன வண்ணத் தான்தன் பேர்உரைத் தளிய என்பால்
துஞ்சுறு பொழுதில் தந்தாய் துறக்கம்என் றுவந்து சொன்னாள்
மஞ்சன வண்ணக் கொங்கை வழிகின்ற மழைக்கண் நீராள், 6140

௪௧ அறிவுறத் தெரியச் சொன்ன பேர்அடை யாளம் ஐய
செறிவுற நோக்கி நாயேன் சிந்தையிற் றரிக்கும் தன்மை
குறிஉள எண்ணி வண்ண மோதிரம் காட்டக் கொண்டாள்
இறுதியின் உயிர்தந் தீயும் மருந்தொாத்த தனைய எந்தாய்.

௪௨ ஒரு கணத் திரண்டு கண்டேன் ஒளிமணி ஆழி ஊன்ற
திருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலும் செல்வநின்பால்
விரகம்என் பதனில் வந்த வெங்கொழுந் தீயினால் வெந்
துருகிய துடனே ஆறி வலித்தது குளிர்ப்புள் ளூற 6142

௪௩ வாங்கிய ஆழி தன்னை வஞ்சர்ஊர் வந்த தாம்என்
றுங்குபர் மழைக்கண் நீரால் ஆயிரம் கலசம் ஆட்டி
ஏங்கினள் இருந்த தல்லால் இயம்பலள் உயிர்ப்பு விட்டாள்
ஓங்கிய உவகை யோடும் முன்நின்ற ஊசல் நீங்கி. 6143

௪௪ அன்னவட் கடியன் உன்னில் பிரிந்தபின் அடுத்த தெல்லாம்
சொல்முறை அறியச் சொல்லித் தோகைநீ இருந்த சூழல்
இன்னதென் றறிகி லாமே இத்தனை தாழ்த்த தென்றேன்
மன்னநின் வருத்தப் பாடும் உணர்த்தினேன் உயிர்ப்பு வந்தாள்.

௪௫ இங்குள தன்மை எல்லாம் இயம்புதி இயம்பக் கேட்டாள்
அங்குள தன்மை எல்லாம் அடியனுக் கறியச் சொன்னாள்
திங்கள் ஒன் றிருப்பென் என்றாள் அன்னது தீர்ந்த பின்னர்
மங்குவன் உயிருண் டென்றுன் மலர்அடி சென்னி வைத்தாள்.

சகூ வைத்தபின் துகிலின் வைத்த மாமணிக் கரசை வாங்கிக்
கைத்தலத் தினிதின் ஈந்தாள் தாமரைக்கண்க ளார
வித்தக காண்டி என்று கொடுத்தனன் வேத நல்நூல்
உய்த்தன காலம் எல்லாம் புகழொடும் ஓங்கி நிற்பான். 6146

சஎ பையயப் பயந்த காமம் பரிணமித் துயர்ந்து பொங்கி
மெய்யுற வெதும்பி உள்ளம் மெலிவுறு நிலைமை விட்டாள்
ஐயனும் கலங்கி முன்னர் அங்கையால் பற்றும் நங்கை
கையென ஆயிற் றன்றே கைபுக்க மணியின் காட்சி. 6147

சஅ பொடித்தன ரோமம் மேன்மேல் பொழிந்தன கண்ணீர்பொங்கித்
துடித்தன மார்பும் தோளும் தோன்றின தமரென் றுன்னி
மடித்தது மணிவாய் வீரம் வருவது போவ தாகித்
துடித்தது மேனி என்னே காகுத்தன் தன்மை ஓர்வாம்.

சகூ ஆண்தகை அருக்கன் மைந்தன் ஐயகேள் அரிவை நம்பால்
காண்டலுக் கெளியள் ஆனாள் என்றலும் காலம் தாழ
ஈண்டினும் இருத்தி போலாம் என்றனன் என்ற லோடும்
தூண்திரண் டன்ன தோளான் பொருக்கென எழுந்து போனான்.

ருO எழுகவெம் படைகள் என்றான் என்றதோர் அளவில் எங்கும்
முழுமுர செற்றிக் கொற்ற வள்ளுவன் முடுக்க முந்திப்
பொழுதினில் வேலை ஏழும் புடைபரந் தென்னப் பொங்கி
வழுவலில் வெள்ளத் தானை தென்திசை வளர்ந்த தன்றே.

ருக வீரரும் விரைவில் போனார் விலங்கன்மேல் இலங்கை வெய்யோன்
சோர்விலா வலியும் ஊரின் பெருமையும் அரணும் துற்றக்
கார்நிறத் தரக்கர் தங்கள் கணிதமும் பிறவும் எல்லாம்
வார்கழல் அநுமன் சொல்ல வழிஇனி தெளிதில் செல்வார்.

ருஉ அன்னெறி இரண்டு நாளில் அங்கதன் முதலி னோர்கள்
பொன்னடி வணங்கி னரைப் புகழ்ந்துடன் பொருந்திப் போவார்
இன்னெடும் பழுவக் குன்றில் இன்னுழி இறுத்துப் பின்னர்
பன்னிரு பகலில் சென்று தென்திசைப் பாவை கண்டார். 6152

யிசா. திருவடி தொழுபடலம் முற்றும்.

சுந்தர காண்டம் முற்றும்.

இக்காண்டத்தில் காணும் பிழைகளுக்குரிய திருத்தங்கள்.

பாட்டெண்	வரி	பிழை	திருத்தம்
4939	3	வான்வமி	வான்வழி
4940	1	ஒழிஉற்றால்	ஒழிவுற்றால்
4966	4	வயின்றெரும்	வயின்றெறும்
4979	1	விஞ்சையர்	விஞ்சையர்
4993	2	ஆழியும்	ஆளியும்
5026	1	தனறுநகர்	தன்றுநகர்
5028	2	போதவன்	போவதன்
5030	4	வோராம்	வோரா
5031	3	போரும்	போழும்
5034	4	வல்லலே	வல்லே
5038	4	புகழ்மிக்காள்	புகழ்மிக்கான்
5047	4	என்றாள்	என்றான்
5072	4	பொன்னர்	பொன்னகர்
5075	1	எழகன்	ஏழகன்
,,	2	மண்டம்	மண்டபம்
5092	1	எந்திய	ஏந்திய
5096	2	போவதன்	போவதென்
5160	4	துயிாவதோர்	துயில்வதோர்
5172	1	தோளாற்றல்	தோளாற்றல்
5184	2	உறைசெய்யுந்	உரைசெய்யுந்
5186	2	வல்ல அரக்கன்	வல்லரக்கன்
5190	4	மருங்குபோல்	மருங்குல்போல்
5231	2	வெறித்துளதென்ன	வெறித்துளவென்ன
5237	4	டிண்டியே	டுண்டியே
5249	1	மங்கையர்	அங்கையர்
5266	3	கருப்புறச்	கருப்புரச்
5268	4	உயிர்ப்பவந்திருப்ப	உயிர்ப்பவிந்திருப்ப
5270	2	நாள்தொறுந்	நாள்தொறுஞ்
5281	2	பாவை	பாவை
5283	4	அறவினுழை	அரவினுழை
5293	4	ஒக்கின்	ஏர்க்கின்
5307	3	வாள்நாள்	வாழ்நாள்
5311	4	தாழ்த்தியோ	தாழ்தியோ
5319	3	பாசம்	பாசப்
5347	1	செருகாவல்	தெறுகாவல்
5351	1	உளைவரும்	உளைய்வரும்

பாட்டெண்	வரி	பிழை	திருத்தம்
5356	4	பொன்னும்	பொன்றும்
5360	2	என்னுயிர்க்	என்றுயிர்க்
5374	1	இறங்குவான்	இரங்குவாள்
5376	2	திசையிணும்	திசையினும்
5380	3	வெண்றியான்	வென்றியான்
5381	4	மங்கலம்	மங்கலம்
5385	3	நாட்டுகுல்	நாட்டுறில்
5391	4	இலஞ்கியும்	இலஞ்சியும்
5401	3	சர்ந்தறுவுங்	சார்ந்தறுவுங்
5402	1	கவந்த	கவந்தப்
5420	3	தன்ளே	தன்னே
5422	4	கணடான்	கண்டான்
5423	1	கண்டபின்	கண்டனன்
,,	2	கணுணும்	கண்ணுனும்
5427	2	கைவிரல்	கைவில்
5433	2	காட்டில் யென்னிலே	காட்டிலே யென்னில்
5442	2	வனபொறை	வன்பொறை
,,	,,	உனனுவான்	உன்னுவான்
5446	3	எட்டகு	எட்டரு
5448	1	கனவான்	கனகவான்
5448	2	மெய்த்துரு	மெய்த்துறு
5449	4	மண்தலம்	மண்டலம்
5453	1	அமறுவில்	அம்மறுவில்
5461	1	அடிவணங்க	அடிவணங்கி
,	3	யானவர்தம்	வானவர்தம்
5479	3	சன்விழி	கன்விழி
5483	2	சேவகன	சேவகன்
5492	3	இயான்	யான்
5521	3	கண்கனே	கண்களே
5532	4	உணர்வ	உணர்வு
5536	2	பொழுதத்து	பொழுதது
5552	1	வேறுஉள	வேறுமுள
5556	1	முறிந்தன	முரிந்தன
5584	4	கடற்றதலே	கடற்றலே
5590	3	தண்ஞல்	தன்ஞல்
5617	4	பெய்என்	பெய்யவென்
5630	4	வளம்	வனம்
5642			5632
5635	2	விளியம்	விளியும்
,,	4	மிழுந்தார்	மிழ்ந்தார்
5673	2	அனன	அன்ன

பாட்டெண்	வரி	பிழை	திருத்தம்
5674	2	சாபப்	சாபம்
5676	3	விின்தோய்	விண்தோய்
,,	4	ஒழிக்கும்	வொழிக்கும்
5677	4	தூணிபோர்ப்ப	தூவிபோர்ப்ப
5689	2	நெற்யே	நெறியே
5694	2	நெங்காம்	நெடுங்காம்
5698	2	படுத்தான	படுத்தான்
,,	3	வயவரின வயவரின	வயவரின் வயவரின்
,,	4	தேர்களின	தேர்களின்
5709	4	போனற	போன்ற
*5710	1	* காற்றில்	காற்றில்
5717	3	விரிந்த	இரிந்த
5721	2	உருத்ததல்	உருத்தல்
,,	3	அலங்கன	• அலங்கன்
5728	1	அனையின்	ஆனையின்
5734	3	லநதமா	லந்தமா
5737	3	இடையிடடுத்	இடையிட்டுத்
5738	4	வீரப்பட்	வீரபட்
5740	2	தந்திமுன `	தந்திமுன்
5741	3	நீல்நிறத	நீல்நிறத்
5745	3	பொருக்கென	பொருக்கென
5748	3	சேணநெடு	சேண்நெடு
5754	4	றிரண்டுமா	றிரண்டுபா
5756	4	பிசையும்ஆல்	பிசையுமால்
5762	1	வீரனவன்	வீரன்வன்
,,	,,	தடத்கையால்	தடக்கையால்
,,	4	குதிதியா	குருதியா
5763	4	ரனத்தை	ரணத்தை
5765	4	குருவினைக்	குழுவினைக்
5767	2	தேர்துனை	தேர்த்துனை
5768	4	டும்பொரி	டும்பொறி
5772	1	உளளம்	உள்ளம்
5775	1	களிற்றினில்	களிற்றினில்
5787	4	தபட்டுனைத்	தாட்டுனை
5790	1	வாழ்க்கை	வாழ்க்கைக்
5794	4	வரவும்	வாவும்
5797	2	எமரும்	ஏமரு
,,	4	கனைஅம்	கணையம்
5804	1	மற்றத	மற்ற
,,	,,	இராவணன்	விராவணன் •
5818	4	என்றனா	என்றனர்

பாட்டெண்	வரி	பிழை	திருத்தம்
5819	3	வீானும்	வீரனும்
5820	1	செரி	செறி
,,	2	பகழிககோல்	பகழிக்கோல்
5826	1	சிலா	சிலர்
,,	2	வடிவாஞா	வடிவாஞர்
5832	2	நின்ருர்உயிர்	நின்ருருயிர்
5845	2	மன்னே	மன்ஞே
5846	1	சிங்கரர்	சிங்கரர்
5850	2	நின ற	நின் ற
5853	1	ஒப்பாந்	ஒப்பார்
,,	4	புண் ணுள்ளே	புண் ணுளே
5857	1	வெவ்இலை	வெவ்விலை
5862	4	இராவணன்	விராவணன்
5866	2	தார்பூண்	தார்ப்பூண்
5874	3	கொரண்டு	கொண்டு
5903	1	உயிரின	உயிரின்
5921	3	மேலவன	மேலவன்
,,	,,	காதலன	காதலன்
5926	3	உரைத்தென	உரைத்தென்
5940	4	தனனது	தன்னது
5949	1	காந்தன்	சாந்தன்
5955	2	இரந்தவர்	இருந்தவர்
5956	4	குரஙகெனும்	குரங்கெனும்
5957	1	றரக்கனை	றரக்கனைக்
5982	2	மீளாள்	மீளான்
5984	2	நட்டான	நட்டான்
5985	2	வீரன	வீரன்
5993	3	தனவயிற்	தன்வயிற்
6009	4	மெய் உறை	மெய் உரை
6010	4	என ற	என் ற
6026	3	தன்மையால்	தண்மையால்
6083	3	கெனருன்	கென்ருன்
6107	2	கடவோர்	கடவோர்க்
6112	2	ஆவதென்	ஆவதென
6114	2	சொல்களால்	சொற்களால்
6149	1	ஆண் தகை	ஆண்டைய
,,	,,	அருக்கன்	வருக்கன்

கலைமகள் துணை

வித்வான். கி. வேங்கடசாமி அவர்கள்

[வி. பூதூர், வளவனூர் போஸ்ட், தென்ஆற்காடு]

21—2—51ல் எழுதியனுப்பினது.

ஆ! பெரியன் சீநிவா சையங்கார் என்கின்ற
வா! பெரிய ஞயிளங்கு மண்ணுஅல் — நீ பெரியை
என்பதனை நம்பதிப்பு நூல்களால் யாருமுணர்ந்
தின்புறுவ ரீதுண் மையே.

பெண்ணைப் பெறுதல் பெரிதன்றால் அப்பெண்ணை
மண்ணிற் றகுந்த வரற்கண்டு — நண்ணிடச்செய்
அச்செயலே யொக்கும் அருநூல்கள் அச்சினிலிட்
டிக்கை யினுற் றன்கொணர்த லே.

இம்மா திரிச்செய்கை யாரும் இயற்றரிதால்
அம்மா! இயற்றி னதுபெரிதாம் — எம்மாஅன்
பாம்பறியும் பாம்பின்கால் என்பபோல் பண்பாளர்
தாம்பறிவர் இச்செயற்குத் தான்.

அனுப்புங் குருகூர்ப்பள் ளானதுகைக் குற்ற (து)
இனிப்பி னதைப்படித் தின்பேய்ந்தேன் - மனத்துவகை
மேவிப் பிறபதிப்புங் காண விரும்பிடுமவ்
ஆவல் மிகவுடைய னுல்.

9—5—51ல் டையார் எழுதியது.

சீர்திக ழன்பார்வ மேவுறுஞ்சீல சீபெரியன்சீனி வாஸையங் கார்நல்
ஏர்திகழ் தண்சோதி யாதியன்பாத மேநினை நெஞ்சாள! நீயுவந்தியும்
நீர்திகழுஞ்சீர்மைநூல்கள் நன்றானநேர்மையர்கொண்டாடவேபொலிந்தா
நார்திகழ் நன்காரி மாறனன்பாக நாளுமுவந் தேதயாசெய்வன்றனே, [ர

அங்கண்மா ஞாலத்தி யாவரும் புகழ்குருகை யாதியன் பாதமேத்தி
அமைந்தபெரி யன்சீனிவாஸசயங் காரென அறைந்ததிரு நாமமுடையாய்
பொங்குவப் புடனே யனுப்புபுத் தகமெலாம் போதவிங் குற்றபோழ்தே
பூரிப் புடன்புளக மாயினேன் இந்நன்றி பூதலத் தென்று மறவேன்
இங்கிநா ளிற்சைவர் தமநூல்க ளியாவையு மியைந்தச்சி விட்டழகதாய்
இனிமையினடக்கவிலையேகொண்டுவெளியிடுமவ்வியல்பினைக்கண்டு நொந்
மங்குநெஞ்சத்தனேற்கிதையெனுங்கண்டுளமகிழ்ந்திடும்பேறுற்றதால்[தே
வைணவச்செல்வர்பலரால்நமதுநூல்கள்வெளிவரவருள்க மாயவனரோ.

நெற்களத்து வேலையு மெட்களத்து வேலையு
மெக்கணத்து வேலையா யுற்றலுத்து நாயினேன்
அக்கணத்தி லேவரைந் துற்றனுப்ப நேர்கிலேன்
இக்கசட்டை ஓர்கிலா துட்பொறுத்து நீகொளே.

ஆழ்வார்திருநகரி, திருஞாந முத்திரைப் பிரசுராலயம்

தமிழ் நூல்கள் - வெளியீடு

ஸ்ரீ டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்
,, வித்வான் ரா. ராகவைய்யங்கார் ,,
,, ராவ் சாகிப் S. வையாபுரிப்பிள்ளை, B. A., B. L., அவர்கள்
(யுனிவர்ஸிட்டி தமிழ் ஆராய்ச்சித் தலைவராயிருந்தவர்கள்)
,, ராவ் சாகிப் மு. இராகவையங்கார் அவர்கள்,
தமிழ்ப் பிரதம பண்டிதர், சர்வகலாசாலை, திருவனந்தபுரம்.
,, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்,
மதுரைச் செந்தமிழ்.
,, சிவராஜகந்நாதன் அவர்கள், ஆசிரியர். கலைமகள்

இன்னும் பல தமிழ் அறிஞர்களால் போற்றிப் புகழும் ஆழ்வார் திருநகரி தமிழ் கருவூலங்களினின்று வெளியான தமிழ் நூல்கள் ஒவ்வொரு குடும்பத்திலும், வாசகசாலைகளிலும் என்றும் இருந்து வரவேண்டியவைகள்.

திருஞாந முத்திரைக் கோவைத் தொகுதிகள்.

1 கம்பராமாயணம் (ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி) பால அயோத்தியா, ஆரண்ய காண்டங்கள், தாடகை வதைப் படலம முடிய பலான படாந்தரங்களுடன் கூடியது சேர்ந்து ஒரே சட்டிடம் விலை ரூ. 8—0—0

2 நம்மாழ்வார் தாலாட்டு, ஸ்ரீ சடகோபதிவ்ய சரித்திரம், மகிழ் மாறன் பவனிக்குறம், குருகூர்ப்பள்ளு, முதலாழ்வார் வைபவங்கள், ஸ்ரீ பராங்குச நாடகம், இவைகளடங்கிய ஒரே கட்டிடம். விலை ரூ. 5—0—0

3 நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ், திரு வைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ் தெந்திருப்பேரை திருக்கோளூர் திருப்பணி மாலைகள், தெய்வச்சிலை தாதர் பேரில் (கிருஷ்ணபுரம்) விறலிவிடுதூது. கூடிய கட்டிடம் விலை ரூ. 3—8—0

4 கம்பராமாயணம் (ஆழ்வார்திருநகரிப் பிரதிகளின்படி) கிட்கிந்தா, சுந்தரகாண்டங்கள் அடங்கிய கட்டிடம் விலை ரூ. 6—0—0

ஷை நூல்கள் தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம் விலைப் பட்டியல் தபாலில் அனுப்பப்டும்.

ஷை தொகுதிகள் நான்கும் வாங்குபவர்களுக்கு தபால் செலவு கிடையாது. வியாபாரிகளுக்கு கமிஷன் கொடுக்கப்படும்.

அடியிற்கண்டவர்களிடம் நேரிலும் தபால் மூலமும் கிடைக்கும்:—

கிருஷ்ணையரவர்கள் வேம்பத்தூர் மடம் தெற்கு ரதவீதி திருநெல்வேலி டவுண்	பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார் பதிப்பாசிரியர் திருஞான முத்திரைக்கோவைப் பிரசுராலயம் ஆழ்வார்திருநகரி.